2876

T.N.C.A Debates

Official Reports

VOL XII NO 1

5th July 1885

D 1
V211,31 N85
N85·12·1
136415

79/86
24
2876

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATE
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, 1985 ஜூலை 5, தொகுதி XII-எண். 1.
Friday the 5th July 1985—Volume XII-No. 1.

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George,
Madras-600 009

விலை-ரூ. 3.50 காசுகள்] Price Rs. 3-50paise

N85·12·1
136415

## உள்ளடக்கம்

24 டிசம்பர் 1985


| | பக்கங்கள் |
|---|---|
| (அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. | i—iii |
| (ஆ) Personnel of the Government of Tamil Nadu | v—vii |
| (இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | ix—x |
| (ஈ) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் .. .. .. | xi—xix |
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—41 |
| 2. தகவல் கோரல் : | |
| (அ) மாநில நிதியமைச்சர் மைய நிதியமைச்சரோடு மாநில நிதி நிலைமை குறித்து பேசியது .. .. .. | 41—45 |
| (ஆ) பேரவைச் செயலகத்தின் இலச்சினையை வெளியார் பயன்படுத்துவது. | 45—51 |
| (இ) தஞ்சை மாவட்ட விவசாயத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுதல் .. .. .. .. | 51—52 |
| (ஈ) பொது நிறுவனங்கள் குறித்த காலத்தில் தங்களது நிறுவன ஆண்டுக் கணக்கை அவையில் வைத்தல் .. | 52 |
| 3. அறிக்கை அளித்தல் : | |
| விதி 111-இன் கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை | 52—53 |
| 4. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) திருவில்லிபுத்தூர் நாச்சியார் திருக்கோயில் மரத்தேரை பழுதுபார்த்து ஓட விடுவது .. .. .. | 53—57 |
| (ஆ) புயலால் 1985-ல் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தல் .. | 57—60 |

பக்கங்கள்

5. வரவு-செலவுத் திட்டம், 1985–86 வாக்கெடுப்பு :

(அ) கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் .. ..

(ஆ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு

(இ) கோரிக்கை எண் 10—பால்வழங்கு திட்டங்கள் .. .. .. 60—145

(ஈ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு .. .. .. ..60, 61, 62, 63

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி 125—143

திரு குமரி அனந்தன் .. .. 63—72

டாக்டர் கே. பி. இராமலிங்கம் .. 73—83

திரு. அ. பிரணவநாதன் .. .. 83—81

திரு. கே. குப்புசாமி .. .. 89—98

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா .. 98—104

திரு. கு. அ. செங்கோட்டையன் .. 104—110

திரு எம். செல்லமுத்து .. .. 110—115

திரு. ப. ந. இராமச்சந்திரன் .. 115—118

திரு. டி. ஆர். வேங்கடரமணன் .. 118—124

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 145—146

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல் பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2, மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள் இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின் துறை அமைச்சர்) மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத்
துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி,
வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல்,
வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (சட்ட அமைச்சர்)
—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள்
பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன்
நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம்
இயற்றல் உட்பட).

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுசூழல் மாசுக்
கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (போக்குவரத்துத் துறை
அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு
வரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்
சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (உணவு அமைச்சர்)
—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் மக்கள் தொகைக்
கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (கைத்தறித்
துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு
அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. நா. வீராசாமி : (வணிக வரித்துறை
அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுச்சாமி : (வீட்டு வசதித்துறை
அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம்,
நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (ஊரகத்
தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்
ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறு வாழ்வு மற்றும்
வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும்
பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளி
யேற்றப்பட்டவர்கள்.



2876

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (ஆதி திராவிடர்
நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலை வாழ்
பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர்
நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன்வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூக நலத்
துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம்,
பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த
நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : (கதர்த்
துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. பா. கை. மு. யூசுப் : (பொதுப் பணித்
துறை அமைச்சர்)—பொதுப் பணித்துறை, சிறு பாசனம் உள்
ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன :
(கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

### THIRU SUNDAR LAL KHURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. DR. M. G. RAMACHANDRAN : (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : (*Minister for Finance*)—Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-servicemen.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN : (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. THE HON. THIRU K. A. KRISHNASAMY : (*Minister for Labour*)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HON. THIRU R. M. VEERAPPAN : (*Minister for Information and Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

6. THE HON. THIRU K. RAJARAM : (*Minister for Industries*)—Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. THE HON. THIRU P. U. SHANMUGAM : (*Minister for Local Administration*)—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. THE HON. THIRU C. ARANGANAYAGAM : (*Minister for Education*)—Education, Official Language, Tamil Development and Culture.

9. THE HON. DR. K. KALIMUTHU : (*Minister for Agriculture*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. THE HON. THIRU C. PONNAIYAN : (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. THE HON. DR. H. V. HANDE: (*Minister for Health*)—Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSAMY: (*Minister for Transport*)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU: (*Minister for Food*)—Food, Price Control and Census.

14. THE HON. THIRU V. V. SWAMINATHAN : (*Minister for Handlooms*)—Handlooms and Textiles.

15. THE HON. THIRU R. SOUNDARARAJAN: (*Minister for Nutritions Meals*)—Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY: (*Minister for Commercial Taxes*)—Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY : (*Minister for Housing*)—Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN : (*Minister for Rural Industries*)—Rural Industries including Village, Cottage and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY : (*Minister for Rehabilitation and Employment*)—Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM : (*Minister for Adi Dravidar Welfare*)—Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDAN : (*Minister for Backward Classes*)—Backward Classes and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN : (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Beggers Home, Orphanages and Correctional Administration.



23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY : (*Minister for Khadi*)—Khadi, Bhoodhan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF : (*Minister for Public Works*)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN ; (*Minister for Co-operation*)—Co-operation

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

***பேரவைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

***பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்.

****மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

திரு. மா. சின்னராசு.
திரு. செ. செம்மலை.
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.
திரு. மு. இராமநாதன்.
திரு. வே. இரா. ஜெயராமன்.

**சட்டமன்றப் பேரவை செயலாளர்.**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

**துணை செயலாளர்கள்.**

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

**குழு அலுவலர்கள்.**

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

**சார்பு செயலாளர்கள்.**

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. சாலமன் ஜெயபால், பி.எஸ்ஸி., பி.எல்.

### எஸ்டேட் அலுவர்கள்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. கேசவராம், பி.ஏ.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

### துணைச் செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

### தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்பி.

---

* 27–2–85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 11–3–85 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.



### தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பட்ட) பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1 அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி. |
| 2 அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி. |
| 3 அரங்கநாயகம், திரு. செ. .. | தொண்டாமுத்தூர். |
| 4 அரிக்குமார், திரு. இரா. .. | பெரணமல்லூர். |
| 5 அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.). |
| 6 அருணாசலம், திரு. எ. .. | வரகூர் (செ.வ.). |
| 7 அன்பழகன், திரு. க. .. | பார்க்டவுன். |
| 8 அன்பழகன், திரு. கே. .. | ஓமலூர். |
| 9 அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 10 அன்பழகன், திரு. பொ. .. | இளையான்குடி. |
| 11 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 12 ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி. | ஆண்டிமடம். |
| 13 ஆபிரகாம், திரு. ம. .. .. | ஆலந்தூர். |
| 14 ஆறுமுகம், திரு. அ. .. | வந்தவாசி. |
| 15 ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பென்னாகரம். |
| 16 ஆறுமுகம், திரு. ஆர். எஸ். .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.). |
| 17 ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ., .. | விருதுநகர். |
| 18 ஆறுமுகம், திரு. செ. .. | மதுராந்தகம். |
| 19 ஆறுமுகம், திரு. சேலம் மு. .. | சேலம்-2. |
| 20 ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி. |
| 21 ஆனந்தன், திரு. மு. .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 22 இரகுபதி, திரு. கோ. .. | காட்பாடி. |
| 23 இரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம். |
| 24 இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி. |
| 25 இரத்தினவேலு, திரு. சே. .. | முசிறி. |
| 26 இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.). |
| 27 இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம். |
| 28 இராசரத்தினம், திரு. எப்.எம். | கொளச்சல். |
| 29 இராசரத்தினம் என்கிற மணி, திரு. எம். | விழுப்புரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 30 இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர். |
| 31 இராசாம்பாள், திருமதி. த. | தலைவாசல் (செ.வ.). |
| 32 இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி. |
| 33 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 34 இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.). |
| 35 இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி. |
| 36 இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி. |
| 37 இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர். |
| 38 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 39 இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி. |
| 40 இராமச்சந்திரன், திரு. சோ.மா. | அண்ணாநகர். |
| 41 இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை. |
| 42 இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம். |
| 43 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம். |
| 44 இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 45 இராமலிங்கம் டாக்டர், கே.பி. | இராசிபுரம். |
| 46 இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம். |
| 47 ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 48 உச்சி, திரு. கே. | கூடலூர். |
| 49 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 50 எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 51 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம். |
| 52 கதிர்வேலு, திரு. மா. | இராணிப்பேட்டை. |
| 53 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு. |
| 54 கந்தசாமி, திரு. பெ. | பொங்கலூர். |
| 55 கல்லன், திரு. கே. | உதகமண்டலம். |
| 56 கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம். |
| 57 காளிமுத்து டாக்டர், கா. | மதுரை கிழக்கு. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 58 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு. |
| 59 கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு. |
| 60 கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம். |
| 61 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1. |
| 62 குப்புசாமி, திரு. கு. | ஒட்டன்சத்திரம். |
| 63 குமர குருபர இராமநாதன், திரு. ச. | விளாத்திக்குளம். |
| 64 குமரி அனந்தன், திரு. | இராதாபுரம். |
| 65 குமாரதாஸ் டாக்டர், தே. | கிள்ளியூர். |
| 66 குருசாமி என்கிற அண்ணாதாசன் திரு. எம். | திருவரம்பூர். |
| 67 கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கைமான் (செ.வ.). |
| 68 கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம். |
| 69 கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி. |
| 70 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 71 சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72 சண்முகம், திரு. இரா. | திருத்தணி. |
| 73 சண்முகம், திரு. என். | சோளிங்கர். |
| 74 சண்முகம், திரு. ப.உ. | மேல் மலையனூர். |
| 75 சண்முகையா பாண்டியன், திரு. | ஆலங்குளம். |
| 76 சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான். |
| 77 சந்திரசேகர், திரு. மூ. | முகையூர். |
| 78 சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை. |
| 79 சமரசம் டாக்டர், கோ. | காவேரிப்பட்டினம். |
| 80 சரோஜா, திருமதி. இரா. | உப்பிலியாபுரம். (ஆ.வா ) |
| 81 சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 82 சித்தன், திரு. என்.எஸ்.வி. | திருமங்கலம். |
| 83 சித்தன், திரு. வி.பி. | வில்லிவாக்கம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 84 சிவக்குமார், திரு. ஆ. | .. | சமயநல்லூர், (செ.வ.) |
| 85 சிவக்குமார், திரு. எம். | .. | சூலூர் (செ.வ.) |
| 86 சிவஞானம், திரு. என். | .. | திருவோணம். |
| 87 சிவப்பிரகாசம், திரு. சீ. | .. | சேந்தமங்கலம். (ஆ.வா.) |
| 88 சிவராமன், திரு. எஸ். | .. | சின்னசேலம். |
| 89 சிவராஜ், திரு. க. | .. | ரிஷிவந்தியம். |
| 90 சின்னக்குழந்தை, திரு. மு. | .. | ஆரணி. |
| 91 சின்னச்சாமி, திரு. ரா. | .. | தர்மபுரி. |
| 92 சின்னசாமி, திரு. வே.கு. | .. | பவானிசாகர். |
| 93 சின்னராசு, திரு. சு. இரா. | .. | கிருஷ்ணகிரி. |
| 94 சின்னராசு, திரு. மா. | .. | மேட்டுப்பாளையம். |
| 95 சுந்தரதாஸ், திரு. மா. | .. | விளவங்கோடு. |
| 96 சுப்புராயர், திரு. சி. | .. | கம்பம். |
| 97 சுப்புராயன், திரு. கு. | .. | திருப்பூர். |
| 98 சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | | திருச்செந்தூர். |
| 99 சுப்பிரமணியன், திரு. உ. | .. | சிவகங்கை. |
| 100 சுப்பிரமணியன், திரு. வீ. | .. | கண்டமங்கலம். (செ.வ.) |
| 101 சுவாமிநாதன், திரு. வி.வி. | .. | புவனகிரி. |
| 102 செங்காளியப்பன், திரு. ஆர். | .. | சிங்காநல்லூர். |
| 103 செங்கோட்டையன், திரு. கு.ஆ. | | கோபிச்செட்டிப். பாளையம் |
| 104 செங்கோட்டையன், திரு. பெ. | | கபிலர்மலை. |
| 105 செம்மலை, திரு. செ. | .. | தாரமங்கலம். |
| 106 செல்லமுத்து, திரு. மொ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 107 செல்லப்பா, திரு. வி.கோ. | .. | கடலூர். |
| 108 செல்வராசன், திரு. அ. | .. | துறைமுகம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 109 சேகர் என்கிற குலசேகரன், திரு. கே.பி. | | பொன்னேரி (செ.வ). |
| 110 சொர்ணலிங்கம், திரு. கா. | | திருவாடனை. |
| 111 சோலைராசு, திரு. க. | | மருங்காபுரி. |
| 112 சைதை துரைசாமி, திரு. சா. | | சைதாப்பேட்டை. |
| 113 சௌந்திரராசன், திரு. ஆர். | | ஸ்ரீரங்கம். |
| 114 சௌரிராஜன், டாக்டர் கே. | | தியாகராயநகர். |
| 115 ஞானசுந்தரம், திரு. சா. | .. | மன்னார்குடி. |
| 116 டேனியல்ராஜ், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம். |
| 117 தங்கமணி, திரு. மு. .. | .. | மாயூரம். |
| 118 தங்கமணி, திரு. கே.எம். | .. | திண்டிவனம். |
| 119 தங்கராசு, திரு. ஏ. .. | .. | குறிஞ்சிப்பாடி. |
| 120 தங்கராசு, திரு. செ. | .. | மங்களூர் (செ.வ.). |
| 121 தங்கவேல்ராஜ், திரு. ப.ம. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 122 தங்கவேலு, திரு. வி... | .. | வால்பாறை (செ.வ.). |
| 123 தமிழ்மணி, திரு. .. | .. | திருப்போரூர் (செ.வ.). |
| 124 தமிழரசன், திரு. கு. | .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 125 தனபால், திரு. ப. .. | .. | சங்கரி (செ.வ.). |
| 126 தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 127 தியாகராசன், திரு. ர. | .. | விருத்தாசலம். |
| 128 திருஞானம், திரு. பி. ஆர். | | ஏற்காடு (ஆ.வ) |
| 129 திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. | அறந்தாங்கி. |
| 130 திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | | உடுமலைப்பேட்டை. |
| 131 தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | | மொரப்பூர். |
| 132 தீர்த்தராமன், திரு. ப. | .. | பாலக்கோடு. |
| 133 துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம், திரு. | | நெல்லிக்குப்பம். |
| 134 துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | | தஞ்சாவூர். |
| 135 துரை கோவிந்தராசன், திரு. | | திருவையாறு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 136 துரைராசு, திரு. எஸ் . பி. | .. | காரைக்குடி. |
| 137 துரை ராமசாமி, திரு. | .. | வெள்ளக்கோவில். |
| 138 தெய்வநாயகம், திரு. எ. | .. | மதுரை சென்ட்ரல். |
| 139 தேவராஜ் , திரு. வி. எம். | .. | வேலூர். |
| 140 நடராசன், திரு, ஆ. | .. | பேரூர். |
| 141 நரசிம்மபல்லவன், திரு. க. | | உத்திரமேரூர். |
| 142 நரசிம்மன்; திரு. பூ. மு. | .. | பள்ளிப்பட்டு. |
| 143 நல்லமுத்து, டாக்டர் க. | .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 144 நல்லுச்சாமி, திரு. என். | .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 145 நாச்சிமுத்து, திரு. கே. பி. | .. | மேட்டூர். |
| 146 நாராயணன், திரு. எஸ். | .. | திருநெல்வேலி. |
| 147 நாராயணன், திரு. பு. கோ. | .. | பவானி. |
| 148 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | | ஆத்தூர். |
| 149 பட்டாபிராமன், திரு. செ. | | திருவள்ளூர். |
| 150 பரமசிவம், திரு. பா. ந. | .. | பல்லடம். |
| 151 பரிதி இளம்வழுதி, திரு. | .. | பெரம்பூர். |
| 152 பழனி, திரு. த. .. | .. | ஆற்காடு. |
| 153 பழனிச்சாமி, திரு. கா. செ. | .. | காங்கேயம். |
| 154 பழனிமுத்து, திரு. சி. | .. | ஆத்தூர். |
| 155 பாண்டியன், திரு. பி. எச். | .. | சேரன்மாதேவி. |
| 156 பாண்டுரங்கன், திரு. மு. | .. | கலசபாக்கம். |
| 157 பாப்பா சுப்பிரமணியம், திரு. | | குத்தாலம். |
| 158 பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | .. | திருவொற்றியூர். |
| 159 பாரமலை, திரு. க. .. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 160 பாலகிருஷ்ணன், திரு. ச. | .. | மொடக்குறிச்சி. |
| 161 பாலகிருஷ்ணன், திரு. வ. | .. | சிவகாசி. |
| 162 பாலச்சந்திரன், திரு. வை. | .. | பத்மநாபபுரம். |
| 163 பாலசுப்பிரமணியன், திரு. க. | | சீர்காழி (செ.வ.). |
| 164 பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | | அம்பாசமுத்திரம். |
| 165 பாலசுப்பிரமணியன், திரு. வ். பி. | | வேடசந்தூர். |
| 166 பாலன், திரு. சு. .. | .. | எழும்பூர். |
| 167 பாலாஜி, திரு. கே. .. | .. | காஞ்சிபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 168 பாலுச்சாமி, திரு. ஏ. | .. | பரமக்குடி (செ.வ.). |
| 169 பாலுசாமி , திரு. அ. | .. | நிலக்கோட்டை(செ.வ.). |
| 170 பிச்சை, திரு. மு. .. | .. | அருப்புக்கோட்டை. |
| 171 பிரணவநாதன், திரு. அ. | .. | கடலாடி. |
| 172 பிரேம்குமார், திரு. ஆ. | .. | திண்டுக்கல். |
| 173 புருசோத்தமன், திரு. எஸ். | | அரியலூர். |
| 174 புஷ்பராசு, திரு. த. .. | .. | திருமயம். |
| 175 பெரியசாமி, திரு. அ. | .. | தாராபுரம் (செ.வ.). |
| 176 பெரியசாமி, திரு. ரா. | .. | தொட்டியம். |
| 177 பெருமாள், திரு. தெ. | .. | கடையநல்லூர். |
| 178 பெருமாள் பிள்ளை, திரு. கோ. | | கன்னியாகுமரி. |
| 179 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | | பழனி (செ.வ.). |
| 180 பொன்னுசாமி, டாக்டர், அ. | | பெருந்துறை. |
| 181 பொன்னுரங்கம், திரு. ப. | .. | ராயபுரம். |
| 182 பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு. |
| 183 மணவாளன், திரு. .. | .. | திருப்பத்தூர். |
| 184 மணிமாறன், திரு. மா. | .. | நன்னிலம் (செ.வ.). |
| 185 மலர்மன்னன், திரு. அ. | .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 186 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | | புரசைவாக்கம். |
| 187 மனோகரன், திரு. தி.நா.கோ.அ. | | திருநாவலூர். |
| 188 மாசிலாமணி, டாக்டர், ந. | .. | ஜெயங்கொண்டான். |
| 189 மாதவன், திரு. செ. | .. | திருப்பத்தூர். |
| 190 மாதையன், திரு. யு. பி. | .. | அந்தியூர் (செ.வ.). |
| 191 மாரிமுத்து, திரு. த. | .. | குளத்தூர் (செ.வ.). |
| 192 மாரிமுத்து, திரு. மு... | .. | திருப்பரங்குன்றம். |
| 193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | | வேதாரண்யம். |
| 194 முகம்மது கனி, திரு. ஜே. | .. | புதுக்கோட்டை. |
| 195 முகம்மது சலீம், டாக்டர், த. | .. | பெரியகுளம். |
| 196 முசிறிபுத்தன், திரு. பி. | .. | குளித்தலை. |
| 197 முத்துசாமி, திரு. சு. | .. | ஈரோடு. |
| 198 முத்துராமலிங்கம், திரு. பி.ஜேஎம். | | உசிலம்பட்டி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 199 முத்துராமலிங்கம், திரு. பொன். | மதுரை மேற்கு. |
| 200 முத்துவேல், திரு. கே. .. | முதுகுளத்தூர். |
| 201 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 202 முருகன், திரு. கி. .. .. | செய்யாறு. |
| 203 முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி. |
| 204 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி. |
| 205 யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 206 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 207 ரவீந்திரன், திரு. ஏ. எஸ். .. | திருவண்ணாமலை. |
| 208 ராமஜெயம், திரு. ம. நா. .. | வானூர் (செ.வ.). |
| 209 ராமன், திரு. கி. .. .. | ராஜபாளையம் (செ.வ.). |
| 210 ராஜாபாபு, திரு. ஜெ. .. | போளூர். |
| 211 ரெங்கசாமி, திரு. ஆர். .. | கோவில்பட்டி. |
| 212 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | நாகர்கோவில். |
| 213 லட்சுமி, திருமதி பி. .. | அவினாசி (செ. வ.). |
| 214 வடிவேல், திரு. கு. .. | கரூர். |
| 215 வளர்மதி, திருமதி பா. .. | மயிலாப்பூர். |
| 216 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 217 விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | வீரபாண்டி. |
| 218 வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர். |
| 219 வீரய்யன், திரு. கோ. .. | நாகப்பட்டிணம். |
| 220 வீராசாமி, திரு. தா. — | ஒரத்தநாடு. |
| 221 வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி. |
| 222 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஒசூர். |
| 223 வெங்கடாசலம், திரு. அ. .. | ஆலங்குடி. |
| 224 வெங்கடாசலம், திரு. கி. .. | லால்குடி. |
| 225 வெங்கடாசலம், திரு. டி. எம். | பரகூர். |
| 226 வேணுகோபால், திரு. எஸ். .. | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 227 வேணுகோபால், திரு. கே. வி. | தள்ளி. |
| 228 வேலு, திரு. ச. வி. கூடலூரார் | தண்டராம்பட்டு. |
| 229 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர், பு.கோ. | செங்கல்பட்டு. |
| 231 ஜெகதீசன், திரு. சு. .. | அரவக்குறிச்சி. |
| 232 ஜெயச்சந்திரன், திரு. சா. .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.). |
| 233 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 235 பிரான்சிஸ், திரு. ஜி. கே. .. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | |
|---|---|
| 1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் .. | அமைச்சர். |
| 2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே | அமைச்சர். |
| 3. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் .. | அமைச்சர். |
| 4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி .. .. | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூலை 5, வெள்ளிக்கிழமை

ஆனி 21, குரோதன-திருவள்ளுவர் ஆண்டு –2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி ''

நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.

## 1. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கும்பகோணம் ஆடவர் கல்லூரிக் கட்டிடம்.

519— (*வினா எண். 1463) திரு. இ.. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரியின் பழுதடைந்த கட்டிடங்களுக்கு பதிலாக புதிய கட்டிடங்கள் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் குடந்தை ஆடவர் அரசு கலைக் கல்லூரிக்குச் சென்றிருந்தபோது அந்தக் கல்லூரிக் கட்டடங்களைப் பார்வையிட்டதாகவும், அவைகளில் ஒரு பழைய கட்டடம் ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். அதன்மேல் தளத்தில் விரிசல்கள் உள்ளன. இதனால் மழை பெய்யும்போது தண்ணீர் கசிகின்றது என்றும், மேலும் உடனே பழுதுபார்க்கா விட்டால் மேல்தளம் உடையக்கூடும் என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்திருக்கிறார். எனவே, கட்டிடங்களைப் பார்வையிட்டு தேவையான பழுதுபார்ப்புப் பணிகளை உடனே மேற்கொண்டு முடித்திட ஆவன செய்யுமாறு கட்டிடங்களுக்கான தலைமைப் பொறியாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் இது பொதுப் பணித் துறையின் பரிசீலனையில் உள்ளது என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### அழகப்பர் பல்கலைக் கழகம்.

520—(*வினா எண். 1818) திரு. எஸ். பி. துரைராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியில் புதிதாக தொடங்க இருக்கின்ற அழகப்பர் பல்கலைக் கழகத்தில் மருத்துவம், சட்டம் ஆகிய பிரிவுகளையும் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியில் புதிதாகத் தொடங்கப் பட இருக்கின்ற அழகப்பா பல்கலைக் கழகத்தில் தற்போதுள்ள பிரிவுகள் எவை எவை ? அடுத்து மருத்துவம், சட்டம் போன்றவற்றை எப்போது அமைப்பதாக அரசு முடிவு எடுத்திருக்கின்றது ? புதிய துணை வேந்தர் பொறுப்பேற்றுக் கொண்டாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கலையியல், உடற்பயிற்சியியல் மற்றும் தமிழ், கணிதம், பொறியியல், வணிகம் ஆகிய பட்ட மேற்படிப்புத் துறைகள் செயல்படும். இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் துவக்கப்படவுள்ள அழகப்பா பல்கலைக் கழகத்திற்காகக் கட்டிடக் கட்டுமானங்களுக்காக ஒதுக்கப்பட இருக்கின்ற நிதியின் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு குறிப்பிட்ட அளவு என்று கிடையாது. கொஞ்சம், கொஞ்சமாகக் கட்டிக் கொண்டு வரப்படும். இப்போது இருக்கின்ற கட்டிடங்களை ஓரளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு பின்னர் புதிதாக ஒரு மாஸ்டர் ப்ளான் போட்டு அதன் அடிப்படையில் கட்ட இருக்கிறோம். 2 கோடி ரூபாய் அளவுக்கு நாம் செய்து முடித்த பிறகு பல்கலைக் கழகத்தினுடைய உதவி நமக்குக் கிடைக்கும்.





### சென்னை நகர அபிவிருத்தி.

514—(*வினா எண். 752) திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரை அபிவிருத்தி செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு ஏதேனும் நிதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நிதி அளிக்க மத்திய அரசு இசைந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தை அழகுபடுத்த மத்திய அரசின் உதவி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் குடிசைப்பகுதி மாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் போன்றவற்றிற்கு உலக வங்கி கடன் அளிக்கின்றது. அந்த அடிப்படையில் சென்னை மாநகராட்சி உலக வங்கியிடம் ஏதாவது கடன் கேட்க முயற்சித்திருக்கின்றதா ? இல்லை என்றால் அவ்வாறு கடனை வாங்கி சென்னை மாநகரை அழகுபடுத்த முயற்சிக்கப்படுமா ? இப்போது கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், தனியார் தெருக்களில் எல்லாம் சாலை அமைத்தல், குடிநீர், கழிவு நீர் வழிவகைகளை அமைத்தல் போன்றவற்றை செய்து கொடுக்க வேண்டும் என்று. எனவே அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்திற்கும் உலக வங்கியிடம்கடன் பெற முயற்சிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மத்திய அரசிடமிருந்து ஏதேனும் கடன் கோரப்பட்டிருக்கிறதா என்பது. மத்திய அரசிடமிருந்து கடன் கோரப்படவில்லை. உலக வங்கி பல்வேறு பணிகளுக்குக் கடன் கொடுத்து வருகின்றது. இதற்காக இன்னும் அவர்களிடத்தில் கடன் கேட்கவில்லை. தற்சமயம் அந்தத் தேவை ஏற்படவுமில்லை. மாநில அரசு மாநகராட்சிக்கு, தேவைப்படும்போது இப்படிப்பட்ட வேலைகளுக்காகப் பணம் கேட்கும்போது கொடுத்து வருகின்றது.

திருமதி பா. வளர்மதி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரை அழகுப்படுத்த வேண்டுமென்றால் நகரின் மையப் பகுதியில் இருக்கின்ற கூவம் நதியில் நாற்றம் அடித்துக் கொண்டிருக்கின்றது. அதைச் சீரமைக்கக்கூடிய வகையில் அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தின் குறுக்கே ஓடிக் கொண்டிருக்கிற கூவத்தை சீரமைத்து அதன் நாற்றத்தைப் போக்க வேண்டும் என்பதற்காக, எண்ணூர் மின் நிலையத்தின் பயன்படுத்தி வெளி வரும் தண்ணீரை அந்தக் கூவத்திலே திருப்பி விட்டால் வேகமாக சுழன்று ஓடும் தண்ணீரின் வேகத்தால் நாற்றம் போகும் என்று சொல்லப்படுகிறது. பேச்சு வார்த்தை நடந்து வருகின்றது. முயற்சி எடுத்துப் பார்த்தால் ஒருவேளை நாற்றம் போகலாம். முயற்சிக்க வேண்டும்.

உதகமண்டலம் ஏரி.

515—(*வினா எண். .1023) திரு. எம். சிவக்குமார் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா விடையளிப்பாரா—

உதகமண்டலம் ஏரியில் கலக்கும் கழிவு நீரை தனியாக பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உதகமண்டலத்தில் நடைமுறையில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தினை மேம்படுத்தும் பணி ஆய்வில் உள்ளது. இப் பாதாள சாக்கடைத் திட்டம் மேம்பாடு அடையும்போது சாக்கடை நீர் உதகை ஏரியில் கலப்பது அறவே தடுக்கப்பெறும்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா பயணிகளை கவரக் கூடிய இடமான உதகையிலுள்ள ஏரித் தண்ணீர் வர வர நாற்றம் அதிகரித்து வரும் நிலையில் உள்ளது. ஆகவே அந்த திட்டத்தை உடனடியாக செயல் படுத்த அரசு முன் வருமா என்பதையும், அதற்கு ஆகும் செலவு உத்தேசமாக என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 லட்சம் ரூபாய் மதிப் பீட்டில் பாதாள சாக்கடை ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை தயாரித்திருக்கிறோம். வெகு விரைவில் அந்தப் பணி தொடங்க இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி ஏரியிலே கலக்கின்ற கழிவு நீரை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்காவிட்டால் இன்னும் ஓராண்டு காலத் திற்குள் அந்த ஏரி கூவமாக மாறிப் போகும் என்று பரவலாகப் பேசப்படுவதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. கூவத்தையே நாம் மாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த ஏரி அந்த நிலைக்கு நிச்சயமாக வராது.



திருவேங்கடம்பாளையத்தில் கழிவு நீரகற்றல்.

516— (*வினா எண். 1790) டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், கருமாண்டி சொல்லிபாளையம் பேரூராட்சி திருவேங்கடம் பாளையத்தில் தேங்கி நிற்கும் சாக் கடை நீரை அகற்றக் கட்டப்பட்ட சாக்கடை பாதியில் நிறுத்தப் பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைக் கட்ட அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சாக்கடை கட்டும் பணி நிறுத்தப்பட்டு விட வில்லை. இடைப்பட்ட பகுதியில் கடினமான பாறைகள் அதிக மாக இருப்பதால் அவற்றை வெட்டி எடுக்க வேண்டியுள்ளது. அதனால் பணியில் போதிய முன்னேற்றம் இல்லை. எனினும் இப்பணியை முடிக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைப் பிரித்தமைத்தல்.

517— (*வினா எண். 372) திரு. இரா. முத்தையா மற்றும் திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தினை பிரிப்பதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஊராட்சி சட்டம் விதி 7(1)-ன் கீழ் 23— 5— 1985-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆறு வாரங்களுக்குப் பின்னர் இதன் மீதான இறுதி ஆணை வெளி யிடப்படும்.

டாக்டர் சு. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதியானது மாண்பு மிகு இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களு டைய தொகுதியாகும். டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கமிட்டி யிலே ஏற்கெனவே அந்த ஆண்டிப்பட்டி ஒன்றியத்தை இரண் டாகப் பிரித்து, கடைமலைக்குன்று தொகுதி என்றும், வலசநாடு தொகுதி என்றும் பிரிப்பதாக திட்டம் இருக்கிறது. அந்த கடைமலைக்குன்று தொகுதி மக்கள், அப்படி எங்களுக்கு வலச நாடு என்று இன்னொரு ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டாம்.

(1985 ஜூலை 5

கடைமலைக்குன்று பகுதியிலேயே போதிய வசதிகள் இருக்கின்றன என்று சொல்லி கோரிக்கைகள் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அதிலே ஏதாவது முடிவை அரசு எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதியை இரண்டாகப் பிரித்து ஆண்டிப்பட்டி ஒன்றியம், மயிலாடுதுறை ஒன்றியம் எனப் பிரிப்பதாக இருந்தோம். ஆனால் அதில் ஒரு பகுதி மக்கள் கடைமலைக் குன்று ஒன்றியம் என்றும் வலசநாடு ஒன்றியம் என்றும் பிரிக்க வேண்டும் என்று கேட்டார்கள். இப்போது சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, மயிலாடுதுறை ஒன்றியம் என்றும், கடைமலைக்குன்று ஒன்றியம் என்றும் பெயர் வைக்கலாம் என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது.

பாபநாசம் பேரூராட்சி அங்காடி.

518—(*வினா எண் 1604) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசம் பேரூராட்சிக்கு சொந்தமான தினசரி காய்கறி அங்காடியை தனியார் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, (அ) பாபநாசம் பேரூராட்சிக்குச் சொந்தமான தினசரி காய்கறி அங்காடியில் தனியார் எவரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. பேரூராட்சி அனுமதி பெற்றவர்கள் மட்டுமே கடை நடத்தி வருகின்றனர்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

போக்குவரத்துக் கழகங்களில் தற்காலிகத் தொழிலாளர்கள்.

521—(*வினா எண் 694) திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982, 1983, 1984 ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகங்களில் நியமிக்கப்பட்ட சி.எல்.ஆர். தொழிலாளர்கள் எத்தனை?



1985 ஜூலை 5]

(ஆ) அவர்களில் எத்தனை பேர் நிரந்தரப்படுத்தப்பட்டனர்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,

(அ) 1982— 1,210 பேர்
1983— 1,732 பேர்
1984— 1,669 பேர்.

மொத்தம் .. 4,611 பேர்.

(ஆ) 3,175 பேர் நிரந்தரம் ஆக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்தில் அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலிலிருந்து சி.எல். ஆர். தொழிலாளர்கள் பெரும் அளவில் தேவை என்பது தெரிகிறது. ஆனால் ஒவ்வொரு 59 நாட்களுக்கு ஒரு முறை அந்த சி.எல்.ஆர். தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்களே அந்த 59 நாட்கள் முடிந்த பிறகு இவர்களுக்கு பிறகு இன்னொரு செட்டை வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி வேலைக்கு ஆட்கள் தேவையென்று கூறுகிறபோது இந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக வைத்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. அதைப் போக்க இந்த சி.எல்.ஆர். தொழிலாளர்களை தொடர்ச்சியாக வேலைக்கு வைத்து அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, பேருந்துகளைப் பொறுத்தவரையில் விழாக் காலங்களில் அதிகமாக இயக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அந்த நேரத்தில் அவசியமாக தொழிலாளர்கள் அதிகமாக தேவைப்படுகிறார்கள். அதாவது ஸ்பேர் பஸ்களை இயக்க வேண்டியிருப்பதால், அதற்கு தேவையான அளவிற்கு ஆட்களை எடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அப்படி தொழிலாளர்களை எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி எடுத்து குறிப்பிட்ட நாட்களுக்கு வேலையில் வைத்துக் கொள்கிறோம். அதற்குப் பிறகு அவர்களின் பட்டியலை கையிலே வைத்திருக்கிறோம். மீண்டும் தேவையான போது அவர்களைக் கூப்பிடுகிறோம். அவர்கள் வராத நிலையில் புதிய நபர்களை வேலையில் எடுக்கிறோம். அந்த வகையில் அவர்களைக் கொண்டு பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் செய்த காரணத்தால்தான் மூவாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள்.

[1985 ஜூலை 5

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வராதவர்களுக்குப் பதிலாக புதிய ஆட்களை எடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் எங்களுக்கு இருக்கிற தகவல், இதே ஆட்கள் சென்றால் சில அதிகாரிகள் பணம் கொடுக்கவில்லை என்ற காரணத்தால், இவர்களுக்கு வேலை கொடுக்காமல், புதிய ஆட்களை எடுப்பதாகத் தெரிகிறது. அது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இப்படிப்பட்ட நிலையை பரிசீலனை செய்து ஏற்கெனவே இருந்த தொழிலாளர்கள் வேலைக்கு போகிறபோது அவர்களுக்கு கட்டாயம் வேலை கொடுப்பதற்கும் அதேபோல சி.எல்.ஆர். தொழிலாளர்களுக்கு மற்ற சலுகைகள் அதாவது மெடிக்கல் பெனிபிட், லீவ் பெனிபிட் போன்றவை கிடைக்காமல் இருப்பதால், வேலை செய்கிறபோது அவர்களுக்கு என்னென்ன பெனிபிட்டுகள் கிடைக்க வேண்டுமோ அவற்றைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைக்கு கூப்பிடுகிறபோது பணம் கேட்பது பற்றி சொன்னார்கள். அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு வரவில்லை. அப்படி குறிப்பிட்டு ஏதாவது நிகழ்ச்சி இருக்குமானால், சட்டமன்றம் நடக்கிறபோது மட்டுமல்ல, மற்ற நேரங்களாக இருந்தாலும் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்க இயலும், இந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் சட்டத்திற்கு உட்பட்டு என்னென்ன சலுகைகள் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய அரசு தயாராக இருக்கிறது.

திரு. ரு. சுப்பராயன் : தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களை நிரந்தரமாக்க என்ன வரையறையைக் கைக்கொண்டிருக்கிறது ? பணியில் சேர்க்கப்படுகிற தொழிலாளர்கள் அவ்வப்போது சர்வீஸ் முறிவு செய்யப்படாமல், ஒரு ஆண்டு காலம் சர்வீசில் இருந்தால் அவர்களை நிரந்தரமாக்கும் வகையில் ஒரு நடவடிக்கையை பின்பற்ற அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சட்டப்படி என்னென்ன கட்டுப்பாடுகள் இருக்கிறதோ அந்த அடிப்படையில் அவர்களை நிரந்தரமாக்குவதில் நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு ஆண்டு காலம் என்பது குறிப்பிட்ட நாள் அவர்கள் பணியாற்றி இருக்க வேண்டும். அந்தப் பணிக் காலத்தில் அவர்கள் எப்படி இருக்கிறார்கள், அவர்கள் நடவடிக்கை எப்படி இருக்கிறது என்பதை கவனிக்க வேண்டுமென்று அதற்காகவே சட்டத்தில் வழிவகை இருக்கிறது. அந்த அடிப்படையில் நிரந்தரமாக்கிக் கொண்டிருக்கிறோம்.



1985 ஜூலை 5]

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவர் அவர்களே, சி.எல்.ஆர். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் எந்தத் தகுதியின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதிலும் எம்ப்ளாய்மென்ட் அலுவலகத்திலிருந்து பட்டியல் வாங்கிதான் அதிலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, இதில் சிலபேர் நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் டெக்னிகல் அப்ரெண்டிஸ்களாகவும், கிளரிக்கல் அப்ரெண்டிஸ்களாகவும் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்கள் பணியில் உறுதிப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிலையை ஆய்வு செய்து, அந்த அப்ரெண்டிஸ்களை பணியில் உறுதிப்படுத்துவதற்கு, பணியில் அவர்களுக்கு கேரண்டி கொடுப்பதற்கான முயற்சியை எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்ரெண்டிஸ்கள் பொறுத்தவரையில் பெரும்பாலான போக்குவரத்துக் கழகங்களில் முறையாக செயலாக்கப்பட்டு வருகிறது. கிளரிக்கல் அப்ரெண்டிஸ் பொறுத்தவரையில் பயிற்சி கொடுத்து வெளியிலே அனுப்புவது தான். அவர்களில் யார் யார் தேவையோ எவ்வளவு வேகன்சி இருக்கிறதோ அதற்கு மட்டும்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால் இப்போது இங்கே ஒரே ஒரு போக்குவரத்துக் கழகத்தில், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் இருக்கிற பயிற்சியாளர்கள் தொடர்ந்து, நாங்கள் இங்கேயே பணியாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக அரசு முயற்சி எடுத்து பல இடங்களை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. குறைந்த எண்ணிக்கையிலேதான் இப்போது இதிலே பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. அதுவும் விரைவிலே தீர்க்கப்படும்.

வசிஷ்டா நதியின் குறுக்கே பாலம்.

522—(*வினா எண். 963) திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்ன சேலம்—சிறுவத்தூர் செல்லும் வழியில் ஓடுகின்ற ''வசிஷ்டா'' நதியின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.
(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1985 ஜூலை 5

லாரிகளுக்கு வாடகை நிர்ணயம்.

523—(* வினா எண். 1327) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள லாரிகளுக்கு வாடகையை அரசு நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள லாரிகளுக்கு வாடகையை அரசு நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லாரிகளை வைத்திருப்பவர்கள் ரெகுலர் சர்வீஸ் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இதிலே சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல கூடுதலாக சிறு சிறு மூட்டைகளுக்குக் கூட வாங்குகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே செயற்குறிப்பு இல்லை என்றாலும் கூட ரெகுலர் சர்வீசுகளுக்காவது அந்த தூரம், எடை இவைகளைக் கணக்கு வைத்து, மற்றவைகளுக்கு நிர்ணயிப்பது போல வாடகையை நிர்ணயிக்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளைப் பொறுத்தவரையில் நிறைய போட்டி இருக்கின்ற காரணத்தால், அரசாங்கம் அதிலே தலையிட்டு நிர்ணயம் செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லை என்று கருதிக்கொண்டு இருக்கிறது. காரணம் அந்த போட்டியினாலே, அவர்கள் எவ்வளவு குறைக்கவேண்டுமோ, அவ்வளவு குறைத்துத் தான் வாடகையை இன்றைக்கு பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே ஏதாவது தவறுகள் நடக்கிறது என்ற நிலை இருந்தால், அப்போது அரசாங்கம் தலையிடும்.

வைகையாற்றின் குறுக்கே பாலம்.

524—(*வினா எண். 1487) திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அணைப்பட்டி கிராமம் அருகே ஓடும் வைகையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1985 ஜூலை 5]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் லால்குடி கிளை.

525—(*வினா எண் 1575) திரு. கி. வெங்கடாசலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடியில் இயங்கிவந்த சோழன் போக்குவரத்துக் கழகத்தின் கிளை செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அந்த கிளையை புள்ளம்பாடியில் திறந்து போக்குவரத்து வசதி செய்து தர அரசு ஆவன செய்ய உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) லால்குடிக்கு பதிலாக அதன் அருகில் உள்ள புள்ளம்பாடியில் கிளை அமைக்கலாமா என்ற செயற் குறிப்பு இப்போது ஆய்வில் இல்லை.

கல்லணை—அய்யம்பேட்டை சாலை.

526—(*வினா எண் 1616ஏ) திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லணையிலிருந்து அய்யம்பேட்டை செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல்லணையானது கரிகால் சோழனால் கட்டப்பட்டு, திருச்சியிலே அந்தக் கல்லணையையும் மற்றும் பூம்புகார், காரைக்கால் போன்ற பகுதிகளையும் திருநல்லாறில் உள்ள சனீஸ்வரர் ஆலயத்தையும் மற்றும் கும்பகோணம் போன்ற பகுதிகளையும் பார்க்க சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்து போகிற சாலையாக அது இருக்கிறது. அதோடு காவிரிப் படுகை ஓரமாகவே வருகிறது. அதனால் சுற்றுலாப் பயணிகள் நிரம்ப பேர்கள் வருகிறார்கள். அதனால் அதிகமான பேருந்துகள் செல்லுகின்றன. அந்தச் சாலை மிகக் குறுகலான சாலையாக இருக்கின்ற காரணத்தால்,

விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே இதை மனதிலே வைத்துக் கொண்டு, வருகின்ற சுற்றுலாப் பயணிகள் நம்முடைய பகுதியிலே அந்த பஸ்கள் தடம் புரண்டு போகாத அளவிற்கு சுற்றுலாப் பயணிகள் திரும்பச் செல்கிற வகையில் இதை மனதிலே கொண்டாவது, அதை அகலப்படுத்த முடியுமா? என்பதை அரசு அறிவிக்குமா? என்று அறிய விரும்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுற்றுலாப் பயணிகள் திரும்பிப் போகவேண்டும் என்று சொல்வது ஒரு அச்சத்தை உருவாக்குவதாக இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட நிலை அங்கேயில்லை. இருந்தாலும் அந்தப் பாதையை அகலப்படுத்தினால் அங்கே வருகின்ற வாகனங்கள் மற்றவைகளுக்கு கொஞ்சம் வசதியாக இருக்கும் என்பதை வேண்மானால் ஒப்புக்கொள்ளலாம். எனவே அந்த வகையில் அந்தப் பாதையை அகலப்படுத்த ஏறக்குறைய 85 லட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. நிதி நிலைமையினால் அது தள்ளிப் போடப்பட்டு இருக்கிறது. அடுத்த ஆண்டிலே அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, இந்த கல்லணையிலிருந்து அய்யம்பேட்டை செல்லும் சாலையை அகலப்படுத்துவதற்கு தற்போது நிதிப் பற்றாக்குறை காரணமாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட ரோடுகள் அத்தனையுமே மிகக் குறுகலாகவும், வளைவாகவும் இருப்பதால் அதிகமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. லாரிகளும் பஸ்களும் ஒன்றோடொன்று மோதி அதனால் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. ஆகவே எதிர்காலத்திலாவது இப்படி நெடுஞ் சாலைத்துறைக்குச் சம்பந்தப்பட்ட, தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகளை அகலப்படுத்த, அப்பேர்பட்ட விபத்துக்களை தவிர்ப்பதற்கு எதிர்காலத்திலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாகச் செய்யப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்தக் கல்லணையிலிருந்து அய்யம்பேட்டை செல்லும் சாலையை விரிவுபடுத்துவதற்கு அதிகமான நிதி தேவைப்படுகிறது, அதனால் இது தள்ளிப்போடப்பட்டு வருகிறது என்றும், நிதி நிலைமைக்கு ஏற்ப செய்யப்படும் என்றும் சொல்லுகிறார்கள். இருந்தாலும் கூட, இப்போது பஸ்களும், மற்றவைகளும் ஒதுங்கிக் கூட செல்ல முடியாத காரணத்தால், கல்லணையிலிருந்து அய்யம்பேட்டை வரையில், அதை





அகலப்படுத்த முடியவில்லை என்றாலும், ஆங்காங்கே விட்டாவது ஒரு 2 கி.மீ. அல்லது 1 கி.மீ.-க்கு இடையிலே உள்ள தூரத்தை எடுத்தாவது கொஞ்சம் அகலப்படுத்தி, வருகின்ற வண்டிகள் அந்த இடத்திலே ஒதுங்கிப் போகின்ற வகையில் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு கி.மீ. அல்லது 2 கி.மீ. தூரத்திற்காவது இடையிலே சாலைகளைப் போடுவது என்பது பயனுடையதாக இருக்குமா என்பது ஆராய்ச்சிக்குரியதாக இருக்கிறது. எனவே அதைப் பற்றி பார்த்து, தேவைப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். செல்லமுத்து : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள அந்த ரோடுகளுக்கு எல்லாம் ஒதுக்கக் கூடிய பணங்கள் மிகக் குறைவாக இருப்பதாகவும், மற்ற மாவட்டங்களுக்கு போடக்கூடிய சாலைகளுக்கு ஒதுக்குவதைப் போல தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கக் கூடாது அதிக நிதி ஒதுக்க வேண்டும் அங்கேயுள்ள சாலைகள் வளைவாகவும் குறுகலாகவும் இருக்கின்றன. எனவேதான் அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை வருகிறது. எனவே தஞ்சை மாவட்டத்திற்கு, குறிப்பாக கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகளுக்கு அதிகப் பணத்தை ஒதுக்க அரசு முன்வருமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்த மாவட்டங்களுக்கு அதிகமான பணம் வேண்டும் என்றுதான் கேட்பார்கள். இப்போது தஞ்சை மாவட்டம் என்று வரும்போது, கீழ்த் தஞ்சைக்கு அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எனவே அங்கேயிருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப பணத்தை ஒதுக்கிக் கொண்டு இருக்கிறோம். அந்த அளவிலே தான் செய்ய முடியும்.

[முற்பகல் 9–20]

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள மண் லூஸ் சாயில் என்று சொல்வார்களே அதுபோல் இருக்கிறது. ஆகவே மாவட்டத்திலுள்ள ரோடுகள் எல்லாம் பாழான முறையில் தஞ்சை மாவட்டம் முழுவதும் குண்டும் குழியுமாக ரோடுகள் இருக்கின்றன. ஆகவே அதை பராமரிப்பதற்கு தஞ்சை மாவட்டத்திற்கு கொஞ்சம் அதிகமாக தொகை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கும்பகோணத்திலிருந்து திருச்சிக்கு கல்லணை வழியாக செல்லும் ரோடு மிகவும் குறுக்கு வழியாக செல்லக்கூடிய ரோடு. ஆகவே அந்த ரோடை முறையாக பயன்படுத்தினால் கும்பகோணம்-திருச்சி மெயின்

ரோடில் நெரிசல் குறையும். அதை தவிர்க்க முடியும், பஸ் ஆக்ஸிடெண்டு, டிராபிக் ஜாம் இவைகளை தவிர்க்க முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சிக்கு செல்ல குறுக்கு வழியாக இருக்கின்ற அந்த கும்பகோணத்திலிருந்து திருச்சிக்கு கல்லணை வழியாகச் செல்லும் அந்த ரோடை மேம்பாடு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும் குறைபாடுகளை மனதில் வைத்து தான் அரசு பணத்தை ஒதுக்குகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் அதைப்பற்றி பார்த்து தேவையா என்பதை பார்த்து பின்னர் அவர்கள் உணர்வுகள் மதிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு சாலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த சாலையைப் பற்றி ஆய்வு செய்து எந்த அளவுக்கு அதை செய்து முன்னேற்ற முடியுமோ அந்த அளவுக்கு செய்வதற்கு தயாராக இருக்கிறோம்.

திரு. மா. பணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு தஞ்சை மாவட்டத்திலிருந்து நாங்கள் எல்லாம் வந்து இருக்கிறோம். உங்களை கேட்டுக்கொள்ளுவது எல்லாம், அந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில் குவாரி மிகவும் தொலைவில் இருக்கிறது. அப்படி இருப்பதால் காஸ்ட்டு ஆப் மெட்டீரியல்ஸ் அதாவது அதை கொண்டு வர அதிகமான செலவு ஆகிறது. எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே சீராக ஒதுக்கி தருவதால் டிரான்ஸ்போர்ட் செலவிலேயே நீங்கள் கொடுக்கும் பணம் அடிப்பட்டு போய்விடுகிறது. அதனால் குவாரி தள்ளி இருப்பதால் கிழக்கு தஞ்சை மாவட்டதிற்கு கொஞ்சம் அதிகமாக பணத்தை ஒதுக்கி தனி திட்டம் உருவாக்கி சதுப்பு நிலங்களை சீர்செய்ய கிழக்கு தஞ்சைக்கு அதிகமான நிதியை ஒதுக்க அரசு முன்வருமா என அறிய விரும்பிகிறேன் .

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொடுக்கின்ற பணத்தை இந்த இந்த மாவட்டத்திற்கு இவ்வளவு என்று மொத்தமாக பிரித்துக் கொடுத்துவிடுவது இல்லை. அந்த அந்த மாவட்டங்களில் உள்ள சாலைகளின் தரம், நீளம் இவைகளை எல்லாம் கணக்கில் வைத்து அதற்கு ஆகிற செலவுகளை கணக்கில் வைத்து பிரிக்கிறது. எனவே, ஏற்கனவே நீங்கள் சொல்லிய குறைகளை எல்லாம் மனதில் வைத்து நிச்சயமாக பிரிக்கப்படும். உங்கள் உணர்வுகளை நிச்சயமாக மனதில் வைத்து இதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



குறைந்த வருவாய் உள்ள பேருந்து வழித்தடங்கள்.

527 (*வினா எண் 2184) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) அரசு போக்குவரத்துக்களின் வருவாய் குறைவாக இருக்குமானால் அந்த வழித்தடங்களில் பஸ் ஓட்டக்கூடாது என்று உலக வங்கி நிபந்தனை ஏதும் விதித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு போக்குவரத்துத் துறை உலக வங்கியிடம் போக்குவரத்தை சீர் செய்வதற்கு பணம் பெற்று இருக்கிறதா ? உலக வங்கி நிதி அளித்து இருக்கிறதா ? அப்படி என்றால் என்ன வட்டி விகிதத்தில் ? எத்தனை தவணைகளில் திருப்பித் தரவேண்டும் என்ற கால கட்டத்தையும் விதித்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12.60 கோடி ரூபாய் நமக்கு உலக வங்கி கடனாக கொடுத்து இருக்கிறது. இதை மத்திய அரசு வாங்கி நமக்கு கொடுத்து இருக்கிறது. இதனுடைய வட்டி விகிதம் என்னுடைய ஞாபகம் 10 சதவீதம் என்று கருதுகிறேன். அதற்கு சரியான குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. அதில் திருப்பிக் கொடுக்கின்ற தவணையைப் பற்றி இப்போது என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. ஆனால் மிக அதிகமான காலத்தை தேவையான காலத்தை நாம் கட்டுகின்ற அளவுக்கு அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி கொடுத்து இருக்கின்ற பணத்தில் எத்தனை பேருந்துகள், எந்த எந்த வழித்தடங்களில் விடப்பட்டு இருக்கின்றன. இது போன்று வேறு ஏதாவது நிறுவனங்கள் தமிழக அரசின் போக்குவரத்துக் கழகத்தை சீர் செய்வதற்கு நிதி உதவி செய்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியில் இருந்து வேறு எந்த நிறுவனமும் இது போன்று நமக்கு கொடுக்கவில்லை. 555 புதிய பேருந்துகளை நாம் வாங்கியிருக்கிறோம். இந்த 555 புதிய பேருந்துகள் பெரும்பாலும் பழைய பேருந்துகளை புதியதாக ஆக்கியும் சில புதிய வழித்தடங்களிலும் விடப்பட்டு இருக்கின்றன.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடத்தில் வாங்கக்கூடிய பணத்திற்கு வட்டி மட்டும் அல்ல அவர்கள் நிபந்தனை விதித்து ஒரு கட்டுப்பாட்டுக்குள் நிறுத்தி குறிப்பிட்ட காரியங்களுக்கு அந்தப் பணத்தை வழங்கியிருக்கிறார்கள். அந்த முறையில் இங்கே நமக்கு 12½ கோடி ரூபாய்க்கு மேல் வாங்கியிருக்கக்கூடிய பணத்தை அதற்கு அவர்கள் போடக்கூடிய வட்டி மற்றும் மற்றவைக்கும் ஈடு செய்வதற்கு தகுந்த முறையில் திரும்ப வருமானம் இருக்க வேண்டும் அந்த நிறுவனத்தில், என்ற கண்ணோட்டத்தோடு லாபம் கிடைக்காதவழித் தடங்களில் பஸ்களை ஓட்டக்கூடாது, அதேபோல் கட்டணம் உயர்த்த வேண்டும் என்றும் நஷ்டத்தில் இந்த ஸ்தாபனம் வேலை செய்யக்கூடாது என்றும்அவர்கள் நிபந்தனை விதித்து இருக்கிறார்களா? அதை நீங்கள் ஏதாவது ஏற்று இருக்கிறீர்களா? என்ன நிலைமை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எந்தெந்த வழித் தடங்களில் ஓட்ட வேண்டுமென்று, இப்படி இருக்க வேண்டுமென்று நம்மைக் கட்டுப்படுத்தவில்லை. எந்தக் கட்டுப்பாட்டுக்கும் நாம் இணங்கவில்லை. ஆனால், பேருந்து இயக்க செலவைப் பற்றி அவர்கள் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். அந்த இயக்கச் செலவை வைத்து நாம் கணக்கிடும்போது, இந்தக் கட்டண உயர்வை உயர்த்த வேண்டுமென்று உலக வங்கி நம்மை வலியுறுத்துகிறது. இப்படி கட்டண உயர்வை செய்வதில் கொஞ்சம் கஷ்டம் இருக்குமானால் நஷ்டம் ஏற்படும், திருப்பி கடனைச் செலுத்துவதில் சிரமமாக இருக்கும், அந்த நிறுவனம் மோசமான நிலைமைக்குப் போய் விடும் என்று மத்திய அரசும், உலக வங்கியும் சொல்லியிருக்கிறது. ஆனால், அதுமட்டும் அல்லாமல், இன்றைக்கு டீசல் விலை உயர்வின் காரணமாக கட்டணத்தை உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்று ஏற்கனவே மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையில் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கு உலக வங்கி ஆலோசனையாக சொல்லியிருக்கிறது என்பது உண்மைதான்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் பொறுப்பேற்ற பின்பு, அதிலும் குறிப்பாக தாங்கள் போக்குவரத்து துறையின் அமைச்சராக பொறுப்பேற்ற பின்பு, கிராமப் பகுதிகளில் நகரப் பேருந்துகளை அதிகமாக விட்டிருக்கிறீர்கள். ஆனால், அந்த நகரப் பேருந்துகள் 30 கிலோ மீட்டர் வரை போக வேண்டுமென்று விதியிருக்கிறது. அதை 50 கிலோ மீட்டர் அல்லது 40 கிலோ மீட்டர் வரையில் செல்ல அனுமதி அளிக்கப்படுமானால், அந்த கிராம மக்கள் பலன்பெற வாய்ப்பு உண்டு. அந்த விதியைத் தளர்த்தி 40, 50 கிலோ மீட்டர் வரை செல்லும் அளவுக்கு முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே, நகரப் பேருந்துகள் செல்ல வேண்டிய தூரம் 25 கிலோ மீட்டராக இருந்தது. இந்த அரசாங்கம் அதை 30 கிலோ மீட்டராக உயர்த்தியிருக்கிறது. மேலும் உயர்த்த வேண்டிய நிலை ஏற்படுமானால், நகரப் பேருந்துகளைத் தவிர வேறு பேருந்துகள் இருக்காது. இதை உயர்த்துவது என்பது மிகக் கடினம்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு கடன் வழங்குகின்ற நிறுவனம் கால வரம்பை நிர்ணயித்து, கடனைத் திருப்பி செலுத்த வேண்டுமென்று சொல்கிறது. ஆனால் மக்களின் தலையில் சுமையை ஏற்றுகின்ற மாதிரி, கட்டணத்தை உயர்த்த உத்தரவிடுகின்ற அதிகாரம் உலக வங்கிக்கு இல்லை. எனவே, மக்களின் தேவையைப் பூர்த்தி ஆக்குவதோடு, தமிழ்நாட்டின் தன்மானத்தையும், சுதந்திரமான செயல்பாட்டையும் பாதிக்கின்ற உலக வங்கியின் நிர்ப்பந்த நடைமுறையை நிராகரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நாம் கடனுதவியைப் பெறுகிறபோது, சில நேரங்களில் பேசி, சில ஒப்பந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். அவை ஒரேயடியாக மக்களை பாதிக்கின்ற அளவில் இருக்குமானால், அப்படி உத்தரவு போடுகின்ற வகையிலே இருக்குமானால் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லை. சில ஆலோசனைகளைத் தான் சொல்லியிருக்கிறார்கள். அதை வேண்டாம் என்று சொன்னால், அது அவ்வளவு சரியாக இருக்காது என்பது என்னுடைய கருத்தாகும்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் சில வழித் தடங்களில், அந்தப் பேருந்துகளுடைய வருவாயில் குறைவு ஏற்படுமானால், அந்த வழித் தடங்களில் சில தனியார்களுடைய பேருந்துகளைக் குறைக்க அல்லது நிரந்தரமாக தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி எடுக்கப்படுவதன் வாயிலாக அரசு உடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் வருவாய் உயர்வதற்கு வழியிருக்குமே, அந்தச் செயல்முறை நடைமுறைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னை நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரை அப்படிப் பட்ட நிலையில்லை. இந்தக் கேள்வி சென்னை நகரத்தைப்

பற்றியதாக இருக்கிறது. மற்ற இடங்களில் உள்ள பேருந்துகளைப் பற்றி அவர் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன், மற்ற பல இடங்களில் புதிய பேருந்துகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். பேருந்து வசதியில்லாத கிராமங்களில் பேருந்துகளை விடுவதற்கான முயற்சிகளை இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் செய்கின்றவரை, அந்த கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வரை, எந்த தனியார் பேருந்துகளையும் தடை செய்வதற்கான வாய்ப்பு நமக்கில்லை. அதைச் செய்ய வேண்டும் என்று சொன்னால், சட்டப்படி முழுமையாக எல்லோருக்கும் செய்ய வேண்டும். அப்படி செய்தால், அதிகமான பேருந்துகள் விடவேண்டிய நிலைமை ஏற்படும். அது கடினமாக இருக்கும். எனவே, படிப்படியாக செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

### ஆத்தூர் நகரில் வீட்டு வசதி

528—(*வினா எண். 1403) திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரில் வீட்டுவசதி வாரியத்தினரால் எத்தனை ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது?

(ஆ) வீடுகள் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, (அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரில் மட்டும் 32.65 ஏக்கர் நிலம் நில எடுப்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்த நடவடிக்கையில் உள்ளது.

(ஆ) சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரில் நிலத்தை கையகப்படுத்தப்பட்டவுடன், மக்களின் வீட்டு வசதித் தேவைக்கேற்ப வாரியம் வீடுகளை கட்டத் திட்டமிடும்.

### பத்தமடை அரிசன சங்கத்தின் முறையீடு

529—(*வினா எண் 1540) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவை துணைத் தலைவர்) : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை நகர பஞ்சாயத்து அம்பேத்கார் நகர் 2-வது தெரு, பத்தமடை வட்டார அரிசன சங்கத்திலிருந்து நில ஆர்ஜிதம் செய்து அரிசன விவசாய கொத்தடிமைகளின் புனர்வாழ்வுக்கு வழி செய்யக் கோரி மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 9-30).

மாண்புமிகு வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை ஆதிதிராவிடர் சங்கத்தில் இருந்து விவசாய நிலங்கள் கோரி அரசுக்கு விண்ணப்பம் ஏதாவது வந்திருக்கிறதா ? வந்திருந்தால் அதன் மீது அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள ஆதிதிராவிடர்களிடம் இருந்து கொத்தடிமைகள் என்ற முறையில் மனு வரவில்லை. கொல்லுமடை கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்கள் ஏரிப் பக்கத்திலே நிலங்கள் ஆர்ஜிதம் செய்து விவசாயம் செய்வதற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கிராமிய நூற்பு மையங்கள்.

530—(*வினா எண் 1701) திரு. க. சோலைராசு : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் ''கிராமிய நூற்பு மையம்'' மூலம் எத்தனை பெண்களுக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டுள்ளது?

(ஆ) அவர்களுக்கு ஊதியம் எவ்வளவு வழங்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, (அ) திருச்சி மாவட்டத்தில் கிராமிய நூற்பு மையங்கள் மூலம் 1,350 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

(ஆ) தற்போது குறைந்தபட்ச வருமானம் நாள் ஒன்றுக்கு ரூ. 9 கிடைக்கும் விதத்தில் கூலி வழங்கப்படுகிறது.

531—(*வினா எண் 2228) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் வாரியத்தால் நடத்தப்படும் கிராமிய நூற்பு மையங்களை தருமபுரி மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் கிராமிய நூற்பு நிலையங்கள் ஏற்படுத்த அரசு திட்டமிட்டு, ஏற்கனவே 17 நிலையங்கள் ஆரம்பித்து நடத்தப்பட்டு வரப்படுகின்றன. மேலும் கிராம தொகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழும் 5 நிலையங்கள் துவக்க உள்ளன.

எங்கெங்கு இத்திட்டத்தினை நன்கு நடத்த வாய்ப்புக்களும், வசதிகளும் உள்ளனவோ அங்கெல்லாம் ஆரம்பிக்க அரசு திட்டமிடும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே 17 மையங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அவைகளிலே எத்தனை பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, ஒரு கிராமிய நூற்பு மையத்திலே 30 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. 17 மையங்களிலே ஒரு மையத்திற்கு 30 பெண்கள் வீதம் வேலை வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே 5 நிலையங்கள் ஆரம்பிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு மையத்தினை என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, அங்கே ஆரம்பிக்கப்படும் 5 கிராமிய நூற்பு நிலையங்களும் கூட்டு சிறப்புத் திட்டத்தின் கீழ் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. அந்த 5 கிராமிய நூற்பு மையங்களும் பாப்பிரெட்டிபட்டி ஒன்றியத்திலே ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் : தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியில் இந்தத் திட்டம் சீரிய முறையில் தமிழகமெங்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் ஒரு சில இடங்களிலே இந்தத் திட்டத்திலே பெரும் ஈடுபடுகிற பெண்களுக்கு கொடுக்கப்படுகிற கூலி கட்டுப்படியாகாத நிலையில் இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. என்னுடைய சாயாமொழி தொகுதியிலே உள்ள மையத்திலே கூலி உயர்வு இன்மையால் அந்த மையம் சரியான முறையிலே செயல்படாமல் இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்தி கூலியை உயர்த்திக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, கிராமிய நூற்பு நிலையங்களிலே 1—4—85-க்கு முன்பு அங்கே ஒரு பெண்ணுக்கு 5 ரூபாய் முதல் 7 ரூபாய் வரை கூலி கொடுக்கப்பட்டு வந்தது—அந்தந்தப் பகுதிகளுக்குச் செல்கிற நேரத்திலே அந்தந்த கிராமிய நூற்பு மையங்களிலேவேலை பார்க்கும் பெண்கள், இங்கே சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்டதைப் போல கூலி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கோரினார்கள். அவர்களுடைய கருத்துக்கு ஏற்ட பம்பாயிலே உள்ள கதர் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரிலே 1—4—85 முதல் கூலி உயர்வு கிடைக்கும் வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு அது அளிக்கப்பட்டு வருகிறது. இது வரையில் அவர்களுக்கு 5 ரூபாயிலிருந்து 7 ரூபாய் வரை கொடுக்கப்பட்டு வந்ததை 1—4—85 முதல் 7 ரூபாயிலிருந்து 9 ரூபாய் வரை கூலி உயர்வு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதினெட்டாங் கால்வாய்த் திட்டம்

532—(*வினா எண். 469 திரு. என். எஸ். வி. சித்தன்), திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன், மற்றும் திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகும் கொட்டகுடி ஆற்றில் முடியும் பதினெட்டாங் கால்வாய் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்கான முதல்நிலை அறிக்கை (Preliminary Report) அரசுக்கு வந்துள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது. திட்ட மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்புதல் அளித்த பின்னர் பணிகளை ஆரம்பிக்க இயலும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு மலைத்தொடரிலே உற்பத்தியாகும் கொட்டகுடி ஆற்றிலே முடிகின்ற பதினெட்டாங் கால்வாய்த் திட்டம், அந்தப் பகுதியிலே வளம் குன்றிய பகுதிகளாக இருக்கிறவைகளுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம் ஆகும். முதல் அறிக்கை அரசுக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதல் அறிக்கை எப்போது வந்தது? எப்போது அந்த ஆய்வுமுடிவு அடையும்? அதனாலே ஏற்படக்கூடிய விழுமிய பயன்கள் என்னென்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பதினெட்டாம் கால்வாயினைப் பற்றி ஆய்வுகள் நடத்தவேண்டும் என்ற முடிவே அண்மையில் தான் அரசு எடுத்தது. நான் நேரடியாக அந்த இடத்தினைப் பார்வையிட்ட பிறகு தான் அந்த முடிவு எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு திட்டத்திற்கும் முதல் நிலை அறிக்கை எப்படி அனுப்பப்படுமோ, அதுபோல், அதைத் தயாரித்து அதிகாரிகள் அனுப்பி இருக்கிறார்கள். அந்த முதல் நிலை அறிக்கையிலே தேவையான அளவுக்கு குறைந்த பட்சம், அந்தத் திட்டத்தினை மேற்கொள்வதற்கு ஒரு அடிப்படைக் காரணம் இருக்கிறது என்ற கருத்தினை அரசு ஏற்றுக் கொண்டால், தெளிவான ஆய்வுகள் நடத்தி அரசு உத்தரவு போடும். அந்த உத்தரவின் அடிப்படையில், தெளிவான, முழுமையான விவரங்களைத் தரக்கூடிய ஒரு ஆய்வு அறிக்கையைத் தயாரித்து அரசுக்கு ஆய்வுத் துறை அனுப்பும். அந்த ஆய்வு அறிக்கையில் தான் சரியாக எவ்வளவு ரூபாய், அந்தத் திட்டத்தினால், அரசுக்குச் செலவாகும் என்று தெரிய வரும். அதற்குப்பிறகு தான் அந்தத் திட்டத்தை அரசு மேற்கொள்வதா, வேண்டாமா? என்ற முடிவுக்கு வந்து, மேற்கொள்ளவேண்டும் என்றால் மேற்கொள்ளும்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, பெரியார் கால்வாய்க்கு மேற்கே உள்ள பகுதி வறண்ட பகுதியாகவும், அங்கே உள்ள கிணறுகள், 100 அடி, 150 அடி ஆழத்திற்குக் கீழே தண்ணீர் இல்லாமல் போய் விட்டதால், அங்கே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதன் மூலமாக, அந்தப் பகுதி விவசாயப் பெருமக்கள் பெரிதும் பலன் அடையக் கூடிய வகையில் இருப்பதால், மிக விரைவிலே இதை துரிதப்படுத்தி, இதனை அமலுக்குக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில், பெரியார் ஆற்றின் இடது புறத்தில் ஒரு 39 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கால்வாய் வெட்டி, அதன் மூலம் பாசன வசதி பெறக்கூடிய



38 குளங்களின் மூலம், 1,337 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதியும், சுத்த கங்கை ஓடையின் கீழுள்ள 242 ஏக்கர் இடைவெளி நிலங்களுக்குக் பாசன வசதி மற்றும் 6 புதிய குளங்கள் உருவாக்கி 191 ஏக்கர் நிலங்கள் புதிய பாசன வசதிகளைப் பெறுமாறு, ஆரம்பக் கட்ட அறிக்கை என்று சொல்லக்கூடிய, முதல் நிலை அறிக்கையிலே தகவல் தரப்பட்டிருக்கிறது. அதற்காக ரூபாய் 990 இலட்சங்கள் செலவாகும் என்று தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, நான் முன்பே சொன்னது போல், முடிவான, இறுதி அறிக்கை ஆய்வுக்குப் பிறகு தான் நிலைமைகள் தெரிய வரும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதினெட்டாங் கால்வாயினுடைய திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, அவர்களே, தனியாக சிரத்தை எடுத்து, இந்தத் திட்டம் உருவாவதற்கான ஆரம்ப முயற்சியை எடுத்து இருப்பதற்காக நான் அவருக்கு நன்றி கூற விரும்புகிறேன். அமைச்சர் கொடுத்த புள்ளி விவரத்திலே, ஏறத்தாழ 10 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று முதல் நிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். 10 கோடி ரூபாய் என்பது, தனியார் கணக்கிலே பெரிய தொகையாக இருந்தாலும், அரசாங்கக்கணக்கிலே அது சாதாரணத் தொகை. அந்தப் பகுதியிலே இருக்கிற வளம் குன்றிய நிலையைக் கருத்திலே கொண்டு, அந்த அறிக்கை மீது அரசாங்கம் விரைவில் ஒப்புதல் அளித்து, ஒரு நல்ல அறிவிப்பினை மன்றத்தின் மூலம் வழங்கினால், அது அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல செய்தியாக, பால் வழங்குவதைப் போல், இனிப்பான செய்தியாக இருக்கும். எனவே அமைச்சரவர்கள் அதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாகவே, இதைப் போன்ற பாசனத் திட்டங்கள் எல்லாம் மேற்கொள்ளக் கூடிய சூழ்நிலையில் முதல் நிலை அறிக்கையை மட்டும் வைத்து முடிவு எடுத்து விடமுடியாது. ஏனென்றால் முதல் நிலை அறிக்கை மேலெழுந்தவாரியாக தயாரிக்கப்படுகின்ற அறிக்கை ஆகும். அதற்குப் பிறகு இருக்கக்கூடிய நில அளவைகள், நில ஏற்ற இறக்கங்கள், கிடைக்கக்கூடிய தண்ணீரின் அளவு, இவற்றைக் கணக்கிட்டுப் பார்த்து, முடிவான இறுதி அறிக்கை தரப்படும. அதற்குப் பிறகு, அந்தத் திட்டத்தை உருவாக்கினாலும் கூட, தேவையான அளவுக்கு தண்ணீர் கிடைக்குமா? அப்படியே கிடைத்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தப் பகுதியிலே பாசன வசதி கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ, அந்தப் பகுதிக்கு அந்தப் பாசன வசதியைக் கொண்டு செல்ல முடியுமா என்பதைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும். ஆகவே, இறுதி அறிக்கை வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய

திறமையின் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர் அரசிற்கு உரிய முறையில் எடுத்துச் சொல்லி, அந்தத் திட்டத்திற்குரிய அனுமதியையும் பெறுவார் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

(முற்பகல் 9-40)

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பதினெட்டாம் கால்வாய்த் திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்ற பகுதிகள் மிகவும் வறண்டு கிடக்கின்ற பகுதிகளாகும். அவ்வளவு வறண்டு கிடக்கின்ற பகுதிகளுக்கு இரண்டு மைல், ஒரு மைல் தூர இடைவெளியில் உள்ள பெரியாறு பாசனப் பகுதி மிகவும் செழிப்பாக இருப்பதைக் கண்ணுக்கு நேராகப் பார்த்து அந்த மக்கள் நீண்ட நெடுநாட்களாக ஆதங்கத்தோடு இருக்கிறார்கள். முதல்நிலை அறிக்கையைப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள், அந்த அறிக்கையின் மீது உடனடியாக முடிவெடுத்து விரிவான அறிக்கையைப் பெறுவதற்கு டிடெயில்ட் இன்வெஸ்டிகேஷன் செய்வதற்கு உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, பெரியாறுக்கு மேல்புறம் இடைவெளி இரண்டு மைலாக இருந்தாலும்கூட மலையடிவாரமாக இருப்பதால் தண்ணீர் தரை மட்டத்திலிருந்து மேல்மட்டத்திற்குச் செல்ல முடியாத நிலைமை இருப்பதால் அந்த இடத்தில் பாசன வசதி இதுவரையில் செய்து தரப்படவில்லை. ஆகவே, இந்த பதினெட்டாங் கால்வாய் திட்டம் வருமேயானால் நிச்சயமாக அது பயனுள்ள திட்டமாக அமையும்: குறிப்பாக நிலத்தடி நீர் கிடைக்கின்ற அளவிற்கு உள்ள திட்டமாக அமையும் என்பதை அரசு தெரிந்து வைத்திருக்கிறது. ஆகவே, முதல்நிலை அறிக்கை பெறப்பட்டிருக்கிறது; விரிவான ஆய்வு நடத்த உரிய உத்தரவை உரிய முறையில் உரிய நேரத்திலே போடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பதினெட்டாங் கால்வாய்த் திட்டம் பதினெட்டாங் கால்வாய்த் திட்டம் என்று இங்கே பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும்பொருட்டு இந்தப் பதினெட்டாங் கால்வாய்த் திட்டத்தின் மூலம் எந்தெந்தத் தொகுதி மக்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது அரசு முதல்நிலை அறிக்கையைத்தான் பெற்றிருக்கிறது. முதல்நிலை அறிக்கையின் வாயிலாக, இந்தத்



திட்டம் வைரவனூரில் ஆரம்பிக்கப்பட்டு தேவாரத்தில் உள்ள சுத்தகங்கையில் முடியும் என்று தெரிகிறது. அதற்கு இடையிலே உள்ள பகுதிகள் எந்தெந்த தொகுதிகளைச் சார்ந்தவையோ அந்தப் பகுதிகள் பயன்பெறும் என்று கருதப்படுகிறது.

### ஓனான் கரடு நீர்த் தேக்கம்.

533—(* வினா எண். 1486)—திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஊத்துப்பட்டி கிராமம் அருகில் ஓனான் கரடு ஓடையில் நீரைத் தேக்கி வைத்து பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### கோவை வாலாங்குளம் பகுதியில் வளர்ச்சித் திட்டம்.

414—(*வினா எண். 502) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரின் தெற்குப் பகுதியிலுள்ள வாலாங்குளத்தில் சுமார் 25 ஏக்கர் பூமியை வளர்ச்சித் திட்டங்களுக்காக மாநகராட்சி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### உசிலம்பட்டி பேரூராட்சி பேருந்து நிலையம்.

415—(*வினா எண். 597) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி பேரூராட்சி பேருந்து நிலையத்திற்கு குடிநீர், கூரை, தள அமைப்பு போன்ற வசதிகள் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆம்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதைப்பற்றி பல காலமாகச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு அந்தப் பேருந்து நிலையம் நல்ல முறையில் அமையாத காரணத்தினால் 82-க்கும் மேலான நம்முடைய பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகளெல்லாம் உள்ளே சென்று வரும் நிலைமை இல்லாமல் இருப்பதால். அதன்மூலம் கிடைக்கின்ற வருமானம் குறைந்திருக்கிறது. எனவே, கூடியவிரைவில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு சீக்கிரத்தில் அது எங்களுக்குக் கிடைக்கும் என்ற செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, 1984–85 நிதியாண்டில் 35.52 இலட்சம் ரூபாய்களை ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவெடுக்கப்படும்.

### திருவிடைமருதூர் பேருந்து நிலையம்

416—(* வினா எண். 841) திரு. மு. இராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் மேல வீதியில் ஸ்ரீமகாலிங்க சுவாமி கோயிலுக்குச் சொந்தமான காகா குளம், நகரின் சுகாதாரத்தைக் கெடுத்துக் கொண்டு இருப்பதால் அந்தக் குளத்தை மூடி அந்த இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிட்டுள்ளபடி நடவடிக்கை எடுக்க திட்டம் ஏதும் இல்லை.

### சென்னை நகரில் விளம்பரப் பலகைகள்.

417.—(* வினா எண். 1621) திரு. சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் விளம்பரப் பலகைகள் மாநகராட்சியின் முன் அனுமதி பெறாமல் அமைந்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?



(ஆ) ஆம், எனில், அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை மாவட்ட ஆட்சியரும், மாநகராட்சியும் இணைந்து 7—7—1984 அன்று, சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ள விளம்பரப் பலகைகள் பட்டியலில் இல்லாமலும், மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெறாமலும் அமைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகைகளை அகற்றியுள்ளனர். அனுமதி வழங்கப்பட்ட எல்லா விளம்பரப் பலகைகளின் குத்தகைக் காலம் 1981-ம் ஆண்டிற்கு முன்னரே முடிவடைந்துவிட்டது. மேற்படி விளம்பரப் பலகைகளை அகற்றுவதற்கு சென்னை உயர் நீதி மன்றம் தடை விதித்துள்ளது. சம்பந்தப்பட்ட வழக்குகளில் உயர்நீதிமன்ற தீர்ப்பு வந்ததும், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளம்பரப் பலகையால் மாநகராட்சிக்கு நல்ல வருவாய் கிடைக்கும். எனவே இந்த விளம்பரப் பலகையை தனியாருக்குக் கொடுக்காமல் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் நெடுஞ்சாலைப்பணித் துறையோடும் கலந்து பேசி, விளம்பரம் காட்டுகின்ற இந்த முறையைக் கட்டுப்படுத்தி, வரையறுத்து, மாநகராட்சியே வழங்கினால், விளம்பரங்களை முறைப்படுத்தவும் அரசுக்கு வருவாய் ஈட்டவும் வசதியாக இருக்கும். அதற்கு சட்டம் இயற்றப்படுமா ? தனியார்கள் சென்னை மாநகர் முழுவதும் ஆங்காங்கே பல்வேறு இடங்களில் இரவோடு இரவாக திடீரென்று விளம்பரப் பலகையை நட்டுக்கொள்வதும் மறுநாள் கோர்ட்டிலே சென்று ஸ்டே வாங்குவதும் என்று இப்படிப்பட்ட முறையிலே பகல் கொள்ளையாக நடப்பதைத் தடுக்கின்ற வகையிலும், மாநகராட்சிக்கு வருவாய் வருகின்ற வகையிலும் தனிச் சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அனைத்துக் கருத்துக்களின் அடிப்படையிலே, விரைவிலே, இந்த மாமன்றத் தொடர் கூட்டத்திலேயே இதற்கான சட்டம் ஒன்று வர இருக்கிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே, குறிப்பாக மவுண்ட் ரோடில் வைக்கப்பட்டிருக்கிற சினிமா விளம்பரங்கள் ஆபாசமானதாக இருக்கிற காரணத்தால், வாகனங்களில் செல்கின்றவர்கள் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு வாகனத்தை

ஓட்டி அருகிலே உள்ள வாகனங்களோடு மோதி விபத்துக்கள் நடக்கின்றன. அதைத் தடுக்கின்ற வகையில் அந்த ஆபாச விளம்பரங்களை அகற்றிட மாநகராட்சி நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மவுண்ட் ரோடு என்று இல்லை, அண்ணா சாலை என்றுதான் அதற்குப் பெயர். அண்ணா சாலையை அண்ணா சாலை என்று அழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கத்தினர் குறிப்பிட்ட அனைத்துக் கருத்துக்களையும் மனதிலே வைத்துக் கொண்டுதான் நான் சொன்னேன், விரைவிலே இந்தக் கூட்டத் தொடரிலேயே இதற்கான சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி ஆபாச சுவரொட்டிகளை, ஆபாச சினிமா போஸ்டர்களை கண்ட கண்ட இடங்களில் ஒட்டுகிறார்களோ அதைப் போல் கண்ட, கண்ட இடங்களில், அரசு அலுவலகங்கள் மற்றைய தனியார் அலுவலகங்கள், வீடுகள் போன்ற இடங்களிலே ஆபாசமான வார்த்தைகளை எழுதுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. உதாரணமாக, அண்ணா பொறியியல் கல்லூரி வளாகச் சுவரில் ஒரு இனத்தைக் குறிப்பிட்டு, அந்த ஜாதிப் பெண்களை எல்லாம் பொதுச் சொத்தாக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். இது ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் விளைவிப்பதாகவும் ஒற்றுமையைக் குலைப்பதாகவும் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஆபாசமான வார்த்தைகளை எழுதுவதைத் தடை செய்ய அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தடை போட்டுவிடுவதனால் திருட்டுத்தனமாக இரவில் எழுதிவிட்டுப் போகின்ற சமூக விரோதிகள் செய்யாமல் இருக்கமாட்டார்கள். அதை சமூகத்தில் எப்படிக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதைப் பார்க்க வேண்டும். இப்படி அநாகரிகமாக எழுதுவதை தடுக்க, சமூகமே அதைத் தனது சொந்தச் சொத்தாக ஏற்றுக்கொண்டு எழுதுகிறவர்களைக் கண்டு பிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கு முன்வந்தாலொழிய அந்தக் கொடுமை நீங்காது, ஒழியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிராபிக்கை ரெகுலேட் செய்வதற்காக, ஒழுங்குபடுத்துவதற்காக, காவல் துறை அதிகாரிகள் நிற்பதற்காக, கொடை வழங்கப்படுகிறது. அதை ஸ்டேட் பாங்க், ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப் போன்றவர்கள்



கொடுக்கிறார்கள். அந்தக் கொடைகளிலே விளம்பரம் செய்கிற
நிலைமை இருக்கிறது. சினிமா போஸ்டர்களை, அரசியல்
போஸ்டர்களை, வருகிறவர்களுக்கு வரவேற்பு போஸ்டர்களை
டிராபிக்கை ரெகுலேட் செய்ய உதவுகிற அந்தக் கொடையி
லேயே ஒட்டுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அல்லது
கண்காணிக்க நடவடிக்கை எடுக்க அரசு முயலுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, இதுபோன்ற இடங்களில் ஒட்டப்படுகின்ற சுவ
ரொட்டிகளை ஆங்காங்கு, அவ்வப்போது காவல் துறையினர்
அப்புறப்படுத்தி வருகிறார்கள். ஒட்டக் கூடாது என்று
தடை விதித்திருக்கிறோம். மீறி ஒட்டுகிறார்கள். இனிமேல்
அதைப்பற்றி தனியாக ஒரு சட்டம்தான் கொண்டு வர
வேண்டும். ஒட்டப்படுகின்ற சுவரொட்டிகள், யாராக இருந்
தாலும், சம்பந்தப்பட்டவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்
படும் என்று சட்டம் கொண்டுவந்தாலொழிய இதை நிறுத்த
முடியாது.

நாகை மருத்துவமனை.

366—(*வினா எண். 262) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்டு இணைக்கப்பட்டுள்ள வார்டிற்கு சுற்றுச் சுவர் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே,
(அ) வடக்குப்புறம் மற்றும் சுற்றுச்சுவர் இல்லை.

(ஆ) 1986–87 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படலாம்.

தேங்காப்பட்டணம் மருத்துவமனை.

367—(*வினா எண். 359) டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேங்காப்பட்டணம்
அரசு மருத்துவமனையை புதிய கட்டட வசதியும், நவீன
கருவிகள், தனிசிறப்பு மருத்துவர் (Specialist Doctors)
வசதி ஆகியவை கொண்ட மருத்துவமனையாக விரிவுபடுத்த
அரசு முன்வருமா ?

[1985 ஜூலை 5

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தற்சமயம் குமரி மாவட்டம் தேங்காப்பட்டணம் அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க கூடுதல் கட்டிடங்கள் கட்டவும், நவீன கருவிகளை வாங்கவும் மற்றும் சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட சிறப்புப் பிரிவுகளை துவக்க வேண்டியும் எந்தச் செயற்குறிப்பும் பரிசீலனையில் இல்லை.

(முற்பகல் 9–50)

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காப்பட்டணத்தில் இருக்கிற மருத்துவமனை கடற்கரையை ஒட்டி இருக்கிறது. அது மட்டுமல்ல. அங்கே ஏராளமான நோயாளிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த மருத்துவமனைக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அதனால் டாக்டர்கள் உள்ளே சென்று மருத்துவம் செய்ய தயங்குகிறார்கள். ஆகையால் உடனடியாக கட்டிடத்தை பழுது பார்த்து, நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே ஒருமுறை என்னிடம் இதுபற்றி சொல்லியிருக்கிறார்கள். அடுத்த இரண்டாம் பகுதி திட்டமாக இதை எடுப்பது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவரவர்களே, இரண்டாம் பகுதித் திட்டத்தில் எடுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கிடையில் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதற்கு அரசுதான் பொறுப்பு ஏற்கவேண்டி வரும். அந்த அளவுக்கு அந்தக் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் அரசு உடனடியாக பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்த மருத்துவமனைக்கு உடனடியாக ஆபத்து வந்துவிடும் என்று சொல்கிறார்கள். அப்படி வரக்கூடிய வாய்ப்பு இல்லை என்று தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நிதி நிலை எல்லைக்குள் இருந்துதான் செயலாற்ற வேண்டியிருப்பதால் அடுத்த பார்ட் II ஸ்கீமில் சேர்த்துக் கொள்ள பரிசீலிக்கலாம்.

மன்னார்குடி மருத்துவமனை.

368—(*வினா எண். 1285) திரு. சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியில் உள்ள அரசு மருத்துவமனை விரிவு படுத்தப்படுமா ?



1985 ஜூலை 5]

(ஆ) அங்கு இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஏற்கனவே இயங்கி வருகிறது.

திரு. சா. ஞானசுந்தரம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இரத்த சேமிப்பு வங்கி செயல்படுகிறது என்று சொல்கிறார்கள். அங்கே இருக்கிற இரத்த சேமிப்பு வங்கி தற்போது செயல்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு முன்வருமா ? மன்னார்குடி அரசு மருத்துவமனை ஒரு மையப் பகுதியில் இருக்கிறது. அந்தக் கட்டடம் பழைய கால கட்டடமாக இருக்கிறது. அங்கே வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை தினமும் கூடிக் கொண்டே இருப்பதால் அந்த மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்த மருத்துவமனையை நானே பார்த்திருக்கிறேன். இப்போது 132 படுக்கைகள் இருக்கின்றன. Dental, Blood Bank, X-Ray, E.C.G., Opthomology, Siddha Wing, Medical Laboratory, என்று 6 பிரிவுகள் இருக்கின்றன. அது மட்டுமல்ல. அங்கே சராசரியாக வருகின்ற உள் நோயாளிகளைப் பொறுத்தவரையில் முன்பு எந்த நிலையில் இருந்ததோ அதே நிலைமையில் தான் இருக்கிறது. புற நோயாளிகள் சராசரியாக ஒரு நாளைக்கு 600 பேர் வருகிறார்கள். அந்த மருத்துவமனையை இன்னொரு இடத்திற்கு மாற்றுவது பொருத்தமாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மருத்துவமனையை நல்ல முறையில் விரிவுபடுத்த வேண்டும், ப்ளட் பாங்க் செயல் படுத்தப்பட வேண்டும் என்று இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதிகாரிகளை அனுப்பி ப்ளட் பாங்க் நல்ல முறையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வாக்குறுதியை மட்டும் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. ஞானசுந்தரம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னதற்கு நன்றி. அங்கே கண் டாக்டர்கள் போன்ற சிறப்பு மருத்துவர்கள் இல்லாத குறை இருக்கிறது. அவர்களை அரசு உடனடியாக நியமிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்தக் கோரிக்கைகவனிக்கப்படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆலைக் கழிவு நீரால் பாதிப்பு.

369 (*வினா எண் 108) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் ஆரூரான் சர்க்கரை ஆலை கழிவு நீர் குடமுருட்டி ஆற்றில் கலப்பதால் விவசாய நிலங்களுக்கும், கால் நடைகளுக்கும், பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம், ஆரூரான் சர்க்கரை ஆலை கழிவு நீர் குடமுருட்டி ஆற்றில் கலக்கவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆரூரான் சர்க்கரை ஆலையின் கழிவுநீர் குடமுருட்டி ஆற்றில் கலப்பதாக பலதடவை இந்தச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தவறான தகவலை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்களோ என்பது தெரியவில்லை. இருந்தாலும் அந்தப் பகுதியிலுள்ள நிலம், குடி தண்ணீர், பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகையால் அரசு அந்த நிர்வாகத்திற்கு எச்சரிக்கை விடுத்தும், அறிவுரை வழங்கியும் வருகிறது. தொடர்ந்து இத்தகைய தவறு நடைபெறுவதால் அந்த சர்க்கரை ஆலை லைசென்ஸ் ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த சர்க்கரை ஆலைக்கு Under Section 26 of the Water Prevention Control and Pollution Act. அனுமதி பெறவேண்டுமென்று சொன்னோம். அந்த அடிப்படையில் அவர்கள் கேட்டு 28–5–84 அன்று அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது Subject to the condition that the industries should treat the, effluent என்ற அந்தக் கண்டிஷனோடு அனுமதி கொடுக்கப்பட்டது. அதாவது அந்தக் கழிவுநீரை சுத்திகரிக்க வேண்டும் என்ற அந்தநிபந்தனையின் அடிப்படையில் தான் அவர்களுக்கு அதற்கு அனுமதி கொடுத்தோம். அதற்குப் பிறகு அண்மையில்



9–3–1985-ல் அதாவது இந்த ஆண்டு மார்ச் மாதம் 9-ஆம் தேதி அந்தத் தொழிற்சாலைக்கு நாம் ஒரு சிலரை அனுப்பி எப்படி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைப் பார்வையிட்டதில் அங்கே தவறு செய்து கொண்டு வருகிறார்கள் என்று நமக்குத் தெரிய வருகின்றது. ஆகவே மீண்டும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். உடனடியாக, அவர்கள் அந்தத் தண்ணீரை சுத்திகரிக்காமல் விடுவார்களேயானால் 44-வது ஷரத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் அந்தத் தொழிற்சாலையின் மீது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இப்படிப்பட்ட ஆலைகளிலிருந்து வருகின்ற கழிவுகள் என்பது தமிழகம் எங்கும் பரவலாக இருந்து கொண்டிருக்கின்ற ஒரு நிலைமையாகும். என்னுடைய பகுதியில் இருக்கின்ற ஒரு நவீன அரிசி ஆலையில் கூட இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்றது. எனவே இப்படி தமிழகம் எங்கும் இருப்பதன் காரணத்தால் ஒட்டுமொத்தமாகக் கணக்கெடுத்து மொத்தமாக ஒரு திட்டத்தைத் தீட்டி இப்படிப்பட்ட கழிவுநீரை பொதுப் பணித்துறை வாய்க்கால்களிலோ அல்லது தனி இடங்களிலோ மாற்றுகின்ற திட்டத்தை அரசு ஆராயுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, படிப்படியாக நாம் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். அந்த நடவடிக்கையின் விளைவாகத்தான் இப்போது பல்வேறு இடங்களில் இந்தக் கழிவுநீரை சுத்திகரித்துதான் வெளியே அனுப்புகிறார்கள். அப்படி சுத்திகரிக்காமல் வெளியே விடுவார்களேயானால் நான் ஏற்கனவே சொன்னமாதிரியாக தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும். இதனை ஆங்கிலத்தில் எழுதி வைத்திருப்பதைப் படிக்கிறேன். Failing which penal action will be taken against any industry under Section 44 of Water (Prevention and Control of Pollution Act, 1974) என்ற வகையில் கடுமையான நடவடிக்கை எந்த ஒரு தொழிற்சாலையாக இருந்தாலும் எடுக்கப்படும். முதலிலே அவர்கள் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்ற பிறகு—நிபந்தனையுடன் அனுமதி கொடுக்கிறோம். அந்த நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டு சரியான முறையில் செயல்படுகிறார்களா என்று திடீர் சோதனையை அதிகாரிகள் மூலம் நடத்துகிறோம். அப்போது தவறு நடைபெறக்கூடிய நிலைமை இருக்குமேயானால் 44-வது ஷரத்தின் கீழ் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது குடமுருட்டி ஆற்றில் அந்தக் கழிவுநீர் கலக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வெண்ணாறு, அரசலாறு போன்ற பகுதிகளில் அந்தக் கழிவுநீர் கலப்பதோடு அதேபோல்

[1985 ஜூலை 5

தஞ்சை மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் இருக்கின்ற சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர் கூட பல பகுதிகளில் ஓடி அந்தப் பகுதிகளில், காவிரி ஆறு பாயாத பகுதிகளில் கிணற்றிலே தண்ணீர் எடுத்துச் சாப்பிடுகின்ற விவசாயக் குடும்பங்கள் வாழ்கின்ற பகுதியில், இந்தத் தண்ணீர் கலந்து ஊற்றாகச் சென்று பெரிய சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்துகின்ற நிலையில் அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 10 கிராமங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அதை மனதில் வைத்து இந்தக் கழிவுநீரைப் பொறுத்தவரையில் பெரிய ஆலைகளை வைத்து நடத்துகின்றவர்கள் சுகாதாரக் கேடு ஏற்படாமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவுநீரைச் சுத்திகரிப்பதைப் பொறுத்தவரையில் அதற்காக மூன்று பெரிய இடங்களை ஏற்படுத்தி அந்தத் தண்ணீரை ஒரு இடத்திலிருந்து டிஸ்சார்ஜ் செய்த பிறகு பி.ஓ.டி. என்று சொல்லப்படுகின்ற அதாவது Biological Oxygen Demand என்று சொல்லப்படுகின்ற அந்த எண்ணிக்கை குறைந்ததற்குப் பிறகு நல்ல வகையில் தொல்லை கொடுக்காமல் இருக்கக்கூடிய, விஷத்தன்மை இல்லாமல் இருக்கக்கூடிய அளவுக்கு அந்தக் கழிவுநீரை மாற்றியதற்குப் பிறகுதான் அதை வெளியே விட வேண்டும் என்று நாம் ஆணையிட்டிருக்கிறோம். எப்படி எல்லாம் செயல்படவேண்டும் என்று விவரமாக அந்தத் தொழிற்சாலைகளுக்கு எல்லாம் நாம் எடுத்துக் கூறியிருக்கிறோம். அதனை உரிய வகையில் நடைமுறைப்படுத்தவில்லை என்றால் மாண்புமிகு கொறடா அவர்கள் சொன்னமாதிரி தாட்சண்யம் இல்லாமல் அந்தத் தொழிற்சாலையின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அது பற்றிய குறிப்புகளைக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் கழிவுநீரைச் சுத்தப்படுத்த வாட்டர் ட்ரீட்மெண்ட் போன்றவற்றை எல்லாம் செய்யவேண்டியதுபற்றிச் சொன்னார்கள். ஆனால் சர்க்கரை ஆலையின் மூலம் வெளியேறும் நச்சுக் காற்று மிகக் கடுமையான துர்நாற்றம் வீசக்கூடியதாக இருக்கின்றது. திருச்சி நகரை நெருங்குகின்றபோது பல மைல்களுக்கு அப்பாலிருந்தே அந்த நாற்றம் வீசுவதை நாம் பார்க்கிறோம். இவ்வாறு சுகாதாரக் கேடு ஏற்படுகின்ற நிலைமை இருப்பதன் காரணத்தால் பெரிய நகரங்களுக்கு மத்தியிலேயும், அருகாமையிலேயும் சர்க்கரை ஆலைகள் இல்லாமல் இருக்கவும், வாட்டர் ட்ரீட்மெண்ட் என்பதுபோல வெளியேறுகின்ற துர்நாற்றத்தையும் கட்டுப்பாடு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னமாதிரியாக சில இடங்களில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. உடனடியாக அந்தத் தொழிற்சாலைகளை நாம் அகற்ற முடியாது. ஏற்கனவே அனுமதி வாங்கி நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகள் அவை. அவைகளும் அங்கே ஹின்டர்லாண்ட்-கேவ் என்று சொல்லப்படுகின்ற வகையில் தான், அடிப்படையில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு விஸ்தீரணம் இருக்க வேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. அந்த கேவ் அந்த தொழிற்சாலைக்குள் இருக்க வேண்டும். அதனை இப்போது மாற்றி அமைப்பது கொஞ்சம் முடியாத காரணமாக இருந்தாலும் கூட அதற்கு நாம் கவனம் செலுத்தி வருகிறோம்.

உண்மையிலேயே அந்தத் தொழிற்சாலைகளில் எந்தப் பிரச்னையும் கிடையாது. அந்தத் தண்ணீரை சுத்திகரித்த பிறகு வெளியே அனுப்புவதில் எந்தவிதமான பிரச்னையும் கிடையாது. அதற்கான சாத்தியக்கூறுகள் சில இடங்களில் ஏற்கனவே இருந்து வருகின்றன. நாம் எல்லாத் தொழிற்சாலைகளையுமே சுத்திகரித்த பிறகுதான் அந்தக் கழிவுநீரை வெளியிலே விட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் அப்படிச் செய்யாமல் மீண்டும் பழையபடியே நடத்திக் கொண்டு வந்தாலும் கூட, செக்ஷன் 26-ன் படி, அதற்கு அனுமதி வாங்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். அதற்குப் பிறகும் நாம் பல நிபந்தனைகளைச் சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையில் அமைக்கப்படுகிறதா என்றும் பார்த்து வருகிறோம். ஆகவே, படிப்படியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரே நேரத்தில் நடவடிக்கை எடுத்துக் கொண்டோமானால் அந்தத் தொழிற்சாலைகளின் நிலைமை பாதிக்கப்படும். ஆகவே, We must strike a balance என்ற வகையில் படிப்படியாக நடவவடிக்கை எடுக்க வேண்டும். படிப்படியாக அவர்களைத் திருத்தி நம்முடைய வழிக்குக் கொண்டு வரவேண்டும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆரூரான் சர்க்கரை ஆலைக் கழிவு நீர் அந்த குடமுருட்டி ஆற்றின் வழியாகச் சென்று அரிச்சந்திரா நதியிலே கலந்து, அது அடப்பாற்றுக்குள்ளே நுழைந்து கிட்டத்தட்ட 10 மைல் தாண்டி அந்தக் கழிவுநீர்

[1985 ஜூலை 5

சென்று கொண்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே கூட அதை நான் கேள்வியாக எழுப்பியபோது, அப்படி இல்லை என்று பதில் வந்தது. அந்த குடமுருட்டு ஆறு என்னுடைய தொகுதியிலே ஆலாந்தூர், ஆழிக்கொண்டு பகுதி வழியாகச் செல்வதால் எனக்கு நன்றாகத் தெரிகிறது. 5 ஆண்டுகளுக்கு முன்னால், இப்படிப்பட்ட நிலைமை இல்லை. 5 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் இப்படி இருக்கிறது. அந்தக் கழிவுநீர் இப்படி ஆற்றோடு கலந்து ஆற்றின் வழியே போவதால், ஆடு மாடுகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, அந்தக் கழிவுநீரை உடனடியாக அகற்ற ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு பதில் சொல்கிற நேரத்திலேயே நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே இந்த ஆண்டு மார்ச் மாதம் 9-ஆம் தேதியன்று அங்கே ஒரு இன்ஸ்பெக்ஷன் நடத்தியிருக்கிறோம். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுமாதிரி சில குறைபாடுகள் அங்கே இருப்பதைக் கண்டோம். அது தீர்க்கப்பட வேண்டியிருக்கிறது. அவைகள் மீது விசாரிக்கப்பட்டு மேல் நடவடிக்கையும் எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகள் அல்லது மற்றத் தொழிற்சாலைகள் என்றால் கழிவுநீர் என்பது அதிலிருந்து வந்தாக வேண்டிய ஒரு பை-பிராடக்ட் ஆகிவிட்டது. அது சுற்றுப்புறத்தையும் சுகாதாரத்தையும் பாதிக்கின்ற நிலைமையில் தான் இருக்கிறது. அரசாங்கம் இப்படிப்பட்ட Sullage water has got to be treated and then only it should be discharged. என்று வைத்திருக்கிறார்கள். இந்த சல்லேஜ் வாட்டர் ட்ரீட்மெண்ட் பிளான்ட்டினுடைய விலை மிகவும் காஸ்ட்டிலியானது. அதனால் அந்த ஆலைகள் அவைகளை வாங்கி உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற பிரச்னைகள் வருகின்றன. இந்த நிலையில், We are taking penal action. We have taken action under Sec. 44 என்று சொல்லிக் கொண்டே போவோமேயானால் அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. ஒன்று, The Minister should give financial assistance to the factories to purchase treatment plants or you must summarily cancel the licences of all the factories என்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு அரசு முன்வருமா ?



1985 ஜூலை 5]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த லைசன்சுகளை ஒட்டு மொத்தமாக கேன்சல் பண்ணுவது என்பது முடியாத காரியம். பல தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்படுவார்கள். பிறகு அதன்/விளைவு எல்லாம்—தொழிற்சங்கத் தலைவர்களுக்கு அந்தப் பிரச்னைகள் தெரியும். எனவே, மூடுவது என்பது முடியாது. என்ன காரணமாக இருந்தாலும் படிப்படியாகத்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும். காரணம் என்னவென்றால், இந்தச் சட்டமே மிகத்தாமதமாகக் கொண்டு வரப்பட்டது தான். 74 ஆம் ஆண்டே கொண்டு வரப்பட்டிருக்க வேண்டிய சட்டம் இது. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. '74 ஆம் ஆண்டே இந்தச் சட்டம் வந்திருக்குமேயானால், இந்த பத்தாண்டுகளுக்குள்ளாகவே பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்க முடியும். இந்தச் சட்டம் காலதாமதமாக வந்த தன் காரணமாக அப்படி நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இருந்தாலும் இப்போது படிப்படியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். We must strike a balance. உடனடியாக அந்தத் தொழிற்சாலைகளின் லைசன்சுகளை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்கிற வாதமும் சரியாக இருக்காது. ஆகவே, அவர்கள் அப்படிச் செய்ய முடியாததற்கு நாமே இங்கே காரணத்தைக் காட்டுவோமேயானால், அவர்களுக்கு அது ஊக்கம் கொடுக்கக்கூடிய அளவுக்கு அமையும். நிச்சயமாக அவர்களால் செய்ய முடியும். அவர்களிடம் பணம் இருக்கிறது. செய்தாக வேண்டும் என்று நாமும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

**திரு. சா. துரைசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பது உண்மை. ஆகவே அது கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருகிறது. குறிப்பாக கரூரில் அற்புதமான அமராவதி தண்ணீரை எல்லோரும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த அமராவதி ஆற்றில் கரூரில் இருக்கிற ரசாயன ஆலைகள், வீவிங் பாக்டரிகள் போன்ற அனைத்து தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீர் கலக்கிறது. எனவே குடிதண்ணீர் அங்கே பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே அப்படிப்பட்ட இடங்களில் இந்த நிலையை ஆலை அதிபர்களுக்கு உணர்த்துகிற வகையில், அவர்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நோட்டீஸ் அனுப்பி, செய்யவில்லையென்றால் அவர்களின் உரிமம் ரத்து செய்யப்படுமென்று அறிவித்தால் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். இல்லையென்றால் இதில் 1974-ம் ஆண்டு சட்டம் பயனளிக்கவில்லை என்றால், அதிலே மாற்றத்தைக் கொண்டு வந்து கடுமையான சட்டத்தை அமலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1985 ஜூலை 5]

அங்கே இருக்கும் முறைகளை ஆராய்ந்து, தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்தும் நடவடிக்கையை என்விரன்மெண்டல் பொலூஷன் கண்ட்ரோல் துறை மூலம் செய்ய அரசிடம் திட்டம் ஏதுவும் இருக்கிறதா? அப்படி அவர்கள் அந்த முறைகளை பின்பற்றிடத் தவறினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க காம்ப்ரயென்சிவ்வாக ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றும் செயல்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இதனுடைய மூலக்கேள்வி ஆம்பூர், மேட்டூர் பகுதிகளை பொறுத்ததாகும். மேட்டூர் பகுதி பொறுத்த வரையில் 13 இண்டஸ்ட்ரீஸ் நம்மிடத்தில் அனுமதி கேட்டுள்ளார்கள். இந்த 13 தொழிற்சாலைகளில் 10 தொழிற்சாலைகளுக்கு அனுமதி நிபந்தனை அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல ஆம்பூர் பகுதியைப் பொறுத்தவரையில் 80 தொழிற்சாலைகள் பொலூஷன் கண்ட்ரோல் சட்டத்தின் அடிப்படையில் அனுமதி கேட்டிருக்கிறார்கள். 1974-ம் ஆண்டு சட்டத்திற்குள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். The Board has issued consent to 53 industries. 53 தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆம்பூர் பகுதியில் 14 டேனரீஸ்— 14 Tanneries located in Ambur have taken up the construction of Effluent Treatment Plants அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணியை ஆரம்பித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலாக தெரிவிக்க விரும்புகிறேன். Ambur Tannery Effluent Treatment Co-operative Society Limited என்று பொதுவாக ஒரு சொசைட்டி ஏற்படுத்தி, எல்லோருக்கும் பொதுவாக காமன் எப்லுவண்ட் பிளான்ட் ஏற்படுத்தி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு இ. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஆம்பூர், மேட்டூரைப் பொறுத்ததாக இருந்தாலும் பொதுவாக பொலுசன் கண்ட்ரோல் என்று வருவதால், வடசென்னையில் இதுபோன்ற புகை படிந்து ராயபுரம், எண்ணூர் போன்ற பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே தமிழகத்திற்கு ஒட்டுமொத்தமாக உடனடியாக தீவிரமாக இதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையிலேதான் 'In G.O.Ms. No. 12, Environment Control Department, dated 12-3-84 the Government have issued orders that all the Industries have to apply for

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரியாக சில நிபந்தனைகளை ஏற்படுத்தி இருக்கிறோம். 31-7-1985-ம் தேதி, இந்த மாத இறுதிக்குள் அவர்கள் அதை சரியான வகையில் சுத்திகரிக்கவில்லை என்றால் Section 44 will be invoked against all these factories என்று விளம்பரத்தின் மூலமாக மாண்புமிகு துரைசாமி அவர்கள் தெரிவித்ததைப்போல பத்திரிகைகளில் பிரசுரித்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இன்றைக்கு செங்கற்பட்டில் இருக்கிற சாராயத் தொழிற்சாலை காரணமாக மதுராந்தகம் தொகுதியில் இருக்கிற கிராமங்களும், செங்கற்பட்டு பகுதியில் இருக்கிற கிராமங்களும், குறிப்பாக செங்கற்பட்டு நகரமும் பாதிக்கப்பட்டு, மக்கள் குடிக்காமல் நன்றாக தூக்கம் வருகிறது என்று சொல்கிறார்கள். தேசிய நெடுஞ்சாலையில் போகிறபோது அதிலிருந்து வருகிற நாற்றம் தாங்கவில்லை. எனவே, அரசு இதனைத் தடுக்க நடவடிக்கையெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அரசு முன் வருமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

370—(*வினா எண். 480) திரு இ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர், மேட்டூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுகளால் குடிநீர் கிணறுகள், குளங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) தலைவர் அவர்களே, ஆம்பூர் மற்றும் மேட்டூரில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளிவிடப்படும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரால் கிணறு, ஏரிகளிலுள்ள நீர் பாதிக்கப்படுகிறது என புகார்கள் வந்துள்ளன.

(ஆ) அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் பொலூஷன் கண்ட்ரோல் நடவடிக்கைகள் மிகச் சிறப்பாக செயல்படுத்தப் படுவதாக கேள்விப்படுகிறேன். அதேபோல மற்ற தொழிற்சாலைகளிலும், நிறுவனங்களிலும் எந்த முறையில் பொலூஷன் கண்ட்ரோல் நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்பதை செயல்படுத்த அரசு



அங்கே இருக்கும் முறைகளை ஆராய்ந்து, தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்தும் நடவடிக்கையை எண்விரன்மெண்டல் பொலூஷன் கண்ட்ரோல் துறை மூலம் செய்ய அரசிடம் திட்டம் ஏதுவும் இருக்கிறதா? அப்படி அவர்கள் அந்த முறைகளை பின்பற்றிடத் தவறினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க காம்ப்ரஹென்சிவ்வாக ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றும் செயல்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இதனுடைய மூலக்கேள்வி ஆம்பூர், மேட்டூர் பகுதிகளை பொறுத்ததாகும். மேட்டூர் பகுதி பொறுத்த வரையில் 13 இண்டஸ்ட்ரீஸ் நம்மிடத்தில் அனுமதி கேட்டுள்ளார்கள். இந்த 13 தொழிற்சாலைகளில் 10 தொழிற்சாலைகளுக்கு அனுமதி நிபந்தனை அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல ஆம்பூர் பகுதியைப் பொறுத்தவரையில் 80 தொழிற்சாலைகள் பொலூஷன் கண்ட்ரோல் சட்டத்தின் அடிப்படையில் அனுமதி கேட்டிருக்கிறார்கள். 1974-ம் ஆண்டு சட்டத்திற்குள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். The Board has issued consent to 53 industries. 53 தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆம்பூர் பகுதியில் 14 டேனரீஸ்— 14 Tanneries located in Ambur have taken up the construction of Effluent Treatment Plants அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணியை ஆரம்பித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலாக தெரிவிக்க விரும்புகிறேன். Ambur Tannery Effluent Treatment Co-operative Society Limited என்று பொதுவாக ஒரு சொசைட்டி ஏற்படுத்தி, எல்லோருக்கும் பொதுவாக காமன் எப்லுவண்ட் பிளாண்ட் ஏற்படுத்தி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு இ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஆம்பூர், மேட்டூரைப் பொறுத்ததாக இருந்தாலும் பொதுவாக பொலுசன் கண்ட்ரோல் என்று வருவதால், வடசென்னையில் இதுபோன்ற புகை படிந்து ராயபுரம், எண்ணூர் போன்ற பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே தமிழகத்திற்கு ஒட்டுமொத்தமாக உடனடியாக தீவிரமாக இதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையிலேதான் 'In G.O.Ms. No. 12, Environment Control Department, dated 12-3-84 the Government have issued orders that all the Industries have to apply for

consent to the Tamil Nadu Pollution Control Board to discharge the sewage/trade effluent under Water Prevention and Control Pollution Act, 1974, before 31-5-1984.' என்று நாம் ஆணை பிறப்பித்து இருக்கிறோம். அங்கேயிருக்கக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகள் இன்னும் சிறிதுகாலம் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவே இந்த 31—7—1985க்குள்ளே, 2 மாத காலத்திற்குள்ளே, அதாவது இந்த மாத இறுதிக்குள் அவர்கள் செயல்படுத்தவில்லை என்றால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆர்க்காடு மாவட்டம் ஆம்பூர், வாணியம்பாடி, பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை போன்ற பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீரால் அந்தப் பகுதியில் உள்ள குடிநீர் பாதிக்கப்பட்டு, தோல் சம்பந்தமான நோய்கள் ஏற்படுகின்றன. ஆகவே அந்தப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் எத்தனை தொழிற்சாலைகளில் இந்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. அதற்கு ஏதாவது கால நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே ஆம்பூர் பகுதியில் நான் ஏற்கெனவே சொன்ன மாதிரியாக, இப்போது 80 பேர்கள் அதற்காக அனுமதி கேட்டிருக்கிறார்கள். 14 டேனரிகளிலே அதற்காக வேலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். 58 டானரிகளைப் பொறுத்தவரையிலும், ஒரு சொசைட்டியாக அமைத்து உடனடியாக வேலையை ஆரம்பிக்க ஆயத்தமாக இருக்கிறார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொல்லுசன் கன்ட்ரோல் என்ற காரணத்தால் இந்தக் கேள்வி வருகிறது. சென்னை துறைமுகத்தின் ஐயர்ன் ஓர் ஏற்றுமதி செய்யப்படுகிற காரணத்தால், அதிலே வருகிற டஸ்டினால், சுற்று வட்டாரங்கள் பாதிக்கப்படுகிறது என்று இதே சட்டமன்றத்திலே ஏற்கெனவே எழுப்பப்பட்டு, மத்திய சர்க்காருக்கு, அந்தத் துறைமுக அத்தாரிட்டிக்கு அறிவுறுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஸ்ப்ரே பண்ணுகிறார்கள், அதை டிஸ்கன்டினியூ பண்ணியிருக்கிறார்கள். நம்முடைய சட்டப்பேரவை தலைவராக இருந்த முனு ஆதி அவர்களும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் சேர்ந்து ஒரு நிகழ்ச்சிக்காக துறைமுகத்திற்கு போயிருக்கிறார்கள். காரை விட்டு இறங்கியவுடனே அவர்களும் ரெட் இந்தியன்ஸ் மாதிரியாக ஆகிவிட்டார்கள். இப்படி எல்லாம் ஏற்கெனவே நடந்து இருக்கிறது. ஆகவே, இந்த டஸ்ட் வருவதை தொடர்ந்து கட்டுப்படுத்த வேண்டும் என்று துறைமுக அத்தாரிட்டியை மாநில சர்க்கார் வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு முன்பாக நம்முடைய திருவொற்றியூர் சட்ட மன்ற உறுப்பினர் பாரதி அவர்கள் என்னிடத்திலே சொல்லி, திருவொற்றியூர் பகுதி, மணலி, வட சென்னை, துறைமுகம் போன்ற பகுதிகள் எல்லாம் இந்த காற்று மண்டலத்தினாலே, இந்த பொலுசனாலே மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்றும், இதற்காக நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும் என்றும் சொன்னார்கள். உடனடியாக இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லி, உயர்மட்ட அதிகாரிகளை, பொலுசன் கன்ட்ரோல் அதிகாரிகளை எல்லாம் அனுப்பி வைத்திருக்கிறேன். அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுக்க இருக்கிறார்கள். அந்த அறிக்கை விரைவில் வர இருக்கிறது. அந்த அறிக்கையின் பேரில் நாம் நோட்டீஸ் கொடுக்க இருக்கிறோம், மத்திய அரசாங்கமாக இருந்தாலும், ஹார்பர் டிபார்ட்மென்டாக இருந்தாலும், அதற்கும் நோட்டீஸ் அனுப்பி மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் சொன்ன மாதிரியாக, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு, தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்.

### (அ) மாநில நிதியமைச்சர் மைய நிதியமைச்சரோடு மாநில நிதி நிலைமை குறித்து பேசியது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மிக முக்கியமாக இரண்டு விஷயங்களைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு தாங்கள் அனுமதி அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். முதலாவதாக, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நேற்றையதினம் டெல்லியிலே இந்தியப் பேரரசின் நிதியமைச்சர் அவர்களையும் ரிசர்வ் வங்கி அதிகாரிகளையும் பார்த்து, தமிழகத்திலே நிதிநிலைமை சீராக இருக்கிறது என்பதாகவும் துண்டு விழுகிற தொகை குறைத்து நல்ல நிலைமையில் நம்முடைய நிதிநிலைமை இருப்பதாகவும், மேலும் இந்தியப் பேரரசு ரிசர்வ் வங்கியோடு பேசி, தமிழக அரசு செலுத்த வேண்டிய கடன் தொகைக்கு தவணைகளை வாங்கியிருப்பதாகவும், பல செய்திகள் இன்றைக்குச் செய்தி தாள்களின் மூலமாக

வந்திருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகவும், வரவேற்கத்தக்கதாகவும் இருக்கிறது. எனவே, இது குறித்து விரிவான அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் இதைப்பற்றி செய்தித்தாள்களிலே விரிவாகவும், விளக்கமாகவும் அறிந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட நிலைமையை நான் விளக்கியிருக்கிறேன். இதைப் பொறுத்தவரையிலும், புதிய திட்டங்கள் என்றோ, புதியத் தன்மைகள் எதுவும் இல்லை. ஆகவேதான் செய்திதாளுக்கு அறிக்கையாக அறிவிக்கப்பட்டது. மத்திய நிதியமைச்சர் பல்வேறு மாநிலங்களுக்கு இடையே உள்ள நிதிநிலைமைகளையும், அந்தந்த மாநிலத்தினுடைய நிதி நிலைமைகளை சீரமைத்து, அத்தகைய தன்மைகள், போக்குகள் எப்படி இருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிந்து தக்க முடிவுகள் எடுக்கவேண்டும் என்பதற்காக எல்லா மாநிலங்களுடைய முதல் அமைச்சர்களையும், நிதி அமைச்சர்களையும் அழைத்து, 2, 3 நாட்களாக டெல்லியிலே பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள்.

ஒவ்வொரு மாநிலத்தினுடைய நிலைமைகளையும் அவர்கள் கூர்ந்து ஆராய்ந்தார்கள். அந்த வகையில் தமிழகத்தினுடைய நிதி நிலைமைகளைப் பற்றி எல்லாம் அவர்களிடத்தில் எடுத்துத் தெரிவிப்பதற்காக நேற்று நான் சென்று இருந்தேன். தமிழகத்தினுடைய நிதிநிலைமைகள், மற்றவைகளை விரிவாக விளக்கி அவர்களிடத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

அகில இந்தியாவைப் பொறுத்தவரையில் 28—1—1985 வரையில் ஓவர் டிராப்ட்க்கு மிகைப் பற்றுக்கு இடம் அளித்துக் கொண்டு வந்தார்கள். வேயிஸ் அண்டு மீனிஸ் என்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுப்பார்கள். அதற்கு மேல் நாம் கூடுதலாக வாங்கி அவ்வப்போது ரிசர்வ் வங்கிக்குச் செலுத்தி மறுபடியும் பெற்றுக் கொள்ளலாம். அந்த வகையில் தமிழகத்தை பொறுத்தவரையிலும் வேயிஸ் அண்டு மினிஸ் அட்வான்ஸ் என்ற அளவுக்கு ரிசர்வ் வங்கி நமக்குத் தருவது 66 கோடி ரூபாய் அளவுக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு சட்டுப்பாடு இருக்கிறது. அப்படி அந்த அந்த மாநிலத்தினுடைய நிதி, வரவு-செலவுத் திட்ட தன்மைகளைப் பொறுத்து ஒரு குறிப்பிட்டத் தொகையை வேயிஸ் அண்டு மினிஸ் அட்வான்ஸ் என்று ஒதுக்கி வைத்து இருக்கிறார்கள். அந்த 66 கோடி ரூபாயில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அடிக்கடி நாம் வாங்கிக் கொள்ளலாம், திருப்பிக் கட்டிக் கொள்ளலாம். இந்த 66 கோடி ரூபாயை நாம் மீறக் கூடாது. இந்த 66 கோடி ரூபாயை மீறுகின்ற நிலை வருகிற போதுதான் ஓவர் டிராப்ட் வரும். அப்படி மீறுகின்ற வகையில் பல்வேறு மாநிலங்கள் 150,





200, 250, 300 கோடி ரூபாய் என்ற அளவுக்கும் மற்ற பல மாநிலங்கள் சென்று கொண்டு இருப்பதன் காரணமாக நிதியில் பலநெருக்கடிகள்வரும் என்று கருதி மத்திய அரசு 28-1-1985க்கு பிறகு ஓவர் டிராப்ட் எந்த மாநிலத்திற்கும் தருவதற்கு இல்லை, ஆகவே, வாங்கிய ஓவர் டிராப்டையும் குறைத்து விட வேண்டும் என்ற ஒரு உத்திரவை இட்டு ரிசர்வ் வங்கி மூலமாக அதையும் நடைமுறைப்படுத்தியது. 28—1—1985-க்கு பிறகு ஓவர் டிராப்ட் தருவதற்கு இல்லை என்ற ஒரு முடிவுக்கு அவர்கள் வந்து விட்டார்கள். அந்த வகையில் 28—1—1985 அன்று அகில இந்தியாவில் இருக்கிற மாநிலங்களைப் பொறுத்த வரையில் மொத்தம் 1,808 கோடி ரூபாய் மிகை பற்றுக் கணக்கில் வந்து இருந்தது. அது மேலும் மேலும் செல்லுகின்ற நிலைமை இருந்ததன் காரணமாகத்தான் மத்திய அரசு கவலையோடு இதை தீர்க்கவேண்டும் என்று கருதினார்கள். 26—6—1985 அளவில் ஒவ்வொரு மாநிலமும் குறைத்துக் கொண்டு வந்த வகையில் 932 கோடி ரூபாய் அளவில் அந்த மிகைப் பற்று வந்து நின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 28—1—1985 அன்று 43 கோடி ரூபாய்க்கு மிகை பற்று வந்து இருந்தது. 28—1—1985-க்குப் பிறகு மிகைப் பற்று தருவதற்கு இல்லை என்றும் அதை குறைக்கவேண்டும் என்று மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் எடுத்துச் சொன்னதற்கு இணங்க தமிழக அரசு அதில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதைக் குறைத்துக்கொண்டு வந்து ஜூன் திங்களில் அறவே மிகைப் பற்று தமிழகத்தைப் பொறுத்த வரையில் இல்லை என்ற சூழ்நிலையை நாம் உருவாக்கினோம்.

இந்த நிலைமைகளை எல்லாம் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். மிகைப் பற்று அதிகமாக வாங்கிய பல மாநிலங்கள் இதை மிகைப் பற்று என்ற வகையில் வைத்துக் கொள்ளக் கூடாது. ஏன் என்றால், மிகைப் பற்று வாங்குவதற்கு 13.5 சதவீதம் வட்டியை நாம் ரிசர்வ் வங்கிக்கு செலுத்த வேண்டும். அதை Medium Term loan மத்திய கால கடனாக மாற்றினால் 8 சதவீத வட்டி செலுத்தினால் போதும், ஆக அதுவும் அல்லாமல் காலவரையறையும் கிடைக்கும். மற்ற மாநிலங்கள் எல்லாம் அதை மத்திய கால கடனாக மாற்ற வேண்டும், அதற்கு ஓரளவுக்கு காலம் தரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அதை வரவேற்கின்றபோது நானும் அதை எடுத்துச் சொன்னேன். சொல்லுகிற போது கடைசி தேதியை எடுக்கக்கூடாது, ஜூன் மாதத்தை எடுத்தால் எங்களுக்கு மிகைப் பற்று எதுவும் இல்லை. எங்களுக்கு எந்த பலனும் இல்லை. ஆக 28—1—1985 முதல் அதாவது எப்போது கட்டுப்பாட்டை ஏற்படுத்தினார்களோ அப்போது இருந்து மிகைப் பற்றை அந்த அந்த மாநிலங்களுக்கு கடன் அளித்து விட்டு இந்த 5 ஆண்டுகளில் 4 ஆண்டு காலத்திற்குள் திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம் என்ற கோரிக்கையை எடுத்துச் சொன்னேன்.

உடனே மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அந்த வகையில் அவர்கள் அறிக்கையும் விட்டு இருக்கிறார்கள்.

ஆகவே, இவைகள் அத்தனையும் கிட்டத்தட்ட அவர்கள் கணக்குப் போட்டு 1,628 கோடி ரூபாய் எல்லா மாநிலங்களும் சேர்த்து மத்திய கால கடனாக மாற்றி 8 சதவீத வட்டிக்கு தந்து விட்டார்கள். இப்போது மிகைப் பற்று இல்லை. இனிமேல் மிகைப்பற்று எந்த மாநிலத்திற்கும் தருவதற்கு இல்லை என்று கண்டிப்பாக ஒரு தன்மையை எடுத்துச் சொன்னார்கள். பற்றாக் குறையைப் பொருத்தவரையில் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் கேட்டபோது தமிழகத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய வரவு-செலவு திட்டத்தில் 264 கோடி ரூபாய் நாம் பற்றாக்குறை வைத்து இருந்தோம். அந்தப் பற்றாக்குறையை எப்படி சமாளிக் கப்போகிறீர்கள் என்று கேட்டபோது அதற்கான விளக்கங்களை சொன்னேன். அதற்கு பிறகு திட்டக் குழு உறுப்பினர்களோடு நான் பேசிய வகையிலும் மத்திய அரசினுடைய உதவி, பொது சந்தையில் எழுப்பிய கடன்கள், கலந்து பேசி வாங்கக்கூடியக் கடன் உதவி அதை தவிர இப்போது மத்திய அரசு விதித்து இருக்கிற வரியின் மூலமாக மாநில அரசுக்கு வருகின்ற பங்கு இவை அத்தனையும் சேர்த்து கணக்குப் போட்டால் நமக்கு 128 கோடி ரூபாய் வருகிறது.

(முற்பகல் 10-20)

ஆகவே, 264 கோடியிலே 168 கோடி போனால் நம்முடைய பற்றாக்குறை 96 கோடியாக இருக்கும். இந்த 96 கோடியை சிக்கன நடவடிக்கைகளின் மூலமாகவும், நாம் விதித்திருக்கின்ற வரிகளை கொஞ்சம் தீவிரமாக வசூலிப்பதன் மூலமாகவும், ஓரளவுக்கு இந்த நிதி ஆண்டு இறுதிக்குள்ளாக, சரிக்கட்ட முடியும் என்று எடுத்துச் சொன்னேன். அதை ஓரளவுக்கு அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

ஆக, 96 கோடியை நாம் பெற்றுவிடமுடியும் என்றும், எடுத்துச் சொன்னேன். இந்த ஆண்டு திட்டச் செலவிற்காக திட்ட வகையிலே மத்திய அரசு ஒப்புக்கொண்டது 960 கோடி ரூபாய். நம் பட்ஜெட்டிலே 1,102 கோடி ரூபாய் அளவுக்கு இந்த அரசு திட்டம் இட்டு இருக்கிறது என்று சொன்னேன். கூடுமான வரையில் இந்தத் தொகையை எட்டுவதற்கு இந்த அரசு முயலும். ஆனால் மத்திய அரசு அனுமதித்த 960 கோடிக்கு எந்த வகையிலேயும் கீழே போகாது, அதற்கு மேலே 100 கோடி, 142 கோடி கூடுதலாக செலவிடுவதற்கு தான் தமிழக அரசு திட்டமிட்டு இருக்கிறது என்றும் சொன்னேன்.

மறுபடியும், இந்த கணக்கை எடுத்துக் கொள்கிற போது எல்லாம், 1971-வது ஆண்டைத்தான் அடிப்படைக் கணக்காக வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, இனிமேல் மாநிலங் களுக்குப் பிரித்துக் கொடுக்கும்போது—அந்தந்த ஆண்டு



களுக்கு கணக்கை எடுத்துக் கொண்டால் அதனால் குடும்ப நலத் திட்டத்தை மிகச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்று கின்ற தமிழகம் போன்ற மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்படும். இன்னும் சொல்லப் போனால், 1951-வது ஆண்டு சென்சஸ் கணக்கை வைத்துக்கொண்டு போட்டால்தான் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுகிற மாநிலங்கள் அதிகப் பலனை அடைய முடியும். ஆனாலும் கூட, திட்டக் குழு 1971 ஆம் ஆண்டை சில பல வகைகளுக்கு அடிப்படையாக எடுத்துக் கொண்டதன் காரணமாக, மாநில அரசுக்கு மத்திய அரசு மூலம் பங்காகப் பிரித்துக் கொடுப்பதாக இருந்தாலும், வரியிலிருந்து எடுத்துக் கொடுப்பதாக இருந்தாலும் 1971-ஐத் தான் பேஸ்-ஆக வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்படி வைத்துக் கொண்டால்தான் இன்னும் குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரமாகக் கொண்டு வரமுடியும். இல்லாவிட்டால் நம்முடைய மக்களுடைய எண்ணிக்கை குறையக் குறைய, பெர்-கேபிட்டா இன்கம் வளர, வளர, பெர்-கேப்பிட்டா இன்கம் அதிகமாக இங்கே இருக்கிறது, ஆகவே பங்கு இல்லை : என்று, இதனால் மக்கள் தொகையை அதிக மாகப் பெருக்கிய மாநிலங்கள் அதிகமாகப் பெற வழி ஏற் படுகிறது. குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் நாங்கள் இந்த நிலைக்கு ஆளாகவேண்டுமா ? இந்தக் குடும்ப நலத் திட்டத்தையும் சிறப்பாக நிறைவேற்றி, வரவேண்டிய பணத்தையும் இழப்பது சரி அல்ல என்று சொல்லியதற்குப் பிறகு, அது பற்றியும் யோசிப்பதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சில பல வகைகளிலே 1971-ஐ ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். சிலவற்றில் ஒத்துக் கொள்ளவில்லை. எல்லா வகையிலும் ஒத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னதையும் மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

நிதி நிலைமையைப் பற்றித்தான் எடுத்துச் சொல்லப் பட்டதே தவிர, புதிதாக எந்தத் திட்டமோ, எதுவோ, கொண்டு வரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) பேரவைச் செயலகத்தின் இலச்சினையை வெளியார் பயன்படுத்துவது.

திரு. என். எஸ். வி சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர் களுடைய உரிமைகளைக் காக்கின்ற, பாதுகாப்புக் கொடுக்கின்ற மாபெரும் பொறுப்பு தங்களுக்கு உண்டு என்று அறிவோம். அதைப் போலவே தங்களுடைய நலனிலேயும், தங்கள் செயல கத்தினுடைய பெயர் அநாவசியமாகப் பயன்படுத்தப்படக்கூடாது என்பதிலேயும் எங்களுக்கு அக்கறை உண்டு. இன்றைக்கு மாலை யிலே செங்கற்பட்டு மாவட்டத்திலே பீர்க்கங்கரணை என்ற

இடத்திலே குடும்ப நல இளைஞர் மன்றம் ஒன்று துவக்கப்பட இருப்பதாக ஒரு அழைப்பிதழ், பட்டுக் கைக்குட்டையிலே, தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் தலைமை ஏற்கிறார்கள் என்றும், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முன்னிலை வகிக்கிறார்கள் என்றும் இருக்கிறது.

விவசாய உயர் மட்டக் குழுவின் தலைவரும், குடும்ப நலத் துறை இயக்குநரும், மாவட்ட காவல் துறை தலைவர் அவர்களும் மக்கள்—தகவல் தொடர்பு அலுவலரும், சட்ட மன்ற மேலவை உறுப்பினரும் இன்னும் நிறைய அதிகாரிகள் அதில் கலந்து கொள்கிறார்கள். இந்த இளைஞர் மன்றம் என்பது ஒரு தனியாரோ, தனிப்பட்டவர்களோ, தனிப்பட்ட நிறுவனமோ நடத்துகின்ற விழா என்று நான் அறிகிறேன். ஆனால் எனக்கு இருக்கின்ற ஆட்சேபனை எல்லாம், இந்த அழைப்பிதழின் ஒரு மூலையில் தங்களுடைய செயலகத்தில் முத்திரை பதிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு சட்டமன்ற பேரவை—என்று கோபுரம் பதித்த முத்திரை பதிக்கப்பட்டு இருக்கிறது. (மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அந்த அழைப்பிதழை அளித்தார்).

எங்களைப் போன்ற உறுப்பினர்கள் 'லெட்டர் ஹெட்' அடிக்கவேண்டும் என்று சொன்னாலோ, கவர் வேண்டும் என்று சொன்னாலோ, இந்த அலுவலகத்திலே சில கட்டுப்பாடு விதிக்கிறார்கள். இந்த அளவிலே தான் அது இருக்கவேண்டும், இப்படி கோபுரம் படம் இருக்கவேண்டும், இந்தக் கலரில் இருக்கவேண்டும், அச்சிடவேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கிறார்கள்.

கொடுக்கின்ற எம்ப்ளெம்—இலட்சினைக் கூட, இத்தனை நாட்களுக்குள் கொடுத்துவிடவேண்டும். கொடுக்காவிட்டால், அபராதம் கட்டக்கூடிய நிலைமை இருக்கும்போது, தங்களுடைய செயலகத்தின் பெயர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, தாங்கள் நடத்துகின்ற குடும்ப நல விழா போல் இருக்கிறது. நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் குடும்ப நல முகாம் நடத்துவது போல் இருக்கிறது. வெளியிலே, சாதாரண மக்களுக்கு, இது அரசாங்கம் நடத்துகின்ற விழாவைப் போல் எண்ணுகின்ற அளவுக்கு துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

இது தங்கள் கவனத்திற்கு வந்துள்ளதா? ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள்? இன்னும் எடுக்கவில்லையெனில் இனிமேல் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யாராவது இம்ப்ராப்பராக யூஸ் பண்ணியிருந்தால், பண்ணினால், அது பெரிய தவறு ஆகும். It is an offence. He can be penalised for fine. அந்த எம்ப்ளத்தை அலுவலகத்தைத் தவிர யாரும் பயன்படுத்த முடியாது. அது பெரிய தவறுதான்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடும்ப நல இளைஞர் மன்றம் என்பது தனியார் மன்றமாகத்தான் இருக்கக்கூடும் என்று கருத வேண்டியிருக்கிறது. சட்டமன்றப் பேரவையின் இலச்சினைத் தனியார் யாரும் பயன்படுத்தக் கூடாது. இதைப் பற்றி விசாரித்து அதைப்பற்றி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெரிந்துக்கொண்டு அதன்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அப்படி எடுத்துக்கொள்ளப் படும் நடவடிக்கை, எதிர்காலத்திலே பலருக்கும் தெளிவாக்கப் படும் சூழ்நிலையிருந்தால் அவர்களும் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய நல்ல நிலைமை ஏற்படும். எனவே அதற்கான விளக்கத்தைப்பெற்று நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பி வைத்து விளக்கம் கேட்கலாம்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் சொல்லும்பொழுது, நடந்திருந்தால் தவறு என்று முடிவையே சொல்லிவிட்டீர்கள். ஆனால் அவை முன்னவரவர்களோ இதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்கிறார்கள். இப்படி நீங்கள் சொல்வதற்கும் அவர்கள் சொல்வதற்கும் முரண்பாடாக இருக்கிறது. நீங்கள் சொல்வது இறுதியான முடிவாக உள்ளது. அவை முன்னவரவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்கிறார். இது குறித்து என்ன செய்யப்போகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிப் பயன்படுத்தியிருந்தால் It is improper use. If it is improperly used, naturally it is an offence.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த இலச்சினைப் போட்டது தவறு என்ற கருத்தைச் சொல்லிவிட்டேன். ஆனால் எதிரியை ஒரு வார்த்தை கேட்காமல் தண்டிப்பது முறையல்ல. இதைப் போட்டவர்கள் வருத்தம் தெரிவித்துக்கொண்டால், மன்னிப்பு கேட்டுக்கொண்டால் அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் நீக்கிவிடலாம். மலைக்குள்ளே மன்னிப்போ அல்லது வருத்தமோ தெரிவித்துக்கொண்டால் இந்த நிகழ்ச்சியை நடத்தலாம். ஆனால், மன்னிப்பு தெரிவிக்காமல், வருத்தம் தெரிவிக்காமல் இருந்தால் இந்த நிகழ்ச்சியை நிறுத்திவிடலாய் அதுதான் நடவடிக்கை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இது யோசடி. இதில் மன்னிப்பு கேட்பது என்பது பிரச்னை அல்ல. இதில் அதிகாரிகள் கலந்து கொள்ளக்கூடாது என்று சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப் பயன்படுத்தியிருந்தால் அது குற்றம் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒரு குற்றமாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அப்படி வேண்டுமென்று செய்திருந்தால் இவ்வளவு பகிரங்கமாகச் செய்திருக்க மாட்டார்கள். நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிந்து இருக்கும். ஆனால் இதை மோசடி என்று சொல்லிவிட முடியாது. அறியாத்தனமாக, தெரியாத்தனமாக அல்லது அவர்களிடத்தில் உள்ள இலச்சினைப் பயன்படுத்தி வைப்போமே என்று செய்திருக்கலாம். ஆகவேதான் இதை விசாரிக்க வேண்டுமென்று சொன்னேன். இன்டென்ஷனோடு செய்து இருக்கிறார்களா அல்லது அறியாத்தனமாக, அரசு கொடுத்திருக்கின்ற இலச்சினைதான் இருக்கிறதே அதைப் போட்டு வைப்போமே என்று போட்டார்களா என்பதெல்லாம் விசாரிப்பதன் மூலம் தான் தெரியும். இதைத் தவறு என்று ஒத்துக்கொள்கிறேன். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், பேரவைத் தலைவர், சட்டமன்றம் சம்பந்தமாக நடவடிக்கைகளைத் தவிர வேறு யாரும் பயன்படுத்தக்கூடாது என்பது உறுதி. அதை மீறிப் பயன்படுத்துகின்றவர்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள், நடவடிக்கைக்கு உள்ளாவார்கள். ஆகவே, எந்த நோக்கத்தில் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிந்தபிறகு முடிவெடுப்பது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார்...............

திரு. உ. சுப்ரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, நாட்டுக்கே பொதுச் சொத்தாக இருக்கிற அசோகச் சக்கரம், அல்லது கொடி அல்லது மத்திய அரசினுடைய சின்னங்களாக மதிக்கப்படும் சின்னங்களைக் கொண்ட இலச்சினையோ, அதைப் போல தமிழ்நாடு அரசாங்கத்தின், இந்தப் பேரவையின் சின்னமாகிய கோபுர சின்னத்தையோ தவறாக யாரும் பயன்படுத்தியிருந்தால் தவறு தவறுதானேயொழிய அதில் விசாரிப்பதற்கு இடமில்லை. இங்கே அழைப்பிதழ் அச்சிடப்பெற்ற சில்க் துண்டைக் காண்பித்தார்கள். எனவே, இனிமேல் இப்படிப்பட்ட தவற்றைச் செய்ய வேண்டாமென்று சொல்லலாமே தவிர, இதில் விசாரிப்பதற்கு ஒன்றுமில்லை என்பதை உங்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : நான் சொல்ல விரும்புவது...............

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விசாரிக்க வேண்டுமென்று நான் சொன்னதற்குக்காரணம், வேண்டுமென்றே செய்திருந்தால் தண்டனை கொடுக்க வேண்டும். மன்னிப்பு கேட்டுக்கொண்டால்



நிறுத்திவிடலாம். குடும்ப நல இளைஞர் மன்றம் என்பது நல்ல நோக்கத்தினுடைய அடிப்படையிலேதான் இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். இதில் மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்ற பொறுப்பானவர்களும் கலந்து கொள்கிறார்கள். எனவே, குடும்ப நல இளைஞர் மன்றம் என்று வைத்திருப்பதிலேயிருந்தே அது நல்ல நோக்கத்திற்காகத்தான் என்று தெரிகிறது. குடும்ப நலத் திட்டத்தைப்பற்றி எங்கே பார்த்தாலும் பரப்புங்கள், அதற்கு உதவுங்கள் என்று ஓயாமல் சொல்கிறோம். எனவே, நோக்கம் தவறு என்று சொல்ல முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவரும், அதிகாரிகளும் கலந்து கொள்கிறார்கள். ஒரு பக்கத்திலே குடும்ப நலத்தினுடைய சின்னமும் போடப்பட்டிருக்கிறது ; மற்றொரு பக்கத்திலேதான் இதைப் போட்டிருக்கிறார்கள் — சட்டமன்றத்தின் இலச்சினை அமைந்துவிட்டது. அந்த அளவிற்குத் தவறு தான். ஆகவே, அந்தத் தவறு எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றி நடவடிக்கை எடுத்துச் சொல்லலாமே தவிர, நோக்கத்தைக் குறை சொல்வதற்கில்லை. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்து தக்க நடவடிக்கை எடுப்பதுதான் முறை.

(முற்பகல் 10-30)

திரு. எல்ல. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பீர்க்கங்கரணையாகும். இந்த அழைப்பிதழில்தான் இந்த மாதிரி 'எம்பிளம்' இருக்கிறதே தவிர, எங்கள் பகுதியிலே அச்சடித்துக் கொடுத்த எதிலேயும் இதுபோன்ற 'சிம்பல்' இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, விசாரிப்பது நியாயம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப நல இலாகாவிற்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. I want to keep the Records Straight இது தனியாக சில நண்பர்கள் குடும்ப நல இளைஞர் மன்றம் என்ற பெயரிலே நடத்துகின்ற விழாவாக இப்பொழுதுதான் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்ன பிறகுதான் தெரிகிறது. அதிலே மாவட்ட கலெக்டர் அவர்களும் இருக்கிறார்கள், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இதற்கும் இலாகாவிற்கும் சம்பந்தம் கிடையாது என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவாகச் சொல்கிறேன். அது மட்டுமல்லாமல், சம்பந்தப்பட்ட கலெக்டர் அவர்களை அழைத்து நடத்த வேண்டாம் என்று சொன்னாலுங்கூட சௌகரியமாக இருக்கும். அந்த ஒரு முடிவை அவை முன்னவர் தான் எடுக்க வேண்டும், நான் எடுக்க முடியாது. நம்முடைய இலாகாவிற்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** Emblems and Names (Prevention of Improper use) Act, 1950. In the Schedule Section 3, it is said that if it is done like that, we can fine them அதை விசாரித்துப் பார்த்து அதற்குப் பிறகு முடிவு எடுக்கலாம், நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலே நடைபெறுகிற நிகழ்ச்சி என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே, அந்த நிகழ்ச்சியை நடத்துகிறவர்களைப் பற்றி அவருக்குத் தெரியும் என்று தெரிகிறது. அங்கே, வெளியே, பொதுமக்களுக்கு விளம்பரப் படுத்தியிருக்கிற, விளம்பரத் தாள்களில், வேறு நோட்டீஸ்களில், போஸ்டர்களில், அப்படிப்பட்ட இலச்சினை பொறிக்கப்படவில்லை என்று தெரிவிக்கிறார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் அவர்கள் பட்டு அழைப்பிதழ் போன்று அச்சடிக்கப்பட்ட துணியைக் கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு அது எங்கேயிருந்து கிடைத்தது. அப்படிக் கொடுத்தவர்கள் எங்கேயிருந்து பெற்றார்கள்? (குறுக்கீடு) ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவருடைய தொகுதியிலே நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆகவே, சொல்ல வேண்டிய அவசியமே இல்லையென்றால், மன்றத்திற்குக் கொண்டு வந்த பிறகு, இதிலே என்ன ரகசியம்? ஆகவே, எங்கேயிருந்து, எப்படி வந்திருக்கிறது என்பது தெரியவேண்டும். நடத்தப்படுகிற நிகழ்ச்சி ஒரு நல்ல நோக்கத்திற்காக நடத்தப்படுகிற நிகழ்ச்சி. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள், அங்கே அப்படிப்பட்ட விளம்பரம் செய்யப்பட வில்லையென்று. ஆகவே, உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்களானால் அந்த நிகழ்ச்சியை நடத்துவதிலே ஒன்றும் தவறில்லை. ஆனால், அப்படிப்பட்ட முயற்சியை வேறு எப்படியாவது இதைக் களங்கப்படுத்த வேண்டுமென்பதற்காக யாராவது எடுத்திருக்கிறார்களா என்பதும் தெரிய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது எங்கேயிருந்து கிடைத்தது என்பதைச் சொன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முடிவு செய்வதற்கு உதவியாக இருக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை இப்பொழுது திசை தவறி எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையிலும் தங்களுடைய பெயர், செயலகத்தினுடைய பெயர் துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடாது என்பதிலே தான் நான் அக்கறை உடையவனாக இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே, ஏதோ, நான், எங்கோ, பெற்றுக் கொண்டு வந்து விட்டதாக, அல்லது யாருக்கோ களங்கம் கற்பிக்க வேண்டுமென்பதற்காக சொல்வதைப் போல் சொன்னார்கள். அந்த நோக்கத்தோடு நான் பேசவில்லை. நான்



இதற்கு முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். இந்தப் பட்டுக் கைக்குட்டைகளை வெளியிட்டிருக்கிறார்கள்; அதிகார பூர்வமாக வந்திருக்கிறது; பத்திரிகை அலுவலகத்திற்குத் தான் வந்திருக்கிறது; பத்திரிகை நிருபர்கள் இன்றைக்குப் போகத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, மற்ற பத்திரிகை நிருபர்களுக்கும் வந்திருக்கும். நான் முழு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அது நடைபெற்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது என்னுடைய செயலகம் பற்றியது, எனவே நான் தீவிரமாக விசாரித்து, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு, தவறு இருந்தால் எப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அப்படி எடுக்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** ** ** **

(முற்பகல் 10-40)

‡ ‡ ‡ ‡

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்ப முற்பட்டதிலிருந்து இது வரையில் நடந்த விவாதம் அனைத்தும் அவைக் குறிப்பிலே ஏறாது (கூச்சல் குழப்பம்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

### (இ) தஞ்சை மாவட்ட விவசாயத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுதல்

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும், கர்நாடக அரசோடும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அப்போது தமிழகத்திற்கு அதிகத் தண்ணீர் கிடைப்பதற்கான ஆலோசனைகூடச் செய்யப்பட்டதாக பத்திரிகையில் நான் பார்த்தேன். இப்போது சில தினங்களுக்கு முன்னால் நல்ல மழை பெய்தது. அந்தக் கூட்டத்தில் ஏதாவது முடிவு அறிவிக்கப்பட்டதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சருக்கு அது சம்பந்தமாக ஏதாவது விபரம் தெரிந்திருந்தால் சொல்லலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

‡ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-34—10-44 வரையிலானவை அகற்றப்பெற்றது.

[1985 ஜூலை 5

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலவரத்தின்படி மேட்டூரிலே இருக்கக்கூடிய நீரின் அளவு 30.09 டி.எம்.சி. ஆகும். இன்னும் ஒரு பத்து டி.எம்.சி. தண்ணீர் இருந்தால்தான் குறைந்த பட்சம் 40 டி.எம்.சி. தண்ணீர் இருந்தால்தான் மேட்டூரிலிருந்து தண்ணீர் விடுவதற்கு முடியும். அங்கே நேற்று முதல் லேசாக மழைபெய்யத் தொடங்கியிருக்கிறது. மழையினால் தண்ணீர் வரத்து அதிகமாகி, தண்ணீர் விடப்பட முடியும் என்று நம்பப்படுகிறது. 40 டி எம்.சி. தண்ணீர் வந்தவுடன் உடனடியாக அணையைத் திறக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) பொது நிறுவனங்கள் குறித்த காலத்தில் தங்களது நிறுவன ஆண்டுக் கணக்கை அவையில் வைத்தல்

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொது நிறுவனங்களுடைய ஆண்டுக் கணக்குகள் இந்த அவையிலே தினசரி வைக்கப்படுகின்றன. இந்த கம்பெனிகளின் ஆண்டு கணக்குகள் உரிய நேரத்தில் முடிக்கப்பட்டு 3 மாதங்களுக்குள் இந்த அவையிலே வைக்கப்பட வேண்டும் என்று விதி முறைகள் இருக்கின்றன. ஆனால் பல ஆண்டுகள் கழித்துத்தான் அவைகள் வைக்கப்படுகின்றன. நேற்றைய தினம் தமிழ்நாடு ஜாரி லிமிடெட் கம்பெனியின் 82–83 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அவர்கள் சொல்கிற விளக்கம் Lockout in the Company from June 1984 to October 1984 என்பது. அவர்கள் சட்டப்படி மார்ச் 83லேயே கணக்கை முடித்து ஜூலை 83-ல் இங்கே வைக்க வேண்டும். ஆனால் அதற்குப் பிறகு $1\frac{1}{2}$ ஆண்டுகள் கழித்து நடந்த ஒரு சம்பவத்தை குறிப்பிட்டு அதுதான் தாமதத்திற்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட விருக்கிற டாப்கோ நிறுவனம் கூட தன்னுடைய கணக்கை 5 வருடங்களாக வைக்கவில்லை. செக்ஷன் 619ஐ வெறும் சடங்காகவே இந்த அரசு நிறுவனங்கள் வைத்திருப்பது சரியா என்று உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் மானியக் கோரிக்கைகள் வரும்போது பேசலாம்.

(முற்பகல் 10-50)

3. அறிக்கை அளித்தல்.

விதி III-ன் கீழ் போக்குவரத்துத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் விதி 111-ன் கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.



1985 ஜூலை 5]

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு மூன்று கப்பல்களை வாங்க மைய அரசை 1983-ம் ஆண்டு மாநில அரசு கோரியது. ஜப்பான் நாட்டிலுள்ள 'இட்டாச்சி' என்ற நிறுவனத்திடமிருந்து ஒரு கப்பல் மட்டும் வாங்குவதற்கான அனுமதியை மைய அரசு வழங்கியது. வரும் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் இந்தக் கப்பல் நம்மிடம் ஒப்படைக்கப்படுமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தற்போது மேலும் இரண்டு கப்பல்களை வாங்க மைய அரசு 4—7—1985 அதாவது நேற்றையதினம் அனுமதி அளித்துள்ளது. நாம் ஆர்டர் கொடுத்த தேதியிலிருந்து 18 மாத காலத்திற்குள் இந்தக் கப்பல்களைத் தயாரித்து நமக்கு ஒப்படைக்கப்படுமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. கப்பல் ஒன்றின் விலை சுமார் 23 கோடி ரூபாய் ஆகும். அதனுடைய கொள்ளவு ஏறத்தாழ 39,990 டி. டபிள்யூ. டி. ஆகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

4. கவன ஈர்ப்புகள்

(அ) திருவில்லிபுத்தூர் நாச்சியார் திருக்கோயில் மரத் தேரை பழுதுபார்த்து ஓட விடுவது.

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, ''திருவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோவிலின் மிகப் பெரிய தேரின் 3 சக்கரமும், 2 அச்சும் பழுது பார்க்கப்படவும், திருவிழா நடத்தவும் கோவிலில் நிதி இல்லாத காரணத்தால், இந்த வருடம் தேரோட்டம் இல்லை என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளதால் பக்தர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த " அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆடிப்பூர 9வது திருநாளன்று ஆண்டாள் ரெங்க மன்னார் சமேதரராக திருத்தேருக்கு எழுந்தருளி தேரோட்டம் நடைபெறுவது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டில் 21—7—1985 அன்று தேரோட்டம் நடைபெற உள்ளது.

2. மேற்படி திருத்தேருக்கு தற்போது மூன்று சக்கரங்கள் மற்றும் இரண்டு அச்சுக்கள் மாற்ற வேண்டியுள்ளது. மேலும், பல மராமத்து வேலைகளும் செய்ய வேண்டியுள்ளது. தேர் மராமத்து மற்றும் தேரோட்டச் செலவுகளுக்கு மொத்தம் ரூ. 2,80,000 செலவாகலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

3. மேலே கண்ட செலவிற்கு கோயிலின் நிதியிலிருந்து செலவு செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, ஒரு திருப் பணிக்கமிட்டி அமைத்து பொது மக்களிடமிருந்து வசூல் செய்து இந்த பணிகளை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும்; பொது மக்களிடமிருந்து நன்கொடையாக தொகை முழுவதும் வசூல் செய்தாலும் தேரோட்டத்திற்கு குறுகிய காலமே இருப்பதால் மேற்படி வேலைகளை உடனடியாக செய்து முடிக்க இயலாது. எனவே 21—7—1985 தேரோட் டத்திருநாளன்று பெரிய தேருக்குப் பதிலாக செப்புத் தேரினை ஓட்ட ஆலய நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

4. இந்த ஆண்டு பெரிய தேருக்குப் பதிலாக செப்புத் தேர் விட ஆலய நிர்வாகம் தீர்மானம் செய்துள்ளதினால் பக்தர் களிடையே எந்தவிதமான ஆதங்கமும் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர் ஓட்டுவதற்கு 2 லட்சத்து, 80 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்றும், காலம் சுருக்கமாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். பெரிய தேருக்குப் பதிலாக செப்புத் தேர் வருவதாகச் சொன்னார்கள். செப்புத் தேரை அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தேராகக் கருதவில்லை. திருவில்லிபுத்தூரிலுள் பெரிய தேர் சுமார் 650 டன் எடையுள்ளது. அது தேக்கு மரத்தால் செய்யப்பட்ட தேராகும். அதன் உயரம் 110 அடி ஆகும். அதன் சக்கரங்கள் நல்ல முறை யில் இருக்கிறதென்று பி.டபிள்யூ டி. அதிகாரிகள் சர்டிபிகேட் கொடுத்ருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு அச்சுதான் வளைந்திருக் கிறது என்று சொல்கிறார்கள். அந்த அச்சை சரி செய்து விட்டால் தேரோட்டம் நடத்தலாம். அதலால் ஓட்டுவதற்கு நாங்கள் சர்ட்டிபிகேட் கொடுக்கிறோம், அடிசனலாக 3 சக்கரம் வைத் துக் கொள்வதற்கும், 2 அச்சுகள் செய்வதற்கும் நாங்கள் அனு மதி கொடுக்கிறோம், அந்தத் தேரை வைத்து, சக்கரத்தை வைத்து ஓட்டலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். திருவில்லி புத்தூரிலே உள்ள அந்த தேர் 10 வருடமாக ஓடிக்கொண்டு இருக்கின்றது. 10 வருடமாக ஓட்டிக் கொண்டு இருக்கிறார் கள். அந்தக் காரணத்தால், அந்த பகுதியிலே நல்ல மழை பெய்கிறது, விவசாயிகள் நல்லமுறையில் இருக்கிறார்கள் குடி நீர்ப் பிரச்சினையும் மற்ற எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருக்கிறது என்று ஐதிகம் கூறுவதாக இங்கேயுள்ள பக்தர்கள்



கூறுகிறார்கள். 18 வருடமாக தேர் ஓடாமல் இருந்தது, அத னால் அந்த ஊரிலே மழையில்லை, செழிப்பு இல்லை. மக்கள் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் இருந்தார்கள். ஆகவே அங்கேயுள்ள பக்தர்கள் எல்லாம் சமீபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரை முற்றுகையிட்டு, தேர் ஓட்டியாகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பொது மக்கள் ஆர்வம் கொண் டிருப்பதன் காரணமாக, நிதியைக் காரணம் காட்டாமல், அரசு இந்த தேரோட்டத்தை நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஓடாத தேரையெல்லாம் மாண்புமிகு அமைச் சர் அவர்கள் ஓட்ட வைத்திருக்கிறார்கள். இது ஓடுகிற தேராக இருக்கிற காரணத்தால், நிதிப் பற்றாக்குறையைச் சுட்டிக் காட்டாமல், இந்தக் தேரை ஓட்டுவதற்கு, பெரிய தேரை ஓட்டு வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக் கைகளை எடுப்பார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை என்பது மாத்திரம் காரணம் அல்ல. இந்தத் தேரை ஓட்டுவதற்கு ஆண்டு தோறும் ஓட்டுகிற செலவே 80 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் வரை ஆகிறது என்று தெரிவிக்கிறார்கள். இந்த ஆலயத் தினுடைய வருமானம் இந்த ஆலயத்தினுடைய நிர்வாகத்திற்கே போதுமானதாக இல்லை. அதற்கு இருக்கிற சொத்துக்கள் நிலங்களிலேயிருந்து வருமானத்தை யாரும் முறையாக தராத காரணத்தால் பற்றாக்குறையாக இருந்து வருகிறது. இது தமிழகத்திலே மிகத் தொன்மை வாய்ந்த புகழ் பெற்ற மிகப் பெரிய தேர் என்பதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் இப் படிப்பட்ட தேர்களை எல்லாம் ஓட்டுவதற்கு அந்தப் பகுதி மக்கள் முன்வந்து ஒத்துழைக்க வேண்டும். மக்கள் ஒத்துழைக்க முன் வராமல், அரசோ அல்லது அறநிலையத்துறை மாத்திரமோ முயற்சி செய்து தேரை ஓட்டுவது என்பது அவ்வளவு சரியாக அமையாது. எந்த அடிப்படைக்காக இந்தத் தேரோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறதோ, அதுவும் நிறைவு பெறாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போன்று, பொதுப்பணித்துறையைச் சேர்ந்த பொறியாளர்கள் இப்போது குறிப்பிடப்பட்டு இருக்கின்ற இந்த 2 அச்சுக்களும் 3 சக்கரங்களும் ஓடுகின்ற நிலையில் இருக்கிறது என்று சான்றி தழ் தருவார்களேயானால், இந்த ஆண்டு எப்படியும், அற நிலையத்துறை, வேறு வசதியுள்ள ஆலயங்களிலேயிருந்து பணத் தைச் சேர்த்தாவது ஓட்டுவதற்கு முயலும். ஆனால் அதை ஓட்டினால் மக்களுக்கு ஆபத்து விளைவிக்காமல் பாதுகாப்பாக இருக்குமா என்பதற்கு பொதுப்பணித்துறையினர்தான் சான்றி தழ் தந்தாகவேண்டும். காரணம் எனக்கு வந்திருந்த தகவலில், 3 சக்கரங்கள் பழுதுபெற்றிருக்கின்றன, 2 அச்சுக்கள் மாற்றப் பட்டாக வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே அச்சுக்கள் மாற்றப்படாத ஒரு சூழ்நிலையில் அவ்வளவு பெரிய தேர் இழுக்கப்பட்டால், அந்தப் பொது மக்களுடைய

பந்தோபஸ்துக்கு, உயிருக்கே அபாயம் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படக்கூடும். எனவே அவைகளில் உள்ள அச்சுக்கள் முறிந்து அந்தத் தேர் நகர முடியாமல் போய்விட்டால், அதற்குப் பிறகு மாதக்கணக்கில் அந்த தேரை அகற்ற வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். போக்குவரத்து பாதிக்கப்படும். மக்களுடைய வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படும். ஆகவே இப்படி பல பிரச்சினைகள் இந்தத் தேர் ஓட்டத்திலே அடங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் முயற்சி எடுத்து, அவர்கள் சொல்கிற கருத்தில் சரியாக இருந்தால், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் சான்று தருவார்களானால், உறுதி தருவார்களானால் இந்த ஆண்டு நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்த தேரோட்டம் நிற்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பொதுப்பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் நமது அரசுக்கு ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். இந்த சக்கரம் நன்கு இருக்கிறது, அடிஷனலாக வைத்துக்கொள்ள வேண்டும் என. ஆகவே அடிஷனலாக அந்த சக்கரங்களைச் செய்வதற்கும் மற்றும் அச்சு செய்வதற்கும் அரசு அனுமதி கொடுக்க வேண்டும் என்பது மட்டும் அல்ல, என்னதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தாலும் அங்குள்ள அந்த நிர்வாக அதிகாரிகள் உடனுக்குடன் வேலை செய்ய ஒரு அக்கறை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அக்கறை உள்ள அதிகாரிகளை நியமிப்பதற்கும் மேலும் காமராஜ் மாவட்டம் புதியதாக பிரிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் முதன் முதலாக தேர் ஓட்டம் இல்லாமல் இருந்தால் அந்த மாவட்டத்திற்கு ஒரு நல்ல சகுனம் இல்லை என்று அங்குள்ள பக்தர்கள் எல்லாம் கூறுகிறார்கள். ஆகவே, தேர் 20 நாளில் ஒரு மாதத்திற்குள் வருவதற்கு அங்குள்ள பொதுமக்கள் சார்பில் நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். இது நல்ல காரியமாக இருக்கிற காரணத்தால் அதனால் விபத்து வராது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த தேர் ஓட்டத்திற்கு தலைமைதாங்கி இழுப்பதற்கு வருவார்களா, இதற்கு இந்த சபையில் ஒரு உத்திரவாதம் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, எத்தனை நாட்களுக்குள் அந்தத் தேர் நிலைக்கு வந்து சேருகிறது என்பது பிரச்சினை இல்லை. கடந்த ஆண்டு 26 நாட்கள் ஆகி இருக்கிறது. அதற்கு காரணமே ஆயிரக்கணக்கான மக்கள் அதிலே அக்கறை செலுத்தி அந்த தேரை வடம் பிடித்து இழுக்காததுதான் குறையாக இருக்கிறது. ஒருகாலத்தில் இந்த தேரை மக்கள்தான் இழுத்துக்கொண்டு



வந்து சேர்த்து இருக்கிறார்கள். இன்றைக்கு மக்கள் இடத்தில் அந்த ஆர்வம் குறைந்து இருக்கிறது என்பதும் நமக்கு புரிகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து அந்த ஊரில் உள்ள பிரமுகர்களை பங்கு ஏற்க வைத்து இந்தத் தேரை இழுப்பதற்கு அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக அமைச்சர் அவர்கள் வந்து அந்தத்தேரை இழுப்பது என்பது பிரச்சினை அல்ல. இழுக்கப்படுகிற தேர் பந்தோபஸ்தாக, பத்திரமாக யாருக்கும் அபாயம் விளைவிக்காமல் தன் நிலைக்கு வந்து சேர வேண்டும் என்பது தான் இன்றைக்கு இருக்கிற பிரச்சினை. அந்த 3 சக்கரங்களும் அல்லது 2 அச்சும் புதியதாக செய்ய வேண்டும் என்று எனக்குத் தகவல் தரப்பட்டு இருக்கிறது. இப்போது இருக்கிற அச்சு சரியாக இல்லை என்று எனக்குத் தகவல் தந்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்பணித்துறையைச் சேர்ந்த பொறியியல் நிபுணர்கள் அரசுக்கு இதற்கு சான்றிதழ்கள் வழங்கி இருப்பதாக சொல்கிறார்கள். அரசிடத்தில் அப்படிப்பட்ட தகவல் இப்போது இல்லை. ஆனால் உடனடியாக தொடர்பு கொண்டு அந்த ஆலய நிர்வாகிகளிடம் இது பற்றி நான் விசாரிக்கிறேன். பொதுப்பணித்துறை பொறியாளர்கள் சான்றிதழ் தந்தால், ஆபத்து இல்லாமல் இந்த தேர் ஓடும், நிலைக்கு வந்து சேரும் என்று அவர்கள் தெரிவித்தால் நிச்சயமாக. இந்த பெரிய தேரை ஓட்டுவதற்கு இந்த ஆண்டு அறநிலையத்துறை தாமதம் இன்றி, வேறு எந்த விதமான குறையும் இன்றி நடத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அந்த நிர்வாகிகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். அப்படி நிர்வாகிகள் இந்த தேர் ஓடாமல் இருப்பதற்கு அசட்டையாக அல்லது ஆர்வம் இன்மைக்கு காரணமாக இருந்தால் அவர்கள் உடனடியாக கண்டிக்கப்படுவார்கள், தேவையான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(ஆ) புயலால் 1985-ல் பாதிக்கப்பட்ட கன்னியாகுமாரி மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டத்தில் 1985 ஆம் ஆண்டு மே மாதத்தில் வீசிய புயல் காரணமாக வாழை, ரப்பர்

மரங்கள் மற்றும் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதத்தினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு மே மாதத்தில் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டங்களில், களியல், திருவட்டார், தும்பகோடு, திற்பரப்பு மற்றும் சுருளகோடு ஆகிய கிராமங்களில் பெய்த மழையின் காரணமாகவும், அதைத் தொடர்ந்து வீசிய புயலின் காரணமாகவும், வாழை பயிர்களும், ரப்பர் மரங்களும் பாதிக்கப்பட்டன என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரும், திருநெல்வேலி மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநரும் அரசுக்கு அறிக்கை அனுப்பி உள்ளனர். அவர்களின் அறிக்கையின்படி மேற்படி புயலினால் சுமார் 27.02 ஹெக்டேர் நிலப்பரப்பில் சுமார் 33,165 வாழை மரங்களும், 111 ரப்பர் மரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், பாதிக்கப்பட்ட பயிர்களின் சேத மதிப்பு ரூ. 6.69 இலட்சம் என்றும் தெரிய வருகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்த வகையில் நிவாரணம் அளிக்கலாம் என்பது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருடனும் மற்றும் தோட்டக் கலை இயக்குநருடனும் கலந்து ஆராயப்பட்டு வருகிறது. அவர்களின் கருத்துருவை பெற்று அரசின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு நிவாரணம் அளிப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985 மே மாதத்திலே இரண்டு தடவை புயல் அடித்து ஏறத்தாழ ஒரு இலட்சம் வாழைகளும், ஆயிரத்திற்கு அதிகமான ரப்பர் மரங்களும் சேதம் அடைந்திருக்கின்றன என்பது தான் எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல் ஆகும்.

அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த கணக்கை இங்கே படித்தார்கள். என்ன இருந்தாலும் ஏறத்தாழ ஆறு இலட்சத்திற்கு அதிகமாக சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள், அவர்களுடைய அறிக்கையிலே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது ஏழை விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய நாசம், சேதம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அந்த விவசாயிகளைப் பொறுத்த வரையிலும், நிலத்தை குத்தகைக்கு எடுத்து வாழை விவசாயம் செய்யக்கூடியவர்கள். வாழையிலே நஷ்டம் ஏற்பட்டாலும், அந்தக் குத்தகைதாரர்களுக்கு, அந்த நிலத்திற்கு அவர்கள் கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள்.



அதே போல, ரப்பர் மரங்களைப் பொறுத்தவரையில், மீண்டும் அவர்கள் ரப்பர் மரங்களை வைக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதற்கும் பெரிய அளவுக்கு செலவு ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கான வகையில், ஒரு வாழைக்கு இரண்டு ரூபாயோ, 5 ரூபாயோ என்று வைத்தும், ரப்பர் போர்டு என்ன கணக்கு, ரப்பர் மரங்களுக்கு வைத்திருக்கிறதோ, அந்த அளவுக்கு வைத்தும் நிவாரணம் அளிக்க விரைவிலே அரசும், அமைச்சரவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது குறித்துத் தான் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துக்களையும், தோட்டக் கலைத் துறை இயக்குநருடைய கருத்துக்களையும் கேட்டுப் பிறகு செய்ய வேண்டியிருக்கிறது. ரப்பர் மரங்களைப் பொறுத்த வரையில், அதிலே ஏற்படக்கூடிய சேதத்திற்கு ஈடு செய்வதற்கு நடைமுறை விதிகளில் இடம் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்ன இருந்தாலும், பாதிக்கப்பட்டு இருக்கிற சிறிய விவசாயிகளின் நலனைக் கருத்திலே கொண்டு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் கொடுத்திருந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் வேறு ஒன்று ஆகும். அதையும் இதோடு சேர்த்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள் நான் கொண்டு வந்திருந்த கவன ஈர்ப்பு என்னவென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரைப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பின் காரணமாக, கிட்டத்தட்ட 200, 300 வீடுகள் அரிக்கப்பட்டு, அது போல் ஊருக்குள் கடல் நீர் சென்று, நூற்றுக்கணக்கான தென்னை மரங்களையும் அதில் அடித்துச் சென்று விட்டது சம்பந்தமாகத்தான் கொடுத்திருந்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் கொடுத்த கவன ஈர்ப்போடு, என்னுடையதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேர்த்து விட்டார்கள் என்று கருதுகிறேன். நான் கேட்டது ரெவின்யூ அமைச்சர் அவர்களிடம் தான். ஆனால், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்.

எனவே, இந்த கவன ஈர்ப்பு சம்பந்தமாக, நீரில் இழுத்து செல்லப்பட்ட குடிசைகளுக்கும், தென்னை மரங்களுக்கும், அரிக்கப்பட்டிருக்கின்ற ரோடுகளுக்கும் தேவையான நிவாரண நடவடிக்கை என்ன அரசு எடுத்திருக்கிறது என்பது தான் என்னுடைய வேண்டுகோள். அதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, இதிலே ஏற்படக்கூடிய சேதங்களுக்கு நிவாரணம் அளிப்பது என்பது, சில வருவாய்த் துறையின் மூலமாகவும், சில

வேளாண்மைத் துறையின் மூலமாகவும் செய்யப்படுகின்றன. என்ன இருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் தான், இரண்டு துறை நிவாரண நடவடிக்கைகளும் அமையும். அந்த வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்து இருக்கிற தகவல்களின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் தெரிவித்த கருத்தையும் இணைத்து, விளக்கம் கேட்டு, அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

5. வரவு—செலவுத் திட்டம், 1985–86, வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்- நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ். ரூ. 1,12,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

(முற்பகல் 11-10)

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 5— முத்திரைத்தாள்கள்-நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,12,95,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள் மக்களுக்கு தாராளமாக கிடைக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 5— முத்திரைத்தாள்கள்-நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,12,95,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:





''மானியக் கோரிக்கை எண். 6— பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,75,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

THIRU. N. S. V. CHITHAN : Mr. Deputy Speaker Sir, to discuss the need to register all marriages compulsorily, I move—

"that The allotment of Rs. 5,75,83,000 under Demand No. 6 Registration be reduced by Rs. 100."

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழைகளுக்கு வீடுகளை பதிவு செய்வதில் அவர்களுக்கு குறைந்த அளவில் சலுகை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 6— பத்திரப்பதிவு என்ற தலைப்பின்கீழ், ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,75,83,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 10— பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,39,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி மரக்காணம் யூனியன் எண்டியூரில் பால் குளிரூட்டும் நிலையம் அனுமதியாகியுள்ளதை அடிக்கல் நாட்டி கட்டிடம் கட்டும் பணியை துரிதமாக்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 10— பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,39,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரு. பணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம், கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் பல வார்டுகளில் நிரந்தரமான பால் விநியோக மையங்களை அமைத்து அனைத்து மக்களுக்கும் பால் கிடைக்க போதிய ஏற்பாடுகளை கூட்டுறவு பால் விநியோகஸ்தாபனம் செய்யப்படாமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 10— பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,39,95,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசை வாழ் மக்களுக்கு தாராளமாக பால் கிடைக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 10— பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,39,95,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஈ) கோரிக்கை எண் 22- கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 22— கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 26,69,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திண்டிவனம் தொகுதியிலுள்ள மயிலம் ஒன்றியம் சின்ன வளவனூர் கிராமத்திலும், ஆலகிராமத்திலும் கால்நடை மருத்துவ கிளை நிலையம் துவக்குதல் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 22— கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 26,69,64,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வியாசர்பாடி பகுதியில் கால்நடை வளர்ப்புக்கு வேண்டிய நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 22— கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 26,69,64,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை** நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்தைச் சொன்னபிறகு இறுதியில் அரசின் கருத்தைத் தெரிவிக்கிறேன்.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் துணை தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெறுகின்ற விவாதத்திலே கலந்து கொள்கின்ற வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அனைத்துப் பகுதிகளையும் தொட்டுச் சொல்லவில்லை என்றாலும், சில குறிப்பிட்ட பகுதிகளைப்பற்றி மட்டும் சொல்லி, அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு அவைகளைக் கொணர விரும்புகிறேன்.

அமைச்சரவர்கள் மிக முக்கியமான பொறுப்பை வகித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கைகள் தமிழகத்திலே இருக்கின்ற மக்களின் நல்வாழ்வைப் பொறுத்தது.

திருமூலர் பேசுகின்றபொழுது,

''உடம்பார அழியின் உயிரால் அழிவர்''

என்று சொல்லியிருக்கிறார்.

''உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேனே''

என்பது திருமூலர் திருவாக்கு.

அந்த உடம்பை வளர்ப்பதற்கு பயன்படுபவைகளில் சில ஆடு, மாடு, கோழி ஆகிய இவைகளிலிருந்து கிடைக்கின்ற பலன்கள். இவைகளைப் பற்றிய மானியமாக இருப்பதால்தான் இது முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொன்னேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ''மாடு'' என்று சொன்னாலே செல்வம் என்றுதான் பொருள். சற்று முன்னர் திருவில்லிப்புத்தூர் தேரைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

---

** 147—210-ம் பக்கங்களில் இணைப்பு I, II மற்றும் III-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

அந்தத் திருவில்லிபுத்தூரில் பிறந்த சூடிக் கொடுத்த சுடர்க் கொடி சொல்லுகின்றபொழுது," வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்" என்று பசுக்களை வள்ளல் என்று சொல்கிறார்.

எனவே, நமக்கு வாழ்வளித்துக் கொண்டிருக்கின்ற வள்ளல்களாக இருக்கின்ற பசுக்கள் தருகின்ற பாலினை நமக்கு "ஆவின் பால்" என்று தருகின்ற அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சத்துணவை பல இலட்சக் கணக்கான குழந்தைகளுக்கும், வறியவர்களுக்கும், இல்லாத, இயலாதவர்களுக்கும் இன்றைக்குப் பல்வேறு வகைகளிலே கொடுத்த போதிலும் மிகவிரைவில் அவர்களுக்கு, இந்த மானியக் கோரிக்கைகளிலே விவாதிக்கப்படும் பொருள்களாலே சத்து கிடைக்கிறது என்று சொல்லும் அளவிற்கு நல்லதொரு நிலை வளர வேண்டும், வர வேண்டும் என்ற எண்ணம் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரசுக்கு இருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் என்று அழைக்கப்படுகின்ற வட்டாரத்திலும் சிறிய பண்ணைகளை ஏற்பாடு செய்து, ஒரு பகுதியிலே மாட்டுப் பண்ணையும் இன்னொரு பகுதியிலே கோழிப் பண்ணையும் செம்மையுற வைத்து, அந்த மாட்டிலிருந்து கிடைக்கின்ற பால், அந்தக் கோழியிலிருந்து கிடைக்கின்ற முட்டை, இவைகளைக் கொண்டே, சத்துணவுத் திட்டத்தைச் சிறப்பான முறையிலே நடத்திவிட முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. முதல் அமைச்சருக்குத் தோள் கொடுத்து எந்த நேரத்திலும் இருந்து கொண்டிருந்த அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறையை வைத்தே, அதைச் சாதிக்க முடியும் என்று நான் நம்புகிறேன். அந்த வகையிலே, எனது வேண்டுகோளுக்கிணங்க நாளையே அதனை நிறைவேற்ற முடியவில்லையென்று சொன்னாலும் திட்டத்தை அறிவிப்பதிலாவது, இதற்குப் பதில் சொல்கின்ற பொழுது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பாலைப் பொறுத்தவரையில் அதில் இருக்கிற ஏ என்ற சத்து குறைந்து, அந்தப் பால் கிடைக்காத காரணத்தாலே குறைந்து போகுமானால், மரணம் கூட வரும் என்று சொல்கிறார்கள். தோல் மரமரப்பாகி, சொர சொரத்துப் போய் விடும் என்று சொல்கிறார்கள். ஆகையினால் நோய் வரும் என்று சொல்கிறார்கள். இவ்வளவு நோய்களைத் தடுத்து, வாழ்வாங்கு வாழ வைக்கின்ற பால் ஒவ்வொரு வட்டாரத்திலும் உற்பத்தியாக வேண்டுமென்று கருதுகிறோம்.

முட்டையிலே பல்வேறு சத்துக்கள் இருக்கின்றன என்பதை எல்லோரும் அறிவார்கள். குறிப்பாக, ஏ வைட்டமின், பி வைட்டமின், சி வைட்டமின், ரிபோஃபிளேவின் என்று சொல்கின்ற பி2, தியமான் என்று சொல்கின்ற பி1, இத்தனையும் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஒன்றிரண்டை



நம்முடைய டாக்டர் ஹண்டே அவர்களிடம் கூடக் கேட்டு இப்பொழுது நான் தெரிந்து கொண்டேன். ஏனென்றால், ரத்த ஓட்டச் சத்து உட்பட அத்தனையும் இதிலேஇருப்பதனை நீங்கள் அறிவீர்கள். இந்த இரண்டும் குழந்தைகளுக்குப் போக வேண்டும், சத்தற்றவர்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்றால், வட்டாரம் முழுவதும் அதனைச் செய்யலாம், அப்படிப்பட்ட பணிகளிலே ஒரு பகுதியிலே கோழிகளை வளர்க்கலாம், இன்னொரு பகுதியிலே அந்த மாட்டுச் சாணத்திலிருந்து வருகின்ற எரி வாயுவை வைக்கலாம். காய்கறி வளர்க்கலாம். அப்படிப்பட்ட ஒரு காம்ப்ரஹென்சிவ் ஸ்கீமை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இவ்வாறு மிக அழுத்தமாக நான் சொல்ல விரும்புவதற்குக் காரணம், இன்று போதுமான உற்பத்தி நமக்கு இல்லை. உதாரணமாக, டாப்கோவிலிருந்து கிடைத்திருக்கிற குறிப்புகளை வைத்துப் பார்த்தால், இன்று தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் பெறுகின்ற முட்டை, சராசரி பெறுவதாக இருந்தால் 18 நபர்களுக்கு ஒரு முட்டை கிடைக்கிறது. 18 பேர்களுக்கு ஒரே ஒரு முட்டைதான் கிடைக்கிறது என்ற நிலை இருக்கிறது. அதைப் போலவே 27 பேர்களுக்கு ஒரு லிட்டர் பால் கிடைக்கிறது. 27 பேர்களுக்குத்தான் ஒரு லிட்டர் பால் கிடைக்கிறது என்ற நிலையும் 18 பேர்களுக்குத்தான் ஒரு முட்டை கிடைக்கிறது என்ற நிலையும் இருக்கிற காரணத்தாலே கோழியிலிருந்து மாடு வரை நமது கவனத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டு செம்மையாக வளர்க்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

தமிழ் நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் மிகுந்த ஆர்வத்தோடு; தொடங்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. கோழிக்குரிய தீவனத்தைச் செய்வதிலே அவர்கள் மிகுந்த முயற்சி எடுத்து ஓரளவுக்குச் செய்திருக்கிறார்கள். ஆனால், அதிலே முழுமையாக வெற்றி பெறவில்லையென்பதுதான் என்னைப் போன்றவர்களுடைய அபிப்பிராயம். உற்பத்தியைப் பற்றிக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். 1981–82-ல் 9,129 மெட்ரிக் டன்னாக இருந்தது, 1982–83-ல் 5,434 ஆகக் குறைந்து, 1983–84-ல் 4,761 ஆகச் சிறுத்து, 1984–85-ல் 4,045 ஆகக் கரைந்து நின்றிருக்கிறது. அந்த அளவுக்குக் கோழி தீவன உற்பத்தி குறைந்து வந்திருக்கிறது. அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எப்படி என்றால், நமது அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற திட்டத்திலே சுய வேலை வாய்ப்புத் திட்டம், கோழி வளர்ப்புப்பேட்டைகள் போன்ற திட்டங்கள் தொடங்கப்பட இருக்கிற காரணத்தால் இன்னும் அதிகமான தீவனம் தேவைப்படுகிறது.

இப்படி நமக்கு இருக்கிற தீவனம் போதாத காரணத்தினாலே, வெளியிலே இருந்து அதனை வாங்கினால் 5 சத விகித அளவிற்கு நமக்கு வரி விதிக்கப்படுகிறது. இங்கே கூட 5 சத விகித வரி இருக்கிறது. ஆந்திராவிலே $1\frac{1}{2}$ சதவிகிதம் தான் இருப்பதாகச் சொல்கிறார்கள். கர்நாடகத்திலே இரண்டு சத விகிதம்தான் இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, அங்கே அப்படிப்பட்ட வரிகள் குறைவாக இருக்கிற காரணத்தாலே, அங்கிருந்து ஏராளமான முட்டைகள் இங்கே வந்து, நம்முடைய முட்டை உற்பத்தியாளர்களுக்குப் போட்டியாக விலையைக் குறைத்துக் கொடுக்க முடிகிறது. அந்த நிலையிலே பார்க்கின்றபொழுது, நமது உற்பத்தியாளர்களைக் கட்டுப்படுத்துகிற நிலை இருக்கிறது. ஒட்டு மொத்தமாகக் கணக்குப் பார்த்தால், 1980—81-ல் 264 இலட்சங்களாக இருந்த முட்டை எண்ணிக்கை, 1981—82—ல் 262 இலட்சங்களாகக் குறைந்து, 1982—83-ல் 222 இலட்சமாகத் தேய்ந்திருக்கிறது.

(முற்பகல் 11—20)

1983—84-லே அதைவிட கொஞ்சம் உயர்ந்திருக்கிறது. அதாவது 246 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. 1984—85-ல் 244 இலட்சமாக நிலை நின்று கொண்டிருக்கிறது. ஆக 264 இலட்சமாக 1980—81-லே தொடங்கிய முட்டை உற்பத்தி 244 இலட்சமாக குறைந்திருக்கிறது, 5 வருடங்களுக்குப் பின்னாலே என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அதைப்போலே கோழி விற்பனையிலே கூட 1980—81-ல் 1,62,000 ஆக இருந்தது 1983—84-லே 1,13,000 ஆக சரிந்திருக்கிறது. ஒரு முட்டை 45 காசு அல்லது 50 காசுவரை விற்றுக் கொண்டிருக்கிறது. பல வெளிநாடுகளில் ஒரு டசன் முட்டை 45 சென்டுக்கு விற்றுக்கொண்டிருக்கிறது. ஆக முட்டை போன்ற கலப்படம் செய்ய முடியாத ஒரு பொருள் அத்தனை மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் இந்த கோழித் தீவனம் போன்றவற்றை நாம் அதிகமாக உற்பத்தி செய்து விநியோகிக்கின்ற முறையிலே பண்ணை அமைத்து அந்தப் பணியிலே ஈடுபடலாமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் ; அவர்களுடைய திட்டங்களிலே இதை ஒன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அவர்களுடைய குறிப்பிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். கோழிப்பண்ணை பலவிதமான இன்னல்களைக் கடந்து கணிசமான வளர்ச்சி பெற்றுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த கணிசமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்ற சொற்றொடர் இங்கே பொருந்தாதது போலே எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் 1977—78-லே கோழிப் பண்ணை 29 ஆக இருந்திருக்கிறது. 1978-79-லே கோழிப்





பண்ணை 1,500 ஆக இருந்திருக்கிறது. 1979-80-லே அது 2,029 ஆக இருந்திருக்கிறது. இப்படி மேலே போய், உச்சியிலே நின்றிருக்கிறது, சரி, அதற்குப் பின்னாலே 1980—81 ஆம் ஆண்டு கணக்கைக் காணோம் ; 1981—82 ஆம் ஆண்டு கணக்கைக் காணோம் ; 1982—83 ஆம் ஆண்டு கணக்கைக் காணோம் ; 1983—84 ஆம் ஆண்டு கணக்கைக் காணோம் ; 1984—85 ஆம் ஆண்டு கணக்கைக் காணோம். எனவே இப்போதெல்லாம் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படவில்லை என்று பொருளா ? ஆக 2,029 பண்ணைகளுக்குப் பிறகு இந்தபண்ணைபற்றிய கணக்கைக் கொடுக்காமல் இருந்துகொண்டு, கணிசமான வளர்ச்சியை அடைந்திருக்கிறது என்று சொல்வது இந்தத் திட்டத்திற்கு முரண்பாடான சொற்றொடராக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பால் வளத்தைப் பொறுத்தவரையில் நல்ல மன வளம் கொண்ட அமைச்சர் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், மகிழ்ச்சி. சாதனை என்று ஒன்று இருக்கிறது. அந்த சாதனை இலக்கைத் தொடங்கி, அந்த சாதனையை அடைந்துவிட்டது பற்றி 14-வது பக்கத்திலே தெளிவாக இருக்கிறது. 1982—83 ஆம் ஆண்டிலே 15 இலட்சம் லிட்டர் என்று அவர்கள் இலக்கு வைத்திருக்கிறார்கள் ; மகத்தான ஒரு சாதனையை அதிலே எட்டியிருக்கிறார்கள். 16,29,000 லிட்டராக உயர்த்தியிருக்கிறார்கள். ஆக, இலக்கைவிட அதிகமாக தாண்டி இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும், என்னுடைய பாராட்டு, இது 1982—83 ஆம் ஆண்டிலே, 1983-84 ஆம் ஆண்டிலேயும் இதே இலக்கைத்தான் வைத்திருக்கிறார்கள். இதற்கு முந்திய ஆண்டே இந்த இலக்கைத் தாண்டிய பிறகு 16,29,000 லிட்டரை எட்டிய பிறகும் பழைய 15 இலட்சம் லிட்டரையே ஏன் இலக்காக வைக்க வேண்டும் ? அதைத் தாண்டிய பிறகும் அதையே மீண்டும் வைக்க வேண்டுமா?

மீண்டும் அடுத்த ஆண்டுக்குப் போட்டிருக்கிறார்கள். அப்போதும் இலக்கு 15 இலட்சம் லிட்டர்தான். ஆனால் எட்டியதோ 14,71,000 லிட்டர். 1984—85 ஆம் ஆண்டிலும் 15 இலட்சம் லிட்டர் இலக்கு வைத்து, எட்டியதோ 13,67,000 லிட்டர் பால் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கணக்கை நான் இங்கே கூறுகிறபோது, 27 பேர்களுக்கு ஒரு லிட்டர் பால் என்று சொல்லுகிறபோது ஒரு நபருக்கு 100 மில்லி கூட கொடுக்க முடியாது. மில்லி என்று சொன்னவுடனே சிலருக்கு வேறு ஞாபகம் வரும். அமைச்சருக்கும் எனக்கும் அந்த ஞாபகம் வராது. இருந்தாலும் சிலருக்கு வருகிற காரணத்தால் சொல்கிறேன். 100 மில்லி கூட பால் கொடுக்க முடியாது என்று சொன்னால், இந்த அளவுக்கு மிகவும் குறைவாக பால் உற்பத்தியாவதற்கு என்ன காரணம், இவ்வளவு உற்சாகமாகப் பணியாற்றிய பிறகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திக்க .வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு மனக் குறை எனக்கு உண்டு. இந்த ஆவின் பால் என்று அழகான பெயர் இருக்கிறது. இப்படி தூய தமிழிலே ' ஆவின் பால் ' என்ற அழகான சொற்றொடர் இருக்கிற போது அதிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு மட்டும் புது, புது பெயர்களை ஏன் கொடுக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதிலிருந்து கிடைக்கிற ஐஸ் கிரீமுக்கு ' குட்வில் ஐஸ்கிரீம் ', 'குட்னஸ் யோகார்ட்', குட்னஸ் கோவா, குட்னஸ் லஸ்ஸி, என்றெல்லாம் பெயர் கொடுக்கிறார்கள். ஆவின் என்று சொல்லுகின்ற அழகுத் தமிழ் பெயர் இருக்கும்போது 'குட்னஸ்' என்று ஏன் சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை.

அதைப்போன்று 'ஃப்ளேவர்டு மில்க்' என்று சொல்கிறார்கள். நறுமண மூட்டிய பால் அல்லது நறுமணமூட்டிய ஆவின் பால் என்று சொல்லி விடலாமே, நான் தூய தமிழ் சொற்களை தேடித் திரிந்து இங்கே வலிந்து கொண்டு வந்து சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. 'குளிர்பதன இளக்கல் பால்' என்று ஐஸ் கிரீமுக்குச் சொல்ல வேண்டுமென்று நான் சொல்லவில்லை. மக்களுக்குப் புரிகின்ற அளவுக்கு இருந்தால் அந்த சொற்றொடரைப் பயன்படுத்தினால் அது தவறு இல்லை. ஆனால் ஆவின் பால் என்று நல்ல பெயர் இருக்கும்போது குட்வில் என்ற பெயரை புதிதாகக் கொண்டு வர வேண்டுமா என்பதை சிந்திக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே கால்நடையைப் பெருவாரியாகப் பராமரித்துக் கொண்டிருப்பதற்காக பல அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் கால்நடை மருத்துவர்கள் என்று இருப்பவர்கள் உண்மையிலேயே கால்நடை மருத்துவர்கள் என்று அழைக்கப்படுவதில்லை. கால்நடை உதவி மருத்துவர்கள் என்று தான் அழைக்கப்படுகிறார்கள். கால்நடை மருத்துவர்கள் என்று அவர்களை அழைத்தாலே போதுமானது. கால்நடை உதவி மருத்துவர்கள் என்று அவர்களை அழைக்க வேண்டுமா ? உதவி என்று சொல்கிற போது அவர்கள் வெட்டர்னரி டாக்டர்ஸ் என்று இல்லாமல் அஸிஸ்டெண்ட் வெட்டர்னரி டாக்டர் என்பதை போல அவர்களுக்கு ஒரு உணர்வு ஏற்படுகின்றது. இன்னும் சொல்லப் போனால் ஒரு காம்ப்ளக்ஸ். எனவே இதை ஏன் நான் சொல்கிறேன் என்பதை உணர்ந்து அதிகாரிகளும், அமைச்சர்களும் அவர்களைக் கால் நடை மருத்துவர்கள் என்றே சொன்னால் போதாதா என்று சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது ஊதியக் குழு வந்தது. சித்த மருத்துவர்களுக்கு ஊதியம் குறைவாகவும், இந்தக் கால்நடை மருத்துவர்களுக்கு ஊதியம் அதிகமாகவும் இருந்தது. சித்த மருத்துவர்கள் என்கிறவர்களுக்கும் கால் நடை மருத்துவர்களுக்கு அளிக்கப்படுவது போன்ற ஊதியத்தைத் தாருங்கள் என்று கோரிக்கை வைத்து அதன் பின்னர் அரசு அந்தக் கோரிக்கையை வெற்றிகர





மாக நிறைவேற்றிக் கொடுத்தது. ஆனால் இப்போது நான்காவது ஊதியக் குழு வந்த பிறகு என்னவென்றால் சித்த மருத்துவர்களுக்குக் கொடுப்பதைவிட குறைவாக இந்தக் கால்நடை மருத்துவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. ஆனால் சித்த மருத்துவர்கள் என்று சொல்லப்படுகின்ற நல்ல தமிழ் மருத்துவர்களுக்கெல்லாம் வேண்டுவன கொடுக்கப்பட வேண்டும் என்பதில் பின்வாங்குகின்ற எண்ணம் எனக்கு இல்லை. அவர்களுக்கு வேண்டுவன கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் ஒரு காலத்தில் அதிகமாகப் பெற்ற கால்நடை மருத்துவர்கள் இப்போது சித்த மருத்துவர்களுக்கு ஈடாகக் கூட அந்த ஊதியத்தைப் பெற முடியவில்லை என்று சொன்னால், மற்றும் படிகளை பெற முடியவில்லை என்று சொன்னால் அது எப்படி இருக்கும் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து முன்பெல்லாம் கால்நடை மருத்துவர்களுக்குத் துணையாக கம்பவுண்டர் என்று சொல்லப்படுகின்ற ஒருவர் இருந்து கொண்டிருந்தார். ஆனால் இப்போது அவர்கள் இல்லை. எனவே எல்லா இடங்களிலும் உடனடியாக அவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கிராமங்களில்தான் அதிகமான மாடுகள் இருக்கின்றன என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் சப் செண்டர்ஸ் என்று சொல்லப்படுகின்றவற்றைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 340 கால்நடை மருத்துவர்களின் பணி இடங்கள் இன்று காலியாக இருக்கின்றன. அவ்வாறு காலியாக இருக்கின்ற போது அவர்கள் மூலம் நடைபெற வேண்டிய பணிகள் நடைபெறவில்லை என்பது மட்டுமல்லாமல் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்துக் கொண்டிருக்கின்ற இந்த நிலைமையில் 340 இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொன்னால் தமிழ் நாட்டில் இருக்கின்ற மக்களின் வளர்ச்சிக்கு ஒவ்வாததாக அது இருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 1957 ஆம் ஆண்டில் ஒன்றரை வருடம், இரண்டு வருடம் என்ற படிப்பு இருந்தது. டிப்ளமோ கோர்ஸ் என்பது இல்லாமல் போய் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் இவ்வளவு காலம் அவர்கள் படிக்க வேண்டுமா என்று சொல்லி ஒரு வருட நற்சான்றிதழ் படிப்பு போதும் என்ற வகையில் வந்து இப்போது அந்த நற்சான்றிதழ் படிப்பு கூட இல்லாமல் போய்விட்டது.

அப்படி இருக்கின்றபோது இந்தக் கால்நடை மருத்துவர்களுக்கு மேலே இருக்கின்ற கண்காணிப்பாளர் பதவியைப் பொறுத்தவரையில் அதாவது கால்நடை மருத்துவர்களுக்கும் கால் நடை ஆய்வாளர்களுக்கும் இடையிலே இருக்கின்ற பதவியான கண்காணிப்பாளர்கள் பதவியைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 40 பதவிகள் காலியாக இருந்துக் கொண்டிருக்கின்றன. அந்த 40 பதவிகளிலும் டிப்ளமோ படித்தவர்களைக் கொண்டு வந்து வைப்பதற்கு வழியில்லை, வகையில்லை. ஏனென்றால் படிப்பதற்கான திட்டம் இல்லை. அப்படிப்பட்ட கல்லூரிகளோ பட்ட வகுப்பு

களோ நடத்துவதில்லை. ஆகவே ஆய்வாளர்களில் இருந்தே திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்து, ரிப்ரஷ்ஷர் கோர்ஸ் நடத்தி, அவர்களுக்கு ஒரு தேர்வு நடத்தி, அவர்களை எடுத்துக் கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட ஆயிரம் பேர் பணி மூப்பு பெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூட நான் சொல்லவில்லை. பணி மூப்பு உடையவர்களிலே திறமையானவர்களையும், ஆர்வமானவர்களையும் தேர்ந்தெடுத்து ஒரு தேர்வை நடத்தி அவர்களை இங்கே அமைத்துக் கொண்டால் நல்லது என்ற வகையில் அதிகாரிகள் சொல்கின்ற சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாண எரிவாயு நல்ல முறையில் வர வேண்டுமென்றால் அவர்களுக்கு தொழுவம் கட்டுவது போன்ற பணிகளுக்கு மானியங்களை அதிகப்படுத்திக் கொடுப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆடு வளர்க்கின்ற திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 3 ஆடுகளையும், ஒரு கடாவையும் வாங்கிக் கொள்ளுங்கள் என்று 900 ரூபாய் கொடுக்கப்படுகின்றது. அதிலே மூன்றிலே ஒரு பகுதி மானியமாகக் கொடுக்கலாம் என்று இருக்கின்றது. ஆனால் 900 ரூபாயில் மூன்று ஆடுகளையும், ஒரு கடாவையும் வாங்க முடியாது. மேலும் மூன்று ஆடுகள், ஒரு கடா என்று சொல்கிறபோது அந்த விகிதாச்சாரம் கூட பொருத்தமற்றது என்று கிராமங்களில் ஆடு வளர்ப்பவர்கள் கூறுகிறார்கள். ஏறத்தாழ 6 ஆடுகளாவது வேண்டும் என்று ஆடு வளர்ப்பதிலே அனுபவசாலிகளாக இருப்பவர்கள் சொல்கிறார்கள். எனவே அதற்கேற்ப அந்தத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மானியத் தொகையையும் அதிகரித்துக் கொடுக்க வேண்டும்.

துறைமுக நகரங்களில் வெளி நாட்டிலிருந்து வருகின்றவர்களுக்கு வெள்ளைப் பன்றி இறைச்சி தேவைப்படுகின்றது. தூத்துக்குடியில் வருகிற கப்பல்களுக்கு மட்டும் ஏறத்தாழ 2,000 கிலோ பன்றி இறைச்சி தேவைப்படுகிறது. ஆனால் அவர்களுக்குக் கொடுப்பதற்குப் போதுமான இறைச்சி இல்லாத காரணத்தால் மாட்டிறைச்சிதான் கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பதிலாக அப்படிப்பட்ட இடங்களில் வெள்ளைப் பன்றிகளை அதிகமாக வளர்த்து அவர்கள் தருகின்ற பணத்தைப் பெற்று அவர்களுடைய மனதுக்குகந்த உணவைத் தருகின்ற காரியத்தை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–30)

அதைப் போலவே இன்று விவசாயிகளுக்கு ஐ.ஆர்.டி.பி.யிலே மாடு கொடுக்கின்ற போது இன்ன இடத்திலே தான் அந்த மாடுகளை வாங்க வேண்டும் என்று பல 100 மைல்களுக்கு அப்பால்





உள்ள சில ஊர்களை சுட்டிக் காட்டுகிறார்கள். அப்படிச் சுட்டிக் காட்டுவதோடு மட்டும் அல்லாமல், அந்த மாட்டினுடைய விலையை நிர்ணயிக்கின்றவர்கள் உண்மையிலேயே அந்த மாட்டினுடைய தரத்தையும், அந்த மாட்டினுடைய தன்மையையும் பார்த்து நிர்ணயிக்காமல், வேறு சில காரணங்களுக்காக வேறு மாதிரி நிர்ணயிப்பதாகவும் அதனாலே சில குறைபாடுகள் நிகழ்வதாகவும் சொல்லுகிறார்கள். தயவு செய்து அமைச்சர் அவர்கள் அது அமைச்சர் அவர்களின் பார்வைக்கு முன்பே வந்திருக்குமானால், அதை ஏற்கெனவே பரிசீலித்து இருப்பார்கள். வரவில்லை என்று சொன்னால், உறுப்பினராகிய நான் சொல்கிற அந்த குறிப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டு, அதைச் செய்து கொடுப்பார்கள் என்றும் நம்பி இதை அவர்கள் முன்னாலே வைக்கிறேன்.

அத்தோடு மாட்டுப் பண்ணை போன்றவைகளை வட்டாரம் தோறும் வைப்பது என்று சொல்லுவதால், அப்படி வைப்பதன் மூலம் ஆங்காங்கே, பண்ணைகளில் இருக்கும் மாடுகளைக் கூட விவசாயிகளுக்கு கொடுக்க முடியும். தொலை தூரத்தில் இருந்து கொண்டு வராமல் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்னொன்று அடி மாடுகள் என்று பல மாநிலங்களுக்கு இங்கேயிருந்து செல்லுகின்ற மாடுகளிலே பயன்படாத மாடுகள் மட்டும் அல்லாது நல்ல கன்றுகள் கூட செல்லுகின்றன. இவைகள் எல்லாம் அப்படிப் போனால் நம்முடைய கால்நடை வளம் மட்டும் அல்லாமல், பால் வளமும் குறைவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அதனால் அமைச்சர் அவர்கள் அப்படி அடி மாடுகளை வெளி மாநிலங்களுக்கு அனுப்பும் பழக்கத்தைத் தடுக்க வேண்டும் என்று அவருக்கு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

தமிழகம் முழுவதும் இந்தக் கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை, பன்றிப் பண்ணை ஆகியவற்றை நாம் தோற்றுவிக்கின்ற நேரத்தில், குற்றால அருவிச் சாரலில் இருந்து வருகிற நல்ல ஈரக் காற்றால், நல்ல பசும்புல் வெளிகள் உருவாகியிருக்கின்ற இடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் மாட்டுப் பண்ணைகளை இன்னும் அதிகம் ஆக்கலாம். வட்டாரத்திற்கு ஒரு மாட்டுப் பண்ணை அதற்கு மிகப் பெரிய இடம் வேண்டும், அதிலே கோழிப் பண்ணை இருத்தல் வேண்டும், அதிலே காய்கறிகளை வைக்க வேண்டும், அதுவே சத்துணவு திட்டத்திற்கும் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று எல்லாம் சொல்லுகிறபோது, சில இடங்களிலே அதிகமாகவும் வைக்கலாம் என்பதற்காக சொன்னேன். மலைச் சாரல்களிலே வருகின்ற ஈரக்காற்றினால் ஈரப்பசை உள்ள இடத்தில் புல் நன்றாக வளரும். ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் மாட்டுப் பண்ணைகளை அதிகமாக வைக்க வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் அவர்களுடைய துறையிலே திட்டங்கள் மிகச் சிறப்பாக அமைய வேண்டும் என்று விருப்பம் உள்ளவர்கள். அவரைப் போலவே காந்தி காமராஜ் தேசிய காங்கிரசுக்கும் விருப்பம் இருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கிற மக்களுக்கு சத்தான உணவைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த சத்தான உணவை கொடுப்பதற்குரிய துறைகளையெல்லாம் அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற காரணத்தினாலே, முதலமைச்சர் அவர்களுடைய திட்டத்திற்கு இது ஒரு மாற்றுத் திட்டமாக இருக்க வேண்டும் என்று மட்டும் நான் சொல்லவில்லை இதுவே அதை நல்ல வகையில் ஈடுகட்டுகின்ற திட்டமாக இருக்கும் வகையில், நல்ல பால், நல்ல முட்டைகளையும் கொடுக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி, நல்ல சத்துணவை உண்மையிலேயே கொடுக்க, இப்போது இருந்துக் கொண்டிருப்பதை விட மேலான திட்டமாக அந்த சத்துணவு திட்டத்தை ஆக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலமைச்சரோடு கலந்து பேசி ஒரு முடிவு எடுக்க வேண்டும். அதன் மூலம் கிராமத்தில் ஆங்காங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுக்க முடியும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன் ஒவ்வொரு கிராமத்திலேயும் அந்தப் பண்ணைகளிலே வேலை செய்வதற்காக நிறைய தேவை ஏற்படுகிற காரணத்தினாலே அங்கே வேலை செய்கிறவர்களுக்கு, நாம் உற்பத்தி செய்கிற பொருள்களை நம் குழந்தைகள் தான் சாப்பிடுகிறார்கள் என்கிற மன உணர்வு உண்டாகும். அது போல குழந்தைகளுக்கும் நம் பெற்றோர்கள் வேலை செய்கிற இடத்திலிருந்து இவைகள் வருகின்றன என்று சொல்லுகிற உணர்வும் ஏற்படுகிற சூழ்நிலை உருவாகும், ஆகவே தயவுசெய்து, இதை எப்போதாவது செய்யலாம் என்று பார்க்காமல், முதலமைச்சரோடு கலந்து பேசி, நல்ல விளைவைத் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை தந்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985–86 ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்பு மற்றும் பத்திரப் பதிவு, மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகளின் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே சொல்ல விழைகிறேன்.

தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக இதே மன்றத்திலே நான் கால்நடை பராமரிப்புத் துறையைப் பற்றிய மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்கின்ற வாய்ப்பினை பெற்ற எனக்கு, இந்த முறை நான் பேசும்போது உண்மையிலேயே மன நிறைவையும், மன ஊக்கத்தையும் பெறுகிறேன். மட்டற்ற மன மகிழ்ச்சியோடு புரட்சித் தலைவர் அவர்களை கரங்குவித்து கால்நடை உதவியாளர்களும், கால்நடை மருத்துவத் துறையும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது





என்பதையெல்லாம் எடுத்து வைக்கின்ற விதத்திலே இந்த முறை இந்த மாமன்றத்திலே என் கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். அதன் காரணமாகத்தான் இந்தத் துறைக்கு இது வரையில் தலைமை ஏற்றிருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப்பிறகு ....(குறுக்கீடு)

திரு. ஜி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், இந்தப் பேரவையை நடத்துவதற்குரிய அளவில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் இங்கே இல்லை என்று கருதுகிறேன்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மன்றத்தை ஆரம்பிக்கிற போது கோரம் இருந்தால் போதும். நீங்கள் வேண்டுமானால் போய்ச் சொல்லி, மற்றவர்களையும் வரச் சொல்லுங்கள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில் இந்தத் துறைக்கு தலைமை ஏற்கவேண்டுமென்ற உணர்வோடு கால்நடைத் துறையில் பட்டம் பெற்றவர்களை இயக்குநராக புரட்சித் தலைவர் அவர்கள் நியமித்தார்கள். அதேபோல தமிழ்நாடு வெடர்னரி கவுன்சிலுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். அதேபோல பஞ்சாயத்து யூனியனுக்கும், ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருத்துவர்களை விரிவாக்க அலுவலர்களாக புரட்சித் தலைவர் அவர்கள் நியமித்து இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் தொழில் பட்டதாரிகளுக்கு, டெக்னோகிராட்ஸ் என்று அழைக்கப்படுகிற தொழில் வல்லுநர்களுக்கு அதிகமான அளவில் ஊக்கத்தைத் தந்தாக வேண்டுமென்று, மற்ற ஊழியர்களைவிட தொழில் பட்டதாரிகளுக்கு இரண்டு ஸ்லாப்ஸ் அதிகப்படியான ஊதிய உயர்வை தந்து அதிலே ஒரு அங்கமாக விளங்குகிற கால்நடை பராமரிப்புத் துறையில் பணியாற்றுகிற மருத்துவர்களுக்கு சம்பள உயர்வை நல்லமுறையில் தந்திருக்கிறார்கள்.

இவைகள் அனைத்தையும் விட இந்தத் துறையின் மூலமாக செயல்படுகிற அனைத்திற்கும் பால்வளத் துறை தான் அடித்தளமாக அமைந்தாலும், நாட்டுமக்கள் அன்றாடம் பயன்படுத்துகிற பால் வளத் துறைக்கு அதிகமான ஊக்கத்தைத் தந்து புரட்சித் தலைவர் அவர்கள் கிராமப்புற பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவைகள் அனைத்தையும் பார்க்கிறபோது 1977லிருந்து இன்றுவரையில் இந்த இடைபட்ட 8 ஆண்டுக்காலத்தில் இந்தத் துறையில் ஒரு மாபெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது

என்பதைச் சொல்லியாக வேண்டும். அப்படிப்பட்ட மறுமலர்ச்சியை பெற்றிருக்கிற கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கிராமப் பொருளாதார வளர்ச்சியிலே முன்னேற்றத்தைக் கண்டிருக்கும் புரட்சித் தலைவர் ஆட்சிதான் பொற்கால ஆட்சி என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வெகு தூரத்திற்கு போகாவிட்டாலும், 1983–84-ல் 21 கோடியே 16 லட்சம் ரூபாய் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டது 1984–85-ம் ஆண்டில் 23 கோடியே 97 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இன்றைக்கு இந்தத் துறைக்கு 26 கோடியே 69 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஆண்டிற்காண்டு 3 கோடி, 4 கோடி என்று இந்தத் துறைக்கு அதிகமாகக் கொடுத்து கிராமப்புறத்திலே வாழ்கிற சிறு விவசாயிகள், ஏழை மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு உதவுகிற ஒரு துறையாக இந்தத் துறையைச் செய்திருக்கிறார்கள். இந்தத் துறையின் மூலம் கிராமப்புறத்தில் பொருளாதாரத்தை வளர்க்கமுடியும் என்ற உணர்வோடு, நாட்டு மக்களுடைய நாடித்துடிப்பை பிடித்து பார்த்து புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் இந்த துறைக்கு சிறப்பான திட்டங்களைச் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அதற்காக என்னுடைய நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் 3—12—1984 வரையில் 3,841 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை உருவாக்கி, அதனால் கிராமங்களில் மக்களிடம் நல்ல ஒற்றுமையை ஏற்படுத்தி, பால் உற்பத்தியாளர்களுக்கு நல்ல வரவையும் ஏற்படுத்துகிற வகையில் செய்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது இன்னும் வேகமாக தமிழ் நாட்டில் இருக்கிற அனைத்து வருவாய் கிராமங்களுக்கும், ஒரு கிராமத்திற்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் என்ற முறையில் பால்வளத் துறையில் உருவாக்கப்பட்டாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நுகர்வோர்களைப் பொறுத்தவரையில் 50 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மட்டும் இன்றைக்கு அவர்களுக்கு பால் வழங்குகிற கொள்கையை வைத்திருப்பதை வரவேற்கிறேன். ஆனால் அதேநேரத்தில் 25 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராஸ்-பிரீட்ஸ் அதாவது கலப்பின பசுக்கள் 1977க்கு முன்னாலே அதிகமாக உருவாகாததற்கு காரணம், அப்போது திரவ விந்தை பயன்படுத்துகிற நிலைமை இருந்தது. இன்றைக்கு படிப்படியாக விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக தமிழகத்தில் உறைவிந்து முறை அதிகமாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த உறைவிந்து





வைக்கப்படுகிற கன்டெய்னர்ஸ் திரவ நைட்ரஜன் பிளான்ட்டை எல்லாம் சொந்தமாக உருவாக்கி இருக்கிறார்கள். மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலே கர்நாடக மாநிலத்தில் பெங்களூரிலிருந்து திரவ நைட்ரஜனை கொண்டு வருகிற துர்பாக்கியமான நிலை இருந்தது. ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க ஒன்றியத்திலும் கொண்டு வந்திருக்கிறார்கள். சேலத்தில் கூட ஏறத்தாழ ஒரு மணிக்கு 45 லிட்டர் தயார் செய்கிற தொழிற்சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

(முற்பகல் 11-40)

இதைப்போல பல தொழிற்சாலைகளை, இன்னும் 2, 3 தொழிற்சாலைகளை உருவாக்கினால், இந்தத் துறையிலே இருக்கக்கூடிய பற்றாக்குறையை நீக்கமுடியும். இந்த திரவ மெடிசின் பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால், நாம் உரை விந்தை தொடர்ந்து கிராமப்புற பகுதியில் இருக்கிற துணை நிலையங்களில் பயன்படுத்த முடியாத நிலைமையிருக்கிறது. எனவே அனைத்து துணை நிலையங்களிலும் இதைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு செய்திருக்கிற மறுமலர்ச்சியோடு, கூடுதலாக இந்த மறுமலர்ச்சியையும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தானியங்கி விற்பனை நிலையங்கள் இன்றைக்கு நகர்ப்புறங்களிலே மிகவும் நூதனமான முறையில் செயல்படுவது வரவேற்கப்படவேண்டிய ஒன்று. இவைகள் அனைத்து நகரங்களுக்கும், ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலை நகரங்களுக்கும் 2, 3 தானியங்கி நிலையங்களை உருவாக்கவேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்குப் பால் வளர்ச்சியிலே அதிக அக்கறை செலுத்துகிற நாம், ஆனந்த் நிறுவனம் வைத்திருக்கிற அந்த அமுல் ஸ்ப்ரேயை அவர்கள் எப்படி உருவாக்குகிறார்களோ, அதைப்போலவே நாமும் நம்முடைய தமிழகத்தில் உருவாக்கி, குழந்தைகளுக்கு உணவாகத் தரப்படுகிற பால் உணவைத் தருகிற உணவை அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோழி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இங்கே, மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் அதற்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது அரசு இதற்கு என்று தனியாக ஒரு துறை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், இந்தத் துறையின் மூலமாக பல்வேறு நல்ல பல கருத்துக்களை நாட்டு மக்களுக்குச் சொன்னதன் காரணமாகத்தான் நாமக்கல், பெருந்துறை போன்ற

[டாக்டர் கே பி இராமலிங்கம்] [1985 ஜூலை 5

பகுதிகளிலே எல்லாம் இன்றைக்கு தனியார்கள் கோழி வளர்ப்புப் பண்ணையை பெரிய அளவிலே வைத்து, அதிலும் குறிப்பாக கிராம்ப்புறத்திலே இருப்பவர்கள் பெரிய அளவிலே வைத்து நடத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆனாலும் இதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. கோழி வளர்ச்சியிலே ஆந்திராவிலேயும், கர்நாடகா மாநிலத்திலேயும் கோழி தீவனங்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் கிடையாது. வரி கிடையாது. ஆனால் தமிழகத்திலே இந்த கோழி தீவனங்களுக்கு வரி விதிக்கப்படுகிறது. ஆகவே இதற்கு வரிச் சலுகை தருவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கோழிப் பண்ணையை 500, 1,000 என்று கோழிகளை வைத்திருப்பவர்களுக்கு எல்லாம் மின்சாரக் கட்டணத்தை தொழிற்சாலைகளுக்குக் கொடுப்பது போல் கொடுக்கிற நிலைமையிருக்கிறது. மற்ற மாநிலங்களிலே எல்லாம் அப்படி கிடையாது. வீடுகளுக்கு எப்படி மின் இணைப்பு தருகிறபோது எந்த அளவிற்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதோ அதே கட்டணத்தை வசூலிக்கவேண்டும், எனவே அந்த முறையிலே மின் சலுகையை அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு தமிழகத்திலே இறைச்சிக் கழகத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்கள்தான் உருவாக்கினார்கள். 3 ஆண்டுகளுக்கு முன்னாலே அதை உருவாக்கிய புரட்சித் தலைவர், இன்றைக்கு மகாராஷ்டிர மாநிலத்திலே இருக்கிற பம்பாயில், 'டியானோ ஸ்லாட்டர் அவுஸ்' என்று சொல்லக்கூடிய அதைவிட நூதனமான அளவிலே, ஆசியக் கண்டத்திலே இதுபோன்ற ஒரு கழகம் இல்லை என்ற சொல்லக் கூடிய அளவிலே இதை நவீன முறையிலே உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் இதுபல காலம் இங்கேயிருந்த ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் தடுத்துக்கொண்டு வந்த காரணத்தால், இடையில் தடைப்பட்டு இருந்தாலும் தீவிர முயற்சிகளின் காரணமாக அமைச்சர் அவர்கள் விரைவாக அதைக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்பட்டு அதை விரைவுபடுத்தியிருக்கிறார்கள், அதை நான் வரவேற்கிறேன்.

ஆனால் அதேநேரத்தில் இன்றைக்கு ஆட்டு இறைச்சி, மாட்டு இறைச்சி கழகம் உருவாகிறபோது, கிராமப்புறங்களிலே ஆடு வளர்க்கிற திட்டத்திற்கு இன்னும் அதிக அளவிலே நாம் முனைப்பாக செயல்பட்டாக வேண்டும். காரணம் இன்றைக்கு 20 ஆடுகளையும் ஒரு கெடா ஆட்டையும் கொடுக்கிற திட்டம் இருக்கிறது. ஆனால் பலமுறை திருப்பித் திருப்பி, ஆடுகளை வாங்கி அதற்கே திரும்பத் திரும்ப கடன் பெறுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதை முறைப்படுத்தி இன்னும் ஆடு வளர்ப்பு கழகங்கள் உருவாக்கி, கூட்டுறவுச் சங்கங்கள்



1985 ஜூலை 5] [டாக்டர் கே பி இராமலிங்கம்]

மூலமாக உருவாக்கினால்தான் நம்முடைய உள்நாட்டுத் தேவைக்கான இறைச்சி போக மீதியை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்கு அது பயன்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு கோழி வளர்ப்பிலே லேயர்ஸ் மட்டும் அதிகமாக வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு முட்டையிடுகிற கோழிகளை வளர்ப்பதிலேதான் மக்கள் ஆர்வம் கொண்டு இருக்கிறார்கள். அதைவிட இறைச்சிக்காக, வளர்க்கின்ற கோழிகளை வளர்ப்பதற்கு உரிய விளம்பரத்தை அரசு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, டேபில் பர்பசுக்கு அதாவது சாப்பிடுவதற்கு என்று வளர்க்கப்படுகின்ற காடைகளை இன்றைக்குக்கூட நம்முடைய தேனாம்பேட்டை கோழிப் பண்ணையில் வளர்க்கிறார்கள். குறைந்த விலையில் தருகிறார்கள். இன்றைக்கு காடைகள் கோழி வளர்ப்புத் துறையின் மூலமாக வளர்த்துத் தரப்படுகிறது.

இவைகளை கூட ஒவ்வொருவரும் தங்களுடைய கிராமங்களில் வீட்டு கொல்லைப்புறத்தில் கூட 500, ஆயிரம் காடைகளை வளர்க்கலாம். அந்த காடைகளை 48 நாட்களுக்குள் விற்பனை செய்தால் அதிலே அவர்களுக்கு 2 ரூபாய், 3 ரூபாய் லாபம் கிடைக்கும். அதனாலே இங்கே இருக்கிற நாட்டு மக்களுக்கும் இறைச்சி கிடைப்பதற்கு அது வாய்ப்பாக இருக்கும். ஆகவே அந்த காடைகளை வளர்க்கும் பண்ணைகளை அதிகமாக உருவாக்க வேண்டும்.

அதேபோல் முயல் வளர்க்கும் பண்ணைகளை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு மூலமாக முயற்சிக்க வேண்டும். அதே நேரத்தில் இன்றைக்கு மாநகராட்சியின் கீழ் நம்முடைய சென்னை மாநகராட்சியானாலும் சரி, மதுரை ஆனாலும் சரி இன்றைக்கு பல மருத்துவ கிளை நிலையங்கள் இருக்கின்றன. உதவி மருத்துவர்களை அங்கே பெற்று இருக்கிற கிளை நிலையங்கள் இருந்தாலும் அவைகள் செவ்வனே செயல்படுவதாக தெரியவில்லை. காரணம் அவைகளுக்கு மருந்துகள் சரியாக கிடைக்கவில்லை. கால்நடை பராமரிப்புத் துறை ஒருபுறம், மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் ஒரு புறம் அவர்கள் பணி புரிகிறார்கள். அவர்கள் அத்தனை பேரையும் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும், அல்லது அந்த மருத்துவ மனைகள் அவ்வளவையும் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் கொண்டு வந்து அங்கே மருந்துகள் வழங்குவதற்கும், அங்கே ஒரு திறமையான நிர்வாகத்தை நடத்துவதற்கும் வழி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் கே பி இராமலிங்கம்[ [1985 ஜுலை 5

அதேபோல் இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. மூலமாக கிராமப்புற மக்களுக்கு அதிகமான மாடுகளும், எருமைகளும் வாங்கு வதற்கு நாம் கடன் தருகிறோம். அவ்வாறு கடன் கொடுத்து வாங்குகிற பசு மாடுகள் ஆனாலும் சரி, உழவு மாடுகள் ஆனாலும் சரி வாங்கப்பட்ட மாடுகளின் எண்ணிக்கைக்கும் அங்கே வழங்கி இருக்கிற தொகைக்கும் பார்த்தால் ஒரு மிகப் பெரிய வித்தியா சம் இருக்கும். அதற்கு காரணம் ஒரே மாடு பல முறை கடன் பெறுகிற ஒரு துர்ப்பாக்கியமான நிலை இருக்கிறது. ஒரே மாடு 4 முறை, 5 முறை கடன் பெறுகிற நிலைமை இன்றைக்கு நாட் டில் இருக்கிறது. அதற்குக் காரணம் காதுகளில் பேட்ச் குத்தி ஒரு தகட்டிலே அந்த நம்பரை போட்டு காட்டுகிற சூழ்நிலையில் அதை எடுத்துவிட்டு, வேறு ஒரு சந்தையில் கொண்டு போய் இன்னும் ஒருவருக்கு லோன் வாங்குவதற்கு அந்த மாடு பயன் படுகிறது. அந்த நிலை இருக்கிறது.

இதை மாற்றம் செய்வதற்கு தொடைகளில் சீல் போடுவோம். ஆனால் என்ன ஆகிறது என்றால் கிராமத்தில் இருக்கிற விவ சாயிகள் இதனால் தோல் விலை குறைந்துவிடும், தொடையில் சீல் போடுகிற அந்த மாடுகளை நாங்கள் வைத்து இருக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு என்ன செய்யலாம் என்றால் திரவ நைட்ர ஜனை பயன்படுத்தி Fıeeze Plcnting செய்வோம். ஆனால் ரோமம் எல்லாம் சுருங்கிப் போய் ரோமம் எல்லாம் ஒன்றாகச்சேர்ந்து அதனால் நல்ல ஒரு விலை அதன் மூலமாக கிடைக்கும் அப்படி செய்வதால் அவர்களுக்கு அந்த எழுத்துக்கள் அழகாக தெரிவதற்கு வாய்ப்பு இருக்கும்.

அதேபோல் அதற்கு இன்னொரு முறையும் கொண்டு வர லாம். நம்பர் போடும்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திற்கும் ஒரு சீரியல் நம்பரை, எழுத்துக்களைப் போட்டு அதா வது காருக்கு ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் போடுவது போல் ஒரு முறையை கொண்டு வந்தால் எந்த மாடும் மறு முறை கடன் பெறாது ஒருமுறை கடன் பெற்ற மாடு இன்னொரு முறை கடன் பெறாத சூழ்நிலை ஏற்படும். இதிலே தவறு எங்கே நடக்கிறது என்று ஆராய்வதை விட்டுவிட்டு நாமே தவறை களைவதற்கு சட்டமாக கொண்டு வந்தால் எங்கேயும் தவறு நடப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போகும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு கால்நடை மருத்துவ பல்கலைக் கழகம் பற்றி நான் கடந்த 2, 3 ஆண்டுகளாக கோரிக்கை வைத்துக் கொண்டு வருகிறேன். 1977 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்தவர் கள் கால்நடை மருத்துவ கல்லூரியை வேளாண்மை பல்கலைக் கழகத்தோடு இணைத்தார்கள். அதற்கு மாணவனாக இருந்த நாங்கள் எல்லாம் அப்படி இணைக்கக்கூடாது. இந்தத் துறை



1985 ஜுலை 5] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

தனியான துறை. இந்தத் துறை தனி ஆராய்ச்சித் துறை. அதோடு மட்டும் அல்லாது கிராமப்புற மக்களுக்கு பெரிதும் பயன்பெறுகிற துறை இந்தத் துறை. இந்தத் துறையைக் கொண்டு போய் ஒரு விவசாய பல்கலைக்கழகத்தாடு இணைப்பது சாலச்சிறந்தது அல்ல, ஏற்புடையது அல்ல, ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்று அன்றைக்கு வாதாடிய நேரத்தில் அன் றைக்கு ஆட்சியில் இருந்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அன்றைக்கு ஆட்சியில் இருந்த முதலமைச்சர் அவர் களும் எங்களை எல்லாம் அழைத்து மிரட்டி பணியவைத்தார்கள். அதற்கு பின்னர் 1982 ஆம் ஆண்டு இதே மன்றத்திலே அவர்கள் பேசும் போது அன்றைக்கு எதிர்க்கட்சி துணைத்தலைவராக இருந்து கொண்டு இந்த மன்றத்தில் பேசினார்கள். மாண்புமிகு திரு அன்பழகன் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். அவர் கள் என்ன சொன்னார்கள் என்றால் நாங்கள் தவறு செய்து விட்டோம். அப்படி கொண்டு போய் சேர்த்தது தவறு தான். இது ஒரு தனித் தன்மையை இழந்து கொண்டு வருகிறது. இதை கொண்டு தனியாக இருக்கவேண்டிய ஒரு துறை தான். இதை கொண்டு போய் விவசாய பல்கலைக்கழகத்தோடு சேர்த்தது தவறு தான் என்று தவறு செய்தவர்களே தங்களுடைய தவறை உணர்ந்து அப்ருவராக இதே மன்றத்தில் பேசினார்கள்.

(முற்பகல் 11—50)

ஆக, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் புரட்சித் தலைவர் அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தற்குப் பின்னாலே அழகு தமிழுக்கென்று ஒரு தனிப் பல்கலைக் கழகமும், பாரதிதாசன் பெயரில் தனிப் பல்கலைக் கழகமும், பாரதியார் பெயரில் தனிப் பல்கலைக் கழகமும், பெண்களுக் கென்று தனிப் பல்கலைக் கழகமும் என்று இப்படி பல்வேறு பல்கலைக் கழகங்களை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், மருத் துவத் துறைக்கென்று ஒரு தனிப் பல்கலைக் கழகத்தையும் இன்றைக்கு உருவாக்கி இருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் தாராள மனத்தோடு, கால் நடை மருத்துவத்திற்கென்று தனிப் பல்கலைக் கழகத்தை உருவாக்க வேண்டும்.

அப்படி ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கும்போது, இந் தியத் துணைக் கண்டத்திலேயே மிகவும் பழமை வாய்ந்து, தொன்மை வாய்ந்து இருக்கிற கால் நடை மருத்துவக் கல்லூரி மிக அதிக அளவிலே சிறப்பு அடையும். அந்த விஞ்ஞான அறிவும் மக்களுக்கு அதிக அளவில் பயன்படும், என்று இந்த நேரத்திலே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கினால் தான் இதிலே புதிய ஆராய்ச்சி முறைகள் அல்லது புதிய புதிய விஞ்ஞான வளர்ச்சிகளை கிராமப்புற மக்களுக்கு சொல்லிவிட முடியும்.

இன்றைக்கு கிராமத்திலே போய் தொழில் வளர்ச்சி உருவாக்க வேண்டும்; கிராமத்திலே இருக்கிற மக்கள் வளம் அடைய வேண்டும் என்றால் வேறு எந்தத் துறையும் இதைக் கையிலே எடுத்து எந்தப் பிரயோசனமும் கிடையாது.

இன்று விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், வெள்ளத்தால், பாதிக்கப்படும் அல்லது வறட்சியால் பாதிக்கப்படும் இந்த நேரத்திலே கூட, இரண்டு மாடுகளை வைத்து வாழமுடியும். 200 கோழிகளை வைத்து வயிறு வளர்க்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே இந்தத் துறை மிகவும் அதிக அளவில் வளர்க்கப்பட வேண்டும் என்ற உணர்வோடு, புதிய, புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பல்கலைக் கழகத்தை இதற்கென கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், கால் நடை உதவி மருத்துவர்களைப் பொறுத்த வரையில், இன்றைக்கு மற்ற தொழில் துறையில் இருக்கிறவர்களுக்கும், ஓரிருவர்களுக்கும் இரண்டு சிலாபுகள் அதிகமாக சம்பள உயர்வைத் கொடுத்திருந்தாலும், நீண்ட கால கோரிக்கையாக, வெகு காலமாக இந்த கால்நடைப் பட்டதாரி மருத்துவர்களுக்கு அவர்களும் மருத்துவர்கள் தான். இருந்தாலும் மனித மருத்துவர்களை மருத்துவர்கள் என்று அழைப்பது போல், கால் நடை மருத்துவர்களைப் பொறுத்தவரையில் இந்த சமுதாயத்திலே அவ்வளவாக ஏற்றுக் கொள்ளாத காலமும் இருந்தது.

ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திற்குப் பின்னால் தான் அந்த மருத்துவர்களுக்கும் நல்ல மரியாதை கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த நிலையில் மனித மருத்துவர்களுக்கு, அலோபதிக் டாக்டர்களுக்குச் சமமாக சம்பள உயர்வு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்வளவு நாள் தரப்படவில்லை.

கடந்த ஜூன் 27 ஆம் தேதி கேரளாவிலே இருக்கிற அமைச்சர் மாண்புமிகு நருடி என்பவர், அங்கு அமைக்கப்பட்ட 4-வது சம்பளக் கமிஷனிலே, ஊதிய உயர்வுப் பரிந்துரைக் குழுவிலே, கால் நடை மருத்துவர்களையும் மனித மருத்துவர்களுக்குச் சமமாக பாவிக்க வேண்டும் என்றும், அவர்களுக்குச் சமமாக சம்பளம் தர வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். அதைவெகு விரைவிலே, நடைமுறைப் படுத்தும் என்று கேரள மாநில அரசு அறிவித்திருக்கிறது.





அதைப் போல, எதையும் முந்திச் செய்கிற நாம், இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழி காட்டியாக இருக்கிற நம் அரசு, இதிலேயும் முந்தி, விரைவாக அலோபதிக் டாக்டர்களுக்கு சமமாக, ஆங்கில மனித மருத்துவர்களுக்கு சமமாக ஊதிய உயர்வை அந்தக் கால்நடை மருத்துவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு காலத்திலே சித்த வைத்தியர்கள், பி.ஐ.எம். படித்த பட்டதாரிகளுக்கு—நானே கூட இந்த மன்றத்திலே பாராட்டினேன். பேசினேன்—மனித ஆங்கில மருத்துவர்களுக்கு சமமாக சம்பள உயர்வு தந்திருப்பது புரட்சித் தலைவர் ஆட்சி; இந்த அரசு அவ்வளவு சிறப்பாக செயலாற்றுகிறது என்பதை அது எடுத்துக் காட்டுகிறது என்று அன்றைக்குச் சொன்னேன்.

ஆனால், ஒரு காலத்தில், இதே சித்த மருத்துவர்கள் கால் நடை உதவி மருத்துவர்களுக்குச் சமமாக சம்பளம் வேண்டும் என்று கேட்டவர்கள். இன்றைக்கு அந்த நிலை மாறிப் போய், கால் நடை உதவி மருத்துவர்கள், சித்த வைத்தியர்களுக்குச் சமமாக சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது விரைவாக இதற்கும் வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப் போலவே, இன்றைக்கு கால் நடை உதவி மருத்துவர்களாகச் செயல்படுகிறவர்களுக்கு பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு சாதாரண மனிதன் துன்பப் பட்டால் கூட பொறுக்காத புரட்சித் தலைவர், பொன் மனத்திற்குச் சொந்தக்காரராக இருக்கிற பொன் மனச் செம்மல் அவர்கள் அந்தக் குறையை கால் நடை மருத்துவர்களுக்கு தீர்த்து வைப்பார் என்று கருதுகிறேன்.

கால் நடை மருத்துவர்களாகப் பணியாற்றுகிறவர்கள் ஒவ்வொரு நேரத்திலே மாட்டுக்கு வைத்தியம் செய்தால் கூட, சினை பார்க்கிற சூழ்நிலை ஏற்படும் போதும், கருப்பையிலே இருக்கிற கிருமிகள் மனிதனைக் தாக்குகிற சக்தி படைத்தவை. அதனாலே பல பேர் கரங்களை இழக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. பலருடைய கரங்கள் வெளுத்துப் போயிருக்கின்றன. இதைவிடக் கொடுமை என்னவென்றால், நாய்களுக்கு வெறி பிடித்திருந்தால் ஆரம்பத்திலேயே அந்த வெறியானது வெளியே காட்டுகின்ற அளவுக்கு இருக்காது. சாதுவாகத்தான் இருக்கும். அப்படிச் சாதுவாக இருக்கின்றபோது வைத்தியம் செய்தால் அதனுடைய உமிழ் நீரே மனிதனைப் பாதிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. கிருமிகளால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட மருத்துவர்கள் ஏராளமான பேர். அந்தத் தகவல்களெல்லாம் அரசுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அப்படி ஏராளமான பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஐ.வி.பி.எம். என்ற, இராணிப்பேட்டையிலே இருக்கின்ற தடுப்பு

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 ஜூலை 5

ஊசி மருந்து தயாரிக்கும் நிறுவனத்திலே பணியாற்றுகின்ற பொழுது அந்தத் தடுப்பு ஊசியைத் தயாரிக்கின்றபொழுது விருலென்ட் ஆக்ஷன் ஆக இருப்பதால், உயிரோடு இருக்கிற காரணத்தினால், தடுப்பு மருந்தாக இருப்பதால், அதன் மூலமாக மருத்துவர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பாதிப்புகளை அகற்றுகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் கருணை கூர்ந்து அவர்களுக்குத் தனியாக 100 ரூபாய் அல்லது 150 ரூபாய் என்ற அளவிற்கு ரிஸ்க் அலவன்ஸ் என்று வழங்க வேண்டும். மாதம் 200 ரூபாய் ரிஸ்க் அலவன்ஸ் என்று வழங்கி விட்டால் இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில் யாருக்கும் அள்ளித் தருகின்ற நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியில் இவர்களுக்கும் தந்து விட்டார்கள் என்ற நிலைமை ஏற்படும். எனவே, அவர்களுக்கும் இப்படித் தருவார்கள் என்று எதிர்பார்த்து இந்தக் கருத்தை இந்த மன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராணிப்பேட்டையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும், வெளியிலே உள்ள பணியாளர்களுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இந்தப் பணியாளர்களுக்குப் பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. வெளியிலே இருப்பவர்களுக்கும், இவர்களுக்கும் சிலவற்றில் வேறுபாடு யிருப்பதால், அந்த வேறுபாடுகளைக் களைந்து, அகற்றி விட்டு, இராணிப்பேட்டையிலே ஐ.வி.பி.எம்.-இல் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும் மற்றவர்களைப் போலச் சமமான அளவிற்கு சம்பள உயர்வு, இதர உயர்வுகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த மன்றத்தின வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைப் பண்ணைகளிலே பணியாற்றக் கூடியவர்கள் பெரிய கஷடங்களை அனுபவிக்கிறார்கள். காரணம், வெளியிலே மருத்துவர்களாகப் பணியாற்றுகிறவர்கள் தனியார் துறையிலே போய் பணியாற்றுவதற்கான வாய்ப்பிருக்கின்றது அல்லது தனியாக வைத்தியம் பார்க்க, பிரைவேட் ப்ராக்டீஸ் செய்ய வாய்ப்பிருக்கிறது. ஆனால் பண்ணைகளிலே பணியாற்றக் கூடியவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடையாது. ஆகவே, இவர்களுக்கு என்று தனியாக ஊக்க ஊதியம் என்று கொடுத்து தனிச் சலுகை அளிக்க வேண்டும். அந்த வகையில் ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்தாண்டு காலம், இருபதாண்டுக் காலம் என்று தொடர்ந்து கால் நடை உதவி மருத்துவர்களாக இருக்கிறார்கள். அப்படி அவர்கள் பத்தாண்டுக் காலம் பணியாற்றுகின்ற நேரத்தில் செலக்ஷன் கிரேட் உதவி மருத்துவர்கள் என்று இருப்பவர்களை



1985 ஜூலை 5] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

''மருத்துவர்கள்'' என்று அழைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். அசிஸ்டென்ட் சர்ஜன் என்று அழைப்பதை விட்டு, வெட்டர்னரி சர்ஜன் என்று அழைப்பதற்கான வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால் நடை ஆய்வாளர்களாக இருக்கின்றவர்களுக்கு இருக்கின்ற குறைகள் நிறைய இருந்தாலும் அவர்களைப் பொறுத்த வரையில் இந்த ஆட்சி எதையும் குறையாகச் செய்யவில்லை, நல்ல முறையில் தான் செய்திருக்கிறார்கள். அந்த உணர்வோடு, அவர்களுக்கு இன்னும் இருக்கின்ற ஒரு சில பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் விரைவில் தீர்வு கண்டு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையின் மூலம் செயலாற்றப்படும் திட்டங்கள் அத்தனையும் நல்ல முறையிலே கிராமப் புறங்களிலே நல்ல முறையில் செயலாற்றப்படும் திட்டங்கள் என்ற முறையிலே இவைகளைப் பாராட்டுகிறேன்.

இராசிபுரம் தொகுதியைப் பொறுத்த வரையில் பத்திரப் பதிவைப் பற்றி என்னால் பேசாமல் விட்டுவிட முடியாது. அது பற்றி என்னுடைய கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். இராசிபுரம் தொகுதியிலே உள்ள வெண்ணந்தூர் பகுதியில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஒன்றை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் இங்கே நடைபெறுகின்ற பால் வழங்கு திட்டங்கள், கால் நடை வளர்ப்பு, பத்திரப் பதிவு, முத்திரைத்தாள்கள், நிர்வாகம் போன்ற மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சில வார்த்தைகளை இங்கே சொல்ல விழைகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதன் முதலாக பால் வளத் துறையில், 1958 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டிருந்த பால் வளத் திட்டம், 1963-லே மாதவரம் பால் பண்ணை என்று பால் பதப்படுத்தும் தொழிற்சாலை 1963-லே நிறுவப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 1967-ல் மதுரையில் மிகப் பெரிய பால் பண்ணை நிறுவப்பட்டு, அந்தப் பண்ணை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

(நண்பகல் 12-00)

அதற்குப் பிறகு பால் பண்ணை, கொள்முதல், பக்குவப்படுத்துதல், விநியோகம் அனைத்தும் 1972-ல் பால்வள நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதனைக் கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து நாங்கள் தெரிந்து கொள்கிறோம். ஆனால்

[திரு. அ. பிரணவநாதன்] [1985 ஜூலை 5

1972-க்குப் பிறகு 1981 ஆம் ஆண்டு வரையில் கிட்டத்தட்ட 9 ஆண்டுக் காலம் பால் வள நிறுவனம் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்ற புள்ளிவிவரத்தை இங்கே நம்மால் பார்க்க முடியவில்லை. ஏனென்றால், 9 ஆண்டுக் காலம் பால்வள நிறுவனம் இங்கே வளரவில்லையென்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அதற்குப் பிறகு 1981-லேயிருந்து இந்த நடப்பாண்டு 1985 வரையில் ஓரளவு பால்வளத் துறையிலே நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் உள்ளபடியே ஒத்துக் கொள்கிறேன். 4 ஆண்டுக் காலமாக, ஓரளவுக்கு அருமையான திட்டங்கள் மூலமாக, பால் வளத் துறை ஓரளவு வளர்ந்திருக்கிறது.

பால்வளத் திட்டம் என்கின்ற முறையிலே, ஒவ்வொரு கிராமப் புறத்திலும், ஐ.ஆர்.டி.பி. மூலமாகக் கொடுக்கின்ற கடன்கள், ஆடு வளர்ப்புக் கடன்களாக இருந்தாலும், பசு மாடுக் கடன்களாக இருந்தாலும், அத்தனை கடன்களும் அங்கே ஒழுங்கான முறையிலே விநியோகிக்கப்படவில்லையென்பதை என்னாலே இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

அரிசன மக்களுக்கு என்று கொடுக்கப்பட்ட லோன்கள் உருப்படியாக அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஆதி திராவிட மக்களுக்கு என்று நிறுவப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றுகூட செயல்படவில்லை யென்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு மாறாக, பால் பண்ணை நிறுவுகின்ற வேலையில், ஒவ்வொரு கிராமத்திலும் அரசியல் ரீதியாக சில அரசியல்வாதிகள் தலையிட்டு, கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுகின்ற நிலையில், தங்களுடைய கட்சியைப் பயன்படுத்தி, தவறான வகையிலே, கூட்டுறவுச் சங்கத் தலைவராக வந்து, அத்தனை பேரும் பினாமிகளாக மாடுகளை வாங்கிக் கொண்டு, மாடுகள் வாங்கிச் செல்கின்ற இடங்களில் எல்லாம் ரூ. 2,000 பெறுமான மாடாக இருந்தால், அவர்கள் ரூ. 3,000 என்று பேரம் பேசி, ஒரு மாட்டிற்கு ரூ. 1000 அல்லது ரூ. 500 என்ற முறையில், கூட்டுறவுச் சங்கத் தலைவாகளாக வந்திருக்கிறவர்கள், குறைந்தது 50 அல்லது 100 மாடுகளுக்காகக் கடன் பெற்று, அந்த 50 மாடுகள் அல்லது 100 மாடுகளுக்குக் கிட்டத்தட்ட ரூ. 20,000-ஐ எடுத்துக் கொண்டு, பிறகு, ஒழுங்காக அந்த மாடுகளும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வந்து சேராமல், பினாமியாக் பலருடைய பெயர்களால் போடப்பட்டு, பால்வளத் திட்டத்திற்கு எதிராக, கூட்டுறவுச் சங்கமே சீர்குலைந்து போகிற ஒரு நிலைமையை கிராமப் புறங்களிலே பார்க்க முடிகிறது என்பதற்கு திட்டவட்டமாக என்னுடைய தொகுதியிலே பலவேறு இடங்களைச் சுட்டிக் காட்ட முடியும். அந்த முறையிலே, அரசு ரீதியாக, நல்ல



1985 ஜூலை 5] [திரு. அ. பிரணவநாதன்]

திட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள், மிகப் பெரிய மோசடியான சங்கங்களாக நிறுவப்பட்டு, பால் வளச் சங்கங்கள் அத்தனையும் இன்று போண்டியாகிவிட்டன என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே செயல்பட வேண்டுமென்று விரும்பினால், ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பொதுமக்கள் அத்தனை பேரும் மதிக்கிற ஒருவர் தலைவராக இருந்தால்—கட்சி சார்பிலே கூட்டுறவுச் சங்கத் தலைவராக வராமல்—அந்தச் சங்கம் நல்ல முறையிலே செயல்படும் என்பதை ஆட்சியாளர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து, அந்தத் தொகுதியிலே உள்ள அல்லது சங்கத்திலே உள்ள அங்கத்தினர்கள் அல்லது பொதுமக்கள் யாரைத் தலைவராக வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்களையே கட்சி மாச்சரியங்களையெல்லாம் மறந்துவிட்டு, உருப்படியான பால்வளத் திட்டமாக, கால்நடைத் திட்டமாக, கிராம மக்களுக்கு வழங்கிட வேண்டும். அவர்களுக்கு உண்மையிலே வழி காண வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்குமானால், கட்சி மாச்சரியங்களை மறந்து, அந்தக் கிராம மக்களெல்லம் விரும்புகின்ற தலைவரை, யாரை கிராம மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களோ, அப்படிப்பட்ட தலைவரை நியமித்து நடத்தினால், நிச்சயமாக பால் வழங்கு சங்கம் நல்ல கூட்டுறவுச் சங்கமாக மாறும், நடைபெறும் என்ற எண்ணத்தை இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னாலே ஒழிக்கப்பட்ட கிராம அதிகாரிகளை மீண்டும் கொண்டு வந்து, அவர்களை இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலைவர்களாக இந்த அரசு நியமிக்குமானால் ஓரளவுக்கு அவர்கள் நல்ல முறையில் செயல்படுவார்கள். அதன் மூலம் அந்த அந்த ஊரில் விநியோகம், கொள்முதல் நல்ல முறையில் நடைபெறும். பால் வழங்குகின்ற மக்களுக்கு உண்மையான விலை கிடைக்கும்; அந்த மக்கள் அதனால் முன்னேற வழி பிறக்கும். ஆகவே, பழைய கிராம அதிகாரிகளை இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலைவராக நியமித்தால் கிராம மக்கள் பொருளாதாரத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு, கிராம மக்கள் ஓரளவுக்கு வாழ்வழி ஏற்படும் என்ற என்னுடைய ஆலோசனையை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அது மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதை எல்லோரும் அறிவார்கள். அங்கே பசுமைப்புரட்சி என்றால் என்ன என்று தெரியாதவர்கள் நாங்கள். அதற்கு மாறாக வறுமை புரட்சியும், வறட்சிப் புரட்சியும் தான் அங்கே நிலவுகின்றன.

எனவே, வெண்மைப்புரட்சி அங்கே ஏற்பட வேண்டுமென்றால், ஒவ்வொரு இல்லத்திற்கும் ஒரு கறவை மாடு, பசுமாடு வழங்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு இல்லத்திலும் ஒரு கறவை பசுமாடு இருந்தால் அவர்கள் பால் கறந்து குடிக்க வாய்ப்பு ஏற்படும். தாங்கள் குடித்தது போக மீதி இருக்கிற பாலை விற்று, வாங்கிய கடனையும் செலுத்திவிடுவார்கள். அந்த வகையில் தொடர்ந்து பால் கிடைத்து, பெரியவர்களும், தாய் மார்களும் குழந்தைகளும் பால் குடிக்கும் வாய்ப்பு ஏற்படும். அதனால் கிராமப் புறங்களில் சாராயம் குடிப்பது குறையும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

காரணம், சாராயம் குடிப்பவர்களை ஒரு டீ குடி என்று சொன்னால் மறுத்து விடுவார்கள். மோர் குடி என்றால் பயப்படுவார்கள். அவர்கள் பால், மோர், டீ அருந்தமாட்டார் கள். ஆனால் ஒவ்வொரு இல்லத்திலும் ஒரு பால்மாடு இருந்தால், அவர்கள் சாராயம் குடிப்பதை நிறுத்திக்கொண்டு அல்லது குறைத்துக் கொண்டு பாலைக் குடிக்க ஆரம்பிப்பார்கள். அப்படி யானால் சாராய சாம்ராஜ்யம் ஒழிந்துவிடும். சாராயம் குடிக்க வேண்டுமென்ற எண்ணம் குறைந்துவிடும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் கொஞ்சம் கவனம் செலுத்தி, கிராமப் புறங்களில் ஒவ்வொரு இல்லத்திற்கும் ஒரு பால்மாடு கொடுக்கும் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அது மட்டுமல்லாமல் இராமநாதபுரம் மாவட்டத்தில் மிகப் பெரும் பால்பண்ணை ஒன்றை நிறுவ வேண்டும். மாவட்டத் தலைமை பால்பண்ணை ஒன்றையும் தலைநகரில் அமைக்க வேண்டும்.

அதைப் போன்றே ஆங்காங்கே ஆட்டுப்பண்ணை, கோழிப் பண்ணை, பன்றிப் பண்ணை, ஆகியவைகளையும் ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்க வேண்டும். கிராம மக்களின் முன்னேற றத்திற்கு இது பெருதவியாக இருக்கும். குறிப்பாக கிராமப் புறங்களில் ஒரு ஆட்டின் சாணத்திற்கு 12 காசு கிடைக்கிறது. 100 ஆடு, 200 ஆடு என்று கிடை வைத் திருக்கிறார்கள். 200 ஆடுகள் கொண்ட ஒரு கிடை வைத்தால் ஆட்டின் சாணத்திற்கு, 25 ரூபாய் கிடைக்கிறது. அதைப் போன்று ஒரு முட்டை பன்றிச் சாணத்திற்கு 20 ரூபாய் கிடைக் கிறது. அந்த வகையிலே பன்றி ஆனாலும் சரி, ஆடு ஆனாலும் சரி, மாடு ஆனாலும் சரி, அவற்றை எந்த அளவுக்கு வளர்க்கி றோமோ அந்த அளவுக்கு இயற்கை உரம் அதிகமாக கிடைக் கிறது. இயற்கை உரம் அதிகமாக கிடைத்தால், செயற்கை



உரமான யூரியா, சல்பேட் போன்றவைகளைப் போட்டு நிலத்தின் வளத்தைப் பாழ்படுத்த வேண்டியதில்லை ; அழிக்க வேண்டிய தில்லை. ஆகையால் ஆடு, மாடு, கோழி, பன்றி பண்ணைகளை அதிகமாக ஏற்படுத்த வழிவகை காணவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு கால்நடை மருந்தகங்களில் மருந்துகள் கிடைக்கவில்லை . தமிழ்நாடு முழுவதும் பரவலாக கால்நடை மருந்தகங்களில் முக்கியமான, தேவையான மருந்துகள் கிடைக்க வில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஏற்கனவே பல ஆண்டு களாக மத்திய அரசிடமிருந்து வாங்கிய மருந்துகளை நிறுத்தி விட்டு தற்போது தமிழக அரசிடமிருந்து மருந்துகளை வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். தரம் குறைந்த மருந்துகளை டாக்டர்கள் சிபாரிசு செய்து, கேந்திர கிராமங்களில் வாங்கி வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த மருந்துகளை வாங்கி வைத்து, 3, 4 மாதங்களில் பூச்சி அரித்து எதற்கும் பயன்படாமல் போய்விடுகிறது என்ற குற்றச்சாட்டை கேந்திர கிராமங்களில் இருக்கிற மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

எனவே தரமான மருந்துகளை வாங்கவேண்டும் என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே, E. ‘). (A. H.) 158 ஒன்றியங்களில் இப்போது கிடையாது. கால்நடை மேற்பார்வையாளர்களைப் பொறுத்த வரையில் மொத்தம் 110 இடங்களில் இன்னும் 40 இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, அந்தக் காலியான இடங்களை எல்லாம் உடனடியாக நிரப்பவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச் சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்த வரையில் எங்க ளுடைய இராமநாதபுரம் மாவட்டம் மிக வறட்சியான மாவட்டம். அங்கே ஒரு ஏக்கர் புஞ்சை நிலம் 500 ரூபாய்க்கு வாங்கலாம். ஒரு ஏக்கர் நஞ்சை நிலத்தை 2,000 ரூபாய்க்குக் கூட வாங்கலாம். ஆனால் அதே நேரத்தில் பத்திரப் பதிவுக் கட்டணம் ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் அளவுக்கு வருகின்றது. ஒரு நடுத்தரக் குடும்பத்தில் இருக்கின்ற ஒருவரால் இவ்வாறு செலவழித்து நிலத்தை வாங்க முடியாது. எனவே, அவர்களுக் குள்ள ஒரு சிறிய தொகையை வைத்துத்தான் வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இதை உணர்ந்து சென்னை, மதுரை போன்ற பெருநகரப் பகுதிகளுக்காகப் போடப்பட்டது போன்ற சட்டங்களை ஒரு ஏக்கர் புஞ்சை நிலம் 500 ரூபாய்க்கு வாங்கக்கூடிய நிலைமையில் உள்ள எங்களுடைய மாவட்டத் திலே எல்லாம் நடைமுறைப்படுத்துவது சரியல்ல. எனவே

அந்த பத்திரப் பதிவுக்கான விலையைக் குறைக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பசுமைப் புரட்சித் திட்டம் நல்ல முறையில் வளர்ந்து ஓங்கவேண்டும் என்றால் வெண்மைப் புரட்சி இருந்தால்தான் அது முடியும். எனவே ஒவ்வொரு மாவட்ட வாரியாக பசும்புல்லை வளர்த்து, பால் பண்ணைகளை அமைத்து தரமான மாடுகளை வளர்ப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்கின்ற வகையில் அவற்றுக்குத் தேவையான பசும்புல்லுக்காக நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். எங்கள் பகுதியில் அப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் பசும்புல்லாக மாற்றி பால் பண்ணைகளை அமைத்தால் என்னுடைய தொகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். சாதாரண குடும்பங்களின் வாழ்வை உயர்த்த முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் இன்று வறட்சி நிலைமை இருப்பதற்கு காரணம் என்னவென்றால் நீண்ட நாட்களுக்குப் பிறகு மழை பெய்தால் கூட அவற்றைத் தேக்கி வைக்கக்கூடிய அளவுக்குக் கண்மாய்களும், ஏரிகளும் இருந்தாலும் அவைகள் ஒழுங்காக மராமத்து செய்யப்படாததுதான் காரணம். எனவே என்னுடைய பகுதியிலே பசுமைப் புரட்சி ஏற்பட வேண்டும் என்றால், அந்தப் பசுமைப் புரட்சியின் மூலம் வெண்மைப் புரட்சி ஏற்படவேண்டும் என்றால், அதன் மூலமாக மக்களின் வாழ்வு உயரவேண்டும் என்றால், அங்கே இருக்கின்ற கண்மாய்களையும் ஏரிகளையும் மராமத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுப்பணித்துறை அமைச்சர் என்றிருப்பதை மராமத்துத்துறை அமைச்சர் என்று மாற்றினாலாவது எங்களுடைய பகுதியில் மராமத்து வேலைகள் நடக்குமா என்று எண்ணவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அந்த அளவுக்கு இன்றைக்கு அங்கே வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர்கள் எல்லாம் மாதம் மும்மாரி மழை பொழிகின்றதா என்று கேட்கிற நிலை வந்து, பிறகு எங்களைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்களே, அமைச்சர்களே, எங்களுடைய பகுதியில் மாதம் மும்மாரி மழை பொழியவில்லை, மாறாகக் கண்ணீர் மழைதான் பொழிந்து கொண்டிருக்கிறார்கள் மக்கள் என்று சொல்லக்கூடிய காலகட்டத்திற்கு அமைச்சர்களும், அரசாங்கமும் தள்ளிவிடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே மராமத்து வேலைகளை அதிகமாகச் செய்து பசுமைப் புரட்சியையும், வெண்மைப் புரட்சியையும் ஏற்படுத்தி, ஆடு,





மாடுகளை அதிகப்படியான அளவில் வளர்க்கின்ற திட்டத்தையும் ஏற்படுத்தி எங்கள் பகுதிக்குத் தனியாக நிதியினை ஒதுக்கி அதனை வளப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற கால்நடை வளர்ப்பு, பால் வளம், ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைக்க நான் விழைகிறேன். இதுவரையில் எனக்கு முன்னாலே பேசிய, இந்தத் துறைபற்றிய தனது கருத்துக்களை எடுத்துக் கூறி இங்கே அமர்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அருமை சகோதரர் பிரணவ நாதன் அவர்கள் சில கருத்துக்களை இங்கே வெளிப்படுத்தினார்கள். அதற்கு பதிலாகச் சில உண்மைகளை, சில உண்மையான கருத்துக்களை, எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன்.

அவர்கள் சொன்னார்கள், ஆளுக்கு ஒரு வீடு என்று வர இருக்கிற திட்டத்தைப் போல, தமிழகத்திலே இருக்கிற குடும்பங்களுக்கெல்லாம், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு கறவை மாடு வரவேண்டும் என்று சொன்னார்கள். நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் சில விஷ வித்துக்களையும் அவர்கள் இங்கே ஊன்றிச் சென்றிருக்கிறார்கள். ஏதோ புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களில் எல்லாம் அரசியல் தலையீடு இருப்பது போலவும், ஆதித்திராவிடர்களுக்கு கடன் வசதிகள் சரியாக வழங்கப்படாதது போலவும், சங்கங்களின் பணம் தவறாக செலவழிக்கப்படுவது போலவும் சொன்னார்கள். நான் நினைக்கிறேன். 11 ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்த, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடைபெற்ற சம்பவங்களையெல்லாம், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே நடந்ததாக எண்ணிக்கொண்டு தன்னுடைய கருத்துக்களைப் பேசியிருக்கிறார்களோ என்றுதான் நினைக்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, பெரும் செல்வந்தர்கள் மற்றும் பணம் படைத்தவர்களிடம் மட்டுமே இருந்த அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஏழை எளிய சாதாரண மக்கள் பிரதிநிதிகள் அதிலே இடம்பெறச் செய்யும் வகையில் ஏற்படுத்தியது. புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் என்பதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. கே. குப்புசாமி] [1985 ஜூலை 5

1977க்கு முன்னாலே அப்போது இருந்த கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் அந்த ஊரிலேயே எஜமானர்களைப் போல நடந்து கொண்டு, ஊர் மக்களை ஆட்டிப்படைத்தவர்களாக இருந்தார்கள். 77க்குப் பின்னாலே வந்த புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, அந்த ஊரிலே அந்த தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய சாதாரண மக்களுடைய பிரிதிநிதிகள் அந்தச் சங்கங்களிலே தலைவர்களாக வரக்கூடிய அளவிற்கு ஆக்கியது என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 77-க்கு முன்னாலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், அன்றைக்கிருந்த கூட்டுறவுச் சங்கங்களிலே தலைவர்களாக இருந்தவர்கள் பல கறவை மாடுகளை (குறுக்கீடு)

Thiru A. RAHMANKHAN : Mr. Speaker Sir, Hon. Member Thiru Kuppusamy is saying something....

Thiru K. KUPPUSAMY : Sir I'm not yielding.

Thiru A. RAHMANKHAN : Sir, he is misdirecting the House. That is why I want to bring it to the notice of the Chair. Hon'ble Member is misleading the matter....

Thiru K. KUPPUSAMY : Sir, please let me complete my speech. Let him say anything after my address is over.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பேச்சிலே குறுக்கிடுவதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், விஷயம் என்னவென்று கேட்டால், அங்கே கூட்டுறவுச் சங்கங்களில் மக்களுடைய பிரிதிநிதிகள் இடம் பெறுகிறார்கள் என்ற தவறான தகவல்களை சபைக்குத் தருகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்னும் தேர்தல் நடக்கவில்லை. நாமினேஷன் முறையில்தான் நியமிக்கப்படுகிறார்களே தவிர, டெமாக்கரிட்டிக் முறையில் தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பிரணவநாதன் அவர்களும் கூறினார். மக்கள் பிரிதிநிதிகள் அங்கே இல்லை. மக்கள் பிரிதிநிதிகள் அங்கே இடம் பெற்றிருக்கிறார்கள் என்று தவறான கருத்தை உறுப்பினர் கூறினார்கள்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் பிரணவநாதன் சொல்ல நினைக்காத கருத்துக்களையெல்லாம் அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் ஒரு வக்கீல் என்ற முறையில் இங்கே எடுத்துச் சொல்லி வாதாடுகிறார். கூட்டுறவுச் சங்கங்களிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அரசியல் தலையீடு இருக்கிறது.



1985 ஜூலை 5] [திரு. கே. குப்புசாமி]

சங்கங்களிலே பினாமியாக பல பேர் இருக்கிறார்கள் என்று திட்டவட்டமான குற்றச்சாட்டை அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு சரியான விளக்கம் தரவேண்டியது என்னுடைய கடமை என்ற காரணத்தினால்தான் நான் என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைக்கிறேன். என்னுடைய கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் அவர்களுக்கு இருக்குமேயானால், அடுத்து பேச இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைக் கொண்டு விளக்கம் தரச் சொல்லலாம். (குறுக்கீடு) ஆள் இல்லையா. இல்லையென்றால் என்ன ? நீங்கள் தான் எதிலும் பேசுவீர்களே. நம்முடைய ரகுமான்கான் அவர்கள் நாளைக்குக் கூட அதைப் பேசலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : இன்றோடு இந்த டிமாண்ட் முடிந்து விடும். நாளைக்கு அவர் இதில் பேச முடியாது. நீங்கள் உங்கள் பேச்சை தொடருங்கள்.

திரு. கே. குப்புசாமி : நான் ஏன் அதைச் சொன்னேன் என்றால், சாதாரணமாக கிராமப்புறங்களிலே இருக்கிற லட்சோப லட்சம் குடும்பங்களுக்கு சமுதாய வளர்ச்சிக்கு ஒரு காமதேனுவாக இருப்பது, இந்த பால் வளத் துறையும், இந்த கால்நடை பராமரிப்புத் துறையுமாகும் என்று நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டியது இல்லை. நாடே அறியும். வறட்சியால் தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்ட போதும், வறுமையால் தமிழகம் முழுவதும் பீடிக்கப்பட்டபோதும், அந்தக் கிராமப்புறத்து ஏழை எளிய மக்களை, இந்த கால்நடை பராமரிப்புத் துறையும், பால் வளத் துறையும் தான் வறட்சியின் பிடியிலேயிருந்தும், வறுமையின் பிடியிலேயிருந்தும் ஓரளவிற்கு காப்பாற்றியிருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

(பிற்பகல் 12-20)

மிக உயர்ந்த, மிக வளர்ந்த நாகரிகத்தில், அறிவியலில் வளர்ந்த ஐரோப்பிய நாடுகளிலே கூட, இந்தக் கால்நடைத் துறைதான், அந்தப் பொருளாதாரத்தின் அடிப்படையாக இருக்கிறது. இங்கே பாராளுமன்ற துறையிலிருந்து, வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு வாய்ப்புப் பெற்ற உறுப்பினர்கள் நாங்கள் அங்கே பார்த்தோம்.

கால்நடைத் துறை எந்த அளவு மேலை நாடுகளிலே கூட, பொருளாதாரத்தை உருவாக்குகிற, மேம்படுத்துகிற நிலையிலே அங்கே இருக்கிறது என்பதை கண்டு அறிந்தோம். எனவே கிராமப்புறங்கள் அதிகமாகக் கொண்ட, விவசாயத்தையே, முதுகெலும்பாகக் கொண்ட, இலட்சக்கணக்கான குடும்பங்கள் இருக்கிற தமிழகத்தில் அந்தத் துறையின் பங்கு மிக முக்கியத்துவமானது, சிறப்பானது என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

[திரு. கே. குப்புசாமி] [1985 ஜூலை 5

அந்த அளவுக்கு, குறிப்பாக, 1977-க்குப் பின்னாலே கால் நடைப் பராமரிப்பு துறையிலே, பால் வளத்துறையிலே ஏற் பட்டு இருக்கிற மறுமலர்ச்சியை அருமை நண்பர் பிரணவநாதன் எடுத்துச் சொல்வார் என்று கருதினேன். அவர் சொல்லவில்லை.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே கூட்டுறவுத் துறையிலே மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டுகின்ற வகையிலே சிறப்பாக செயலாற்றுவது, தமிழக அரசு கூட்டுறவுத் துறை என்பதை குஜராத்திலே உள்ளவர்கள் கூட பாராட்டுகிறார்கள். காரணம் குஜராத்திலே பால் வளத்துறை சிறப்பான முன்னேற் றம் ஏற்பட்டு இருப்பதை நாம் அறிவோம். அவர்களே சொல் கிறார்கள். குஜராத்தை மிஞ்சுகின்ற அளவுக்கு இன்று கால் நடை பராமரிப்புத் துறை, பால் வளத்துறை ஆகியவை தமிழகத் திலே முன்னேறி இருக்கின்றன என்று அவர்களே பாராட்டு கிறார்கள். ஆனாலும், நம்முடைய அருமை நண்பர் பிரணவ நாதன், அதையும் மீறி இங்கே அரசியல் தலையீடு என்று சொன் னார்கள்.

கூட்டுறவுச் சங்கங்களில் சாதாரணமாக, 1977-க்கு முன் னாலே, இருந்த செல்வந்தர்களுடைய ஆதிக்கத்தை மாற்றி அமைத்து, சாதாரண மக்கள் தலைவர்களாக, உறுப்பினர்களாக வந்து, அவர்கள் கால்நடைகளை மானியம் மூலமாக கடனாகப் பெறுகிற வாய்ப்புக்களை உருவாக்கித் தந்தது புரட்சித் தலைவர் அரசு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

1977-க்கு முன்னாலே கூட பலவற்றைச் சுட்டிக்காட்ட முடியும். ஆதி திராவிட மக்கள், கூட்டுறவுத் துறை சங்கங்களிலே பால் வளச் சங்கங்களிலே கடன் பெறமுடியாத நிலை இருந்தது. வசதிபடைத்த மக்கள், ஆதி திராவிட, மலைவாழ் மக்களை ஆட்டிப்படைத்த காலம் அந்தக் காலம். ஆதி திராவிட மக்கள் வைத்திருந்த கால்நடைகளிலே கறக்கின்ற பாலை கூட்டுறவுச் சங்கங்கள் வாங்க மறுத்த காலம் அந்தக் காலம் என்பதை நம்முடைய அருமை நண்பர் பிரணவநாதன் அவர்கள் ஏன் மறந்து விட்டார்கள் என்று தெரியவில்லை.

அங்கே பினாமி என்று சொன்னார்கள். இன்றும் சொல் கிறேன். அவர்கள் சொல்கிறார்கள்.—மாதம் மும்மாரி மழை பெய்யவில்லை என்று—ஏதோ 1977-க்கு முன்னாலே இந்த நாட்டிலே பஞ்சம் இல்லாமல், இந்த நாட்டில் பசி இல்லாமல், வறட்சி இல்லாமல், வறுமை இல்லாமல், வளமாக இருந்தது போலவும், இப்போதுதான் மாதம் மும்மாரி பெய்யவில்லை என்பதைப் போலவும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.



1985 ஜூலை 5] [திரு. கே. குப்புசாமி]

அப்படி மழை பெய்யத் தவறிய இடங்களிலே கூட, இந்தப் பால் வளத்துறையும், கால்நடைப் பராமரிப்புத் துறையும் கொண்டு வந்திருக்கின்ற திட்டங்களால் அந்த மக்கள் இன்று, இன்னமும் தங்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

பல்வேறு உதாரணங்களை நான் சொல்ல முடியும்; 1977க் குப் பின்னாலே இந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கிற மகத்தான முன்னேற்றத்தையும், 1977-க்குப் முன்னாலே இந்தத் துறை எந்த அளவுக்கு வளர்ச்சி அடையாமல் கிராம மக்களுக்குப் பயன் படாமல் இருந்தது என்பதையும் பல்வேறு உதாரணங்களால் என்னால் சுட்டிக்காட்ட முடியும். நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால் ஒரு சிலவற்றை மட்டும் நான் உங்கள் மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கால்நடை, பால் வளம் ஆகிய துறைகளில் பல்வேறு முன் னேற்றங்கள் ஏற்படுத்தியதை நான் எடுத்துக் காட்டினேன். அதற்குப் பல்வேறு திட்டங்கள், சிறப்புக்கால்நடை உற்பத்தித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய, இந்தத் திட்டங்கள் மூலமாக 1977-க்குப் பின்னாலே செயற்கை முறையில் இன விருத்தி மூலம் கால்நடைகளை முன்னேற்றுதல், நோய்த்தடுப்பு, பால்பண்ணை விஸ்தரிப்பு, தீவனப் பயிர் அபிவிருத்தி, கன்று வளர்ப்பு ஆகிய பல்வேறு திட்டங்களை, அந்தத் திட்டங்கள் மூலமாக இந்த அரசு வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது என்பதை கிராமத் தில் இருக்கிற சாதாரண ஏழை எளிய ஆதி திராவிட மக்கள் நன்றியோடு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

அதிலே, குறிப்பாக, கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில், மூன்றைச் சிறப்பு அம்சங்களாகச் சொல்ல முடியும். (1) ஆனிமல் ஃபீட் அண்டு ஃபுட், பசுந் தீவனம் மற்றும் தீவனப் பயிர், சத்துள்ள புல்; (2) இன அபிவிருத்தி ஆர்ட்டிபிஷியல் இன்செமினேஷன்; (3) நோய்த் தடுப்பு. இந்த மூன்றும் கால் நடைத் துறையிலே முக்கியமான அம்சங்க ளாக விளங்கி வருகின்றன.

அனிமல் ஃபீட் அண்டு ஃபுட்—சாதாரணமாக கால்நடை களுக்கு கறவை மாடுகளுக்கு அதிகமாக பால் கறக்கவேண்டும் என்றால், சத்துள்ள புல், அதாவது கிரீன் ஃபாடர், நியூட்ரி ஷியஸ் ஃபாடர் என்று சொல்வார்களே, பசும் புல், சத்துள்ள புல் அதற்கு அவசியம் தேவை.

இன்றைக்கு கிராமங்களில் பல இடங்களில் கிரின் பாடர் என்று வளர்க்கிறார்கள். அந்தப் புல் சத்துள்ளவையாக இல்லை. வெளி நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் கால்நடைகளுக்கு இந்த கிரின் பாடரை விட நியூட்ரிஷன் பாடர் என்று கொடுக்கிறார்கள். அந்த முறைகளை இங்கே கடைபிடிப்போமானால் குறைந்த அளவிற்கு தீவனம் கொடுத்தால் அதிக பால் கறக்கிற நிலை உருவாகும். எனவே, அந்த கிரின் பாடரை நியூட்ரிஷன் பாடரை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இந்த நேரத்திலே அந்த பாடரை வளர்க்கிற விவசாயிகளுக்கு மானியம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்த சீட்லிங்சை வைத்து கிரின்பாடரை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு ஓரளவிற்காவது மானியம் கொடுத்தால் தான், தரமான சத்துள்ள புல்லைவளர்த்து அந்த விவசாயி அவர்களிடத்தில் இருக்கிற கறவை மாடுகளுக்கு கொடுத்து அவைகள் அதிகமாக பால் கறக்கிற நிலைமை உருவாகும். அதன் மூலம் அவர்களுடைய பொருளாதார நிலைமை உயரும் என்பதை தெரிவித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு பால் கொடுக்கின்ற கறவை மாடுகள், இன அபிவிருத்திக்கு தகுதியுள்ள ஆயிரக்கணக்கான மாடுகளை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கிற நிலைமை இருக்கிறது. இறைச்சிக்குத் தகுதியான மாடுகளை, வேலைக்குத் தகுதியில்லாத மாடுகளை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் சென்றால் பரவாயில்லை. ஆகவே, இங்கே பால் கொடுக்கின்ற கறவை மாடுகளை, இன அபிவிருத்திக்குத் தகுதியுள்ள மாடுகளை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதை தடுக்கின்ற கடுமையான சட்டத்தை அல்லது கடுமையான நடவடிக்கையை அரசு மேற்கொண்டாக வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்தும், உயர்ந்த விரிய ரக கன்றுகளை ஏற்படுத்தினாலும், இவைகள் எல்லாம் அண்டை மாநிலங்களுக்கு கடத்தப்படுவதை தடுக்காவிட்டால் நம் திட்டங்களின் வளர்ச்சி குன்றும் என்ற காரணத்தால் இதிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பசுக்களைப் பொறுத்தவரையில் ஜெர்சி, ப்ரெஷியன், போன்றவைகளும், எருமைகளைப் பொறுத்த வரையில் சிந்தி, தார்பார்க்கர், முர்ரா ஆகியவைகளும் உயர்ந்த தரமுள்ளவையாக கருதப்படுகின்றன. விந்துகளைப் பற்றி எனக்கு முன்னாலே அருமை சகோதரர் இராமலிங்கம் அவர்கள் தெரிவித்தார்கள் ..

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசுகிற போது கவனித்து வருகிறேன். மற்ற உறுப்பினர்களை குறிப்பிடுகிற போது





அருமைச் சகோதரர் என்றோ, அண்ணன் என்றோ தெரிவிக்கிறார்கள். அப்படியில்லாமல் மாண்புமிகு உறுப்பினர் என்று குறிப்பிடுவார்களானால் அது இந்த அவையின் மரபை கடைபிடிப்பதாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : மற்ற உறுப்பினர்களை விளித்துச் சொல்கிறபோது சகோதரர் என்றோ, நண்பர் என்றோ அழைக்காமல் மாண்புமிகு உறுப்பினர் என்றே குறிப்பிட வேண்டும்.

திரு. கே குப்புசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, அன்பு சகோதரர் என்று சொல்வதிலே என்ன தவறு இருக்க முடியும்? இதை அன்பார்லிமென்டரியாக நான் கருதவில்லை. இது போன்று அழைத்து இந்த அவையில் மரபுகள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லிவிட்டு, அருமை சகோதரர் என்றோ, அண்ணன் என்றோ சொல்லலாம். அது அன்பார்லியமெண்டரி அல்ல. நிச்சயமாக அப்படி சொல்லலாம். ஆனால் மாண்புமிகு சபாநாயகர் அவர்களைத் தான் அன்பு சகோதரர் என்றோ அண்ணன் என்றோ அழைக்கக் கூடாது. உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் அப்படி தெரிவிப்பதில் தவறில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : மாண்புமிகு வேங்கடரமணன் அவர்கள் சொல்லியது கூட உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் குறிப்பிடும் போது மாண்புமிகு உறுப்பினர் என்று குறிப்பிடாமல் அருமைச் சகோதரர் என்று சொல்கிறார்களே என்று தான். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் என்று சொல்லிவிட்டு பிறகு மற்றவற்றை சேர்த்துக் கொள்ளலாம். அப்படி செய்தால் அதில் தவறு இருக்காது.

திரு. கே குப்புசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, உயர்ந்த இனக் கன்றுகளை அதிகமாகப் பெருக்க வேண்டுமென்றால் லிக்விட் செமன், ப்ரோசன் செமன் என்று சொல்லுகிறார்களே அதனை ஒவ்வொரு மருந்தகத்திலும், ஒவ்வொரு மருத்துவமனையிலும், கிளினிக்கல் செண்டரிலும் வைத்தாக வேண்டும்.

(பிற்பகல் 12—30)

காரணம் இந்த மருந்து தயாரிக்கிற நிலையங்கள் மிகக் குறைவு தமிழகத்திலே. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மருந்தகங்களும், மருத்துவமனைகளும் இருந்தாலும், இன்றைக்கு இருக்கிற கிராமங்களின் எண்ணிக்கையை கணக்கிட்டுப் பார்க்கும்போது, இது குறைந்த அளவிலே இருக்கிறது. இருக்கிற

[திரு. கே. குப்புசாமி] [1985 ஜூலை 5

எல்லா நிலையங்களிலும், எல்லாக் காலத்திலும், புரோசன் செமன் கிடைப்பதில்லை. இப்போது திரவ விந்து இருக்கிற காரணத்தாலே, பக்கத்திலே இருக்கிற மருந்தகங்களிலேயிருந்து எடுத்து வரும்போது, வாகனத்திலே கொண்டு வரும்போது, அதனுடைய உயிர்ச் சத்து இழந்துவிடுகிற நிலைமை ஏற்படுகிறது. அதே நேரத்தில் இந்த உறை விந்து நீண்டகாலம் இருக்க முடியும். மாடுகளுக்கு அதைப்போடும்போது, இது நிச்சயமாக பலன் கிடைக்கும் என்ற காரணத்தால் தமிழகத்திலே இருக்கிற மருத்துவ நிலையங்களில், கிளை நிலையங்களில், கிளிக்னிகல் லேபரட்டரிகளில் இந்த புரோசன் செமன் இருக்கிற நிலையை அரசு உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது மருந்தகங்கள் விவசாயிகளுக்கு, 2,3 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. திடீரென்று அவர்களுடைய கால்நடைகளுக்கு நோய். ஏற்பட்டால், அவர்கள் தொடர்பு கொள்ள ஒவ்வொரு மருந்தகத்திலும் தொலைபேசியை ஏற்படுத்தவேண்டும். இப்போது கிராமப்புறங்களிலே எல்லாம் தொலைபேசி. வந்துவிட்டது. எனவே எல்லா மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும் தொலைபேசி இருந்தால், விவசாயிகள் மருத்துவர்களோடு தொடர்பு கொண்டு, அவர்களுடைய ஆலோசனையை, அறிவுரையைப் பெற முடியும். சில சமயங்களில் கால்நடைகளைக் கொண்டு வர முடியாத நிலை ஏற்படும்போது, இங்கேயிருந்து அவைகளைக் கொண்டு செல்வதற்கு வாகன வசதி கிடையாது. சாதாரணமாக விவசாயிகள் வண்டிகளை வைத்துக்கொண்டுதான் அவைகளை அழைத்துச் செல்லவேண்டிய நிலைமையிருக்கிறது.

இன்றைக்கு ஆர்.இ.ஜி,பி. திட்டத்தின் கீழ் இன்ஜினியர்களுக்கு மோட்டார் சைக்கிள் கொடுக்கின்ற திட்டம் உருவாகியிருக்கிறது. அதைப்போன்று இந்தக் கால்நடை மருத்துவர்களுக்கும் மோட்டார் சைக்கிள் கொடுக்கின்ற திட்டத்தை கொண்டு வந்தால், கால்நடைகளை அவர்கள் விரைவிலே சென்று பார்ப்பதற்கு வசதியாக இருக்கும்.

அடுத்து, இந்த கானல்நோய்க்கு ஆளாகின்ற கால்நடைகள் இன்றைக்கு நாட்டிலே ஏராளமாக இருக்கின்றன. அவற்றைத் தடுப்பதற்கு தடுப்பு மருந்துகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கு ஒரு ரூபாய் வசூல் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப்போல ஆர்ட்டிபிசியல் இன்செமிநேசன் என்ற ஊசியைப் போடுவதற்கு 5 ரூபாய் வாங்குகிறார்கள் என்று கருதுகிறேன். இதன் மூலம் வருகின்ற வருமானம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், கிராமங்களில் இருக்கிற விவசாயிகளின் நிலைமையைக் கருத்திலே கொண்டு, இந்த கானல் நோய்க்காக போடுகின்ற ஊசியையும், ஆர்ட்டிபிசியல்



1985 ஜூலை 5] [திரு. கே. குப்புசாமி]

இன்செமிநேசன் செய்வதற்காகப்போடுகின்ற ஊசியையும், இலவசமாகப் போடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று வெறி நாய்க் கடியைப் பற்றி இங்கே சொன்னார்கள். இதைப் பொறுத்தவரையில் நம்முடைய நண்பர் ராமலிங்கம் அவர்கள் பேசும்போது, இதிலே பாதிக்கப்பட்ட மருத்துவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களைநான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு மனிதன் வெறிநாயால் பாதிக்கப்பட்டால், உடனடியாக குன்னூருக்கு செல்லவேண்டியிருக்கிறது. அங்கேயிருக்கிற தனியார்களுடைய மருத்துவமனையில் 7 ஊசிகளை இடுப்புக்குக் கீழே போட்டால் தான் அந்த நோய் தீரும் என்ற நிலைமையிருக்கிறது.

ஆனால் அதற்கு மாற்று முறையாக தற்போது அரசுத் துறையில் ராணிப்பேட்டையில் இப்போது மருந்து தயாரிக்கிற ஒரு தொழிற்சாலை உண்டாகியிருக்கிறது. ஆனால் இதிலே தயாரிக்கிற மருந்துகள் எல்லா மருந்தகங்களுக்கும் போதிய அளவிலே வருவதில்லை. அரசு மருத்துவ மனைகளிலே கூட, கால் நடை மருத்துவமனைகளிலே கூட இந்த அன்டிராபிஸ் வாக்சின் ஆர் இன்ஜெக்சன் அதிகமாக கிடைப்பதில்லை. எனவே இந்தப் பற்றாக்குறையைப் போக்க எல்லாக் கால் நடை மருந்தகங்களிலும் எல்லா மருத்துவமனைகளிலும், ரெகுலர் மருத்துவமனைகளிலும், இது கிடைக்கிற ஒரு நிலைமை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மருந்துகள் வாங்குவதற்காக பணம் ஒதுக்கப்படவில்லை. ஆனால் மாடுகளை வாங்குவதற்காக பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு நிலையத்திற்கும் 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் அளவிற்கு மருந்துகள் வாங்குவதற்கு, காலநடை மருந்துகள் வாங்குவதற்கு உரிய அதிகாரத்தை, அல்லது மருந்துகள் வாங்குகிற நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 15 ஆயிரம் ரூபாய்தான் இந்த மருந்தகங்களுக்கு இப்போது இருக்கிற மருத்துவ நிலையத்திற்கு என்று இருக்கிறது. இதற்குக் கூட, மருந்து வாங்குகிற தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வெட்டனரி டிஸ்பென்சரிகளை நம்முடைய தமிழகத்தில் அதிகமான அளவிலே உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்

எப்போது இந்த பாலை டெஸ்ட்டு செய்யும் அதிகாரம் முனிசிபல், பஞ்சாயத்துக்களில் செனிட்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு இருக்கிறது. இவர்கள் பாலை டெஸ்ட் செய்து அனைலைஸ்க்கு அனுப்பி அது திரும்பி வருவதற்கு அதிக நாள் ஆகிவிடுகிறது. அதன் பிறகு ப்ராசிகுஷன், கோர்ட் புராசிடிங்ஸ் இவைகளுக்கு எல்லாம் கால தாமதம் ஆகிறது. இதை இந்த கால்நடை மருத்துவர்களிடமே ஒப்படைக்கலாம். காரணம் இவர்களே ஒரு ஆண்டு காலம் மில்க் பொருத்தவரையில் டைரிஸ் என்பதை கால்நடை மருத்துவர்களே படித்து இருக்கிறார்கள். அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தால் உடனடியாக சோதனைச் செய்து முடிவுகளை அறிவித்து விடுவார்கள். இதனால் வழக்கு மற்ற விவகாரங்களுக்கு எல்லாம் ஆகும் கால தாமதம் நிச்சயமாக தவிர்க்க முடியும். அதோடு இந்த கால்நடை உதவி மருத்துவர்களுக்கு துணையாக இப்போது (Lives stock Inspectrrs) இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் இந்த சப் சென்டருக்கு வேலை செய்வதற்காக அனுப்பிவிட்டு அங்கே டாக்டர்களுக்கு உதவியாக கம்பவுண்டர்களை நியமிக்கிற ஒரு திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எஸ்.சி., எஸ்.டி., மற்றும் சாதாரண அரிசன ஆதி திராவிட மக்களுக்கு இந்தமில்க் சொசைட்டிகள் எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கு எல்லாம் தாராளமான மனப்பான்மையோடு அதிகமாக தொடங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும், அதற்கு அனுமதிதர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு இந்தத் துறையை இவ்வளவு சிறப்பாக மற்ற மாநிலங்கள் எல்லாம் தமிழகத்தை பாராட்டுகின்ற வகையில் நடத்திச் செல்கின்ற இந்தத் துறையின் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களை பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வந்து இருக்கிற பத்திர நிர்வாகம், பதிவுத் துறை, கால்நடை பராமரிப்பு, பால் வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்து இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் என்னுடைய கருத்தை எடுத்துவைக்க விழைகிறேன்.

இன்றைக்கு கிராமப் புறங்களில் விவசாயத்திற்கு அடுத்தாற்போல் கிராமிய பொருளாதாரத்தை முன்னேற்றுவது கால்நடை பராமரிப்பு, பால் வளம் என்பதை இங்கே அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு இந்த கால்நடை பராமரிப்புத் துறை என்ன நிலையில் இருக்கிறது என்று சொன்னால் அரசு துறையால்



மிகவும் கவனிக்கப்படாமல் இருக்கிறது. கிராமப்புறங்களில் புதிய கால்நடை மருத்துவ மனைகள் இருக்கிறதா? மருந்தகங்கள் இருக்கிறதா ? என்றால் புதிய மருத்துவ மனைகளும், மருந்தகங்களும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இந்த கால்நடை மருத்துவமனைகளில் மருந்தகங்களில் மருந்துகள் இல்லாத காரணத்தால் கால்நடை அபிவிருத்தி, பராமரிக்கின்ற பொறுப்பு, பால் வளத்தை பெருக்குகின்ற தன்மை குறைந்து கொண்டு வந்து இருக்கிறது. இந்த துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றால், இந்த துறைக்கு என்று தனியாக ஒரு செயலாளரை நியமிக்கவேண்டும்.

இன்றைக்கு இந்த கால்நடை பராமரிப்புத் துறை, கோழி வளர்ச்சி நிறுவனம், பால் வளம், இறைச்சி நிறுவனம் போன்றவைகள் விவசாயத் துறையோடு இணைக்கப்பட்டு வ்விவசாயத்துறையினுடைய செயலாளர் கூட்டுப் பொறுப்பில் இருக்கிறது. விவசாயத் துறையைப் போலவே பால்வளத் துறையும், கால்நடை பராமரிப்புத் துறையும் நாளுக்கு நாள் பல திட்டங்களை தீட்டி முன்னேறி மக்களுக்கு சேவை செய்யக்கூடிய ஒரு துறை தான். எனவே கால்நடைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றால் இதற்கு என்று தனியாக ஒரு செயலாளரை நியமிக்கவேண்டும்.

அது மட்டு இன்றி, தனியாக மத்திய அரசில் இருப்பதைப் போல (Anim l Husbandry Commissione ) என்ற ஒரு பதவியை இந்த துறையை பராமரிப்பதற்காக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கொண்டு இன்றைக்கு இந்தத் துறையில் பணி ஆற்றுகின்ற அலுவலர்களின் நிலை மற்ற துறையை விட மிகவும் கேவலமாக இருக்கிறது. இந்த கால்நடை மருத்துவர்கள் கிராமப்புறங்களில் கடினமாக வேலை செய்து கொண்டு இருந்த போதிலும் இன்றைக்கு மற்ற மருத்துவர்களுக்கு M.B.B.S., B.D.S., படித்த மருத்துவர்களுக்கு கொடுக்கின்ற சலுகைகளை, அவர்களுக்கு அளிக்கின்ற ஊதியம் இவர்களுக்கு அளிக்கப்படவில்லை. எனவே, மற்ற மருத்துவர்களுக்கு மனித மருத்துவர்களுக்கு அளிக்கின்ற, சித்த மருத்துவர்களுக்கு அளிக்கின்ற ஊதியத்தை இவர்களுக்கும் அளிக்க வேண்டும்.

மேலும் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போல் இங்கே பண்ணைகளில் வேலை செய்பவர்கள் அதாவது தனியாக பிராக்டிஸ் நடத்தக் கூடாது என்று விதி இருப்பதால் அப்படி வைத்திருக்கின்றவர்களுக்கு நான்-பிராக்டிஸிங் அலவன்ஸ் இந்தத் துறையில் கொடுப்பதில்லை. அந்த நான் பிராக்டிசிங் அலவன்சையும் இந்தத் துறையில் இருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா] [1985 ஜூலை 5

(பிற்பகல் 12–40)

இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் சில கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். இன்றைக்குக் கிராமப் புறங்களிலே இருக்கின்றவர்கள் மருத்துவ மனைகளுக்கு உடனடியாகச் செல்ல வேண்டுமென்றால் அதற்கான வாகன வசதி கிடையாது. கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகள் வாடகை வாகனங்களை வைத்துக் கொண்டு செல்கின்ற நிலைமைதான் இருக்கிறது. இந்த நிலைமை மாறினால்தான், எந்த நோய் ஏற்பட்டாலும் உடனடியாக மருத்துவர்களிடம் சென்று கால்நடைகளைப் பராமரிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைக்கு மிக அருகில் இருக்கின்ற பூவிருந்தவல்லியிக் உள்ள மருத்துவமனையிலே, அசிஸ்டெண்ட் டைரக்டர் இருக்கின்ற இடத்தில் கூட தொலை பேசி இல்லை. இதன்காரணமாக, அவர்களுடைய சேவை உடனடியாகத் தேவையாக இருக்கின்றவர் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன், இந்தத் துறையிலே உள்ள இந்த மருத்துவமனைகளிலேயும், மருந்தகங்களிலேயும் உடனடியாக தொலை பேசி அமைத்துக் கொடுக்க வேண்டும், வாகன வசதி செய்து கொடுக்க வேண்டும்.

கிராமங்களில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மாடுகளைப் பொறுத்தவரையில், அவைகள் பால் வளத்தைப் பெருக்கக் கூடிய மாடுகளாக இல்லை. ஆடுகள் கொடுக்கின்ற விகிதாச்சாரத்தின் அளவு கூட பால் கறக்கின்ற மாடுகளாக அவைகள் இல்லாத தன்மையில் இருக்கின்றன. எருமை மாடுகள் கொடுக்கப்படுகின்ற நேரத்தில் அந்த எருமை மாடுகள் கூட நம்முடைய மாநிலத்தில் பால் அதிகமாகச் சொடுப்பதாக இல்லை. எங்கள் மாவட்டத்திலே எத்தனையோ பால் வள சங்கங்கள் இருந்தாலும், திரும்ப திரும்ப மாடுகளைப் பெறுகின்றபொழுது ஊத்துக் கோட்டையில் இருக்கின்ற ஒரேயொரு சந்தையிலேயிருந்துதான் அந்த மாடுகள் பிடிக்கப் படுகின்றன. போன வருடம் பால் நின்று விட்ட மாடுகள் மீண்டும் கன்று போட்டவுடனே பிடித்துக் கொண்டு வருகின்ற நிலைமை இருக்கிறது.

எனவே, பால் வளத்தைப் பெருக்க வேண்டுமென்றால் தரமான மாடுகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். எருமை மாடுகளை பிரீட் செய்து ஆந்திராவிலே உள்ள மண்ணம் பேட்டா ராஜ்மான்ட்ரி ஆகிய பகுதிகளிலே தரமான மாடுகளை உருவாக்குகிறார்கள். அப்படிப்பட்ட தரமான எருமை மாடுகளை உருவாக்கி விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற தன்மையை



136415

1985 ஜூலை 5] [திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா]

நம்முடைய கால்நடைப் பராமரிப்புத் துறை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான், அரியானா மாநிலத்திற்குச் சென்று பார்த்தால், அங்கே ஆடு கறக்கின்ற பாலைக் கூட நம்முடைய எருமை மாடுகளோ, பசு மாடுகளோ கறக்காத நிலைமை இருக்கிறது. கிராமப் பொருளாதாரம் வளரவும், பால் வளம் பெருகவும் மாடுகளை நல்ல முறையில் கொடுத்தால்தான் நல்லதொரு சேவை செய்தவர்கள் ஆவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் வள சங்கங்கள் என்றும், கோழி வளர்ப்பு சங்கங்கள் என்றும், ஆடுகள் வளர்ப்போர் சங்கம் என்றும், வெள்ளாடுகள் வளர்ப்போர் சங்கம் என்றும் இன்றைக்குக் கிராமங்களில் துவக்கப் படுகின்றன. ஆனால் இந்த சங்கங்களைப் பொறுத்த வரையில் அங்கேயுள்ள ஒன்றியங்களில் ஈ.ஓ. (எச்) என்ற அதிகாரி பல ஒன்றியங்களில் கிடையாது. என்னுடைய பகுதியிலே உள்ள ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் ஈ.ஓ. (எச்) என்ற அதிகாரியைப் பல மாதங்களுக்கு முன்பு மாற்றி விட்டார்கள். ஆனால் இது வரையில் அந்த இடத்திற்கு அதிகாரியை நியமிக்கவில்லை. பல ஆண்டுகளாக நல்ல முறையில் சேவை செய்து சங்கம் அமைக்கப் பாடுபட்ட ஈ.ஓ. (எச்) என்ற அதிகாரிகள் அந்த ஒன்றியத்தைப் பற்றியும், கிராமங்களைப் பற்றியும் புரிந்து கொண்டு சேவை செய்கின்ற நேரத்தில் வெகு தூரத்திற்கு அப்பால் உள்ள நிலையங்களுக்கு மாற்றி விடுகிறார்கள். நல்ல வளர்ச்சியை அந்தப் பகுதியில் கொண்டு வந்த அதிகாரிகளை மீண்டும் இரண்டு மூன்று ஆண்டுகள் அங்கேயே வைத்திருக்க மென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பல கால்நடை மருந்தகங்களிலே வெட்டர்னரி அசிஸ்டெண்ட் என்று இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு உதவியாக கம்பவுண்டர்கள் இல்லை. இன்றைக்கு அந்த மருத்துவ மனைகளிலே இருக்கின்ற உதவி மருத்துவர்கள், பல கிராமங்களுக்குச் சென்று, அவர்களே கம்பவுண்டர் செய்கின்ற பணிகளைச் செய்ய வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே, மருத்துவமனைகளுக்கு கம்பவுண்டர் நியமிக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

ஃ விலேஜ் சென்டர்கள் கிராமங்களிலே தங்களுடைய பணிகளைச் சரிவர செய்வதில்லை. பல கிராமங்களிலே, ஃ விலேஜ் சென்டர்கள் 10, 20 இடங்களிலே இருப்பதைச் சேர்த்து, மருத்துவ மனைகளாக மாற்ற வேண்டும்.

என்னுடைய பூவிருந்தவல்லி தொகுதியிலே, இருக்கிற ஆவடி நகரியத்திலே பல பால் சங்கங்களும் தனியார்களுடைய பண்ணைகளும் இருந்தும் கூட அங்கே கோரிக்கை கொடுத்தும், ஒரு கால் நடை மருத்துவமனை அமைக்கப்படவில்லை. எனவே, என்னுடைய தொகுதியிலே, பூவிருந்தவல்லியிலே ஆவடியிலே ஒரு கால் நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்.

[திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா] [1985 ஜூலை 5

பக்கத்திலே இருக்கின்ற குன்றத்தூர் பகுதிக்கு அன்னை இந்திரா வந்த நேரத்திலே ஒரு ஊரக வளர்ச்சித் திட்டம் கொண்டு வந்து 10 கிராமங்களிலே கால்நடைப் பண்ணைகள், கோழிப் பண்ணைகள் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டன. ஆனால், அந்தப் பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனை கூட கிடையாது. எனவே, அந்தக் குன்றத்தூர் பகுதிக்கும் ஒரு கால்நடை மருத்துவமனையை உடனடியாகக் கொண்டுவர வேண்டும்.

சின்ன சேலம் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். சின்ன சேலம் ஊராட்சி ஒன்றியத்திலே அனுமந்தபட்டணம் என்ற கிராமத்திலே ஒரு கால்நடை சப் சென்டர் இருக்கிறது. அதை மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சின்ன சேலம் கால்நடை மருந்தகத்தை மருத்துவ மனையாகத் தரம் உயர்த்த வேண்டும். கள்ளக்குறிச்சி கால் நடை மருத்துவமனையை முதன்மைக் கால்நடை மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒசூர் பகுதியிலே, நம்முடைய தமிழகத்திற்கே பெருமை தேடி தரக்கூடிய ஒரு பால் பண்ணை இருக்கிறது. அந்தப் பால் பண்ணையை கார்ப்பரேஷனாக மாற்ற ரூ. 7.2 கோடி நிதி ஒதுக்கப்பட்டும் கூட, அதை கார்ப்பரேஷனாக நடத்தக்கூடிய செயல் முறை இன்னும் வரவில்லை. அந்தப் பகுதியிலே அதிகாரிகளுடைய ராஜ்யம் நடந்து கொண்டு வருவதாகக் கூறுகிறார்கள். அரசாங்கம் கார்ப்பரேஷனாக மாற்றிய நிலையிலே அதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அந்தக் கார்ப்பரேஷனை ஆரம்பித்து, நல்ல முறையிலே நடத்தினால், தமிழகத்திலே ஒரு நல்ல பிரீடிங் சென்டராக இருக்கும் நிலை ஏற்படும்.

ஃப்ரோசன் செமன் பற்றி சொன்னார்கள். ஃப்ரோசன் செமன் உருவாக்க பல நவீன இயந்திரங்கள் இருக்கின்றன. கார்ப்பரேஷன் செயல்படாமல் இருப்பதாலே, அந்த இயந்திரங்களைச் செயல்படுத்த முடியவில்லை. எனவே, அந்த கார்ப்பரேஷனை நடைமுறைப்படுத்தச் செய்யும் முறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன்.



1985 ஜூலை 5] [திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா]

கிராமங்களிலே ஆர்ட்டிபிஷியல் இன்செமினேஷன் என்று சொல்கின்றார்கள். லிக்குவிட் செமன் இன்செமினேஷனை விட, ஃப்ரோசன் செமன் இன்செமினேஷன் சிறந்தது என்கிறார்கள். ஏனெனில், ஃப்ரோசன் செமனை 10 வருடங்கள் காப்பாற்றிக் கால்நடைகளுக்குச் செலுத்த முடியும் என்று சொல்கிறார்கள். எனவே, ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஃப்ரோசன் செமன் இன்செமினேஷன் செய்யக் கூடிய வசதியை செய்து தர வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஃப்ரோசன் செமன் பாதுகாக்கின்ற வங்கிகளைக், கால்நடைப் ஃபராமரிப்புத் துறை நிறைவேற்றித் தர வேண்டுமென்பதை என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்தபடியாக சென்னையை அடுத்துள்ள செங்கை மாவட்டத்தில் சென்னை மாநகரை அடுத்துள்ள பூவிருந்தவல்லி பகுதியிலும் பட்டாபிராம் பகுதியிலும் மத்திய அரசு பாதுகாப்பு நிறுவனங்கள் சில இருக்கின்றன. அங்கே இருக்கிற மக்கள், குறிப்பாக அதிகாரிகள் பால் வழங்கும் பங்குகளுக்குச் சென்று பால் வாங்கக்கூடிய நிலையில் இல்லை. மூன்று கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கிற அலுவலகங்களுக்குச் சென்று அவர்கள் வேலை பார்க்க வேண்டியிருப்பதால் அவர்கள் எல்லாம் பங்குகளுக்குச் சென்று பால் வாங்க முடியவில்லை. எனவே அந்தப் பகுதிகளுக்கு 'ஸ்ட்ரீட் வென்டிங்' முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்த மட்டில், எங்கள் பகுதியில் பத்திரத்தாள் விற்கும் உரிமை பெற்றுள்ள தனியார்களிடம் கேட்டால் கிடைப்பதில்லை. அதனால் சென்னைக்கு வந்துதான் நாங்கள் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எங்கள் பகுதியில் இருக்கிற சப்ரெஜிஸ்திரார் அலுவலகத்திலும் பத்திரத்தாள் கிடைப்பதில்லை. இக்குறைபாட்டை போக்கி, சார் பதிவாளர் அலுவலகத்தில், தேவையான பத்திரத்தாள்கள் கிடைக்க வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பதிவுத் துறையை எடுத்துக்கொண்டால், நகல் வாங்க வேண்டுமென்றால் எங்கள் பகுதியில் மிகவும் சிரமமாக இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் இப்படித்தான் இருக்கும் என்று கருதுகிறேன். நகல்கள் கேட்கும்போது, 'போட்டோ ஸ்டெட் காப்பி' கொடுத்தால் நலமாக இருக்கும். நகல் வேண்டுமென்று மனு போட்டவுடனேயே கொடுப்பதற்கு ஏற்பாடுசெய்ய வேண்டும். அதற்குத் தேவையான போட்டோ ஸ்டெட் காப்பி எடுக்கக் கூடிய மெஷின் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட வேண்டும். அந்த மெஷின் இருந்தால்தான் மனு போட்டவுடனே கொடுக்க முடியும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரப் பதிவு அலுவலகங்களில் பழைய பத்திரங்களை நீண்ட காலத்திற்குப் பாதுகாத்து வைக்க வேண்டியிருக்கிறது. மேலை நாடுகளில் மைக்ரோ ஃபிலிம் எடுத்து, நீண்ட நாள் பாதுகாக்கும் ஏற்பாடு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்போன்று நம்முடைய தமிழ்நாட்டிலும் பத்திரங்களை நல்லமுறையில் பாதுகாக்க, இந்தியாவிலே முதல் முறையாக, முன்னோடியாக மைக்ரோ ஃபிலிம் எடுத்து பாதுகாக்கும் முறையை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையிலே இன்றைக்கு பல சிக்கல்கள் இருக்கின்றன. பதிவு செய்கின்ற முறைகளை எளிதாக்க வேண்டும். கை ரேகை வாங்குகிற முறையைத் தவிர்த்து, அலுவலகத்திற்குச் சென்றவுடனே பத்திரங்களைப் பதிவு செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள், பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள், கால்நடை வளர்ப்பு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களை எடுத்துவைக்கும் வாய்ப்பினை உருவாக்கித் தந்ததற்காக முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்பு, பால் வளத்துறை ஆகிய இந்த இரண்டு துறைகளும் இன்றைக்கு தமிழ்நாட்டில் மாண்புமிகு தமிழகத் தள நாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு புதிய ஒரு மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை நான் முதலிலே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய நாட்டின் பால்வளத் தந்தையாக இருக்கிற டாக்டர் கொரியன் அவர்கள், ஆனந்த் முறையில் கடந்த 32 ஆண்டு கால வளர்ச்சியைக் காட்டிலும் பால் வளத்துறை 10 ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டில் சிறந்த முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது என்று பாராட்டி, இந்திய நாட்டிற்கு வழிகாட்டியாக தமிழ்நாடு இன்றைக்கு திகழ்ந்துகொண்டிருக்கிறது என்று பத்திரிகைகளிலே எழுதியிருக்கிறார்கள்.

குறிப்பாக இன்றைக்கு கிராமந்தோறும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கிராமங்களில் இருக்கிற ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள், ஆதிதிராவிட மக்கள், பின்தங்கிய மக்கள் ஆகியோருக்கு ஒரு நிரந்தரமான தொழிலை, குடிசைத் தொழிலை உருவாக்கித் தர வேண்டு





மென்ற நோக்கத்தோடு கிராமங்கள்தோறும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, அவர்கள் உற்பத்தி செய்கிற பாலுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, சீரிய திட்டங்களை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள்.

குறிப்பாகக் கிராமப்புறங்களில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் முன்பெல்லாம் நகர்ப்புறங்களுக்குக் கொண்டு வந்து பாலை விற்க வேண்டும் என்று வந்த நேரத்தில், பல தடைகள் ஏற்பட்டன. மேலும் அன்றைக்கு நகரத்திற்குச் செல்ல வேண்டும் என்றால் பாலின் அளவு குறைவதோடு பால் கொட்டிவிடுகின்ற ஒரு சூழ்நிலையும் உருவாகியிருந்தது. அப்படிப்பட்ட நிலையில் மேலும் கால்நடை பராமரிப்புத் துறையை எல்லாம் நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நிலைமையை மாற்றி, ஆதிதிராவிட மக்களைப் பொறுத்தவரையில் நாங்கள் கூலி வேலைதான் செய்கிறோம், அதைவிட்டால் வேறு வழியில்லை என்று சொல்கின்ற நிலைமையை மாற்றி, அந்த ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுகின்ற வகையில் நல்ல நோக்கத்தோடு இன்றைக்கு பால்வளத் துறையும், கால்நடை பராமரிப்புத் துறையும் இருந்துகொண்டு இருக்கின்றன என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். இங்கே கூட மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் கேட்டார்கள். 1972-க்குப் பிறகு 1981 ஆம் ஆண்டு வரையில் பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை, உற்பத்தி பெருகவில்லை என்று சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 4 கட்டமாகப் பால் விலையை உயர்த்தித் தந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக 27 ரூபாயிலிருந்த கிலோ ஃபேட் இன்றைக்கு ஒரு கட்டமாக 8 ரூபாய் உயர்த்தியும், அதற்குப் பிறகு 35 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக உயர்த்தியும், 40 ரூபாயிலிருந்து 42 ரூபாயாக உயர்த்தியும், பிறகு 42 ரூபாயிலிருந்து 44 ரூபாயாக கொடுக்கலாம் என்ற அளவுக்கு புரட்சித் தலைவரின் ஆட்சி இன்றைக்குச் செய்து கொண்டிருக்கின்றது என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர்கள் குறிப்பிட்டார்கள், இந்தப் பால் வளத்துறையிலே பல தவறுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன, சங்கத் தலைவர்கள் பல தவறுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இதற்கு முன்னாலே உள்ள

நிலைமை பற்றி காலச்சக்கரத்தைச் சுற்றிப் பார்த்தால் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு நன்றாகத் தெரியும். மாவட்டத்தில் இருக்கின்ற தலைமைப் பொறுப்பைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு lift irrigation என்ற வகையில் சங்கங்களை ஒரே நாளில் பதிவு செய்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியே தவிர, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்லை என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவுக்கு அந்தக் காலத்தில் சங்கங்களை உருவாக்கியது இன்றைக்கு இயங்கிக்கொண்டிருக்கின்றனவா என்பதை ஒரு கணம் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாவட்டங்களில் இருக்கின்ற மாவட்டத் தலைமைப் பொறுப்பைப் பிடிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அன்றைக்குச் செயல்பட்டவர்கள், இன்றைக்குப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் நியாயமான முறையில் செயல்பட்டு ஏழை, எளிய விவசாயிகளும், அடித்தளத்தில் .வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஆதி திராவிட .பின்தங்கிய மக்களும் பயனடைகின்ற வகையிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற சங்கங்களைப் பார்த்து குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறீர்கள். குறிப்பாக இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இங்கே இருக்கின்ற ஆதி திராவிட மக்கள் தங்களுடைய வாழ்க்கையை முன்னேற்றிக் கொள்கிற வகையில் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் கொள்கையை இன்றைக்குப் புரட்சித் தலைவர் ஆட்சி செம்மையான முறையில் ஒரு திட்டமாக ஏற்படுத்தி, குடிசைத் தொழிலாக இந்தப் பால் உற்பத்தியினைச் செய்து கொண்டிருக்கின்ற கிராமப்புறத்திலே இருக்கின்ற ஆதிதிராவிட மக்களுக்கு இன்றைக்குப் பால் 'உற்பத்தியைச் செய்து ஆங்காங்கே இருக்கின்ற சங்கங்களில் தங்கள் பாலைக் கொடுக்கலாம், அதற்கு வேண்டிய பாதுகாப்பு தரப்படும் என்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்.

மேலும் தேவைக்கு அதிகமாக பால் வருகின்ற கால கட்டங்களில் தனியார் வியாபாரிகள் அந்தப் பாலைக் குறைந்த விலையில் கிராமப்புறங்களில் வாங்கி விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற நிலைமையை மாற்றி மாவட்டந்தோறும் ஒன்றியங்களை உருவாக்கி, பால் அதிகமாக வருகின்ற காலங்களில் அந்தப் பாலைப் பக்குவப்படுத்தி பவுடராகவும், நெய்யாகவும், வெண்ணையாகவும் மாற்றி விவசாயிகளுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்தோடு இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள். இந்திய நாட்டிலேயே இன்றைக்குக் குடிசைத் தொழிலாகப் பால் உற்பத்தியினைச் செய்து வருகின்றவர்களுக்காகச் சங்கத்தை உருவாக்கி, ஒரு வழிகாட்டியாக இருந்துகொண்டிருப்பது தமிழகம்தான். அந்த





அளவுக்கு, மற்றவர்கள் பின்பற்றுகின்ற அளவுக்கு இதனை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதைத்.தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

குறிப்பாக கால்நடைப் பராமரிப்புத் துறையைப் பொறுத்த வரையில் இதற்கு முன்னாலே இருந்த நிலைமையையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னாலே புட் மற்றும் மவுத் என்று சொல்லப்படுகிற கால்நடைகளுக்கு வரும் நோய், கிராமப் புறங்களில் பரவலாக வரும்போதெல்லாம், அந்த நோய் வாய்ப்பட்ட கால்நடைகளை இழந்து விவசாயிகள் நஷ்டம் அடைந்த நிலைமையை மாற்றி, மாவட்டம்தோறும் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து இந்த நோய்க்கான தடுப்பு ஊசிகளைப் போட்டு, அதன் வாயிலாக, ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திய அந்த நிலைமையையும் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த நிலைமை திரும்பவும் வந்துவிடக் கூடாது என்பதிலே கால்நடை பராமரிப்புத்துறை எவ்வளவோ சிறப்பான முயற்சிகளை எடுத்து திட்டங்களைத் தீட்டி செயலாற்றிக் கொண்டிருக்கிற நிலைமையையும் நீங்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

பொதுவாக கால்நடைத் துறையிலே இதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, பொறுப்பிலே இருந்த போது, எந்தவித திட்டத்தையும், கிராமப்புற மக்களுக்காக தீட்டியதே கிடையாது. அன்றைக்கு அண்ணல் காந்தி அடிகள் சொன்னார் களே, கிராம ராஜ்யம் வளர வேண்டும் என்று, அந்தக் கிராம ராஜ்யம், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே தான் கிராமங்களிலே மலர்ந்திருக்கிறது. கிராமங்களிலே உள்ளவர் களுக்கு வாழ்வதற்கு எந்தவித வழியும் இல்லை என்று சொன்னாலும் கூட, அவர்கள் தங்களுக்கென்று ஒரு கால்நடையை வைத்து இருந்தாலும் கூட போதும், பாலை உற்பத்தி செய்து, தங் களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும் என்ற அந்த நிலைமையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள், புரட்சித் தலைவர் அரசு.

கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் இதற்கு முன் னாலே சிறந்த கால்நடைகளே தமிழகத்தில் இல்லை என்ற காரணத்திற்காக உறைவிந்து நிலையங்களை உருவாக்கி, அதன் மூலமாக கிராமப்புறங்களில் இருக்கிற கால்நடைகளைக் கொண்டு நல்ல உயரிய தரமான கன்றுகளை ஈன்றச் செய்து, நல்ல பாலை உற்பத்தி செய்கிற கன்றுகளாக உருவாக்கி பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து, உறைவிந்து நிலையங்களை பல் வேறு பகுதிகளிலேயும் உருவாக்கி, கால்நடைச் செல்வங்களின் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 5 ஆண்டுக் காலத்திற்கு முன் கிராமங்களிலே இருக்கிறவர்கள் இந்தக் கால்நடைத் துறையைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்களாக இருந்தார்கள். கால்நடைத் துறையே இல்லை என்று சொன்னால் கூட அப்போது அது சரியாக இருந்திருக்கும். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், அதுவும் குறிப்பாக சமீப 2, 3 ஆண்டுகளில் தான் சிறப்பான முறையில் கால்நடை பராமரிப்புக்கான பணிகளை அந்தத் துறை கிராமங்களிலே செய்து வந்திருக்கிற நிலைமையை நாம் பார்த்து வந்திருக்கிறோம். இப்போது கிராமங்களிலே இருக்கிற விவசாயிகள் கிராமங்களிலே இருக்கிற தங்களுடைய கால்நடைகளுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற நிலைமையில் இத்துறை பல திட்டங்களை தோற்றுவித்திருக்கிறது. அவசர சிகிச்சை என்று சொன்னால் 15 ரூபாய் செலவில், அதுவும் தொலைதூர பயணமாக இருந்தாலும் கூட சரி, 100 கிலோ மீட்டர் என்றாலும் சென்று சிகிச்சை அளிக்கும் வகையில் கால்நடை மருத்துவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் கால்நடை மருத்துவர்கள், கிராமங்களுக்கு உள்ளே சென்று, கிராமங்களிலே இருக்கிற கால்நடைகளுக்கு பராமரிப்புச் செய்வதன் வாயிலாக, அவைகளுக்கு நோய் வராமல் தடுக்கின்ற முறையிலே சீரிய பணிகளை ஆற்றி வருகிறார்கள்.

குறிப்பாக கால்நடை துறை பல்வேறு இடங்களிலே கால்நடை மருத்துவமனைகளை உருவாக்கியிருக்கிறார்கள். நடமாடும் கால்நடை மருத்துவமனைகளையும் உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். கிராமம் தோறும் இந்தக் கால்நடை மருத்துவமனைகள் சென்று கிராமங்களிலே உள்ள கால்நடைகளுக்கு அவ்வப்போது தேவையான சிகிச்சை அளித்து வர பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

குறிப்பாக எனக்கு முன்னாலே பேசிய பல உறுப்பினர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். கோழி வளர்ப்புத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். கிராமம்தோறும் சென்று அங்குள்ள விவசாயிகளுக்கு கோழி வளர்ப்பிற்கான வகையில் நல்ல உதவிகளைச் செய்ய பல திட்டங்களை அரசு இந்த மானியத்தின் மூலமாகக் கொண்டு வர இருக்கிறார்கள். குறிப்பாக இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் கால்நடை பராமரிப்புத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற மருத்துவர்கள் பல பணிகளிலும் தமிழகத்தில் முன்னோடியாக இருந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி 2, 3 உறுப்பினர்கள் கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

அதிலே குறிப்பாக பேரறிஞர் அண்ணா அவர்கள் 1961 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் மாநாட்டிலே பேசுகிறபோது, அந்தக் கால்நடை மருத்துவர்களை பாதுகாக்கிற அளவிலே நல்ல பல திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று சொல்லி, கால்





நடைகளை பராமரிக்கின்ற நேரத்தில், அந்தக் கால்நடைகளால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை சொல்லி, ரூ. 100 மானியமாக அதாவது ரிஸ்க் அலவன்ஸ் என்று வேண்டும் என்று அவர்கள் கேட்ட கோரிக்கையை குறிப்பிட்டு, கால்நடைத் துறையில், தேவையான பணியை கால்நடை மருத்துவர்கள் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக ரிஸ்க் அலவன்ஸ் தரலாம் என்ற நிலைமையைக் கூட எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் அவர்களுக்கு தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு, கால்நடை பராமரிப்பு சம்பந்தமாக அந்த மருத்துவர்கள் வெகு தொலைவுகூட அடிக்கடி செல்ல வேண்டியிருப்பதால், அவர்களுக்கு வாகன வசதி இல்லாத குறையைப் போக்கி, வாகன வசதியைச் செய்துக் கொடுக்கிற வகையில், லூனா பைக், அல்லது மோட்டார் பைக் போன்றவைகளை வாங்கித் தந்து, அதன் மூலமாக ஏற்படும் கடனில், 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கடனாகவும் வழங்குகிற வகையில் நடவடிக்கை எடுத்தால், அதன் மூலமாக கால்நடை செல்வங்களை நன்கு பராமரித்து விவசாயிகளின் பொருளாதாரத்தையும் பாதுகாக்கக் கூடிய வகையில் வழி வகைச் செய்ய முடியும். அவர்கள் இப்போது எவ்வளவோ வகைகளில் ஒத்துழைப்பு தந்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும். அவர்கள் ஒத்துழைப்புத் தருவதற்கு இது போன்ற பணிகளை நமது அரசு செய்து தர வேண்டும் என்று அவர்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக கால்நடைகள் இன்றைக்கு பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அவை முக்கியமாக கேரள மாநிலத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அவ்வாறு எடுத்துச் செல்லும்போது பால் கறக்கும் நிலையில் நல்ல தரமான நிலையில் இருக்கிற மாடுகளைக் கொண்டு செல்லாமல் இருப்பதற்கு தடைச்சட்டத்தைக் கொண்டுவந்து அந்தக் கால்நடைகள் மூலம் தமிழகத்தில் விவசாயிகள் மத்தியில் நல்ல முன்னேற்றத்தைக் கொண்டு வரவேண்டும். ஏழை மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு ஏற்றவகையில் நல்ல கால்நடைகளைக் கொண்டு செல்வதைத் தடுப்பதற்கு ஒரு தடைச் சட்டத்தைக்கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இரண்டு மூன்று மையங்கள் தேவைப்படுகின்றன. பெரியார் மாவட்டத்தில் அனுமன்பள்ளி என்ற இடத்தில் கால்நடை கிளை நிலையம் தேவையென்று தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் அதனை உருவாக்கித் தருவதோடு, பாசிப்பாளையம் என்ற இடத்தில் கால்நடை மருந்தகம் இப்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு புதிய கட்டிடம் ஒன்று தேவையென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் அரசு ஏற்று கட்டிடத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்த வரையில் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இன்றைக்கு கிராமப் புறங்களில் இருக்கிறவர்கள் தொலை தூரத்திலிருந்து ஏறத்தாழ 20 கிலோ மீட்டர், 30 கி.மீ. சென்று தங்களுடைய பத்திரங்களை பதிவு செய்கிற நிலைமையை மாற்றி ஒவ்வொரு பத்து கி.மீ. தூரத்தில் இருப்பவர்களும் பயன்பெறுகிற அளவில் சார் பதிவாளர் அலுவலகங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

அதே போல மாவட்டங்களில் இருக்கிற மாவட்ட பதிவாளர்கள் அலுவலகங்கள் ஒன்று இருந்த இடத்தில் சில மாவட்டங்களில் மூன்று இடங்களில் வைத்து, டிவிஷன் என்று சொல்லப்படுகிற கோட்டாட்சி அளவிலே அலுவலகங்களை அந்தப் பகுதிகளில் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

அந்த அளவிற்கு பத்திரப் பதிவுத் துறையில் பல்வேறு நல்ல மாற்றங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக பால்வளத் துறையில் நல்ல பல திட்டங்களைத் தமிழகத்தில் இருக்கிற பின்தங்கிய மக்கள் பயன்பெறுகிற வகையில் நிறைவேற்றி தந்திருக்கிறார்கள். பால்வளத் துறையில் அதிகமாக வருகிற பாலை வைத்து பேபிஃபுட் அதாவது குழந்தைகள் உணவு போன்ற பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்து மக்களுக்கு அவைகளை வழங்கி வருகிறார்கள்.

சென்னை நகரம் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களில் இருக்கிற நுகர்வோர்களுக்கும் நல்ல பாலை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பாலிதீன் பைகளில் பாலை அடைத்து சுத்தமான முறையில் வழங்கி வருகிறார்கள். பால் உற்பத்திப் பெருக்கம் நல்ல முறையில் பெருகி ஒன்றியங்களிலிருந்து வருகிற பாலை எல்லாம் நல்ல முறையில் பல உணவுப் பொருள்களாக உற்பத்தி செய்கிற நிலையில் பால்வளத் துறை நல்ல நிலையில் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தை ஆதரித்து, கொடுத்த வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள், பத்திரப்பதிவு, பால்வளம், கால்நடை பராமரிப்பு பற்றிய மானியக் கோரிக்கை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தின் பொருளாதாரத்தில் கால்நடை பராமரிப்பு ஒரிய பங்கு வகிக்கிறது என்றும் வேளாண்மை செழித்தோங்குவதற்கு அடையாளமாக திகழ்வது தரமான எண்ணிறந்த கால்





நடைகளும், அவைகளின் உற்பத்திப் பொருட்களுமேயாகும் என்றும் குறிப்பில் தெரிவித்திருக்கிறார்கள். இதே அறிக்கையில் 16 அம்ச திட்டங்களையும் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி நல்ல நோக்கத்தோடு அதற்காக நல்ல பல செயல் திட்டங்களை அறிவித்து இருந்தாலும், நடைமுறையில் எப்படி இருக்கிறதென்றால் மிக மோசமான நிலையில் கால்நடை பராமரிப்புத் துறை இருக்கிறது. இதனை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக இன்றைக்கு மருந்தகங்களில் போதுமான மருந்துகள் இல்லை என்று சொல்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-10)

அதைப்போல மருந்துகள் எல்லாம் தரமானதாக இல்லை என்று சொல்கிறார்கள். மருத்துவமனைகளுக்கு வரக்கூடிய மாடுகளுக்கு அல்லது கால்நடைகளுக்கு போதுமான மருந்துகள் இல்லாமல், நீங்கள் வாங்கிக் கொடுங்கள் என்று சொல்லக் கூடிய அளவிற்குத் தான் இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன. எனவே எல்லா இடங்களிலும், மருத்துவமனைகளிலும் கால்நடை நிலையங்களிலேயும் போதுமான அளவிற்குத் தரமான மருந்துகளை வைப்பதற்கும் வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் செயற்கை முறையில் கருவூட்டல் என்பது ஒரு காலத்திலே இனாமாகச் செய்யப்பட்டது. பின்னால் ஒரு ரூபாய் என்று சொல்லி, அரசு இரண்டு ரூபாய் வாங்குவதாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு 5 ரூபாய் என்று வாங்குகிறார்கள். அவர்கள் 5 ரூபாய் ஊசிக்கு என்று வாங்குவதோடு மட்டுமல்லாமல், இந்த ஊசியைப் போடுவதற்காகச் செல்லுகின்ற விவசாயிகளுக்கும் அதிகமான செலவுகளைச் செய்யவேண்டிய ஒரு கட்டாய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே அனைத்து மாடுகளுக்கும். இந்த ஊசியை இனாமாகப் போடவேண்டும், அதனால் விவசாயிகளும் ஏழை எளியவர்களும் பயன் அடைவார்கள். அந்த வகையில் 5 ரூபாய் என்று வாங்காமல், இனாமாக இந்த ஊசியைப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிளை நிலையங்களை எடுத்துக்கொண்டால், அவைகள் இன்றைக்குப்போதுமான அளவிலே இல்லை. குறிப்பாக ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும், 10 கிளை நிலையங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிளை நிலையமும் 5, 6 ரெவின்யூ கிராமங்கள் அல்லது 10 ரெவின்யூ கிராமங்கள் கொண்டதாக இருக்கிறது. அதனால் இந்தக் கால் நடை ஆய்வாளர்களோ

அல்லது டாக்டர்களோ விவசாயிகளோடு தொடர்பு கொள்வதிலே மிகச் சிரமங்கள் இருக்கின்றன. விவசாயிகளுடைய ஆட்டுக்கோ அல்லது மாட்டுக்கோ, ஏதாவது நோய் ஏற்பட்டால், கால்நடை உதவியாளர்களைத் தேடி அலைவதிலே மிகப் பெரிய சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே கால்நடை மருந்தகங்களையும், மருத்துவமனைகளையும் அதிகப்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும், ஒரு கால்நடை கிளை மருந்தகங்கள் உருவாக்கவேண்டும். அப்படி உருவாக்கினால்தான் இந்தக் காரண நோக்க விளக்கங்களிலே குறிப்பிட்டு இருப்பதைப் போல் அத்தனை கால்நடைகளையும் சரியான முறையில் பராமரிக்க முடியும். அந்த வகையில் ரெவின்யூ கிராமங்களிலே எல்லாம் மருந்தகங்களை அமைக்க வேண்டும். அப்படி இதை அமுலாக்குகின்ற வரையிலும், ஒவ்வொரு ஊராட்சிக்கும் அல்லது ஒவ்வொரு நகரத்திற்கும் ஒரு நடமாடும் மருத்துவமனையை உருவாக்கித்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல முட்டை, ஆடு, கோழி போன்ற கறிகளுடைய விலைகள் இன்றைக்கு எப்படி பிடிக்க முடியாத அளவிற்கு இருக்கிறது. எனவேதான் அவைகள் எல்லாம் தாராளமாக கிடைப்பதற்கு, குறைந்த விலையில் ஏழை எளியவர்களுக்குக் கிடைப்பதற்கு, அவைகளுடைய விலைகளைக் குறைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு அரசுப் பண்ணைகளிலே ஆடு வளர்ப்பிலே, கோழி வளர்ப்பிலே தனியார்கள் அதைச் செய்கிறார்கள். ஆனால் அவைகள் போதுமான அளவிற்கு இன்றைக்கு இல்லை. போதுமான கோழி உற்பத்தியும் இல்லாமல், ஆடு உற்பத்தியும் இல்லாமல், இருக்கிற காரணத்தால்தான் இன்றைக்கு மிகப் பெரிய சிரமங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. எனவேதான் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும், ஒரு அரசுப் பண்ணை அமைத்து, அங்கே கோழி, ஆடு, மாடு போன்றவைகளை எல்லாம் நவீன முறையிலே வளர்க்கும் சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அதன் மூலமாக விவசாயிகள் நல்ல பலன் அடையக் கூடிய வகையில் காரியங்கள் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைகளுக்கான தீவனங்கள் இன்றைக்கு தனியார்கள் மூலமாக பல இடங்களிலே விற்கப்படுகின்றன. அதன் காரணத்தால், இவைகளுக்குத் தேவையான தீவனங்கள் கிடைக்காமல் இருக்கின்றது. எனவே இந்தத் தீவனங்களை எல்லாம் கால்நடை மருத்துவமனைகளிலோ கிளை நிலையங்களிலோ விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





விளம்பரத்தைப் பற்றி எல்லாம் இந்த பாலிசி நோட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. விளம்பரம் என்று சொல்லும்போது, சினிமாப் படம் எடுத்து, அதன் மூலமாக நடத்தப்பட இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைவிட பாடத் திட்டத்தின் மூலமாக இந்தக் கால்நடைகளை வளர்ப்பது பற்றி, கோழி வளர்ப்பதைப் பற்றி, ஆடு வளர்ப்பதைப் பற்றி, பாடப் புத்தகங்களின் மூலம் கொண்டு வந்துசெய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பால் உற்பத்திக்கு ஐ.ஆர்.டி.பி. மூலமாக லோன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிக் கொடுக்கும் லோன் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்று சொன்னால், இதிலே வரக்கூடிய மானியத்தை பெறுவதற்காகத்தான் முயற்சி செய்கிறார்களோ தவிர. உள்ளபடியே அந்த மாடுகளை எல்லாம் வாங்கவில்லை. நம்முடைய ஆளும் கட்சி உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் ராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஒரே மாட்டை அல்லது ஒரே ஆட்டை, வாங்கக்கூடிய அந்த மாடுகளைத் திருப்பிக் காட்டிக் காட்டி, இன்றைக்கு சான்றிதழ் எல்லாம் வழங்கப்பட்டு, அந்தக் கடன்கள் எல்லாம் வாங்குகிறார்கள். உள்ளபடியே உண்மையாக மாடுகளை வாங்காமல், மானியத் தொகையைப் பெறுவதற்காகத்தான் இதிலே நடவடிக்கை இருக்கிறதே தவிர, இதிலே உள்ளபடியே மாடுகள் வாங்குவதில்லை. வங்கிகளிலே இருக்கக்கூடிய ஃபீல்ட் ஆபிசர்களாக இருந்தாலும் சரி, அல்லது ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அல்லது சான்றிதழ் வழங்கக்கூடிய டாக்டர்களாக இருந்தாலும் சரி, இன்றைக்கு அதற்குரிய பணங்களை குறிப்பிட்ட அளவிற்கு லஞ்சமாக பெறுவதற்காகத்தான் இருக்கிறதே தவிர, மாடுகள் வாங்குவதில்லை. குறிப்பாக ஆயிரம் ரூபாய் நமக்கு மானியம் கிடைக்கிறது என்று சொன்னால், அதிலே 500 ரூபாயைக் கொடு என்று கேட்கக் கூடிய அளவிற்கு சொல்லி, கையெழுத்து வாங்கிக் கொண்டு அதிலே தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மாடுகளைக் கூட வெளியிலே போய்தான் வாங்குகிறார்கள். அப்படி வாங்குகிற போது, அந்த மாடுகளை வாங்குவதற்கான சர்டிபிகேட் வழங்கக்கூடியவர்கள் டாக்டர்களாக இருக்கிறார்கள். அந்த டாக்டர்களுக்கு குறிப்பிட்ட அளவிற்குப் பணம் கொடுத்தால் தான் அதை வழங்குகிறார்கள். மானியம் பெறுவதற்காக, குறைந்த விலைக்கு வாங்கக்கூடிய மாடுகளைக் கூட உயர்ந்த விலை என்று சொல்லி, மானியத்தைப் பெற்று, பங்கு போட்டுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை தான் இன்றைக்கு இருக்கிறதே தவிர, உள்ளபடியே மாடுகளை வாங்கக்கூடிய சூழ்நிலை இல்லை. எனவே இவைகளை எல்லாம் திருத்தி அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஒரு பகுதியில் மாடு வாங்குவதற்கு அதிகாரிகள் அனுமதி கொடுத்தாலும் அந்த பாலை எடுத்துக்கொள்வதற்கு அந்த பால் வாங்கும் சங்கங்கள் மறுக்கிறார்கள். அதற்கு பல

சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே அந்த மாடு வழங்கும்போதே அந்த பாலை அந்த கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் வாங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கால்நடை பராமரிப்புத் துறையில் சுமார் 3,400 கால்நடை ஆய்வாளர்கள் பணியில் இருக்கிறார்கள். கால்நடை மருத்துவ மனைகள், கால்நடை மேம்பாட்டு வளர்ச்சித் திட்டம், ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம், சிறப்பு கால்நடை அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்களினால் மக்களுடைய அன்றாட தேவைகளை அறிந்து அரசு திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்கள். கால்நடை ஆய்வாளர்கள் எல்லாம் நிறுவப்பட்ட காலத்தில் இருந்து 30 ஆண்டுக்கு மேலாக இருக் கிறார்கள். கால்நடை ஆய்வாளர்களாக சேர்ந்து அப்பணி யில் இருந்து ஓய்வு பெறுகிற நிலையில் இருக்கிறார்கள்.

கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை மேற்பார்வை யாளர்களாக மொத்தம் 110 பேரில் 40 பேர் ஓய்வு பெற்று விட்டார்கள். அந்தப் பதவி காலியாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தக் காலிப் பதவிகளுக்கு ஆய்வாளர்களில் இருந்தே தேர்ந்து எடுக்கக்கூடிய முறையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். டாக்டர்களின், ஆய்வாளர் களின் குறைகளை உடனுக்குடன் களையப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவர்களுக்கு 10, 12 கிராமங்கள், 10, 12 கேந்திர நிலையங்கள் இருக்கிறன. அவைகளை எல் லாம் போய் பார்ப்பதற்கு டாக்டர்களுக்கு போக்குவரத்து சாதனங்கள் இல்லாத காரணந்நால் விவசாயிகளே அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே, அந்த போக்குவரத்து வாகன சாதனங்களை ஏற்படுத்தி அவர்களுக்கு போதிய சம்பளம் அல்லது ரிஸ்க் அலவன்ஸ் போன்றவைகளை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல் இலாக்காவில் ஆயிரக்கணக்கான ஊழியர்களை நிரந்தரம் ஆக்காமல் பல ஆண்டுகளாக அவர்கள் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். 300 ரூபாய், 400 ரூபாய் சம்பளத்தில் அவர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் ஓய்வு பெறும்போது கூட அரசு கொடுக்கும் சலுகைகளை பெற முடி யாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட ஊழியர்களை எல்லாம் நிரந்தரம் ஆக்கி மற்ற அரசு துறையில் பணி புரி பவர்களுக்கு எப்படி சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அதுபோல் அவர்களுக்கும் சம்பளம் வழங்கவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.





அதேபோல் இந்த பத்திர பதிவை எடுத்துக்கொண்டால் அது இன்றைக்கு ஏஜென்ட் மூலம் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஏஜெண்டுகளுக்கு போதுமான அளவுக்கு பத்திரங்கள் இல்லா மல் பல கஷ்டங்களை அடையக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பத்திரங்கள் அவர்களுக்கு தேக்கமின்றி கிடைப்பதற் கான சூழ்நிலை உருவாக்கவேண்டும்.

அந்த பத்திரங்களை விற்பனை செய்வதற்கு படித்த பட்டம் பெற்ற வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு கொடுத்து அவர் களை பயன்படுத்தவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

*திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு வரலாற்றுப் புகழ் பெற்ற சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, வாய் பேசும் நமக்கு பாலாக, நெய்யாக, புலவாக உணவாக மாறு கின்ற அந்த வாய் இல்லா ஜீவன்களின் கோரிக்கைகளை வலி யுறுத்தி வந்து இருக்கிற இந்த மானிய கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதில் நான் பெருமைப் படுகிறேன். அந்த கோரிக்கைகளை ஆதரித்து நான் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக எதிர் வரும் இளைஞர்கள் சமுதாயம் பலமான, வலுவான சமுதாயமாக அமைய வேண்டும் என்றால் பால் வளத் துறை சிறந்து ஓங்க வேண்டும். பால் வளத் துறை சிறந்து ஓங்க வேண்டும் என்றால் அதற்கு பாலமாக விளங்குகின்ற அந்த கால்நடைத் துறையை ஒரு குடையின் கீழ் வருகின்ற கருத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் இதய தெய்வம் அவர் கள் இன்றையதினம் பால் வளத்துறையையும், கால்நடைத் துறை யையும் ஒரே அமைச்சரின் கீழ் கொடுத்து இருக்கிறார்கள்.

முதற்கண் அதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திம் இன் றைக்கு அந்தத் துறைக்கு விவசாயப் பிரிவுக்கு இருக்கின்ற அரசுச் செயலாளரே இதற்கும் செயலாளராக இருக்கிறார். இது ஒரு பெரிய துறையாக இருக்கின்ற காரணத்தினால், பால், கோழி, கால்நடைப் பராமரிப்பு போன்றவை அடங்கியுள்ள இந்தத் துறைக்குத் ஒரு தனிச் செயலாளரை அரசு நியமிக்க வேண்டு மென்ற என்னுடைய கோரிக்கையை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–20)

பால் வளத்தைப் பொறுத்தவரையில், நேற்று, பாலைச் சொம்பில் எடுத்துக் கொண்டு சென்று நல்ல விலை கிடைக்காமல் அலைந்து, பாலும் கெட்டுப் போகின்ற சூழ்நிலை ஏற்பட்டதோடு, உபயோகப்படுத்துகின்றவர்களுக்கும் பால் கிடைக்காமல், அதே நேரத்தில் உற்பத்தியாளர்களுக்கும் தகுந்த விலை கிடைக்காமல் இருந்த நிலை நேற்று.

ஆனால், இன்றையதினம் நீங்கள் பார்ப்பீர்களேயானால், குஜராத்தில் இருக்கின்ற ஆனந்த் நிறுவனத்தைப்போன்ற நம்முடைய தமிழகத்திலேயும் எங்கே பார்த்தாலும் பால் வழங்கு சங்கங்கள் என்ற அமைப்புகள் கிராமங்களிலே, அதற்கடுத்தாற்போல், ஒன்றியம் என்ற ஒரு அமைப்பு மாவட்ட அளவிலே; அதற்கடுத்தாற்போல் மாநிலத்தில் பால் வழங்கு உற்பத்தியாளர்கள் இணையம் என்ற அமைப்பு. இப்படி மூன்று அடுக்கு மலர்களைக் கொண்டதாக பால் வழங்கு உற்பத்தித் துறையானது, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சரவர்களால் சீராக்கப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டு, குஜராத்தும் நம்மைப் பாராட்டுகின்ற அளவிற்கு, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்களே, அதைப்போன்று, பால் வளத் துறையின் தந்தை என்று கூறப்படுகின்ற அப்படிப்பட்ட டாக்டர் குரியன் அவர்களே கூடப் பாராட்டுகின்ற அளவிற்கு இன்றைக்கு பால்வளத் துறையானது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களின் தலைமையின் கீழ் இயங்குகின்ற அமைச்சரவையில் பொறுப்பேற்று இருக்கின்ற இந்த அமைச்சரவர்களின் முயற்சியால் இங்கே திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இது இன்றைய நிலை.

நாளையதினம், நம்முடைய தமிழகத்தின் பால்வளத் துறையானது, டென்மார்க்கில் உள்ள பால்வளத் துறையைப்போல், ஆஸ்திரேலியாவில் உள்ள பால்வளத் துறையைப்போல, இன்னும் மற்றும் பல வெளிநாடுகளில் உள்ள பால்வளத் துறையைப் போல இந்தப் பால்வளத் துறையில் சிறந்தோங்கும் அளவிற்கு உள்ள இந்த முயற்சிகளைப் பாராட்டுகின்ற இந்த நேரத்தில் ஒருசில கருத்துகளையும் நான் இந்த மன்றத்தில் எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாற்றுக் கருத்துடையவர்கள் ஒரு சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் கூறிய நேரத்தில் தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள்— பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மிகக் குறைந்திருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 5,502. இவைகள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அவைகள் ஒவ்வொருநாளும் உற்பத்தி செய்கின்ற பாலின் அளவு ஏறக்குறைய 10.06 இலட்சம் லிட்டர்களாகும்; உள்ளூர் சராசரி பால் விற்பனை 2.73 இலட்சம் லிட்டர்கள். இணையத்திற்கு வழங்கும் பால் சராசரியாக 7.33 இலட்சம் லிட்டர்கள் என்ற அளவிற்கு இன்றைக்குப் பால் உற்பத்தி பெருகியிருக்கிறது. அந்த அளவிற்குப் பால் உற்பத்தியைப் பெருக்கியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள் எதிர்வரும் காலத்தில் தமிழகத்தில் நல்ல மாற்றத்தை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கைக்கு ஒரு அடையாளமாகத்தான் இது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அதே நேரத்திலே இன்னொரு கருத்தையும் நான் கோடிட்டுக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். தமிழகத்தில் பால் வளத் துறையும், கால்நடைத் துறையும் ஒரு குடையின் கீழ் வந்துவிட்டது மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்பதைக் கோடிட்டுக் காட்டினேன்.

இந்தக் கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம் என்றும், பொலி காளை நிலையங்கள் என்றும், உறைவிந்து முறை விஸ்தரிப்பு என்றும், வம்சாவழி ஆய்வுத் திட்டம் என்றும், கால்நடைக் கண்காட்சிகளும் கன்றுகள் பேரணியும் என்றும், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் என்றும், கோழி வளர்ப்பு சங்கம் என்றும், பன்றி வளர்ப்பு சங்கம் என்றும், நாய் வளர்ப்புப் பிரிவு என்றும், பசுதீவனப் பயிர் வளர்ப்பு என்றும் இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் தமிழக அரசு செயலாற்றி வருகிறது. எதிர்வருங்காலத்தில் இந்தத் துறை நல்லமுறையில் செயல்படும் என்பதற்கு ஒரு நல்ல சமிக்ஞையாகவும், அடையாளமாகவும், இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு, ஒரேயொரு கருத்தை மட்டும் நான் வலியுறுத்தி விடைபெறலாம் என்று எண்ணுகிறேன்.

இங்கே கூறியதைப்போல் இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறையிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களைப் பற்றிய ஒரேயொரு புள்ளி விவரத்தைப் பற்றி மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். பி. ஐ. எம். என்ற அந்த மருத்துவப் படிப்பைப் படிக்கின்றவர்கள் 5 ஆண்டுகளும் 6 மாதங்களும் படிக்கிறார்கள்; பி.டி.எஸ். என்ற அந்த மருத்துவப் படிப்பைப் படிக்கின்றவர்கள் 4 ஆண்டுகளும் 1 வருஷமும் படிக்கிறார்கள்; எம். பி. பி. எஸ். என்ற அந்த மருத்துவப் படிப்பைப் படிக்கின்றவர்கள் 4 ஆண்டுகளும் 1 வருஷமும் படிக்கிறார்கள். ஆனால் பி.வி.எஸ்.சி., என்ற இந்தக் கால்நடை மருத்துவத்தைப் படிக்கிறவர்கள் ஐந்தேகால் ஆண்டுகளும், 6 மாதங்களும் படிக்கிறார்கள். இப்படிப் படித்து வருகின்ற அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைப் பற்றி அருள்கூர்ந்து இந்த மாமன்றம் கவனிக்க வேண்டுகிறேன்.

மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம், நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி 1,340 ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பி.வி.எஸ்.சி., படித்தவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம் 1,160 ரூபாய்தான்.

ஆகவே, பணிவன்போடு என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். உடல் உபாதைகளைப் பொறுத்துக் கொண்டு வாயில்லா ஜீவன்களோடு இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அந்த மருத்துவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்தைப் மாற்றி, மற்ற மருத்துவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்தைப்போன்று கொடுக்க வேண்டுமென்பதைக் கோடிட்டுக் காட்டுகிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள்.ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்றார்கள். அது அத்தியாவசியமான ஒன்று. கேரளா விலே இருக்கின்ற கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. நாருடீன் அவர்கள் கடந்தச் சட்டமன்றத் தொடரில் அங் கீகரிப்பதாகக் கூறி இருக்கிறார்கள். அதைப் போலவே, நமது சட்டமன்றத்திலும் அங்கீகரித்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது பட்டுக்கோட்டைத் தொகுதியில் இருக்கிற கால்நடை மருத்துவ மனைக்கு நாங்கள் இடம் தரத் தயாராக இருக் கிறோம். அதை கிளினிஷியன் சென்ட்டர் என்ற முறையில் தலைமை மருத்துவ மனையாக ஆக்க வேண்டுமென்ற பணி வான வேண்டுகோளை வைத்து, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் தொடர் பாக இன்றைக்கு எங்களுக்கு ஆவின்.உணவுப்பொருள்களை அன் பாக அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஒரே நாளில், 4, 5 பொருள்களைத் தந்து எங்களுடைய வயிற்றைக் கெடுக்காமல், தினசரி ஒன்றாக அதைக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, இந்த முத்திரைத்தாள், பத்திரப் பதிவு, பால் வழங்குத் திட்டம் மற்றும் கால்நடை வளர்ச்சி மானியக் கோரிக்கைகளிலே ஒருசில கருத் துக்களை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சொல்லி அமரலாம் என்று நினைக்கிறேன்.

முதலிலே, முத்திரைத்தாள் பத்திரங்களைப் பொறுத்தவரை யிலே, Min:m m number of stamps shoıld be used என்று சட்டத்திலே இருந்தாலும்கூட, தற்போதுள்ள நடைமுறை சிக்கல்களின் காரணமாக அதிகமான முத்திரைத் தாள்கள் உப யோகிக்கப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். தற் போது, முத்திரைத் தாள் முகவர்களுக்குக் கொடுக்கப்படுகிற கமிஷன், அல்லது கட்டணம், அவர்கள் விற்கின்ற மொத்த முத் திரைத்தாள் அளவிலே இல்லாமல், அவர்கள் விற்கின்ற ஒவ் வொரு தனிப்பட்ட தாள்களின் அளவிலே இருப்பதால், என் போன்ற வழக்கறிஞர்கள், ரூ. 5,000, ரூ. 10,000 மதிப்புள்ள முத்திரைத்தாள்கள் வாங்க வேண்டுமென்று கேட்டால், அவர்கள் ரூ. 5,000, ரூ. 10,000 மதிப்புள்ள முத்திரைத்தாள்களில் கமிஷன் அதிகம் இல்லையென்ற காரணத்தால், ரூ. 100 மதிப்புள்ள முத்திரைத்தாளில் கமிஷன் அதிகம் இருக்கின்றது என்ற காரணத் தால், ரூ. 100 மதிப்புள்ள ஸ்டாம்புகளை அதிகம் வாங்க வேண்டு மென்று கட்டாயப்படுத்துகிற காரணத்தாலே அரசுக்கு இரண்டு விதமான இழப்புகள் ஏற்படுகின்றன.





முதலில், ரூ. 100 மதிப்புள்ள ஸ்டாம்புகள் என்ற காரணத் தால், தனிப்பட்ட முறையிலே அதிகமான கமிஷனை நீங்கள் செலுத்துகிறீர்கள். அடுத்தபடியாக, ரூ. .5,000 மதிப்புள்ள முத்திரைத் தாளை வாங்க வேண்டிய இடத்திலே ரூ. 50, ரூ. 100 மதிப்புள்ள முத்திரைத்தாள்களை வாங்க வேண்டியிருப் தால், எங்களைப் போன்றவர்களுக்கு வேலை அதிகமாவதோடு கூட அரசுக்கு, மிக விலை உயர்ந்த செக்யூரிட்டி பேப்பர் என்று சொல்கின்ற அந்த முத்திரைத் தாளிலே அதிகமான செலவினங்கள் ஏற்படுகின்றன. நான் இந்த மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பைப் படிக்கும்போது, கமிஷன் மூலமாக ரூ. 63 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது என்பதையும் நாசிக் பிரசுக்கு ரூ. 41 இலட்சம் அளித்திருக்கிறோம் என்பதையும் அறிந்து கொண் டேன். நான் சொல்கின்ற முறையில், ஒவ்வொரு முத்திரைத் தாளின் மதிப்பில் இல்லாமல், விற்கின்ற மொத்த விற்பனை அடிப்படையிலே, நீங்கள் கமிஷன் கொடுப்பீர்களானால், இந்தத் தொகை பெருவாரியாக, ரூ. 50 இலட்சமாகக் குறையக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

முத்திரைத்தாள்கள் ஏமாற்று தடுப்புச் சட்டம் Prevention of under—Valuation of St.mp Rules என்று இருக்கிறது. அதன்படி ஆர்.டி.ஓ.க்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் தற் போது அவர்களால் ஒழுங்காகச் செயல்படுத்தப்படாத காரணத் தால், சப் ஜட்ஜ் என்று சொல்லி, சப் கோர்ட்களுக்கு வந்து, அவர்கள் ப்ரொசீஜரல் இர்ரெகுலாரிட்டீஸ் என்று திரும்ப ரிமாண்ட் செய்கின்ற கொடுமைகளை கொடுக்கப்பட்டிருக்கிற ஸ்டாடிஸ்டிக்ஸ் மூலமாக அறிய முடியும். ஆகவே, இந்த அன்டர் —வால்யுவேஷன் ரூல்படி, ஆர். டி.ஓக்களுக்கு இருக்கின்ற அதி காரங்களை உடனடியாகச் சட்டப்படி செலுத்தியாக வேண்டு மென்று வலியுறுத்த வேண்டுமென்று நான் சொல்ல விரும்பு கிறேன்.

'வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு'

என்று வள்ளுவர் பெருந்தகை சொல்வது போன்று, இன்றைக்குத் தமிழகத்திலேதான் மிக அதிகமாக ஸ்டாம்ப் டியூட்டீஸ், ரிஜிஸ் டிரேஷன் சார்ஜஸ் இருக்கிற காரணத்தினாலே, பல்லாயிரக்கணக் கான, பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக் களை தமிழகத்திலே ரிஜிஸ்டிரேஷன் செய்யாமல், ஸ்டாம் டியூட் டீஸ், ரிஜிஸ்டிரேஷன் சார்ஜஸ் மிகக் குறைவாக இருக்கிற கேரளா வில், ரூ. 100 மதிப்புள்ள சொத்துக்களைச் சேர்த்துக்கொண்டு, கேரளாவிலே பத்திரங்களை ரிஜிஸ்டிரேஷன் செய்வதன் மூலமாக தமிழகத்திற்குப் பல இலட்சம் ரூபாய்க்கு, ஸ்டாம்ப் டியூட்டி மூலமாகவும், பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் ரிஜிஸ்டிரேஷன் மூலமாகவும் பண இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, தமிழகத்திலே இருக்கிற ஸ்டாம்ப் டியூட்டியையும், தமிழகத்திலே இருக்கிற

ரிஜிஸ்டிரேஷன் சார்ஜையும், கேரள அரசாங்கத்தில் இருப்பதைப் போன்று குறைக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு முதற்கண் என் ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கேரளாவைப் பற்றிச் சொல்லும்போது, என் தொகுதியிலே உள்ள செங்கோட்டைப் பகுதியிலே, மலையாளத்திலே 1953-வது ஆண்டுவரை டாக்குமென்டுகள் எழுதப்பட்டதன் காரணமாக இன்றைக்கு மலையாளத்திலே எழுத ஒரு காப்பியிஸ்டும் இல்லாததன் காரணமாக, பத்திரங்களுக்குக் காப்பி எடுப்பதற்கு கஷ்டங்கள் இருக்கிற காரணத்தால் உடனடியாக, செங்கோட்டைக்கு மலையாளம் தெரிந்த ஒரு காப்பியிஸ்டை நீங்கள் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரிஜிஸ்டிரேஷன் பற்றி பேசும்பொழுது ஈக்குவிட்டபிள் மார்ட்கேஜ் இன்றைக்குத் தாலுகாவினுடைய தலைநகரங்களில் விஸ்தரிக்கப்பட்டு விட்டதன் காரணமாக, ஏற்கப்பட்ட மார்ட்கேஜ்கள் இன்றைக்கு வங்கிகள் மூலமாக ஏற்படுத்தப்படுகின்றன.

[பிற்பகல் 1—30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: இன்றைக்கு ரெஜிஸ்திரேஷன் ஆபீசில் என்கம்பரன்ஸ் சர்டிபிகேட் கேட்கும்போது இந்த ஈக்விட்டபிள் மார்ட்கேஜ் துலங்குவதில்லை. பலருக்கும் இது தெரியாமல் இருக்கிறது. ஆகவே ரெஜிஸ்திரேஷன் ஆக்டை அமென்ட் செய்து ஈக்விட்டபிள் மார்ட்கேஜும், பணம், கட்டணம் எதுவும் இல்லாமல், என்கம்பரன்ஸ் சர்டிபிகேட்டில் துலக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு சிவில் கோர்ட் ஜட்ஜ்மென்டுகள் பற்றி நாம் அறிவோம். கடன் பெற்றதற்காக அல்லது வேறு காரியங்களுக்காக கோர்ட் மூலம் சொத்தை அட்டாச்மென்ட் செய்வார்கள். ஜட்ஜ்மென்ட் கொடுப்பதற்கு முன்னாலும் அட்டாச்மென்ட் பிபோர் ஜட்ஜ்மென்ட் கொடுப்பார்கள் அட்டாச்மென்டாக இருந்தாலும், அட்டாச்மென்ட் பிபோர் ஜட்ஜ்மென்டாக இருந்தாலும் சப்-ரெஜிஸ்திரார் ஆபீசில் வில்லங்க சர்டிபிகேட் வாங்கும்போது அதிலே துலங்குவதில்லை. ஆகவே. ஏதாவது ஒரு குறைந்த கட்டணத்தைப் பெற்றுக்கொண்டாவது, ஜட்ஜ்மென்ட் கொடுத்த அன்றைக்கே அது சப்-ரெஜிஸ்திரார் ஆபீசில் பதிவு செய்யப்பட வேண்டும். அதைப்போன்று அந்த





அட்டாச்மென்ட் விலக்கிக்கொள்ளப்பட்டால் விலக்கிக் கொள்ளப்பட்டவுடனேயும் சப் ரெஜிஸ்திரார் ஆபீசில் பதிவு செய்யப்பட வேண்டும், என்ற என்னுடைய எளிய யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் மூலமாக பல வழக்குகளை தடுக்க முடியும்.

உதாரணமாக சேல்ஸ் டாக்ஸ்டிபார்ட்மென்டில் அட்டாச்மென்ட் செய்தால் உடனே அவர்கள் சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்திற்கு தகவல் அனுப்பிவிடுகிறார்கள்; அங்கே அது பதிவு செய்யப்படுகிறது. அதனால் வில்லங்க சர்டிபிகேட்டில் அது துலங்கிவிடுகிறது. அதைப்போன்று சிவில் கோர்ட்டில் அட்டாச்மென்ட் செய்தாலும் சப் ரெஜிஸ்திரார் ஆபீசுக்கு தகவல் அனுப்பி, பதிவு செய்து, வில்லங்க சர்டிபிகேட்டில் துலங்க ஏற்பாடு செய்கின்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால் நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில் டாப்கோ என்று சொல்லப்படுகின்ற கோழி வளர்ப்புத் துறையைப் பற்றி இன்று காலையிலேகூட நான் குறிப்பிட்டேன். 1979—80 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டு காலமாக இந்த மன்றத்திலே அந்த டாப்கோ நிறுவனம் பற்றிய ஆண்டு அறிக்கை வைக்கப்படவில்லை. 7-வது ஆண்டு அறிக்கை இந்த மன்றத்திலே 6—4—1985 அன்றுதான் வைக்கப்பட்டது. இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். உடனடியாக இந்த மன்றத்திலே எல்லா அறிக்கைகளையும் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இங்கே இருக்கிற பாலிசி நோட்டில் பக்கம் 2-ல் டாப்கோ ப்ரொடக்ஷன் என்று சொல்லி, 1980 முதல் 1985 வரை 31,446 டன் ப்ரொடியூஸ் செய்யப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் 32,286 மெட்ரிக் டன் விற்கப்பட்டதாகவும் சொல்லி யிருக்கிறார்கள். இது ஒரு விசித்திரமான கணக்காக இருக்கிறது. உற்பத்தி செய்ததைவிட விற்பனை செய்தது 840 டன் கூடுதல் என்ற கணக்கைத் தந்திருக்கிறார்கள். உடனே அதற்கு முந்தைய ஆண்டு கணக்கைப் பார்த்தேன். 1979—80 ஆம் ஆண்டில் ப்ரொடக்ஷன் என்ன என்று பார்த்ததில் 133 டன் கூடுதல் என்று தெரிந்தது. அதைக் கழித்தால் இங்கே தரப்பட்டிருக்கிற கணக்கு சரியானது அல்ல. இவ்வளவு தவறாக இருக்குமானால் 7 ஆண்டு கால டாப்கோ ரிக்கார்டுகளில் எவ்வளவு தவறு இருக்கும், யார் அதை கவனிப்பது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. டாப்கோவினுடைய வெண்டிங் ஸ்டால்கள் பல மூடப்பட்டிருக்கின்றன. இங்கே ஆனந்த் தியேட்டருக்கு அருகில் இருக்கிற வெண்டிங் ஸ்டால், அதைப்போன்று அண்ணா நகரில் இருக்கிற வெண்டிங் ஸ்டால், அதைப்போன்று அகில இந்திய வானொலி நிலையத்திற்கு எதிரில் இருக்கிற வெண்டிங்

ஸ்டால் எல்லாம் மூடிக்கிடக்கின்றன. இந்த ஸ்டால்களை உடனடியாகத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையில் ''இன்ஸ்டிடியூட் ஆப் வெட்டரினரி பிரிவென்டிவ் மெடிசின்'' இருக்கிறது. சிறப்பாக அங்கே கோழி நோய் தடுப்பு ஊசி மருந்து தயாரித்து கொடுக்கப்படுகிறது. எல்லோரும் அங்கே போய் வாங்க வேண்டுமென்றால் மிகுந்த சிரமம் ஏற்படும். அந்த மருந்து ஒவ்வொரு மாவட்ட அளவிலும் கிடைக்க தகுந்த ஏற்பாடு செய்து, அந்த ஏற்பாட்டின் மூலம் இந்த தடுப்பு ஊசி மருந்து விநியோகத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளத் துறையைப் பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால் இந்தத் துறைக்கு முதன் முதலாக ஒரு தொழில் வல்லுநரைத் தலைவராகப் போட்டதற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழ் நாட்டிற்கு ஜெர்மன் நாட்டு மாடுகள் இனாமாகத் தரப்படுகின்றன [illegible] செய்தி தெரிந்தவுடன் முதலிலே நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தோம். பிறகு யோசித்துப் பார்த்த பின்னால்தான் இனாமாக வருகிற மாடுகள் எப்படி இருக்கும் என்ற சந்தேகங்கள் நமக்கு ஏற்படுகின்றன. இனாமாகக் கொடுக்கப்படுகிற மாடுகளுக்கு பல இலட்சக்கணக்கான ரூபாய்களை இந்த அரசு செலவு செய்து, அவற்றை இங்கே கொண்டுவரும்போது பலன் இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த மாடுகள் நல்ல தரமான மாடுகளா? அதனால் நமக்கு பலன் கிடைக்குமா? என்பதைப் பார்க்க வேண்டும். இனாமாக வருகிற மாடுகள் அடிமாடுகளாக இருந்தால் எந்தவிதமான பயனும் இல்லை. அடிமாடுகள் என்று பச்சாதாபப்பட்டு அவற்றை இறக்குமதி செய்வதில் பயனில்லை. அவற்றின் லாக்டேஜன் பீரியடு என்ன? ஈல்டு எவ்வளவு இருக்கும்? கன்றுகள் ஈனும் திறன் என்ன? ஏற்கனவே எத்தனை கன்றுகள் ஈன்றிருக்கின்றன? பால் கறவை எப்படி இருக்கும்? வியாதி ஏதாவது இருக்கிறதா என்பதை எல்லாம் ஆராய்ந்து நாம் இதிலே செயல்பட வேண்டியிருக்கிறது. ஓசிக்குத் தருகிறார்களே என்பதற்காக சட்டியை எடுத்துக் கொண்டு போகக்கூடாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அது பற்றிய விவரங்களை எல்லாம் பரிசோதனை செய்த பிறகு அதனை வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பால் வளத்தைப் பற்றிப் பேசுகின்றபோது கடந்த [illegible] வளர்ச்சியினைப் பார்த்தால் 1980–81 ஆம் [illegible] 6,316 [illegible] என்றிருந்த மாடு வளர்ப்பு 1981–82 [illegible] சதவிதமாக உயர்ந்து 1982–83 ஆம் ஆண்டு [illegible] குறைந்திருக்கின்றது. இவ்வாறு குறைந்த





தற்கான காரணத்தைப் பற்றி விசாரிக்கின்றபோது மூன்று முக்கியமான காரணங்கள் தெரிய வந்தன. அதாவது அன்-எக்கனாமிக்கல் ஃபோல்டிங் என்ற வகையில் அதாவது மாடுகளை வளர்ப்பது கட்டுப்படியாகவில்லை, தீவனங்களின் விலை ஏறி விட்டது என்று........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடித்துவிட வேண்டும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாடுகளின் தீவன விலை இன்றைக்கு அதிகரித்திருக்கின்றது. இப்படி தமிழகத்தில் மாட்டுத் தீவனங்களின் விலை அதிகரித்திருக்கின்ற நிலைமையில், தமிழகத்திலிருந்து பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மாட்டுத் தீவனங்கள் கேரளாவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. தென்காசியிலிருந்து 25 லாரிகள் மூலமாக கேரளாவிலிருக்கின்ற கொல்லத்திற்கும், கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரத்திற்கும் மாட்டுத் தீவனங்கள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. இவ்வாறு பார்டர்களில் ஏற்றிச் செல்வதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கருவூட்டல் திட்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1984–85 ஆம் ஆண்டு 4,39,769 மாடுகளுக்குச் செயற்கை முறையில் ஊசிகள் போடப்பட்டதில் 88,817 கன்றுகள் தான் பிறந்தன. இது மொத்தத்தில் 20 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கின்றது. 1984–85 ஆம் ஆண்டில் 3,83,582 மாடுகளுக்கு ஊசி போட்டதில் பிறந்த கன்றுகள் 76,039 தான். மொத்தம் 19 சதவீதம்தான் வந்திருக்கின்றன. எனவே இவ்வாறு செயற்கை முறைக் கன்றுகளை உருவாக்குகின்ற திட்டம் தமிழகத்தில் தோல்வி அடைந்திருக்கின்றது. அவ்வாறு தோல்வி அடைந்ததற்கு காரணம், அடிக்கடி ஏற்படுகின்ற மின்சாரத் தட்டுப்பாடுதான் என்று சொல்லப்படுகின்றது.

மேலும் இவ்வாறு கன்றுகள் ஏற்படுவதில் குறைவு வருகின்றது என்பது போல் பால் உற்பத்தியிலும் குறைவு ஏற்பட்டிருக்கின்றது. 1981–82 ஆம் ஆண்டு 188 கிலோவாக இருந்த பால் உற்பத்தி 1982–83 ஆம் ஆண்டில் 178 கிலோவாகக் குறைந்திருக்கின்றது. அதாவது 10 கிலோ குறைந்திருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் மட்டும் 2 கோடி கிலோ குறைவும், கோவை மாவட்டத்தில் 10 கோடி கிலோ குறைவும் ஏற்பட்டிருக்கின்றன. எனவே உடனடியாக தமிழக அரசு செயற்கை கருவூட்டல் முறை திட்டத்தை கைவிட்டு உறை விந்து திட்டத்தின் மூலமாக அதாவது ஃப்ரோஸன் செமன் என்று எனக்குமுன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள், அந்த திட்டத்தின் அடிப்படையிலே கன்றுகளை உருவாக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1985 ஜூலை 5

அடுத்து கால்நடை மருத்துவர்கள் மினிமம் 5 கால்நடைகளைப் பராமரித்தால் போதும் என்று கணக்கு வைத்திருப்பதாக அறிகிறேன். இது மிகவும் குறைவு. ஒரு கால்நடை ஆய்வாளர் ஒரு நாளில் 30 கால்நடைகளைச் சோதனை செய்தால்தான் ஒரு கால்நடை மையத்திற்கு கால்நடை ஆய்வாளர் ஏற்படுத்தலாம் என்கின்ற கணக்கை ஒரு பக்கத்திலே நாம் வைத்திருக்க, ஒரு நாளைக்கு ஒரு டாக்டர் 5 கால்நடைகளைப் பரிசோதனை செய்தால் போதும் என்று சொல்வது சரியில்லை. இதை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மருத்துவர்களுக்குக் கால்நடை அடிப்படையிலே கொடுக்கப்படுகின்ற மருந்துகளை அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சுரண்டை நகரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தென்காசியிலிருக்கின்ற பராசக்தி மகளிர் கல்லூரியில் எம்.எஸ்.சி. டெய்ரி சயின்ஸ் படித்த பெண்கள் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். கால்நடை துறை மூலமாகவும், பால் வளத்துறை மூலமாகவும் அவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோச்சம்பள்ளியில் உள்ள கால்நடைத் தீவனத்திற்கான மூலப் பொருள் ஆவின் தீவன உற்பத்தி நிலையத்தால் வாங்கப்படாமல் கேரள அரசால் வாங்கப்பட்டு, அங்கே கொண்டு செல்லப்பட்டு அங்கேயுள்ள கால்நடைகள் பலன் அடைந்துக் கொண்டிருக்கின்றன.

அதேபோல் மாதவரம் பால் வளத்துறையில் இருக்கின்ற ஆவின் தீவனத் தொழிற்சாலையும் அவற்றை வாங்க வேண்டும் என்று உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையிலே இருக்கின்ற ஐ.வி.பி.எம். என்ற நிலையத்தினை மேல்நிலைப் படிப்புக்கு உள்ள நிலையமாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்தில் 13 காலியிடங்கள் இருக்கின்றன. அங்கே உடனடியாக தகுந்த ஆட்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(பிற்பகல் 1-40)

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னாலே 2 கருத்துக்களை வைக்க விரும்புகிறேன், அதற்கான பதிலையும் அவர்கள் சேர்த்துச் சொல்ல வேண்டும் என்பதற்காக.



1985 ஜூலை 5] [திரு. அ. ரகுமான்கான்]

முதலாவது கோரிக்கை பால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் பால் விலையைக் குறைத்து நீங்கள் அதற்கான அறிவிப்பை தர வேண்டும். அத்தோடு மாதவரம் பால் பண்ணையிலே 1,800 தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டு 5 ஆண்டுகள் ஆகின்றன. நீதி மன்றம் அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. அது தற்போது லேபர் கோர்ட்டிலே ரெஃபர் பண்ணப்பட்டு இருந்தாலும் கூட, அது குறித்து நீங்கள் பரிசீலித்து பதிலை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 மணி நேரமாக 4 மானியங்களின் மீது மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் தங்களுடைய நல்ல கருத்துக்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். காலம் கருதி, சுருக்கமாக சில தகவல்களை மட்டும் இந்தச் சபைக்கு சொல்லி, மற்றவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு, துரிதமாக நடவடிக்கை எடுக்க முயற்சி எடுப்பேன் என்பதையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கருத்துக்களை நல்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கால் நடை துறையை மேலும் மேலும் கிராமப் பொருளாதாரத்தில் ஒரு கேந்திரமான இடத்தை வகிக்கத்தக்க வகையில் நல்ல ஆலோசனைகளையெல்லாம் நல்கியிருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய தமிழகத்தினுடைய பொருளாதாரம் கிராமப் பொருளாதாரத்தை ஒட்டியிருக்கிறது. கிராம வளர்ச்சியை ஒட்டியிருக்கிறது. கிராம வளர்ச்சி என்பது கால் நடைச் செல்வம் எப்படி வளர்கிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. ஆகவே தான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கால் நடை துறையைப் பேணிக் காக்க எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

குறிப்பாக இந்தக் கால்நடை துறையினுடைய வாயிலாக சில பொருளாதார மாறுதலை கிராம புறங்களிலே கொண்டு வர நாங்கள் முயன்று கொண்டு வருகிறோம் பால் வளம் பெருக்குவதில், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, அதே நேரத்தில் நம்முடைய கால் நடைகளின் தரத்தை உயர்த்துவது,—அப்கிரிடேஷன்—என்ற பல விழுமிய நோக்கங்களுக்காக இன்றைக்கு கால் நடை பராமரிப்புத் துறை, பல முயற்சிகளை செய்து வருகிறது.

இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னது போல, இன்றைக்கு தமிழகத்தில் ஒரு அற்புதமான மாறுதல் இந்த கால் நடைத் துறையிலே புகுத்தப்பட்டிருக்கிறது. அது தான், ப்ரோஸன் செமன் டெக்னாலஜி எனப்படுவது. 10 ஆண்டுகளுக்கு முன்பு இது அரிதாக இருந்தது. 5 ஆண்டுகளுக்கு முன்பு மிகச் சிறிய அளவிலே அது புகுத்தப்பட்டது. இன்றைய

தினம் பரவலாக தமிழகத்திலே இருக்கிற எல்லா கிராமங்களிலேயும் இருக்கிற விவசாயிகள் ப்ரோஸன் செமன் என்கிற முறையினை, உறை விந்து முறையில் கால் நடைகளை பெருக்குகிற முறையை ஏற்றுக் கொள்கிற வகையில் சிறந்த நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது.

தமிழ் நாடு முழுவதும் ஏறத்தாழ 887 நிலையங்களில் உறை விந்து முறை செயல்பட்டு வருகிறது. குறிப்பாக அதற்குத் தேவைப்படுவது— மாண்புமிகு உறுப்பினர் அருமை சகோதரர் குப்புசாமி அவர்களுடைய பேச்சிலேகூட எடுத்துச் சொன்னது போல —இந்த லிக்குவிட் செமனை ப்ரோஸன் செமன் என்ற அந்த டெக்னாலஜிக்கு கொண்டு வந்து தயாரிப்பதற்கு, லிக்குவிட் நைட்ரஜன் அடிப்படை தேவையானது என்று சொன்னார்கள். ஒரு காலத்தில் அதை வெளி மாநிலங்களிலிருந்து நாம் பெற்றுக் கொண்டிருந்தோம். இன்றைக்கு அதில் தன்னிறைவு அடைகிற வகையில், கடந்த 3 ஆண்டுக் காலத்திலே, சேலத்திலேயும் ஈரோட்டிலேயும் அதற்கான ஆலைகள் தொடங்கப் பெற்று, லிக்குவிட் நைட்ரஜன் என்ற பொருள் அங்கிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக 3 மாதங்களுக்குள்ளாக விருதுநகரிலே 60 இலட்சம் ரூபாயிலே முதலீடு செய்து லிக்குவிட் நைட்ரஜன் ஆலை ஒன்று புதிதாக உருவாகி வருகிறது. அதைத் தொடங்க இருக்கிறோம். அதன் காரணமாக தென் மாவட்டங்களில், திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் காமராஜர் மாவட்டம், ஆகிய மாவட்டங்களில் இருக்கிற விவசாயிகளுக்கு, விருதுநகரில் வர இருக்கிற அந்த ஆலை பயன்படும் என்று கருதுகிறேன். அதன் மூலமாக ப்ரோஸன் செமன் டெக்னாலஜி மேலும் மேலும் வளர்ந்து செயற்கை கருவூட்டல் முறை மக்கள் மத்தியிலே செல்வாக்கு பெற்று இருக்கிறது. குறிப்பாக இந்தச் செயற்கை கருவூட்டல் முறை காரணமாக 1984—85ல் ஏறத்தாழ 6 இலட்சம் செயற்கை முறை கருத்தரிப்பு ஊசிகள் போடப்பட்டன. எங்களுக்குக் கிடைத்த தகவல்படி அதில் 7 லட்சம் கன்றுகள் பிறந்து இன்றைக்கு அவைகள் விவசாயிகளுக்கு ஒரு நல்ல அடிப்படையை கால் நடைத் துறையில் நல்கி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல சில திட்டங்களின் வாயிலாக, குறிப்பாக 'கீ வில்லேஜ் சென்டர்ஸ்'' மற்றும் 'இன்டென்சிவ் கேட்டில் டெவலப்மென்ட் சென்டர்ஸ்' என்ற இரண்டு திட்டங்களின் வாயிலாக தீவிர அபிவிருத்தி காரியங்கள் எல்லாம் நடைபெற்று கொண்டுவருகின்றன. அவைகள் எல்லாம் இன்றைக்கு கொள்கைக் குறிப்பிலே விவரமாக தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்றைய தினம் கால் நடை வளர்ச்சியினுடைய துரிதமான போக்கினை நீங்கள் உணர வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து இன்றைக்கு கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்த வரையில் வேறு சில பிரச்சினைகள் எதிர் நோக்கியிருக்கிறது. அவற்றை தீர்ப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். குறிப்பாக சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 3, 4 இலட்சம் ஸ்ட்ரே கால்நடைகள் இருக்கின்றன. அவை நம்முடைய சென்னை நகரத்தினுடைய சுகாதாரத்திற்கும், பொதுவான சுற்றுப்புற சூழலை நாம் பாதுகாக்கிற முயற்சியில் அவைகள் தடைக் கல்லாக இருந்து கொண்டிருக்கின்றன. சென்னை நகரத்தினுடைய பொது மக்களின் நலனுக்கு அவைகள் அறைகூவலாக இருக்கின்றன. அந்தப் பிரச்சினையில் தீர்வு காணவேண்டுமென்று அரசு முடிவெடுத்து இருக்கிறது. குறிப்பாக இன்றைக்கு சென்னை நகரத்திலே இருக்கிற மூன்று இலட்சம் மாடுகளினால் சுற்றுப் புறத் தூய்மை கெடுகிறது. வடிகால் வசதியை அவைகள் அடைப்பதால் கொசுத் தொல்லை அதிகரித்து வியாதிகள் பரவுவதற்கு மாடுகள் காரணமாக இன்றைக்கு சென்னையில் இருக்கின்றன. இவற்றை புறநகர் பகுதிகளுக்கு, இன்றைக்கு பம்பாயில் இருப்பதைப் போல அகற்றினால், சுற்றுப் புறத் தூய்மையில் விரும்பத்தக்க மாற்றங்களை உருவாக்கலாமென்று தமிழக அரசு உறுதியாக நம்புகிறது. இவ்வாறு மாடுகளை அகற்ற வேண்டுமென்றால் சில எச்சரிக்கையான நடவடிக்கைகளை விழிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பிலே நாம் இருக்கிறோம்.

அந்தப் பிரச்சினைக்குப் பின்னாலே இருக்கிற பொருளாதாரக் காரணத்தை என்னைப் போன்றவர்கள் நன்றாக உணர்வோம். இன்றைக்கு நாட்டு மக்கள் மத்தியிலே நாங்கள் நாளும் பழகுகிற வாய்ப்பிருக்கிறது. குறிப்பாக என்னுடைய சட்ட மன்றப் பேரவைத் தொகுதியான ஆயிரம் விளக்குத் தொகுதியை எடுத்துக் கொண்டாலும் கூட, இன்றைக்கு அதனுடைய அடிப்படையை நான் உணர்கிறேன். இன்றைக்கு 2 மாடுகள், 3 மாடுகள் என்று வைத்திருப்பவர்கள் .சென்னையில் இருக்கிறார்கள். அவர்களை பெரிய சீமான்கள் என்று சொல்லவில்லை. பெரிய செல்வந்தர்கள் என்று சொல்லவில்லை. செல்வாக்கு மிக்கவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஒரு மாடு, இரண்டு மாடு என்று வைத்திருக்கிறவர்கள், நான் வாழ்கிற சண்முகம் சாலைக்குப் பின்னாலே அம்மையப்பன் தெரு என்று ஒன்று இருக்கிறது. அங்கே இருப்பவர்கள் ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு மாடுகளும் மூன்று மாடுகளை வைத்திருப்பார்கள். அவர்கள் எல்லாம் தங்களின் சுய தேவைக்காக தங்கள் வாழ்க்கைக்கு அவற்றை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதனையும் புரிந்து கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் மாடுகள் எல்லாம் சென்னையில் 3 இலட்சம் இருக்கிறதால் கழிவுப் பொருட்கள் இன்றைக்கு வடிகால்களை அடைத்துக் கொள்கிற காரணத்தால், மழைக் காலங்களிலும்,

மற்ற காலங்களிலும் அது ஒரு பெரிய பிரச்சினையாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே ஒன்று இந்த மாடுகளை வைத்திருப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். அல்லது இங்கே இருக்கிற 50 இலட்சம் மக்களுக்கு சுகாதார பாதுகாப்பை அளிக்க வேண்டும். இந்த இரண்டு அம்சங்கள் தான் இந்தப் பிரச்சினையில் இருக்கின்றன.

அண்மையில் டாக்டர் கொரியன் அவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் நேஷனல் டையரி டெவலப்மென்ட் போர்டின் தலைவராக இருக்கிறார்கள். இன்றைக்கு இந்தியாவிலே வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியவர்கள் அவர்கள், அவர்களிடத்தில் தமிழக அரசு கலந்து பேசியநேரத்தில் அவர்கள் என். டி. டி. பி. மூலமாக எவ்வளவு நிதியை வேண்டுமானாலும் அளிக்கிறேன். குறிப்பாக சென்னையில் புறநகரில் இடத்தைத் தேர்ந்தெடுத்து, பம்பாயில் இருப்பதைப் போல இங்கே இருக்கிற மாடுகளை எல்லாம் அங்கே கொண்டு போய் வைத்து, இன்றைக்கு எப்படி கிண்டியில் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் இருக்கிறதோ, அம்பத்தூரில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் இருக்கிறதோ அதைப் போல, இந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு கொட்டகைகளை கட்டிக் கொடுத்து அரசாங்கத்தின் பொறுப்பிலே செய்து, அதற்கு வாடகை வாங்குவதா அல்லது வேறு வகையாக செய்யலாமா என்பதையும், அதே நேரத்தில் அவர்கள் உற்பத்தி செய்கிற பாலை எல்லாம் வாங்கி அங்கே ஒரு சில்லிங் சென்டர் முடிந்தால் அங்கே ஒரு பால் பண்ணை ஏற்படுத்துவது ; ஒரு இலட்சம் லிட்டர் பாலாவது பெறுகிற சூழ்நிலையை உருவாக்க முடியும் என்ற காரணத்தால் அதனை யோசனையாக சொல்லி இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1—50)

என். டி. டி. பி. மூலமாக நிதி ஆதாரத்தையும், முதல் தவணையாக 2 கோடி ரூபாய் வேண்டுமானால் உடனடியாகத் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அரசு, ஒன்று இந்தத் தொழிலை நம்பிக் கொண்டு இருக்கிற, மாடுகளை வைத்துகொண்டு இருக்கிற மிகுந்த எளியவர்களை மிகச் சாமானியமானவர்களாக இருக்கிறார்களே, அவர்களுடைய நலனைப் பாதுகாத்து, அந்தக் கால்நடைகளுடைய கழிவுப்பொருட்களாலே இன்றைக்கு சென்னையிலே சுகாதாரக் கேடு 45 லட்சம் பேர்களுக்கு ஏற்படுகிறது, அதைப் போக்குவது. ஆக இந்த இரண்டு அம்சங்களோடு, இன்றைக்கு இந்தக் கால்நடைகளை சென்னைக்கு அப்பால் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்திலே அவர்களுக்கு அரசாங்கமே கொட்டகைகளை எல்லாம் கட்டிக் கொடுத்து, அவர்களுடைய அந்தப் பாலை கூட்டுறவுச் [illegible] அமைத்து, அதன் மூலமாக அவைகளை விற்று, [illegible] அஸ்யூர்டு மார்க்கெட் என்ற அளவிலே அவர்கள் [illegible] செல்லவேண்டிய அவசியம் இல்லை. சுறக்கின்ற





பாலை இங்கே விற்று, அவர்களுக்கு ஒரு நிரந்தரமான வருமானத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு தீர்க்கமான முடிவை அரசாங்கம் இன்றைக்கு எடுத்து அந்த திசை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

குறிப்பாக 5 லட்சம் லிட்டர் பால் ஆவின் மூலமாக இன்றைக்கு சென்னை நகரத்திலே நாம் விநியோகித்து கொண்டு இருக்கிறோம். இதை படிப்படியாக 8 அல்லது 9 லட்சம் லிட்டருக்கு உயர்த்துகின்ற ஒரு நோக்கம் இருக்கிறது. அந்த நோக்கத்திற்கு இந்த முயற்சி உறுதுணையாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

நகரத்தில் உள்ள மாடுகளுக்கு வேண்டிய கொட்டகைகளை புறநகர்ப் பகுதிகளிலே அமைத்து, அங்கு மாடுகளை வைத்து பராமரிப்பதற்கும், பால் விற்பனை செய்யும் பொறுப்பையும் ஆவின் நிறுவனமே ஏற்றுக் கொள்ளும் ஒரு புதிய திட்டத்தை, அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பாலை நாங்களே கொள்முதல் செய்து, நியாயமான விலைகளைக் கொடுப்பதன் மூலமாக அவர்களுக்கு தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, உற்பத்தி செய்கின்ற பாலையும் ஆவின் நிறுவனமே இன்றையதினம் கொள்முதல் செய்கின்ற ஒரு திட்டத்தை வைத்திருக்கிறோம். அதற்கு ஆகின்ற 2 கோடி ரூபாயை என். டி. டி. பி. என்ற தேசிய நிறுவனம் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளும் என்று மதிப்பிற்குரிய டாக்டர் கொரியன் அவர்கள் வாக்குறுதி நல்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தீவிரமாக இதை நிறைவேற்ற வேண்டும் என்ற அளவில், இன்றைக்கு அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது. ஒரு கருத்து வைத்திருக்கிறது. முதலிலே அதை அரசு செயல்படுத்தும் என்பதைத் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தென்காசி சட்டமன்ற உறுப்பினர், வழக்கறிஞர் வெங்கடரமணன் அவர்கள் சொல்லும்போது நம்முடைய அண்டை மாநிலமான கேரளத்திற்கு நாளும் தென்காசியில் இருந்து 20 30 லாரிகளிலே வைக்கோல் செல்கிறது என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிற நம்முடைய ஆட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைக்கு இருக்கின்ற 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் பிரிவு 3-ன் கீழ் வைக்கோல் தீவனம் வெளி மாநிலத்திற்குச் செல்லாமல் இருக்க தடை விதிக்குமாறு நாம் மத்திய அரசாங்கத்திற்கு 2 மாதங்களுக்கு முன்பாக கடிதம் எழுதியிருக்கிறோம். அண்மையிலே அதிக அளவிற்குச் செல்லுவதாகக் கேள்விப்பட்டு இருக்கிறோம். எனவே இரண்டொரு நாளிலே வேளாண்மைத் துறையின் சார்பாக ஒரு தனி அதிகாரியை டெல்லிக்கு அனுப்பி, அந்தத் தடை உத்தரவை பெற்று வருவதற்கு

நாங்கள் இன்றைக்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறோம். எனவே அந்தத் தடை வருகின்ற காலத்தில், நிச்சயமாக வைக்கோல் நெல்லை மாவட்டத்தில் இருக்கும், அந்த விவசாயிகளுக்கு பயன்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு சென்னையைப் பொறுத்தவரையில் நம்முடைய கால்நடை மருத்துவக் கல்லூரி இருக்கிறது. அதிலே இன்றைக்கு இருக்கின்ற நவீன சிகிச்சைகளை எல்லாம் சென்னையில் இருக்கின்ற கால்நடைகள் எல்லாம் பெற்றுக்கொண்டு இருக்கின்றன. ஆகவே சென்னையைப் பொறுத்தவரையில் வேறு ஒரு இடத்திலே ஒரு புதிய வசதியைச் செய்து தர வேண்டும் என்று இன்றைக்கு திட்டமிட்டு இருக்கிறோம். குறிப்பாக நம்முடைய சைதாப்பேட்டையில் ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அங்கே நவீன சிகிச்சை அரங்கு, பண்டக காப்பு வசதிகள், எக்ஸ்ரே வசதிகள், முழு அளவிலான நோய் ஆராய்ச்சிக் கூடங்கள், நோய் கிளர்ச்சி ஆய்வுகள், நோய் தடுப்பு முறைகள் மற்றும் பிரத்தியேக மருத்துவ உதவிகள் செய்வதற்கு வசதிகள் இல்லை. எனவே அங்கே இன்றைக்கு போதிய வசதிகளைக் கொண்டு வருவதற்கு 35 லட்சம் ரூபாய் செலவில் சைதாப்பேட்டையில் உள்ள அந்த மருத்துவ மனை பல நோக்கு மருத்துவமனையாக விரிவுபடுத்துவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறது.

இன்றைக்கு சென்னையிலே உள்ள நம்முடைய கால்நடைக் கல்லூரியில் இருக்கின்ற மருத்துவமனையைத்தான் பெரும்பாலான மக்கள் பயன்படுத்துகின்றார்கள். இப்போது சென்னை மிகவும் வளர்ந்திருக்கிற காரணத்தால் இங்கே இருக்கிற கால்நடைகளுக்கு போதிய வசதிகளைச் செய்து தர வேண்டி இருக்கிறது. எனவே தென் சென்னையில் உள்ள சைதாப்பேட்டையில் 35 லட்சம் ரூபாய் செலவில் அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கு அரசு முடிவு எடுத்து தீவிரமாக இன்றைக்கு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை, இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கால்நடை மருத்துவ அதிகாரிகளுடைய குறைகளைப் பற்றி, தேவைகளைப் பற்றி, பணி பாதுகாப்புகள்பற்றி எல்லாம் விவரமாகச் சொன்னார்கள். குறிப்பாக இந்த 4 வது ஊதியக் குழுவில் அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட்டு இருக்கிறது என்றாலும் கூட, சிறு சிறு குறைகள், சிறு சிறு தேவைகள் இருக்கின்றன என்று அவர்கள் அரசுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.





ஆனாலும்கூட 20, 25 ஆண்டுகளாக இருக்கின்ற ஒரு பிரச்சினை இன்றைக்கு அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்ற சகோதரர்களுக்கு, கால்நடை மருத்துவர்களுக்கு இருக்கின்றது. ஒரு பெரிய சங்கடம் என்ன என்றால் கால்நடைகளுக்கு தோன்றுகின்ற அந்த நோய்களுக்கு எல்லாம் மருத்துவம் செய்கின்ற போது அதனால் அவர்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆனபிறகுதான் அவர்களுக்கு அந்த பாதிப்பே தெரிகின்ற ஒரு அபாயத்தை அந்த கால்நடை மருத்துவர்கள் பெற்று இருக்கிறார்கள். குறிப்பாக அந்த கால்நடைகளை 200-க்கும் மேற்பட்ட நோய்கள் தாக்குகின்றன. இன்றைக்கு கால்நடை மருத்துவர்கள் அந்தக் கால்நடைகளுக்கு மருத்துவம் செய்கின்றபோது 200-க்கும் மேற்பட்ட தொத்து நோய் பரவுகிறது. மனிதனுக்கு மனிதன் பரவுகின்ற வியாதியை விட கால்நடைகளிடமிருந்து மனிதனுக்கு பரவுகின்ற வியாதி மிகவும் கொடியதாக இருக்கிறது.

அது மட்டுமல்ல, இந்த வியாதிகளை தடுக்கிற பணியில் கால்நடை உதவி மருத்துவர்கள் நேரடியாக ஈடுபட வேண்டியிருக்கிறது. குறிப்பாக கால்நடை உதவி மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கும்போது நோயால் பீடிக்கப்பட்ட கால்நடைகளை ஆய்வு செய்தும், கால்நடை உதவி மருத்துவர்கள் சோதனைக்கு உரிய பொருட்களை-கிளினிக்கல் மெட்டிரியல்ஸ்-நோயுற்ற கால்நடைகளிடமிருந்து சேகரிக்கின்ற நோய்களைக் கண்டு அறிய வேண்டியிருக்கிறது. இத்தகைய பணியின் அமைப்பு காரணமாக கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இந்த வியாதி அதிகமான அளவில் பரவ வாய்ப்பு இருக்கிறது. நோயுற்ற கால்நடைகளிடமிருந்து கால்நடை உதவி மருத்துவர்களுக்கு பரவும் வியாதிகள் கால்நடை உதவி மருத்துவர்களை மட்டும் அல்ல, அவர்களுடைய குடும்பத்தையே அந்த நோய் தாக்குகிறது.

குறிப்பாக கால்நடைகளிடமிருந்து பரவிடும் வெறி நோய். இன்றைக்கு நாய்களுக்கு இருக்கின்ற அந்த வெறி நோய்க்கு சிகிச்சை அளிக்கும்போது பல மருத்துவர்களை கடித்து அவர்கள் வாழ்நாள் முழுவதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதேபோல் தான் கால்நடை மருத்துவர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

அதே போல் வலிப்பு நோய், அடைப்பான் நோய், காச நோய் போன்ற நோய்களுக்கு உரிய நேரத்தில் உரிய சிகிச்சை அளிக்காவிட்டால் உயிர் இழப்பு ஏற்படும் நோய்களாகும். கருச்சிதைவு நோய், நிரந்தர மலட்டுத் தன்மையை கால்நடை உதவி மருத்துவர்களை மட்டும் இன்றி அவர்களுடைய குடும்பத்தினரையும் பாதிக்கும் அளவுக்கு ஆபத்து ஏற்படுகிறது. இந்த நோயின் நிலையைக் கண்டு அறிவதற்கும் தீவிர சிகிச்சை பெறவும் நிறைய அவர்கள் பொருள் சேர்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த ஆபத்து கால்நடை மருத்துவர்களுடைய வாழ்வில்

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1985 ஜூலை 5

இருப்பதை அனுசரித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்த திருநாளிலேயே அந்தக் கால்நடை மருத்துவர்களுக்கு ஒரு உறுதியினை சொன்னார்கள். உங்களுக்கு ஆபத்து இருப்பதால் ரிஸ்க் அலவன்ஸ் அளிப்பேன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதனை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நேற்றைக்கு பரிசீலனை செய்து இன்றையதினம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அந்த கால்நடை உதவி மருத்துவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு எடுத்து இந்த மன்றத்திற்கு தெரிவிக்கச் சொன்னார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்ட அந்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக கீழ்க்கண்ட வகையில் தமிழ் நாடு முழுவதும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

| | |
|---|---|
| Veterinary Dispensaries | -லே இருக்கிறார்கள். |
| Veterinary Dispensaries-*cum*-Key Village Centres | -லே இருக்கிறார்கள். |
| Clinical Laboratories | -லே இருக்கிறார்கள். |
| Animal Diseases Intelligent Unit | -லே இருக்கிறார்கள். |
| Mobile Unit | -லே இருக்கிறார்கள். |
| Regional Unit | -லே இருக்கிறார்கள். |
| Artificial Insemination Centres | -லே இருக்கிறார்கள். |
| Key Village Block | -லே இருக்கிறார்கள். |
| Institute of Veterinary Preventive Medicine | -லே இருக்கிறார்கள். |
| Bull Stations | -லே இருக்கிறார்கள். |

இந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆபத்தினால் ரிஸ்க்கை எடுத்துக் கொண்டு பணி புரிகிறார்கள். அவர்களுக்கு 100 ரூபாய் மாதம் தோறும் கிடைக்கும் என்ற அளவில், ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன் பெறவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முடிவு எடுத்து அந்தத் தகவலை இன்றைக்கு இந்த மானியத்தின் போது சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த கால்நடை மருத்துவ சகோதரர்கள் என்றைக்கும் கடமைப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் மற்றும் 3 கோரிக்கைகள் இருக்கின்றன. கால்நடை மருத்துவ சகோதரர்களைப் பொறுத்த வரையில் 4 கோரிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அங்கீகரித்து இருக்கிறார்கள்.



1985 ஜூலை 5] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

இரண்டாவது, நம்முடைய டிஸ்ட்ரிக்ட் லைவ் ஸ்டாக் பார்ம் இருக்கிறது. அதிலே சில பண்ணைகளில் இன்றைக்கு ஸ்பெஷல்-பே வாங்குகிறார்கள். இன்னும் சில பண்ணைகளில் அந்த வசதியை சில கால்நடை மருத்துவர்கள் பெறவில்லை. பெற்றுக் கொண்டு இருப்பவர்களைப் போல, இவர்களும் பெறுவதற்கு அந்த அனாமலியை இல்லாமல் செய்து அதை போக்குகின்ற வகையில்-ஏற்கனவே சில கால்நடை பண்ணையில் சிறப்பு ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால்-சாத்தூர், சின்னசேலம், காட்டுப்பாக்கம், மாதவரம் போன்ற கால்நடை பண்ணைகளில் பணி ஆற்றுகின்ற தொழில் நுட்ப அலுவலர்களுக்கு இந்த சிறப்பு ஊதியம் வழங்கலாம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

(பிற்பகல் 2-00)

மூன்றாவதாக, இந்தியாவிலேயே தலைசிறந்த கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் ராணிப்பேட்டையிலே இருக்கிறது. அது தான் இன்றைக்கு இந்தியாவிலேயே 100 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொன்மை மிக்க மருத்துவ நிலையம். அங்கு எல்லாவிதமான மருந்துகளையும், தடுப்பு மருந்துகளையும் செய்கிறார்கள்.

அங்கே கால்நடைகளுக்கு, முக்கியமான நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நமது தமிழ்நாட்டிலே இருக்கிற கால்நடைகளுக்கு மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களான, கர்நாடகம், ஆந்திரம் போன்றவற்றிற்கும், பிற மாநிலங்களிலே, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற விவசாயிகள் கூட ராணிப்பேட்டை மருந்துகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கு பணியாற்றுகிற 'தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சிறப்பு ஊதியம் வழங்க அனுமதித்து இருக்கிறார்கள்.' ஏறத்தாழ 140 பேர் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களும் இன்றைக்கு சிறப்பு ஊதியம் பெற்று ஒரு நிறைவைப் பெறுவார்கள், உற்சாகத்தைப் பெறுவார்கள்; அவர்களுடைய பணிகளை சிறந்த முறையிலே செய்து, தமிழ்நாட்டுக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தருவார்கள் என்று, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சிறப்பு ஊதியம் அவர்களுக்கு வழங்க முடிவு செய்து, இன்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள்.

நான்காவதாக, இன்றைக்கு சிறப்பு அறிவியல் மேல் படிப்புக்கு தற்போது ஆண்டு ஒன்றுக்கு 10 உதவி மருத்துவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலேயும் படிக்க துறையினாலே

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1985 ஜூலை 5

அனுப்பப்படுகிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு கால்நடைத் துறை என்பது விரிந்த துறையாக இருக்கிறது; சமுதாயத்திலே பல துறைகளுக்கு நல்ல அறிவாளிகள், நல்ல வித்தகர்கள் தொழில் நுட்பம் பெற்றவர்கள் எல்லாம் செல்ல வேண்டும்; உயர்ந்த படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு பெற வேண்டும் என்பதற்காக 10 என்பதை 20 ஆக ஆக்கி இருகிறார்கள்.

இந்த ஆண்டு முதல் 20 பேர்களை முழு சம்பளத்துடன் மேல் படிப்புக்காக அனுப்ப, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்து அந்தத் தகவலையும் இந்த மன்றத்தின் வாயிலாக நாட்டுக்குத் தெரிவிக்க எனக்கு கட்டளை இட்டு இருக்கிறார்கள்.

இந்த நான்கு கோரிக்கைகளும் நீண்ட நாள் கோரிக்கைகள். அந்தக் கோரிக்கைகளை இன்றைக்கு கால்நடை மருத்துவர்கள் பெற்று நிச்சயம் ஒரு சமூக பொருளாதார மாறுதலிலே டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்களே, அதில் அவர்களும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மேலும் சில கோரிக்கைகள் அவர்களுக்கு இருக்கிறது. தொடர்ந்து அவை பற்றி நிச்சயமாக பரிசீலனை செய்து, அவையும் நிறைவேற்றப்படும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளுகிறேன்.

எப்படி கால்நடை மருத்துவர்கள் ஒரு கேந்திரமான பாத்திரத்தை சமுதாயப் பொருளாதார மாறுதலில் வகிக்கிறார்களோ, அதுபோல 3,200 லைவ்ஸ்டாக் கால்நடை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதனையும் இன்றைக்கு அரசாங்கம் மிக அனுதாபத்தோடு, அக்கறையோடு, துரிதத்தோடு ஒரு போர்க் காலத்திலே இருக்கின்ற தவிப்போடு எப்படி அந்த கால்நடை மருத்துவர்களுக்கு சில வசதிகளை, சில உரிமைகளை, சில சலுகைகளை இன்றைக்கு அளித்து இருக்கிறதோ, அப்படி இன்றைக்கு 3,200 பேர், அந்தத் திட்டத்தினுடைய கேந்திரமாக, உயிர்ப்பாக, அடித்தளமாக இருக்கிறார்களோ,—அந்த லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்ஸ் - அவர்களுக்கும் விரைவில், அவர்கள் கொடுத்த கோரிக்கைகளின் அடிப்படையில் என்னென்ன காரியங்களைச் செய்ய முடியுமோ, அவைகளையெல்லாம் செய்ய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தீர்க்கமாக ஆலோசனை செய்து கொண்டிருக்கிறாரகள். அது நிறைவேறும், நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே மாண்புமிகு நம்முடைய இலக்கியச் செல்வர் அன்புக்குரிய குமரி அனந்தன் அவர்கள் நல்ல பல கருத்துக்களை எல்லாம், டாப்கோ, கோழிப் பண்ணையைப் பற்றிச் சொன்னார்கள்.



1985 ஜூலை 5] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

அவர்கள் அண்மையிலே உலகம் சுற்றி வந்திருக்கிறார்கள். பல அந்நிய நாடுகளுக்கெல்லாம், சென்று வந்திருக்கிறார்கள். அதனுடைய பாதிப்பை அவருடைய இனியபேச்சு நமக்கு எல்லாம் வெளிப்படுத்தியது. அங்கெல்லாம் எப்படி கோழிப் பண்ணைகள், பால் வளம் எல்லாம் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்று அனுபவத்தின் வாயிலாக வெளிப்படுத்தினார்கள். அதற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் கூறிய ஒரு கருத்தோடு நான் ஒன்றுகிறேன். 10 ஆண்டுகளாக டாப்கோ சற்று சுணக்கமாக செல்கிறது என்பதிலே இரு விதக் கருத்துக்கள் இருக்கமுடியாது. இந்த ஆண்டு சில தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்து, இதுவரையில் மெதுவாக, சற்று சுணக்கமாக இருந்த அந்தப் போக்கை மாற்றி, எப்படி இன்றைக்கு பால் வளம் மக்கள் மனதில் நீக்கமற, நிரந்தரமான இடத்தைப் பெற்று இருக்கிறதோ, அப்படிப்பட்ட இடத்தைப் பெற நல்ல திட்டங்கள் சிலவற்றை வைத்து இருக்கிறோம்.

குறிப்பாக, இந்த ஆண்டு, அதிக அளவு முட்டைகள் உற்பத்தி செய்ய, இறைச்சி தருகின்ற கோழிகளைப் பெற்று மக்களுக்கு அளிக்க, கோழிக் குஞ்சுகளை உருவாக்கி கோழிப் பண்ணை வைத்து இருக்கிற விவசாயிகளுக்கு கொடுக்க, சில முனைப்பான முயற்சிகளை எடுத்து அதிலும் பல மாறுதல்களை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக, இந்த ஆண்டில் 122 இலட்சம் ரூபாய் செலவில் 5 திட்டங்களை உருவாக்கி, இந்த நடப்பு ஆண்டிலிருந்து அவற்றை நாங்கள் செயலாக்க முனைந்திருக்கிறோம். குறிப்பாக, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. உங்களுக்குத் தெரியும். Drought Prone Area Programme என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இன்றைக்கு ஆறுமாவட்டங்களில், தர்மபுரி, முகவை, காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய இந்த ஆறு மாவட்டங்களில் 125 இலட்சம் ரூபாய் செலவில் ஐந்து திட்டங்கள் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலேயிருந்து, அந்த ரூபாயை எடுத்து ஐந்து கீழ்க்கண்ட திட்டங்களின் வாயிலாக, அதாவது,

(1) கோழி வளர்ப்பு செயல்முறை விளக்கப் பண்ணைகள்; Poultry Demonstrative Farm.

(2) கோழி வளர்ப்பு குக்கிராமம்; Poultry Hamlets,

(3) கோழி வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டம்; Enrolment of Poultry Farmers.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1985 ஜூலை 5

(4) கோழிப் பண்ணைகளுக்காக அடிப்படை வசதி செய்து கொடுத்தல் ; Infrastructure facilities for Poultry Farm.

(5) விற்பனை மையங்களுக்காக அடிப்படை வசதிகள் செய்தல். Infrastructure for Marketing Units என ஒருங்கிணைந்த உற்பத்தி செய்ய, அதே நேரத்தில் விற்க என்று ஐந்து அம்சங்கள் அந்த டி.பி.ஏ.பி. என்ற திட்டத்தின் அடிப்படையில் மட்டும் செயலாற்றத் தொடங்கியிருக்கிறது. அதன் காரணமாக ஒரு மாறுதல் ஏற்படும்.

ஐ.ஆர்.டி.பி. மூலமாக கறவை மாடுகள் வாங்கிக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதிலும் பணம் இருக்கிறது. அந்தப் பணத்தையும் வைத்துக்கொண்டு, கோழிகள் வாங்கி நம்முடைய விவசாயிகளுக்குக் கொடுக்க, இன்றைக்கு, திட்டத்தை அந்தத் துறை உருவாக்கி வருகிறது. கோழி வளர்ப்புத் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்காக அரசாங்கம் இன்றைக்கு வேறு பல நடவடிக்கைகளையெல்லாம் எடுத்து வருகிறது. அதைச் சொல்வதற்கான வாய்ப்பு இல்லை. அவ்வப்பொழுது அந்தத் தகவலை அளிக்கிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு கட்டுப்பாடாக, இராசிபுரம் பகுதியில், நாமக்கல் பகுதியில், வேலூர் பகுதியில், ஈரோடு பகுதியில் கோழி வளர்ப்பு என்பது மற்றவர்கள் பெருமைப் படுகின்ற அளவிற்கு, நல்ல அற்புதமான தொழிலாக வளர்ந்திருக்கிறது. ஆனால், அண்மைக் காலத்தில் அதற்கு அறை கூவலாக, சாபக்கேடாக ஒரு நோய் வந்திருக்கிறது. அதிலே 60 விழுக்காடு, 70 விழுக்காடு கோழிகள் இன்றைக்குப் பட்டுப் போய்விடுமோ என்ற ஐயத்தில் இருக்கிறது. அங்கிருக்கின்ற விவசாயிகள் வந்து பத்து நாட்களுக்கு முன்பு மாண்புமிகு புரட்சித் தலைவர்களைச் சந்தித்து, வெளி நாடுகளிலே அதற்கு வேக்சின் இருக்கிறது ; அதற்கு மருந்து இருக்கிறது, அதை இங்கு வரவழைத்து அந்த மருந்தைக் கொடுத்தால் இந்த ஆபத்திலிருந்து அந்தத் தொழிலைக் காப்பாற்றலாம் என்று சொன்னார்கள். அந்த வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள், அந்த அதிகாரம் டெல்லியில்தான் இருக்கிறது. எனவே டெல்லியை நாடி, அந்த அதிகாரத்தைப் பெற்று, அங்கிருக்கின்ற விவசாயிகள், வசதி படைத்தவர்கள், மற்றவர்களெல்லாம் வேக்சினை வெளிநாட்டிலேயிருந்து — ஏன் சொல்கிறேன் என்றால், அந்த நோய் ஒரு விசித்திரமான நோய், அந்த நோய்க்கு அமெரிக்கத் திருநாட்டிலேதான் மருந்து இருக்கிறது—அதைப்பெற, கோழிகளுக்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்தை இறக்குமதி செய்வதற்கு மைய அரசு, ஒப்பன் ஜெனரல் லைசென்ஸில் உபயோகிப்பதற்கு அனுமதி வழங்க இருக்கிறது. இறக்குமதி செய்வோர் மாநில கால்நடைப் பராமரிப்பு இயக்குநரிடமிருந்து இன்றியமையாச் சான்றிதழ் பெற்று இறக்குமதி செய்கிறார்கள். அந்த நடைமுறை இருக்கிறது. அந்தத்



1985 ஜூலை 5] [திரு. கே. ஏ, கிருஷ்ணசாமி]

தடுப்பு ஊசியை இறக்குமதி செய்ய, டெல்லிக்கு எழுதி, அதைத் தளர்த்தி நல்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். விரைவிலே வரவிருக்கிறது. வந்துவிட்டால் அந்தப் பகுதியிலே கோழி கால்நடைப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்த ஆபத்து தீரும் என்று கருதுகிறேன்.

சென்னையில் இன்றைக்குக் கால்நடை மருத்துவக் கல்லூரி இருக்கிறது. எண்பது ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்டது. இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரியை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் ஆறு கோடி ரூபாயை ஒதுக்கி, நாமக்கல்லில் இந்த ஆண்டிலிருந்து தொடங்கவிருக்கிறார்கள். அப்படிக் கால்நடை இரண்டாவது மருத்துவக் கல்லூரி நாமக்கல்லில் வருகின்றபொழுது அந்தக் கோழிப் பண்ணை விவசாயிகள் நவீன அறிவு பெறவும், அவர்களுடைய பிள்ளைகளை இந்தத் துறையில் வருவதற்கும் அந்தப் கல்லூரி உறுதுணையாக இருக்கும். எண்பது ஆண்டுகளுக்குக் பிறகு இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரியை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆடு வளர்ப்பு பற்றிப் பலரும் சொன்னார்கள். இன்றைக்கு ஆடு வளர்ப்பு என்பது பால் வளம் போல வேகமாக, நலிந்த மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு நல்ல உறுதுணையாக இருக்கிறது. இதில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பல திட்டங்களுக்கு மைய அரசு நல்ல வகையில் ஆதரவு நல்கி வருகிறது. 16 கோடி ரூபாய்க்கான திட்டம் ஒன்றை நாங்கள் அனுப்பியிருக்கிறோம். விரைவில், உலக வங்கியின் நிதியுதவி பெற்று நமக்கு உதவ இருக்கிறார்கள். அதைப்பற்றித் தமிழக அரசினுடைய கருத்துக்களை வலியுறுத்துவதற்காக, வருகின்ற 12—7—1985 அன்று ஸ்ரீநகரில் மைய அரசு இதற்காக ஒரு கூட்டத்தையும் கூட்டியிருக்கிறார்கள். ஏனென்றால் காஷ்மீரில்தான் இன்றைக்கு ஆடுகள் சிறப்பாக இந்தக் கம்பளிகளுக்காக வளர்க்கப்படுகிறது. எனவே, தமிழ்நாட்டினுடைய இந்த 16 கோடி ரூபாய் திட்டத்தைப்பற்றி விளக்குவதற்காகவும், இதைப்பற்றி அவர்கள் விரிவாகத் தெரிந்து கொள்வதற்காகவும் தமிழக அரசை அவர்கள் இன்றையதினம் கேட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 2-10)

நம்முடைய அதிகாரிகளும் சொல்ல இருக்கிறார்கள். அதற்குப் பிறகு, அந்த ரூ. 16 கோடி திட்டம் வருகின்ற ஒரு நல்ல சுமுக நிலை இருக்கிறது. அது வருகின்றபொழுது, அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கும் நல்ல பயன் கிடைக்கும்.

அடுத்து சென்னையைப் பொறுத்தவரையிலே, காட்டுல் மனேஸ் என்று சொலலப்படுகிற, கால்நடைகளுக்கு எப்படி ஒரு பெரிய ஆபத்தாக, அல்லது சுற்றுகின்ற மாடுகளாலே சுகாதாரத்திற்கு எப்படிப் பங்கமாக இருக்கின்றதோ, அப்படி சென்னைத் திருநகரத்திலே, உங்களுக்குத் தெரியும், இப்பொழுது இறைச்சிக் கூடங்கள் தனியார்களாலே நடத்தப்படுகின்றன; பெரம்பூரிலே ஒரு இறைச்சிக் கூடம் இருக்கிறது., சைதாப் பேட்டையிலே ஒரு இறைச்சிக் கூடம் இருக்கிறது. சென்னையிலே மட்டும், எனக்குக் கிடைத்த தகவல்படி ஏறத்தாழ ரூ. 30 கோடி மதிப்புள்ள இறைச்சி, ஆண்டொன்றிற்கு விற்பனை ஆகிறது. இவை அத்தனையும் பெரம்பூரிலிருந்து, சைதாப் பேட்டையிலிருந்து — இருக்கிற ஆராய்ச்சிக் கூடங்களிலிருந்து— ஆடுகள் வெட்டப்பட்டு கொடுக்கப்படுகின்றன. அவையெல்லாம் 50 ஆண்டுகளுக்கு முன்பு, 60 ஆண்டுகளுக்கு முன்பு, சுகாதார மற்ற முறையில் அமைக்கப்பட்ட இறைச்சிக் கூடங்கள். அவற்றைப் போக்க வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் 3 ஆண்டுகளுக்கு முன்பு கொடுவள்ளி என்ற ரெட்ஹில்சுக்குப் பக்கத்தில் இருக்கிற இடத்தில், ஏறத்தாழ ரூ. 3 கோடி மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கூடம், மாடர்ன் ஸ்லாட்டர் ஹவுஸ் கட்டப்பட்டு, அது முடியும் தருவாயில் இருக்கிறது. அங்கே சில பிரச்னைகள் இருக்கின்றன என்ற ஐயத்தின் காரணமாக, நீதிமன்றத்திலே ஒரு தாவா இருக்கிறது; வாதம் நடக்கிறது. விரைவிலே, இனிய வகையிலே, அது முடியும் என்று கருதுகிறேன்.

அது வருகின்றபொழுது, நிச்சயமாக, சென்னை நகர இறைச்சித் தேவையை, அந்த நவீன இறைச்சிக் கூடம், மாடர்ன் ஸ்லாட்டர் ஹவுஸ் நிறைவேற்றும் என்று கருதுகிறேன்.

சென்னை நகரத்தை விட்டுப் பிற மாவட்டத் தலைநகரங்களிலும் இது அவசியம் என்று கருதப்படுகிறது. எனவே, அடுத்த கட்டமாக, தமிழ் நாடு இறைச்சி நிறுவனம் என்ற கார்ப்பரேஷனை உருவாக்கி இருக்கிறோம். அதன் வாயிலாக, மதுரை, கோவை, வேலூர் ஆகிய 3 மாவட்டத் தலைநகரங்களில் இப்படிப்பட்ட ஸ்லாட்டர் ஹவுசை உருவாக்குகின்ற முயற்சி எடுத்து, அது விரைவிலே நடைபெற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது போல், இன்றைக்குப் பால் எப்படி பாலித்தீன் பைகளிலே விநியோகிக்கப்படுகிறதோ அது போல் சுத்தமாக, நவீனமாக, இறைச்சிகளை விநியோகிக்கின்ற முயற்சிகளை இறைச்சிக் கழகம் மேற்கொண்டிருக்கிறது. சென்னையில், குறிப்பாக, தலைமைச் செயலகத்திலேயும், அண்ணா நகரிலும், டவ்டன் என்ற பகுதியிலும், ஆகிய 3 இடங்களிலும் பரிட்சார்த்தமாக,





நல்ல, சுத்தமான இறைச்சியை விற்பனை செய்ய அந்த நிறுவனம் முயன்று கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, இறைச்சியை விரும்புகின்ற பொதுமக்களுக்குச் சுகாதார ரீதியிலே உணவுப் பொருளைக் கொடுக்க அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்ல விரும்புறேன்.

அடுத்து, பால் வளம். பால் வளம் பற்றி விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, இந்த 5 ஆண்டுகளாக இந்தப் பொறுப்பை ஏற்றுத் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறேன். பெருமைமிக்க சில நிலவரங்கள் எல்லாம் உருவாகின்றன. குறிப்பாக, அண்மையிலே, 10 நாட்களுக்கு முன்னால், டெல்லியில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஒரு கருத்து உருவாகியது. தமிழ் நாட்டிலே இன்றைக்கு ஏறத்தாழ 19 மாவட்டங்கள் இருக்கின்றன. எப்படிப் பெரியார் மாவட்டத்தில், சேலம் மாவட்டத்தில் ஆப்பரேஷன் ப்ளட் இருக்கிறதோ அப்படி, இன்றைக்கு விடுபட்ட 5 மாவட்டங்களிலும் அதே வகையான ஆப்பரேஷன் ப்ளட் ஏற்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். வலியுறுத்தியபொழுது பொருளாதாரப் பிரச்னை வந்தது. என்.டி.டி.பி. இதற்குப் பணம் கொடுத்து வருகிறது. பொருளாதாரப் பிரச்னையைச் சொன்ன நேரத்திலே, அவர்கள் சொன்னார்கள், டெல்லியிலே இருக்கிற, என்.சி.டி.சி. என்ற கார்ப்பரேஷன் மூலமாக, என்.டி.டி.பி. என்ன, என்ன வசதிகள், என்ன என்ன பணம் வேண்டுமோ, அதை ஒதுக்கித் தரும் என்று. ஆகவே, நடப்பாண்டிலே, திருநெல்வேலி மாவட்டத்தில் துவங்க இருக்கிறது.

அதற்காக, அவர்கள் ரூ. 6 கோடி நல்கி இருக்கிறார்கள். எப்படி மதுரை மாவட்டத்திலும், பெரியார் மாவட்டத்திலும் இந்த ஆப்பரேஷன் ப்ளட் நடைபெறுகிறதோ, அப்படி திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த ஆண்டும், அடுத்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலும், அடுத்த ஆண்டு முகவை மாவட்டத்திலும் என்று 7-வது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக, தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் ஆப்பரேஷன் ப்ளட் இருக்க வேண்டுமென்று, அங்கேயிருக்கிற விவசாயிகள் எல்லாவித நலன்களை பெறவேண்டுமென்று ஏற்றுக்கொண்டு, முதன் முதலாக, திருநெல்வேலி மாவட்டத்தில், இந்த ஆண்டிலிருந்து துவங்கப்பட இருக்கிறது. அடுத்து, கன்னியாகுமரி, அடுத்து காமராஜர் மாவட்டம், அடுத்து பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், அடுத்து முகவை மாவட்டம் என்று தென்பாண்டி மண்டலத்திலே, விடுபட்டிருக்கிற மாவட்டங்களில், பால்வளத் திட்டம் வளர இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1985 ஜூலை 5

மற்ற விவரங்களை எல்லாம் கொள்கைக் குறிப்பிலும் பல நேரங்களிலும் சொல்லியிருக்கிறோம். குறிப்பாக சென்னையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நல்ல நிலவரங்கள் நிலவிக் கொண்டிருக்கின்றன. தட்டுப்பாடு இல்லாமல் பால் விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு தென்காசி உறுப்பினர் பேசும்போது ஐரோப்பிய நாடுகளிலிருந்து மாடுகள் வரவழைக்கப்படுவது பற்றிச் சொன்னார்கள். அப்போது சில சந்தேகங்களை எழுப்பினார்கள். தமிழக அரசு நல்ல மாடுகளை, தகுதியான மாடுகளை ஆரோக்கியமான மாடுகளை, பழுதுபடாத மாடுகளைத்தான் ஆராய்ந்து பார்த்து, முடிவு செய்து வாங்கும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களே இதில் தலையிட்டு டாக்டர் கொரியன் அவர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள் நல்ல மாடுகளைப் பார்த்துதான் அவர்கள் வாங்குவார்கள். நல்ல மாடுகள்தான் தமிழ்நாட்டுக்கு வரும். கடந்த 10 நாட்களுக்கு முன்பாக டாக்டர் கொரியன் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைச் சந்திக்க வந்தார்கள். அப்போது வருகிற செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் முதன் முதலாக விமானத்தில் வருகிற 550 மாடுகள் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வரவிருக்கின்றன என்று உறுதி அளித்திருக்கிறார்கள். அவற்றில் 350 மாடுகளை அரசுப் பண்ணைகளுக்கு வழங்கிபராமரிக்கவும் மீதமுள்ளவைகளை பராமரிக்க வசதி படைத்தவர்களுக்கு விலைக்கு விற்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இறக்குமதியாகும் பசுக்களை விற்கும் நிதியிலிருந்து தேசிய பால்வள நிறுவன உதவியுடன் ஊட்டியில் ஒரு நவீன பால் பண்ணை (மாடல் ஃபார்மிங்) அமைக்கும் திட்டம் இருக்கிறது.

என். சி. டி. சி. செயர்மென் டாக்டர் கொரியன் அவர்கள் 20, 25 ஆண்டுக் காலம் இந்தத் துறையிலே நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார்கள். பல மேல்நாடுகளுடன் தொடர்பு பெற்றிருக்கிறார்கள். கால்நடைகளின் நன்மைகளைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவரிடம் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள்

> " இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல் "

என்பதற்கேற்ப இந்தப் பணியை ஒப்படைத்திருக்கிறார்கள். செப்டம்பர் அல்லது அக்டோபர் முதல் வாரத்தில் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அந்த மாடுகள் வரும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் உட்பட அங்கே சென்று பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஜூலை 5] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

பத்திரப்பதிவுத் துறை பற்றிய பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வருவாய் தேடிக் கொடுக்கக் கூடிய நான்கு துறைகளில் பத்திரப்பதிவுத் துறையும் ஒன்று. இந்த ஆண்டு 104 கோடி ரூபாயை இந்தத் துறை பெற்றுத் தந்திருக்கின்றது. வருமாண்டில் 120 கோடி ரூபாய் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தத் துறையிலே இன்றைக்கு பல திருத்தங்கள், சீரமைப்புகள் செய்து, மேலும் மேலும் இந்தத் துறையின் மூலமாக வருவாய் பெருகி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இந்தத் துறையின் மூலம் நிதி பெற நியாயப்பூர்வமான நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் 5, 6 ஆண்டுகளில் பார்த்தால் அரிசான்டல் குரோத் இல்லை; வர்டிக்கல் குரோத் தான் இருக்கிறது. வீடுகள் கட்டுகிறார்கள். பலமாடி வீடுகள் கட்டுகிறார்கள். அப்பார்ட்மெண்ட் என்ற பெயரால் மேலே மேலே கட்டுகிறார்கள். இப்படி 40, 30 வீடுகளைக் கட்டுகிறார்கள். ஆனால் இன்றைக்குப் பத்திரப் பதிவுத் துறையில் செலுத்த வேண்டிய முத்திரைத்தாள் கட்டணம் உரிய முறையிலே கட்டப்படவில்லை. அதற்குக் காரணம் இப்போது இருக்கிற சட்டத்தில் குறை இருக்கிறது. லாக்குனா லாப்ஸஸ் இருக்கிற காரணத்தால் அடிமனைக்கு மட்டும் ரெஜிஸ்திரேஷன் பீஸ் கட்டுகிறார்கள். மேலே 40 வீடுகள் கட்டினாலும் இவைகளுக்கு ரெஜிஸ்டிரேஷன் ஃபீஸ் கட்டுவதற்கு சட்டத்தில் பாதுகாப்பு இல்லை, அதனால் கட்டப்படுவதில்லை. ஒரு கிரவுண்டுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் என்றால் 26,000 ரூபாய் கொடுக்கலாம். ஆனால் 40 இலட்சம் ரூபாய்க்கு விற்றிருந்தால் அதற்குரிய ரெஜிஸ்டிரேஷன் பீஸ் வருகிறதா என்றால் இல்லை.

பம்பாயில் இந்தக் காரணங்களுக்காக சட்டத்தைத் திருத்தி இருக்கிறார்கள். அங்கே இதற்கு முன்மாதிரி இருக்கிறது. அங்கு தான் அப்பார்ட்மெண்ட் சிஸ்டம் நமக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அதிகாரிகள் எல்லாம் அங்கே சென்று பார்த்து வந்து, அந்த முறையிலே சட்டத் திருத்தம் கொண்டு வந்து, அதன் வாயிலாக சில கோடி ரூபாய் தமிழக கருவூலத்திற்கு வரவிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பிரச்சினை நீண்டகாலமாக இருந்து வருகிறது.

(பிற்பகல் 2-20)

குறிப்பாகக் கன்னியாகுமரியிலே இருக்கின்ற நிலங்களைப் பொறுத்தவரையில், பக்கத்திலே இருக்கின்ற திருவனந்தபுரத்திலே சென்று பதிவு செய்கின்ற நிலைமை இருக்கின்றது. சிறிய

அளவில் உள்ள நிலங்களாக இருந்தாலும்கூட, இன்றைக்கு அதற்காக இருக்கின்ற சட்டம் அகில இந்திய சட்டமாக இருப்பதன் காரணத்தால் அங்கே சென்று ரிஜிஸ்டர் செய்தால் அது கன்னியாகுமரிக்கும் பொருந்தும் என்ற நிலைமை இருக்கின்றது. அங்கே ரெஜிஸ்ட்ரேஷன் ஃபீஸ் கம்மியாக இருக்கின்றது. எனவே, நாகர்கோவிலில் இருப்பவர்கள் எல்லாம் பக்கத்திலே இருக்கின்ற அந்த மாநிலத்திற்குச் சென்று பதிவு செய்ததன் காரணத்தால் ஏறத்தாழ கடந்த 5 ஆண்டுகளில் எனக்குக் கிடைத்த தகவலின்படி 3 கோடி ரூபாய் தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய வருவாயில் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. அப்படி ஆவணங்கள் பதிவு செய்வதில் உள்ள குறையைப் போக்கவும், சட்டத்திலே இருக்கின்ற சந்து பொந்துகளை அடைக்கவும், சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்து, அந்த வருவாய் இழப்பினைத் தடுக்க இன்றைக்கு அரசாங்கம் முயன்று கொண்டிருக்கிறது.

அடுத்து இன்றைக்கு 104 கோடி ரூபாயாக இருக்கின்றது. 120 கோடி ரூபாயாக ஆகப் போகின்றது. எங்கள் கணக்குப்படி 200 கோடி ரூபாயாவது நியாயமாக நமக்கு வந்து சேரவேண்டும். அதற்குக் காரணம் என்னவென்றால் கைட்லைன் 1981 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்டதாகும். 1986 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீடு ஒன்றை ஏற்படுத்தி 5 ஆண்டில் எவ்வளவு விலை ஏறி இருக்கின்றது என்பதை எல்லாம் கண்டறிந்து அதன் அடிப்படையில் பதிவுக் கட்டணத்தை வசூல் செய்தால் 200 கோடி ரூபாய் அளவுக்கு வரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் அதுபற்றி விவரங்களை ஆய்வு செய்வதற்காக ஒரு குழு அமைத்து அந்தக் குழு 1985 ஆம் ஆண்டுக்குள்ளாக எவ்வளவு விலை ஏறி இருக்கின்றது, 1986 ஆம் ஆண்டிலிருந்து எப்படிப்பட்ட புதிய கைட்லைன்ஸ் வைத்துக் கொள்ளவேண்டும் எப்படி வசூல் செய்வது என்றெல்லாம் தீர்மானித்து அந்த வகையில் நியூ கைட்லைன்ஸ் நடைமுறைக்கு வர இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சிட் கார்ப்பரேஷன் பற்றி எல்லாம் உங்களுக்குத் தெரியும். நல்ல சமுதாய மாறுதலை உருவாக்கி நல்ல பல நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

அன்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இரண்டு விவரங்களை இங்கே கேட்டார்கள். ஒன்று மாதவரம் வழக்கு என்று சொன்னார்கள். இது இன்றைய தினம் லேபர் கோர்ட்டிலே இருக்கின்றது. அந்த நீதிமன்றம் என்ன தீர்ப்பு தருகிறதோ அதற்கு அரசு கட்டுப்படும். இரண்டு, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது நம்முடைய மக்கள் அதிகமாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். எனவே, இங்கே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்ற சகோதரர்கள் நான் சொன்ன கருத்துக்களிலே மன நிறைவு





அடைந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையிலே அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு, நான் கோரியிருக்கின்ற மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய டாப்கோவில் 20 ஆயிரம் முட்டைகள் திடீரெனத் திருட்டு போய்விட்டன என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்ன நடவடிக்கை என்று கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கேள்வியாக வந்து, விளக்கமாக வந்து, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,12,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், சு. பாலன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

[1985 ஜூலை 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,75,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, கு. ரமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1.39,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 22—கால் நடை வளர்ப்பு

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திரு. கே. எம். தங்கமணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.



1985 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,69,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 8-7-1985 திங்கட்கிழமை அன்று காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 2.25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

245. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ்).

246. தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

247. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

155. கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

156. கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

157. கோரிக்கை எண் 10—பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

158. 1984 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு பால் பண்ணை உற்பத்தியாளர்கள் இணையத்தின் சிறப்பு கூறுகள் பற்றிய குறிப்பு (தமிழ்).

159. சென்னை நகரத்தில் பால் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் பற்றிய குறிப்பு (ஆங்கிலம்).

160. கோரிக்கை எண். 22—கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

161. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல் வினை முறைத் திட்டம் 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

162. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1984–85 ஆம் ஆண்டு பணிகள் விவரம் பற்றிய அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

163. தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் 1984–85 ஆம் ஆண்டு நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு I

(63-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கால் நடைப் பராமரிப்புக் கொள்கை விளக்கம். 1985-86

### I. முன்னுரை

மாநிலப் பொருளாதாரத்தில் கால்நடை பராமரிப்பு சிறிய பங்கு வகிக்கிறது. வேளாண்மை செழித்தோங்குவதற்கு அடையாளமாகத் திகழ்வது தரமான எண்ணிறந்த கால் நடைகளும், அவைகளின் உற்பத்தி பொருட்களுமேயாகும்.

பசுக்களும், எருமைகளும் விவசாயப் பணிகளுக்கு அவசியமான வேலைத் திறன் அளிக்கும் கருவூலமாகவும், கிராமப் புற போக்குவரத்து சாதனமாகவும் விளங்குகின்றன. பால், பால் பொருட்கள், இறைச்சி, உரோமம், மற்றும் தோல் முதலியனவும் அவற்றிலிருந்து கிடைக்கின்றன. செம்மறியாடுகள், வெள்ளாடுகள் மற்றும் பன்றிகள் அத்தியாவசியத் தேவையான இறைச்சியை அளிக்கின்றன. கோழிகள் மூலம் முட்டைகளும், இறைச்சியும் கிடைக்கின்றன.

பசுக்கள், எருமைகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், குதிரைகள், மட்டக் குதிரைகள், கோவேறுக் கழுதைகள், ஒட்டகங்கள் மற்றும் பன்றிகள் அடங்கிய கால்நடைகளின் எண்ணிக்கை 1977–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 24,146,248 எண்ணிக்கையாக இருந்தன. இது 15–7–1982 நாளைய கணக்கெடுப்பின்படி 25,144,815 எண்ணிக்கையாக உயர்ந்துள்ளது. இந்த அதிகரிப்பு 4.13 சதவீதமாகும்.

நபர் ஒருவருக்கு, நாளொன்றுக்குத் தேவையான பாலின் அளவு 284 கிராம் ஆகும். 1982–83-ம் ஆண்டில் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்குக் கிடைத்த பாலின் அளவு 101 கிராம் ஆகும். இது, 1983–84-ல் 145 கிராமாக அதிகரித்துள்ளது. இது போன்று, 1982–83-ல் நபர் ஒருவருக்கு, ஆண்டொன்றுக்கு கிடைத்த முட்டையின் எண்ணிக்கை 19-லிருந்து 1983–84-ல், 21 முட்டைகளாக அதிகரித்துள்ளது.

சிறந்த இனவிருத்தி, சரியான முறையில் தீவனமிட்டுப் பராமரித்தல், நோய்த் தடுப்புப் பணிகள் அளித்தல் ஆகியவற்றின் மூலம் மட்டுமே தனியொரு கால்நடையின் உற்பத்தித் திறனை உயர்த்த முடியும். ஆகவே, நமது கால் நடைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கான கலப்பின விருத்தித் திட்டங்கள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டங்களின் கீழ்

செயற்கை முறை கருத்தரிப்பு ஊசிகள் போடுதல், கறவை மாடுகளும், கிடேரிகளும் விநியோகித்தல், ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் அமைத்தல் போன்ற உறுதுணைப் பணிகளில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

குறிப்பாக, சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், நில மற்றத் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் போன்ற நலிவுற்ற சமுதாயத்தினர் கால் நடை வளர்ப்பை உபதொழிலாகக் கொண்டு, வளமான வாழ்வு பெறும் வகையில் கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் அனைத்தும் வகுக்கப்படுகின்றன. வேலையில்லாத கிராமப் புற இளைஞர்களுக்கு கால் நடைப் பராமரிப்பில் நவீன முறைகளை கையாளுவதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயிகள் சொந்தமாக கால்நடை வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்திக் கொள்ள உதவும் வகையில், தேசீய வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனுதவி பெற வழி வகைகள் செய்யப்படுகின்றன.

ஏழை எளியவர்களும், பழங்குடி பெருமக்களும், மலைவாழ் மக்களும், மற்றவர்களும் கால்நடைத் தொழிலில் ஈடுபட உதவும் வகையில், சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், போன்ற பல்வேறு சிறப்புத் திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்கள் அனைத்தும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி நம் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதுடன் அத்தியாவசியத் தேவையான புரதச் சத்துணவை உற்பத்தி செய்யும் நோக்கமுடையதாகும்;

### கால் நடை வளர்ப்புக் கொள்கை.

பால் வளம், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதே கால் நடை பராமரிப்புத் துறையின் பொதுவான கொள்கையாகும். இக்கொள்கையின் சிறப்புக் கூறுகளின் சுருக்கம் கீழே அளிக்கப்பட்டுள்ளன :—

1. தமிழகத்தின் புல்வெளிப் பகுதிகளில் உயர் இன ஜெர்சி விந்தையும், மலைப் பகுதிகளில் உயர் இன ப்ரீசியன் இனக் காளையின் விந்தையும் பயன்படுத்தி, உள்ளூர் இனக் கால்நடைகளுக்குக் கலப்பின விருத்தியைத் தீவிரமாக மேற்கொண்டு, அவற்றின் தரமுயர்த்தி 50 சதவீதம் உள்ளூர் மரபும் 50 சதவீதம் அயலின மரபுமுடைய ஆவின சந்ததியை உருவாக்குதல், இதனால், பால் உற்பத்தி அதிகரிப்பு, ஆவினங்கள் நோய் எதிர்ப்புச் சக்தி பெறுதல் ஆகிய இரு பலன்கள் கிட்டுகின்றன.



2. உழைப்பு இனங்களின் தரத்தினை, நம் மாநிலத்தில் அவற்றின் பிறப்பிடங்களில் மேம்படுத்தி காங்கேயம், உம்பளாச்சேரி, ஹலிக்கார் போன்ற நாட்டினங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட இன விருத்தியின் மூலம் பாதுகாக்கப்பட்டு மேம்படுத்தப்படுகிறது.

3. உள்ளூர் எருமைகளை உயர் இனமான முர்ரா, சுருத்தி எருமைகளுடன் இனவிருத்தி செய்து தரமுயர்த்துதல்.

4. மாநிலத்தில் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில இன ஆடுகளை முறையாக இனவிருத்தி செய்தல்.

5. ஆவின வளர்ப்பின் ஒரு பகுதியாக விளங்கும் தீவனப் பயிர் சாகுபடியை அபிவிருத்தி செய்து, புல் நறுக்குகள் மற்றும் விதை உற்பத்தியைப் பெருக்குதல்.

6. நோய்த் தடுப்பு மற்றும் நோய் நீக்கப் பணிகளுக்கான வசதிகளை சிறந்த விதத்தில் அளித்தல் ; மற்றும்

7. மாநிலம் முழுமையும் கூடிய விரைவில் உறைவிந்து செயற்கை முறை இனவிருத்தியை படிப்படியாக விரிவுபடுத்துதல்.

### II. வளர்ச்சித் திட்டங்கள்

கால் நடை பராமரிப்புத் துறையினால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் மேற்கண்ட கொள்கையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு கால்நடை பராமரிப்புத் திட்டங்கள், அவற்றின் சாதனைகள் அனைத்தும் பின்வரும் பத்திகளில் சுருக்கமாகக் கொடுக்கப்படுகின்றன.

**(அ) மாடு வளர்ப்பு :**

1982-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் 52.08 இலட்சம் இனப்பெருக்கப் பசுக்களும், எருமைகளும் உள்ளன. இதில் 26.54 இலட்சம் பசுக்களும், எருமைகளும் பால் கறவை நிலையிலுள்ளவை. இவற்றின் மூலம் 1982—83-ம் ஆண்டில் 1,788.4 ஆயிரம் டன் பாலும், 1983—84-ம் ஆண்டில் 2,561.6 ஆயிரம் டன் பாலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாடு அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும், தீவிர கலப்பின விருத்தி மூலம் உள்ளூர் இனங்களின் தரமுயர்த்தி பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடையவை. இந்த இலக்கை அடையும் பொருட்டு கீழ்க்கண்டுள்ள திட்டங்கள் செயற் படுத்தப் படுகின்றன.

[1985 ஜூலை 5

1. கேந்திரக் கிராமத் திட்டம் :

தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுக் கிராமங்களில் உயர் ரக இனப் பெருக்கத்தைத் துரிதப்படுத்துவதே கேந்திர கிராமத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இப்பகுதிகளில் ஒரே சமயத்தில், நல்ல இனவிருத்தி, ஆற்றல் மிக்க நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், தொடர் பணிகள், கன்று வளர்ப்பு, தீவனப் பயிர் சாகுபடி போன்ற கால் நடை வளர்ப்புப் பணிகள் அனைத்தும் ஒருங்கே அளிக்கப்படுகின்றன.

தற்போது, 62 கேந்திர கிராம வட்டாரங்கள் 620 கிளை நிலையங்களுடன் இயங்கி வருகின்றன. மத்திய நிலையங்களிலிருந்து, கிளை நிலையங்களுக்குச் செயற்கை முறை இனவிருத்திப் பணிகளுக்குத் தேவையான தரமான விந்து அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு வட்டாரப் பகுதியிலும் குறைந்தது, இனப்பெருக்க பருவமுள்ள 10,000 பசுக்களும், எருமைகளும் உள்ளன. இத் திட்டம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயற்படுகின்றன.

1984–85 ஆம் ஆண்டில் இத்திட்டப் பகுதிகளில் 3,83,552 செயற்கை முறை கருத்தரிப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. 2,61,241 மாடுகளுக்கு சினைப் பரிசோதனை செய்யப் பட்டுள்ளன. 76,099 கன்றுகள் பிறந்து, சோதனை செய்யப் பட்டுள்ளன.

2. கால் நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம் :

அயலினங்கள் மற்றும் கலப்பின காளைகளின் விந்தைப் பயன் படுத்தி, கலப்பின விருத்தி செய்யும் கொள்கைப்படி உள்ளூர் இனங்களின் தரமுயர்த்தி, பால் வளப் பகுதிகளில் 5 ஆண்டு காலத்துக்குள் 33.3 சதவீதம் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் அரும் நோக்குடன் கால் நடை முனைப்பு மேம்பாட்டு திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இத்திட்டப் பகுதிகளிலும், செயற்கைமுறை இனவிருத்தி மூலம் கால்நடைகளின் தரமுயர்த்துதல், நோய்த் தடுப்பு, நோய்க்காப்பு, பால் பண்ணை விஸ்தரிப்பு, பசுந் தீவனப் பயிர் அபிவிருத்தி, மற்றும் கன்று வளர்ப்பு போன்ற ஆவின வளர்ப்புப் பணிகள் அனைத்தும் ஒருங்கே அளிக்கப்படுகின்றன.

மாநிலத்தில் 10 கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் [illegible], மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, பண்ருட்டி, [illegible] மற்றும் தாம்பரம் ஆகிய இடங்களில் இயங்குகின்றன.



1985 ஜூலை 5]

செயற்கை முறை இனவிருத்தி
மதுரை திட்டத்தின்கீழ் 4 மண்டல செயற்கை முறை இனவிருத்தி
நிலையங்களும், 100 கிளை நிலையங்களும் உள்ளன. இவை
கள், சுமார் ஒரு இலட்சம் இனப்பெருக்கப் பசுக்களையும், எருமை
களையும் உள்ளடக்கியுள்ளன. எஞ்சியுள்ள 9 திட்டங்கள் ஒவ்
வொன்றின் கீழும், 2 மண்டல செயற்கை முறை இனவிருத்தி
நிலையங்களும், 50 கிளை நிலையங்களும் உள்ளன. இத்திட்டங்
கள் ஒவ்வொன்றும் சுமார் 50,000 இனப் பெருக்கப் பசுக்களையும்
எருமைகளையும் உள்ளடக்கியுள்ளன.

1984-85-ல் 4,39,786 கால்நடைகளுக்கு செயற்கை முறை
இனவிருத்தி செய்யப்பட்டுள்ளன. 3,63,129 மாடுகளுக்கு சினை
பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 88,817 கன்றுகள் பிறந்து
பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இவ்விதம் பிறக்கும் கலப்
பின கன்றுகளை உடனே விற்று விடாமல், அவற்றின் மூலம் பலன்
கிடைக்கும் வகையில் அதாவது அவை பருவமடையும்வரை,
அவற்றை வளர்ப்பதற்கு உரிமையாளர்களை ஊக்குவிக்கும்
நோக்குடன் கன்றுமானியம் அளிக்கப்படுகிறது.

1984-85 ஆம் ஆண்டில் 8,868 கன்றுகளுக்கு மானியம் வழங்
கும்படி அரசு ரூ. 8.86 இலட்சத்திற்கு அங்கீகாரம் அளித்
துள்ளது.

இப்பகுதிகளில் பசுந்தீவனம் பயிரிடவும் முக்கியத்துவம்
அளிக்கப்படுகிறது. சத்துள்ள புல், எல்லாப் பருவ காலங்களிலும்
வளரும் பசும்புல், பருப்பு வகையைச் சார்ந்த தீவனப் பயிர் ஆகிய
வற்றைப் பயிரிட விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

1984-85-ல் இப்பகுதிகளில் 59.13 இலட்சம் புல்நறுக்கு
களும், 2.51 இலட்சம் நாற்றுகளும் 45,856 கிலோ தீவனப்
பயிர் விதைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

3 பொலி காளை நிலையங்கள்:

மாட்டினப் பெருக்கத் திட்டங்கள் வெற்றிகரமாக செயல்
படுத்தப்படுவதற்கு அவசியமான கருப்பொருள், அதாவது உயர்
ரக விந்து கிடைக்கும்படிச் செய்யும் நோக்கை நிறைவேற்றும்
வகையில், 59 பொலிகாளை நிலையங்கள் இயங்கி வருகின்றன.
இந்நிலையங்களில் 344 அயலினக்காளைகள், 35 இந்திய இனக்
காளைகள், 19 கலப்பினக் காளைகள் மற்றும் 381 முர்ரா எருமை
இனகடாக்கள், ஆக மொத்தம் 779 பொலி காளைகள் பராமரிக்
கப்படுகின்றன. பல்வேறு கால்நடைப் பண்ணைகளில் உருவாக்கப்
படும் காளைகள் இந்நிலையங்களில் வைக்கப்படுகின்றன. இது
தவிர, தேவையான இதர காளைகள் பிற மாநில அரசுப் பண்ணை
கள் அல்லது அவற்றின் பிறப்பிடங்களில் வாங்கப்படுகின்றன.
இந்நிலையங்களிலுள்ள காளைகளிலிருந்து விந்து சேகரிக்கப்
பட்டு, முறையாக பதப்படுத்தப்பட்டு, கருத்தரிப்பு ஊசிகள்
போடப்படும்படி செயற்கைமுறை இனவிருத்தி செய்யப்படும்
நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

[1985 ஜூலை 5

**4 உறைவிந்து முறை விஸ்தரிப்பு:**

தற்போது, பெரும்பாலும் திரவ விந்து முறையே பயன்படுத்தப்படுகின்றது. உறைவிந்து முறை பல்வேறு திட்டங்களின் மூலம் படிப்படியாகக் கையாளப்பட்டு வருகிறது. முன்னோடியாக, சைதாப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கற்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் வேலூர் ஆகிய 5 மருத்துவ நிலையங்களில் முதன் முதலாக உறைவிந்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அடுத்தப்படியாக, வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியைக் கொண்டு, தர்மபுரி மாவட்டத்தில் 62 நிலையங்களிலும், இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் 70 நிலையங்களிலும் உறைவிந்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும், டென்மார்க் அரசு நிதி உதவியுடன் ஈச்சங்கோட்டையில் உறைவிந்து வங்கி ஒன்றும், மாநிலத் திட்டத்தின்கீழ், அபிஷேகப்பட்டியில் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து பதப்படுத்தும் நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றுடனும் 50 நிலையங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட இரு நிலையங்களையும் வலுப்படுத்தி, மேலும் 300 நிலையங்களுக்கு உறைவிந்து முறை விஸ்தரிக்கும் பொருட்டு மத்திய அரசின் ரூ. 104.32 இலட்சம் நிதி உதவியுடன் ரூ. 117.41 இலட்சம் செலவில் மற்றொரு திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல், திரவ நைட்ரஜன், மற்றும் அதை வைப்பதற்கான குடுவைகள், ஆய்வுக் கூடக் கருவிகள் ஆகியவை வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடன், வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், மதுரை மற்றும் பெரியார் மாவட்டங்களில் மொத்தம் 225 நிலையங்களில் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர 1984-85 ஆம் ஆண்டில் வட ஆற்காடு, தென் ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்கள் மூன்றிலும் சேர்ந்து, மொத்தம் 125 கிளை நிலையங்களில் இம்முறையை அறிமுகப்படுத்தும் திட்டமொன்று ரூ. 15.26 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



1985 ஜூலை 5]

இவ்விதம் மாநிலத்தில் மொத்தம் 887 நிலையங்களில் உறைவிந்து முறை செயல்படுத்த திட்டமிடப்பட்டு வேலைகள் துரிதமாக நடத்தப்பட்டு வருகின்றன.

உறைவிந்து முறை மிகக் கவனத்துடன் கையாளப்படவேண்டிய நவீன தொழில் நுட்பமானதால், இம்முறையில் அதிகபட்சம் வெற்றியை நிச்சயப்படுத்தும் பொருட்டு, கால்நடை உதவி மருத்துவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் இத்தொழில் முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1984-85-ல் 398 கால்நடை ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**5 வம்சாவழி ஆய்வுத் திட்டம்:**

மாநிலத்திலுள்ள சிறந்த இனமான சிந்தி இனங்களைப் பாதுகாத்துத் தரம் , உயர்த்துவதற்குத் தேவையான சிறந்த சிந்தி பொலி காளைகளை உருவாக்கும்படி, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் சிந்தி வம்சாவழி ஆய்வுத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை ஆறு சிந்திபொலி காளைகள் அடங்கிய ஆறு குழுக்கள் சோதனை செய்யப்பட்டு, சிறந்த காளைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இந்தக் காளைகளிலிருந்து சேகரிக்கப்படும் விந்து பதப்படுத்தப்பட்டு இனவிருத்திப் பணிக்காக அனுப்பப்படுகிறது.

இது போன்ற பிறிதொரு திட்டம் முர்ரா எருமைகளுக்கென்று தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு மாவட்டக் கால் நடைப்பண்ணையில் 1981—82 ஆம் ஆண்டு முதல் செயல்படுகிறது. பொதுவாக, நலிவுற்ற மக்களின் அன்றாட வாழ்க்கைக்காக எருமைகள் வளர்க்கப்படுகின்றன. அதிகமான பால் எருமைகளிடமிருந்தே கறக்கப்படுகின்றது. சிறந்த முர்ரா எருமைக் கடாக்கள் உருவாக்கும் பொருட்டு இந்த ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இதுவரை ஒரு பிரிவு கடாக்களின் சோதனை முடிவடைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிறந்த காளைகள் என நிரூபிக்கப்படுபவைகள், பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு பல்வேறு திட்டங்களின்கீழ் நிறைவேற்றப்படும் இனவிருத்திப் பணிகளில் பயன்படுத்தப்படும்.

**6 கால் நடை கண்காட்சிகளும் கன்றுகள் பேரணியும்:**

தரமுள்ள சிறந்த கால்நடைகளை உருவாக்குவதில் நாட்டமும், உரிமையாளர்களிடையே போட்டி மனப்பாங்கையும் தோற்றுவிக்கும் நோக்குடன், அவ்வப்போது, கால்நடைக் கண்காட்சிகளும், கன்றுகள் பேரணியும் நடத்தப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில், 43 கேந்திர கிராம வட்டாரங்களில் கன்றுகள் பேரணிகள் நடத்தப்பட்டன.

(ஆ) செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு:

1. தமிழகம் 5.5 மில்லியன் செம்மறியாடுகளைக் கொண்டுள்ளது. இது, இந்தியாவின் செம்மறியாட்டுத் தொகையில் 13 சதவீதம் ஆகும். வெள்ளாடுகளின் எண்ணிக்கை 5.2 மில்லியனாகும். நபர் ஒருவருக்கு நாளொன்றுக்குத் தேவையான இறைச்சி உணவு வல்லுநர்களால் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மிகக் குறைவாக நமக்கு கிடைக்கும் நிலை தற்பொழுதுள்ளது. எனவே, இக்குறையினைப் போக்கும் பொருட்டு ஆட்டினங்களைத் தரத்திலும், எண்ணிக்கையிலும் அதிகரிக்கச் செய்ய வேண்டியது அவசரத் தேவையாகும்.

2. தமிழகத்தின் கிராமப் பொருளாதாரத்தில் ஆடு வளர்ப்புக்குப் பெரும் பங்குண்டு. ஆடு வளர்ப்புத் தொழில் பெரும்பான்மையோருக்கு, குறிப்பாக மலைப் பிரதேசம் மற்றும் வறட்சிப் பகுதிகளில் வாழும் நலிவுற்ற சமுதாயத்தினருக்கு வேலை வாய்ப்புகளை அளிப்பதாக உள்ளது. எனவே, ஆட்டினப் பராமரிப்பு வளம்பெற வாய்ப்புகள் உள்ளன.

3. தமிழகத்தில் 2 அரசு ஆட்டுப் பண்ணைகள் முறையே ஒன்று சின்ன சேலத்திலும், மற்றொன்று சாத்தூரிலும் மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் நான்கு ஆடு வளர்ப்பு நிலையங்களும் உள்ளன. இந்நிலையங்களில் மேச்சேரி, கீழக்கரிசல், இராமநாதபுரம் வெள்ளை, வேம்பூர் மற்றும் மாண்டியா இன ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. உள்ளூர் இறைச்சி வர்க்க ஆடுகளின் தரத்தினை மேம்படுத்தி, இனப்பெருக்கம் செய்து, ஆடு வளர்ப்போருக்கு தேவையான உயர் ரகக் கிடாக்கள் கிடைக்கும்படி செய்வதே இந்நிலையங்களின் நோக்கமாகும்.

4 சிறப்புத் திட்டங்கள்:

சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வேளாண்மை மறுநிதி அபிவிருத்திக் கழகத் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் ஆடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வசதியற்ற கிராமப்புற விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, ஆடு வளர்ப்புத் திட்டங்களின் மூலம் அவர் தம் வருவாயைப் பெருக்கிட உதவுவதே இத்திட்டங்களின் நோக்கமாகும். இதுகாறும் இத் திட்டங்களின்கீழ் 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் அடங்கிய 29,854 ஆடு வளர்ப்பு பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

5 ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள்:

ஆடு வளர்ப்போர் அனைவரையும் ஒன்று சேர்த்து அதிக பட்ச பலனை பெறச் செய்யும் நோக்குடன், பல்வேறு திட்டங்களின் மூலம் இதுவரை 1,148 ஆடு வளர்ப்போர் கூட்டுறவு



சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஆடு வளர்ப்புப் பிரிவுகளை சொந்தமாக ஏற்படுத்தியுள்ளனர். குடற்புழு நீக்கம் செய்தல், தடுப்பூசிகள் போடுதல் போன்ற நோய் நீக்கப் பணிகள் கால்நடை பராமரிப்புத் துறை விஸ்தரிப்பு அலுவலர்களால் அளிக்கப்படுகின்றன. 39 ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டத்தின்கீழும், 432 சங்கங்கள் சிறப்பு கால்நடை உற்பத்தி திட்டத்தின்கீழும் 223 சங்கங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் 4 சங்கங்கள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், 3 சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 447 சங்கங்கள் இதரப் பகுதிகளிலும் ஆக மொத்தம், 1,148 சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

6. இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும்படி ஆடுகளுக்கு நோய் நீக்கப் பணிகள் ஆற்றும் திட்டம்.

நபர் ஒருவருக்கு நாளொன்றுக்குத் தேவையான இறைச்சி 40 கிராம் ஆகும். ஆனால் தற்போது 26 கிராம் இறைச்சி மட்டுமே நாளொன்றுக்கு கிடைக்கப்பெறுகிறது. எனவே, ஆடுகளின் எடையை அதிகரிக்கச் செய்து, இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது அத்தியாவசியமாகும். இதனை கருத்திற் கொண்டு ஆடுகளுக்கு நோய் நீக்கப் பணிகளை துரிதப்படுத்தி அதன் மூலம் ஆரோக்கியமும், சிறந்த உற்பத்தித் திறனுடைய ஆடுகளை உருவாக்கும் நோக்குடன் மேற்படி திட்டம் 1982-83 ஆம் ஆண்டு முதல் சேலம், தென்னாற்காடு, வட ஆற்காடு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1983-84 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மற்றும் தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. 1984-85-ல் மொத்தம் 25.81 இலட்சம் ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்விதம் குறிப்பிட்ட இடைவெளியில் குடற்புழு நீக்கம் செய்யப்படுவதால், ஒரு ஆட்டின் எடையில் 2 கிலோ வரையில் இறைச்சி அதிகரிக்கிறது. இதன் மூலம் ஆடு ஒன்றுக்கு ரூ. 25 மதிப்புள்ள கூடுதல் இறைச்சி கிடைக்கிறது.

7. இளைஞர்களுக்குப் பயிற்சி.

ஆடு வளர்ப்போரில் பெரும்பாலானோர் கல்வியறிவற்றவர்களாதலால், ஆடு மற்றும் கம்பள உற்பத்தியிலுள்ள முன்னேற்ற முறைகளைப்பற்றி அறியாதவர்களாக உள்ளனர். எனவே, விஞ்ஞான முறையில் ஆடு பராமரிப்பில் ஈடுபட கிராமப்புற இளைஞர்களுக்குக் குறுகிய கால பயிற்சி அளிக்கப்படுகிறது. 1984-85-ல் 365 இளைஞர்கள் இப்பயிற்சியினால் பயனடைந்துள்ளனர்.

8. வெள்ளாடு வளர்ப்பு.

சமீப காலங்களில் வெள்ளாடு வளர்ப்பில் கவனம் செலுத்தப் பட்டுள்ளது. வெள்ளாடு வளர்ப்பைப் பரப்பும்படி, புதுக் கோட்டையிலுள்ள வெள்ளாடு வளர்ப்புப் பிரிவில் தலைச்சேரி வெள்ளாடுகளும், சின்னசேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையில் ஜமுனாபாரி வெள்ளாடுகளும் பராமரிக்கப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில் 169 தலைச்சேரி குட்டிகளும், 46 ஜமுனாபாரி குட்டிகளும் பிறந்துள்ளன.

9. இரட்டைப் பலன் தரும் வெள்ளாடுகள்.

தமிழகத்தில் காணப்படும் வெள்ளாடுகள் பெரும்பாலும் இறைச்சி வர்க்கத்தைச் சார்ந்தவை. இறைச்சி, பால், ஆகிய இரட்டைப் பலனுள்ள வெள்ளாடுகளைப் பராமரிப்பதே விவ சாயிகளுக்கு நல்ல ஆதாயமுள்ளதாக இருக்கும். எனவே, நாட்டின வெள்ளாடுகளை கலப்பின விருத்தி மூலம் பால் மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, தேர்ந் தெடுக்கப்பட்ட மருத்துவ நிலையங்களில் ஜமுனாபாரி மற்றும் தலைச்சேரி வெள்ளாட்டுக் கிடாக்கள் பராமரிக்கப்பட்டு, கலப்பின விருத்தி செய்யப்படுகிறது.

10. தமிழ்நாடு ஆடு அபிவிருத்திப் பெருந்திட்டம்.

வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், செங்கற்பட்டு மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ஆடு அபிவிருத்திக்குப் பெரும் வாய்ப்புகள் உள்ளன. இம்மாவட்டங்களில் ஆடு அபிவிருத்தி செய்யும் பொருட்டு பெரும் திட்டம் ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசின் மூலம் உலக வங்கியிடம் ரூ. 1,613.13 இலட்சம் நிதி உதவி கேட்கப்பட்டுள்ளது.

11. கூட்டுறவுப் பயிற்சிக்கு அலுவலர்களை அனுப்புதல்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிமுறைகள் பற்றிய கொள்கைகள், செயல்முறைகள் ஆகியவற்றில் இதுவரை 43 கால்நடை பராமரிப்பு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. மேற்படி அலுவலர்கள், தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை திறம் பட நிர்வகிப்பதற்கு இப்பயிற்சி பயனுடையதாக உள்ளது.

12. தமிழ்நாடு இறைச்சிக் கழகம்.

ஆடுகள் வெட்டப்படுவதற்கு முன்னரும், பின்னரும் முறையே ஆடுகளையும், இறைச்சியையும் பரிசோதித்து, இறைச்சியை சுகாதார முறையில் பதப்படுத்தி சென்னை நகரத்துக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் தேவையான இறைச்சியை சுத்தமாகவும் மொத்தமாகவும் விநியோகிக்கும் நோக்குடன் தமிழ்நாடு இறைச்சிக் கழகம் துவக்கப்பட்டது. இதற்காக சென்னை



நகரத்திலிருந்து 27 கிலோ மீட்டர் தொலைவில், செங்கற்பட்டு
மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கொடுவல்லி கிராமத்தில்
82.42 ஏக்கர் நிலத்தில் நவீன, சுகாதார வசதிகளுடன் கூடிய
இறைச்சிக் கூடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டு
மானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை நகரத்தில் தற்போதுள்ள ஆடு வெட்டும் இறைச்சிக்
கூடங்களும் 1—4—1981 முதல் தமிழ்நாடு இறைச்சி
அபிவிருத்திக்கழகத்தின் கீழ்கொண்டு வரப்பட்டு, சீரமைக்கப்பட்டு
உள்ளன. பெரம்பூர் மற்றும் வில்லிவாக்கம் இறைச்சிக் கூடங்
களில் பெரும் முன்னேற்றம் செய்யப்பட்டு உள்ளது.

(இ) கோழி வளர்ப்பு.

கோழிகள் மற்றும் வாத்துகள் உட்பட, தமிழகத்தில் 18.28
மில்லியன் எண்ணிக்கையும், கோழிகள் மட்டும் 17.8 மில்லியன்
எண்ணிக்கையும் உள்ளன. இதில் அயலின கோழிகள் 5.2 மில்
லியனும், நாட்டுக் கோழிகள் 12.6 மில்லியனும் ஆகும். இந்திய
மருத்துவ ஆராய்ச்சி கழகம் நிர்ணயித்தபடி நபர் ஒருவருக்கு
வருடம் ஒன்றுக்குத் தேவையான முட்டைகள் 183 ஆகும். ஆனால்
1983-84 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி வருடம் ஒன்றுக்குக்
கிடைக்கப்பெறும் முட்டைகளின் எண்ணிக்கை 21 மட்டுமே
ஆகும். எனவே, இப்பெரும் குறையினைப் போக்கும் நோக்கு
டன் கோழி அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்
றன.

கோழிப் பண்ணைகளின் வெற்றி, பெரும்பாலும் தரமுள்ள
குஞ்சுகளையே சார்ந்துள்ளது. எனவே, இனவிருத்திக்கேற்றத்
தரமான கோழிக்குஞ்சுகளை வழங்கவும், கோழி பராமரிப்பில்
தக்க ஆலோசனைகளை அளிக்கும்பொருட்டும் 2 குஞ்சுபொரிக்கும்
நிலையங்களும் 29 கோழி விஸ்தரிப்பு நிலையங்களும் இம்
மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இவைகள் அனைத்தும் அபி
விருத்தி மற்றும் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளும் வகை
யில் சீரமைக்கப்பட்டுள்ளன. கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ளோர்
சொந்தமாகக் கொல்லைப்புற கோழி வளர்ப்புப் பிரிவு
களை துவங்கவும் ஒத்தாசை அளிக்கப்படுகிறது.

கால்நடை பராமரிப்புத் துறையின் பல்வேறு சிறப்புத் திட்டங்
களின் மூலம், கிராமப்புறங்களில் கோழி வளர்ப்பு பிரிவுகள்
நிறுவப்பட்டதன் மூலமும் மற்றும் கோழி வளர்ப்போர் கூட்டுறவு
சங்கங்கள் அமைக்கப்பட்டதன் விளைவாக கோழி வளர்ப்பு
ஏற்றம் பெற்றுள்ளது. தற்போது 15 கோழி வளர்ப்போர்
கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கத்தின் அங்கத்
தினர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் நேரிடை
யாகக் கடன் உதவிகள் அளிக்கப்படுகின்றன.

கோழி நோய் கண்டறியும் கூடம்.

அவ்வப்போது கோழி நோய்களைக் கண்டறியும் பொருட்டு கீழ்க்கண்ட பணிகளை ஆற்றும்படி ஈரோட்டில் கோழி நோய் கண்டறியும் கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

(1) ஆய்வுக்கூடத்தை சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள கோழி வளர்ப்பு நிலையங்களில் ஆய்வு நடத்துதல்.

(2) நோய்த் தடுப்பு, நோய்க் காப்பு பணிகளில் போதுமான ஆலோசனைகள் அளித்தல்.

(3) அப்பகுதியிலுள்ள கோழிகளுக்குத் தேவையான மருந்து வழங்குதல்.

1984–85 ஆம் ஆண்டில், இக்கூடம் மத்திய நிதி உதவித் திட்டத்தின் கீழ் வலுப்படுத்தப்பட்டு சிறந்த பணி ஆற்றும்படி ஒரு துணை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளது.

1984–85 ஆம் ஆண்டில் ஆய்வுக்கூட அலுவலர்களால் 1,527 கிராமங்களும் 2,130 தனியார் கோழிப் பண்ணைகளும் பார்வையிடப்பட்டன. 2,806 மாதிரிகள் பரிசோதனை செய்யப் பட்டன. 175 திடீர் நோய்க் கிளர்ச்சிகள் கவனிக்கப்பட்டு, ஆவன செய்யப்பட்டன.

(ஈ) பன்றி வளர்ப்பு.

நம் மாநிலம் 6.94 இலட்சம் பன்றிகளைக் கொண்டுள்ளது. பன்றி வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், 6 அரசு பன்றி வளர்ப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இப்பிரிவு களில் பெரிய வெள்ளை யார்க்ஷையர் இனப் பன்றிகள் பரா மரிக்கப்படுகின்றன. 1984–85 ஆம் ஆண்டில் 704 பன்றிகள் இனவிருத்திக்காக இப்பிரிவுகளில் இருந்து விற்கப்பட்டுள்ளன.

நகர் பகுதிகளில் பன்றி இறைச்சி உண்ணும் பழக்கம் அதி கரித்துள்ளபோதிலும், பன்றி வளர்ப்புத் தொழில் இன்னமும் நலிவுற்ற சமுதாயத்தினரின் கரங்களிலேயே உள்ளது. அவர்தம் பொருளாதார நிலையில் ஏற்றம் காணச்செய்யும் பொருட்டு, பல்வேறு சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டங்களின் மூலம் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின் றன. இதனால் பன்றி வளர்ப்பில் சற்று முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது.

பன்றி வளர்ப்பில் முன்னேற்றம் காண வேண்டுமெனில் பன்றி இறைச்சியை விற்பனை செய்வதற்கான வசதிகளும் அளிக்கப்பட வேண்டும். இந்நோக்கைக் கருத்திற் கொண்டு, சென்னை நகரத்தில் சைதாப்பேட்டையில் இறைச்சி விற்பனைக்



கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. 1984—85-ல் 1,093 கிலோ பன்றி இறைச்சி விற்பனை மூலம் ரூ. 14,751.75 வரவு கிடைக்கப் பெற்றுள்ளது.

(உ) நாய் வளர்ப்புப் பிரிவு:

தமிழகத்தில் அழிவுறும் நிலையிலிருந்த இராஜபாளையம் மற்றும் கோம்பை இன நாய்களைப் பாதுகாத்து, அவைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் சென்னை நகரத்தில் சைதாப் பேட்டையில் நாய் இனவிருத்திப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. தற்போது இப்பிரிவில் எட்டு இராஜபாளையம், ஆறு கோம்பை மற்றும் இரண்டு ராம்பூர் இன நாய்கள் உள்ளன. 1984–85-ல் 117 ராஜபாளையம் குட்டிகள், 38 கோம்பை குட்டிகள், ஆக மொத்தம் 155 குட்டிகள் இந்நிலையத்திலிருந்து பொதுமக்களுக்கு விற்கப்பட்டுள்ளன.

(ஊ) பசுந்தீவனப் பயிர் வளர்ப்பு:

கால்நடைகளின் இனவிருத்தி திட்டங்களின் வெற்றி கிடைக் கும் பசுந்தீவனத்தைப் பொருத்துள்ளது. ஆனால் நம் மாநிலத் தில் பசுவந்தீவனப் பயிர் உற்பத்தி பற்றாக் குறையாகவே உள் ளது. எனவே பசுந்தீவன உற்பத்தி கணிசமான அளவு அதி கரிக்கப்பட வேண்டும். நமது மாநிலத்தில் எட்டு பசுந்தீவன விதை உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1984–85 ஆம் ஆண்டில் 62.08 இலட்சம் புல் நறுக்குகள், 2.00 இலட்சம் பசுந்தீவன நாற்றுகள் மற்றும் 23.50 மெட்ரிக் டன் பசுந்தீவன விதைகள் ஆகியவை விவசாயிகள் பசுவந்தீவனப் பயிர் சாகுபடி செய்யும் படி இந்நிலையங்களிலிருந்து வழங்கப்பட்டுள்ளன. 1984–85 ஆம் ஆண்டில் தற்போதுள்ள ஈச்சங்கோட்டை நிலை யத்தில் கூடுதல் வசதிகள் அளிக்கும்படி ரூ. 5.83 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை முனைப்பு மேம்பாட்டுப் பகுதிகளிலும், பசுந் தீவன சாகுபடியில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. 1984–85-ல் இப்பகுதிகளில் 59.13 இலட்சம் புல் நறுக்குகளும், 2.51 இலட்சம் நாற்றுகளும், 45,856 கிலோ தீவனப் பயிர் விதைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. புல்நறுக்குகள், பயிர் நாற்றுகள், விதைகள் ஆகியவை விநியோகித்தல், மாதிரி பாத்தி கள் அமைத்தல் மற்றும் புல்வெட்டும் கருவிகள் வழங்குதல் போன்ற பணிகளுக்காக ரூ. 2.21 இலட்சம் மானியமாக வழங் கப்பட்டது.

இது தவிர மக்காச் சோளம், சோளம், குதிரை மசால், சணப்பை காராமணி போன்ற தானியங்கள் அடங்கிய 550 சிறுபைகள் இப்பகுதிகளில் வழங்கப்பட்டன.

மேய்ச்சல் நிலங்கள் மற்றும் அவற்றின் உபயோகம் ஆகியவை பற்றி மதிப்பீடு செய்யும் திட்டமொன்று 1984–85 ஆம் ஆண் டில் ரூ. 4.22 இலட்சம் செலவில் இந்திய வேளாண்மை ஆராய்ச் சிக் கழகத்தின் 50 சதவீதம் நிதி உதவியுடன் செங்கற்பட்டு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

[1985 ஜூலை 5

மேய்ச்சல் நிலங்களின் பரப்பளவையும் அப்பகுதியில் கிடைக்கப்பெறும் சராசரி விளைச்சலையும் மதிப்பீடு செய்யவும், இந்நிலங்களில் கிடைக்கப் பெறும் தாவரங்கள், புல், மற்றும் தீவனப் பயிர் அவற்றில் அடங்கியுள்ள சத்து ஆகியவற்றையும் கண்டறிய இத்திட்டம் உதவும்.

(எ) சிறப்புத் திட்டங்கள்:

மேலே கண்ட பொதுவான வளர்ச்சி திட்டங்கள் தவிர, நலிவுற்ற பிரிவினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் மூலம் கிராமப் பகுதிகளில் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், சத்துணவாகிய பால், இறைச்சி, முட்டை போன்றவைகளும் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தகைய சிறப்புத் திட்டங்களின் விவரம் பின்வருமாறு :

(1) சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம்:

கிராமப் பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகள், குறு நில விவசாயிகள், வேளாண்மை தொழிலாளர்கள் ஆகியோரின் பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம் கவனம் செலுத்துகிறது. இதன் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் விவரம் பின்வருமாறு :—

| திட்டம். | செயல்படுத்துபவர். | செயல்படுத்தப் படும் மாவட்டங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆடு உற்பத்தி. | கால்நடை பராமரிப்புத் துறை. | வட ஆற்காடு, சேலம், திருநெல்வேலி. |
| பன்றி உற்பத்தி. | கால்நடை பராமரிப்புத் துறை. | வட ஆற்காடு, மதுரை. |
| கன்று வளர்ப்பு. | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம். | வட ஆற்காடு, தென் ஆற்காடு சேலம், கோயம்புத்தூர் மதுரை. |
| கோழி உற்பத்தி. | தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம். | செங்கற்பட்டு, வட ஆற்காடு மதுரை, சேலம். |



1985 ஜூலை 5]

ஆடு உற்பத்தித் திட்டம்:

இத்திட்டம் கிராமப்புறங்களில் வேகமாக பரவி வருகிறது. அதற்கு நல்ல வரவேற்புள்ளது. ரூ. 4,500 மொத்த செலவில் 20 பெட்டை ஆடுகளும், 1 கிடாவும் அடங்கிய ஆடு வளர்ப்பு பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கப் படுகிறது. சிறு விவசாயிகளுக்கு ரூ. 1,125 மானியமாகவும், குறு நில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு ரூ. 1,500 மானியமாகவும் வழங்கப்படுகிறது. 1976–77 முதல் 1983–84 வரை ரூ. 174.513 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, 16,756 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தி கொடுக்கப் பட்டுள்ளன. 1984–85 ஆம் ஆண்டிற்கு ரூ. 17.105 இலட்சம் செலவில் சேலம், வட ஆற்காடு மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், மொத்தம் 1,238 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

பன்றி உற்பத்தித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் ரூ. 5,000 மூலதனமாகும் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்க உதவியளிக்கப்படுகிறது. மொத்த தொகையில் சிறு விவசாயிகளுக்கு ரூ. 1,250-ம் குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு ரூ. 1,665-ம் மானியமாக வழங்கப்படுகிறது. 1981–82 முதல் 1983–84 வரை 150 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு ரூ. 2,245 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் 25 பன்றி வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

கன்று வளர்ப்புத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு கலப்பினக் கன்றுகளை வளர்க்கும் பொருட்டு கால்நடைத் தீவன மானியம் கொடுக்கப்படுகிறது. 1977–78 முதல் 1983–84 வரை 32,943 கன்றுகள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. 1984–85 ஆம் ஆண்டில், 5,000 கன்றுகளுக்கு ரூ. 75 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கோழி உற்பத்தித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் ரூ. 4,580 மொத்த மூலதனத்தில் 100 முட்டையிடும் கோழிகள் அடங்கிய கோழி வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு உதவியளிக்கப்படுகிறது. மொத்தத் தொகையில், சிறு விவசாயிக்கு ரூ. 1,145-ம், குறுநில விவசாயி மற்றும் விவசாயத் தொழிலாளருக்கு ரூ. 1,526-ம் புதிய கோழி வளர்ப்புப் பிரிவுகளை துவக்க மானியம் வழங்கப்படுகிறது. இதுவரை அதாவது 1976–77 முதல் 1983–84-ம் ஆண்டு வரை, 3,098 கோழி வளர்ப்புப் பிரிவுகள் நிறுவதற்கும் மாற்றுவதற்கும், ரூ. 87.27 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக் கானல் வட்டத்தில் கன்று வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப் பட்டது. பின்னர் இத்திட்டம் கோயம்புத்தூர், நீலகிரி திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், காமராஜர், மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. உயர் ரக கலப்பினக் கன்றுகளை 29 மாதங்கள் பேணி பராமரிப்பதற்காக தவண மானியம் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டோர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்தக் காலத்திற்கு பராமரிப்பு தீவனச் செலவு ரூ. 2,523 ஆகும். இதில் சிறு விவசாயிகளுக்கும், குறுநில விவசாயிகளுக்கும் ரூ. 1,261-ம் விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ. 1,682-ம் மானியமாக அளிக்கப்படுகிறது.

1983—84 ஆம் ஆண்டு முடிவு வரை 3,470 கன்றுகள் மானியம் பெறும்படி சேர்க்கப்பட்டன. இவ்விதம் பயன் அடைந்தவர்களில் 608 பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் ஆவார்கள். 1982-83 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட 500 கன்றுகளுக்கு 1984—85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மானிய உதவி அளிக்கப்பட்டது.

3. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் 415 ஆடு வளர்ப்புப் பிரிவுகளும், 4 ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 1983—84 ஆம் ஆண்டில் 100 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ரூ. 1.26 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டு, நான்கு வட்டாரங்களில் ரூ. 32,000 செலவில் 40 பன்றி வளர்ப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மருத்துவ உதவி அளிக்கும் பொருட்டு நோய்ப் புலனாய்வு நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உதகமண்டலத்திலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் குருத்துக்குளி மற்றும் கோல்கிரேன் பசுந்தீவனப் பண்ணைகளிலும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1983—84 ஆம் ஆண்டில் உதகமண்டலம், குன்னூர் கால்நடை மருத்துவமனைகளில் உறைவிந்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது 1984—85 ஆம் ஆண்டில் ரூ. 1.92 இலட்சம் செலவில், மேலும் 5 மருந்தகங்களில் இம்முறை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

4. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டம் சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி, மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள ஒன்பது பழம் குடிப் பகுதிகளில் செயற்படுத்தப்படுகிறது இத்திட்டத்தின் மூலம் பழங்குடி மக்களுக்கு கறவை மாடுகள், உழவு மாடுகள் வழங்கப் படுவதுடன், ஆடு, கோழி, மற்றும் பன்றி வளர்ப்பு பிரிவுகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன,



1983—84 ஆம் ஆண்டில், 152 கறவை பசுக்களும், 470 உழவு மாடுகளும் வழங்கப்பட்டன. 374 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. 20 கன்றுகள் கன்று மானியத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. 1976—77 ஆம் ஆண்டு முதல் 1983—84 வரை 11,365 பழங்குடி குடும்பத்தினர் இத் திட்டங்களினால் பயன் அடைந்துள்ளனர்.

1984—85 ஆம் ஆண்டிற்கு பழங்குடியினர் பலன் பெறும் படி ரூ. 35.90 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயற் படுத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

| | இலக்கு. | சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கறவை மாடுகள் விநியோகித்தல் .. | 260 | 311 |
| 2. ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல். .. | 480 | 430 |
| 3. உழவு மாடுகள் வழங்குதல் .. | 600 | 550 |

மேலும், இத்திட்டத்தின் கீழ் வரும் ஒன்பது கால்நடை மருந்தகங்களில் உறைவிந்து முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

வறட்சியினால் ஏற்படும் நலிவை குறைக்கும் நோக்குடன் இத்திட்டம், 50 சதவீதம் மத்திய அரசின் நிதி உதவியுடன் இராமநாதபுரம், காமராஜர், பசும் பொன் முத்துராமலிங்கம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் கால்நடை பராமரிப்பு ஒரு முக்கியமான அம்சமாகும். கீழ்க்கண்ட மாவட்டங்களில் கால்நடை பராமரிப்புப் பணிகளின் கீழ் அடையப் பெற்ற சாதனைகள் பின்வருமாறு—

இராமநாதபுரம், காமராசர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்கள்.

அடிப்படை வசதிகளாக 3 இயங்கும் மருத்துவப் பிரிவுகளும், 11 கேந்திர கிராம வட்டாரங்கள் மற்றும் 2 பிரதம மருத்துவ நிலையங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. 70 நிலையங்களில் உறைவிந்து முறை செயல்பட்டு வருகிறது. செட்டிநாட்டிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணை மற்றும் சாத்தூரிலுள்ள ஆட்டுப் பண்ணை ஆகியவற்றில் கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

[1985 ஜூலை 5

தர்மபுரி மாவட்டம்.

ஓசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தேவையான கூடுதல் வசதிகள் ஏற்படுத்தியதின் மூலம், இம்மாவட்டத்தில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தருமபுரியில் பிரதம மருத்துவ மனை ஒன்றும், நான்கு கால்நடை மருந்தகங்களும், நான்கு இயங்கும் மருத்துவப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கால்நடை பராமரிப்புத் திட்டங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்காக இரண்டு புதிய கால்நடை பராமரிப்புத் திட்டக் கோட்டங்களும் தோற்றுவிக்கப்பட்டன. 1984–85 ஆம் ஆண்டில் நான்கு கூடுதல் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 1983–84 ஆம் ஆண்டிலிருந்து இம்மாவட்டம் சேர்க்கப்பட்டு, இதுவரை நான்கு கால்நடை மருந்தகங்களும் ஒரு இயங்கும் மருத்துவப் பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

6. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

பெருமளவு சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் கால்நடை வளர்ப்பை உபதொழிலாகக் கொண்டு பயனடையும் பொருட்டு கறவை மாடுகள் வழங்குதல், உழவு மாடுகள் விநியோகித்தல், ஆடு, கோழி, வாத்து, வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல் போன்ற பல பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1983–84 ஆம் ஆண்டில் மட்டும் இத்திட்டத்தின் கீழ், 1,76,650 பேர் பயனடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முக்கியமான சில பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. கறவை மாடுகள் விநியோகித்தல் .. .. | 1,25,421 |
| 2. ஆடு வளர்ப்பு பிரிவுகள் ஏற்படுத்துதல் .. | 33,251 |
| 3. வெள்ளாடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல். | 7,319 |
| 4. கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல் .. | 780 |
| 5. வாத்துப் பிரிவுகள் ஏற்படுத்துதல் .. .. | 1,109 |
| 6. உழவு மாடுகள் விநியோகித்தல் .. .. | 5,622 |



1985 ஜூலை 5]

| | |
|---|---|
| 7. கன்றுகள் வளர்த்தல் .. .. .. .. | 2,777 |
| 8. பன்றி வளர்ப்புப் பிரிவுகள் .. .. .. | 267 |
| 9. குதிரைகள் வளர்த்தல் .. .. .. | 90 |
| 10. பால் வற்றிய மாடுகள் பராமரிப்பு .. .. | 14 |

1984–85-ல் கீழ்க்கண்ட பணிகள் ஆற்றப்பட்டன :—

| | |
|---|---|
| 1. கறவை மாடுகள் விநியோகிக்கப்பட்டது .. | 94,231 |
| 2. ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டவை | 28,686 |
| 3. வெள்ளாடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டவை. | 5,450 |
| 4. கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டவை | 314 |
| 5. வாத்து வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டவை | 838 |
| 6. உழவு மாடுகள் வழங்கப்பட்டவை .. .. | 285 |
| 7. கன்றுகள் வளர்ப்பு .. .. .. .. | 1,391 |
| 8. பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டவை | 245 |

பொதுமக்களில், பொருளாதார நிலையில் நலிந்துள்ள பிரிவினர் சிறந்த உற்பத்தி ஆதாரங்களை பெறுவதற்கு இத்திட்டம் உதவியுள்ளது. மேற்கண்ட இத்திட்டத்தின் நிதியைக் கொண்டு மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தென்னார்காடு, வட ஆர்காடு, பெரியார், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 233 நிலையங்களில் உறைவிந்து முறையை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

7. ஒருங்கிணைந்த மாதிரி அளவீடு திட்டம் (மாநில அளவில்.) :

பால், முட்டை இறைச்சி போன்ற கால்நடை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியை மதிப்பீடு செய்யும் நோக்குடன், 1977–78-ம் ஆண்டு முதல் தமிழகத்தில் மாதிரி அளவீடு திட்டம் மாநில அளவில் செயல்பட்டு வருகின்றது. 1977–78-லிருந்து 1983–84 ஆம் ஆண்டு முடிய 1,705 கிராமங்களில் இந்த அளவீடு

முடிவுற்றுள்ளது. இந்த அளவீடுகளின் முடிவுப்படி 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பின்வருமாறு :—

| | 1982—83 | 1983—84 |
|---|---|---|
| பால் உற்பத்தி ('000 டன்னில்) .. | 1,788.4 | 2,561.6 |
| முட்டை உற்பத்தி (மில்லியன்) .. | 898 | 996 |
| இறைச்சி உற்பத்தி (கிலோ) (அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கூடங்களில் மட்டும்.) | 27,592,087 | 31,739,198 |

1982—83 ஆம் ஆண்டை காட்டிலும், 1983—84 ஆம் ஆண்டில் பால் 773.2 ஆயிரம் டன்னும், முட்டைகள் 98 மில்லியனும், இறைச்சி 41,37,111 கிலோவும் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த அளவீடு 1984—85 ஆம் ஆண்டில் தொடரப்பட்டது. மேலும் 1985—86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

8. மாதிரி அளவீடுத் திட்டம் (மாவட்ட அளவில்) :

1983—84 ஆம் ஆண்டிற்கு மாவட்ட அளவிலான மாதிரி அளவீடு திட்டத்தை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு மற்றும் மத்திய அரசுகளின் 50 சதவிகிதம் நிதி உதவியுடன் ரூ. 10.854 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை, அவற்றின் உற்பத்திப் பொருட்கள், கால்நடை பராமரிப்பு செயல்முறைகள் போன்ற விவரங்கள் சேகரிப்பதே இத்திட்டத்தின் பணிகளாகும்.

தற்போது இத் திட்டம் வட ஆற்காடு, பெரியார், மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1983—84-ல் மேற்படி விவரங்களை சேகரிப்பதற்கான முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1984—85-ல் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு அதன் விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

9. ஆடுகளின் பிறப்பு, இறப்பு பற்றி மதிப்பிடும் முன்னோடி ஆய்வு :

இந்திய வேளாண்மை புள்ளி விவர ஆராய்ச்சி நிலையத்தின் ஒருங்கிணைந்த ஆய்வுத் திட்டம் ஒன்று இம் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம் 21—2—1984 முதல் துவங்கப்பட்டது. இது குறிப்பாக மந்தை ஆடுகளின் வளப்பம் மற்றும் இறப்பு விகிதங்களை மதிப்பீடு செய்வதற்கான தகுந்த ஒரு முறையை அபிவிருத்தி செய்ய இத்திட்டம் உதவுகிறது. இந்த மதிப்பீடு வேலைகளின் காலம் பதினாறு மாதங்கள் ஆகும்.





10. தோல் மற்றும் பதனிட்ட தோல் பற்றிய மதிப்பீடு செய்யும் முன்னோடி மாதிரி அளவீடு.

மத்திய அரசின் உதவியுடன் 30—12—1984 முதல் இம்மாநிலத்தில் இத் திட்டம் செயல்பட்டு வருகிறது. வட ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் தோல் மற்றும் பதனிட்ட தோல் ஆகியவற்றின் உற்பத்தியை மதிப்பீடு செய்வதே இத் திட்டத்தின் நோக்கம் ஆகும். இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் மற்றும் இறந்து போன கால்நடைகள் ஆகியவற்றின் தோல் உரிக்கப்படும் முறைகள், தோலைப் பதப்படுத்தும் விதம், அவற்றைப் பதப்படுத்தும் முறை ஆகியவை பற்றியும் இந்த அளவீடு ஆய்வு செய்கிறது.

## III கால்நடைப் பண்ணைகள்

கால்நடைகளின் மரபை மேம்படுத்துவதற்கான மூலப் பொருட்களை அளிக்கவும், இனப்பெருக்கம், தீவனமிடுதல், கால்நடை பராமரிப்பு ஆகியவற்றில் ஆராய்ச்சி நடத்தும் பொருட்டும் கால்நடைப் பராமரிப்புத் துறை பதினோரு கால்நடைப் பண்ணைகளை நிர்வகித்து வருகின்றது. இப்பண்ணைகளில், சிந்தி, தார் பார்க்கர், முர்ரா, ஜெர்சி, மற்றும் ப்ரிஷியன் போன்ற அங்கீகரிக்கப்பட்ட இனங்களும் மற்றும் கலப்பினங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சில பண்ணைகளில் ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு பிரிவுகளும் இணைக்கப்பட்டு, இவ்வினங்களின் இனப்பெருக்கத்திற்கான மூலப்பொருட்கள் இப் பிரிவிலிருந்து வழங்கப்படுகின்றன. மேலும், எல்லாப் பண்ணைகளிலும் பசுந்தீவனப் பயிர் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

1984—85-ல் இப் பண்ணைகளில் 13.67 இலட்சம் கிலோ கிராம் பாலும், 16,504 டன் பசுந்தீவனப் பயிரும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் மாநிலத் திட்ட நிதி மற்றும் மத்திய அரசின் நிதி உதவியுடன் திரவ நைட்ரஜன் மற்றும் உறை விந்து நிலையம் ஏற்படுத்தப்பட்டு திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டங்களில் மொத்தம் 126 நிலையங்களில் உறை விந்து முறைத் தேவைகள் பூர்த்தி செய்யப் படுகின்றன.

அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை :

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் 1976-ம் ஆண்டில் இப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு கலப்பின விருத்தித் திட்டங்களுக்குத் தேவையான தரமுள்ள ஜெர்சி இனக் காளைகளை இப்பண்ணை உருவாக்கி விநியோகிக்கின்றது. தற்போது இப்பண்ணையில் 388 ஜெர்சி இன மாடுகள் பராமரிக்கப்படுகின்றன. 1984—85-ல்

மட்டும் 102 கன்றுகள் பிறந்துள்ளன. உறைவிந்து வங்கி ஒன்றும் தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையம் ஒன்றும் இப்பண்ணையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**இடேரி உற்பத்தி நிலையம்**

பொது மக்களிடமிருந்து ஒரு வயதுக்கு கீழ்ப்பட்ட இளம் கலப்பினக் கிடேரி கன்றுகளை வாங்கி, அவற்றைப் பருவமடையும் வரை வளர்த்து, உயர்ரக சிறந்த காளைகளின் விந்தைக் கொண்டு கருத்தரிக்கச் செய்து, அவைகள் கன்று ஈன்றவுடன் ''இலாப நஷ்ட மற்ற'' அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்குவதே இந்நிலையங்களின் நோக்கமாகும். இரண்டு கிடேரி உற்பத்தி நிலையங்கள் புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலத்தில் இயங்கி வருகின்றன. இதுவரை 172 கிடேரிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**ஓங்கோல் கால்நடை வளர்ப்புப் பிரிவு மாதவரம்**

பால் மற்றும் உழைப்பு ஆகிய இரண்டு தேவைகளுக்கு பேர்போன ஓங்கோல் இன மாடுகளைப் பராமரித்து, விவசாயிகளுக்கு அவற்றை வழங்குவதே இந்நிலையத்தின் நோக்கமாகும். அடிப்படை இருப்பாக 20 ஓங்கோல் மாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவில் தற்போது 64 மாடுகள் உள்ளன.

## IV கால்நடை நோய் நீக்கப் பணிகள்

**(1) கால்நடை மருத்துவ நிலையங்கள்**

கால்நடைகளை கொடிய நோய்களிலிருந்து காக்கும்படி, போதுமான கால்நடை நோய் நீக்கப் பணிகள் ஆற்றப்பட்டாலொழிய, கால்நடை வளர்ச்சித் திட்டங்களின் மூலம் எதிர்நோக்கும் வெற்றியை அடைய முடியாது. எனவே, கால்நடை நோய் நீக்கப் பணிகளை விரிவாக்குவதில் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது, மாநிலத்தில் மொத்தம் 772 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| (அ) கால்நடை மருந்தகங்கள் .. .. | 622 |
| (ஆ) கால்நடை மருந்தகங்கள் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள். | 72 |
| (இ) கால்நடை மருத்துவ மனைகள் .. .. | 55 |
| (ஈ) கால்நடை மருத்துவ மனைகள் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள். | 2 |
| (உ) பிரதம மருத்துவ நிலையங்கள் .. .. | 21 |
| மொத்தம்... | 772 |



இவற்றில் 1984—85 ஆம் ஆண்டில் 20 கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டன. 3 கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாகவும், ஒரு கால் நடை மருத்துவ மனை, பிரதம மருத்துவ மனையாகவும் நிலை உயர்த்தப்பட்டன.

மேற்படி நிலையங்களின் முக்கியப் டணிகள், நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல் மற்றும் தொற்று நோய்களுக்கு எதிராகத் தடுப்பூசிகள் போடுதல் ஆகியவையாகும். 1984—85-ல் 80.51 இலட்சம் கால் நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 3.16 இலட்சம் கால் நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. 77.90 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

இது தவிர, நோய் புலனாய்வுப் பணிகள், சிறந்த நோய்த் தடுப்புப் பணிகள் ஆகியவைகள் ஆற்றும் பொருட்டு 11 கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் இயங்கி வருகின்றன. நோய் மாதிரிகளைப் பரிசோதித்து நோய்க்கான காரணங்களைக் கண்டறிய 13 மாதிரிப் பொருள் சோதனைக் கூடங்கள் செயற்படுகின்றன. நோய்க்கான காரணங்களைக் கண்டறிய எக்ஸ்ரே பிரிவு ஒன்று மதுரையில் 1985 மார்ச் மாதத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**(2) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் :**

பால் மற்றும் இறைச்சி உற்பத்தியில் வீழ்ச்சியை உண்டு பண்ணும் கொடிய வெக்கை நோயை குறிப்பிட்ட கால இடைவெளியில் தடுப்பூசிகள் போடுவதன் மூலம் முற்றிலும் ஒழிப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. தற்போது, 18 மாவட்டக் குழுக்கள் மற்றும் 10 கண்காணிப்பு பிரிவுகள் மூலம் வெக்கை நோய்த் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. இவற்றில் 1984—85 ஆம் ஆண்டில் ரூ. 1.99 இலட்சம் செலவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு மாவட்டக் குழு ஒன்றும் ஆகும். மாநில எல்லையோரப் பகுதிகளில் இயங்கும் 14 சோதனைச் சாவடிகள் மூலம், மாநிலத்துக்குள் பிரவேசிக்கும் கால்நடைகளுக்குத் தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

1984—85-ல் 47.60 இலட்சம் கால்நடைகள் வெக்கை நோயிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளன.

**(3) கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை.**

கால்நடை மருத்துவ தடுப்புப் பணிகளுக்கு அத்தியாவசியமான ஊனீர் எதிர்ப்பான், தடுப்பு மருந்துகள், நோய் கண்டறியும் மருந்துகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதில் இந்நிலையம் பெரும் பங்கு வகிக்கிறது. தடுப்பு மருந்தின் தரத்தை வீரியப்படுத்துதல், புதிய தடுப்பு மருந்துகளைக் கண்டு பிடித்தல்,

பல்வேறு நோய்க் கட்டுப்பாட்டு முறைகளைக் கண்டாய்தல் போன்ற ஆராய்ச்சிப் பணிகளும் இந்நிலையத்தில் மேற் கொள்ளப்படுகின்றன. இந்நிலையத்திலுள்ள சில பிரிவுகள் அண்மைக் காலத்தில் வலுப்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர, இந்நிலையம், மாநிலத்திலுள்ள பல நிலையங்களில் தடுப்பு மருந்து தேவையைப் பூர்த்தி செய்வதுடன், அண்டை மாநிலங்களின் தேவையையும் பூர்த்தி செய்கிறது.

(4) கோமாரி நோய்த் தடுப்புத் திட்டம் :

சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் கால்நடைகளைப் பாதுகாக்க கால்நடை பராமரிப்புத் துறையின் பல்வேறு திட்டங்களின் மூலம் கோமாரி நோய்த் தடுப்பு ஊசி போடும் பணி 1976–77 முதல் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது. இதற்காகும் செலவில் 50 சதவீதம் மாநில, மத்திய அரசுகளினாலும், மற்ற 50 சதவீதம் கால்நடை உரிமையாளரினாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

ஏழாண்டுகளில் தமிழகத்தில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தேசிய பால்வள அபிவிருத்திக் கழகம் ஒரு திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 20 கோடி ஆகும். இது 1983–84 ஆம் ஆண்டு முதல் 1989–90 ஆம் ஆண்டு வரை 7 ஆண்டுகள் செயல்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் தடுப்பூசிகள் இலவசமாகப் போடப்படும்.

தேசிய பால்வள அபிவிருத்திக் கழகத்தின் இத்திட்டத்தை மாநில அரசு அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசின் பகுதியாக ரூ. 1.73 கோடி செலவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1984–85 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் பெரியார் மாவட்டங்களில் இப்பெருந் திட்டம் செயல்படத் துவங்கியுள்ளது.

1985–86 ஆம் ஆண்டில் இத் திட்டம் மதுரை, இராமநாதபுரம், காமராஜர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

(5) கால்நடை நோய்க் கண்காணிப்புத் திட்டம் :

1982 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கால்நடை நோய் கண்காணிப்புத் திட்டம் ஒன்றை புதிதாக தமிழகத்தில் மூன்று ஆண்டுகளுக்குச் செயல்படுத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதனுடைய மொத்தச் செலவு ரூ. 4,90,000 ஆகும். இச் செலவினத்தை மாநில அரசும் மத்திய அரசும் சம விகிதத்தில் ஏற்கும்.



1983–84-ல் சென்னையில் நோய்க் கண்காணிப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1971–72 முதல் 1983–84 வரை ஏற்பட்ட பல்வேறு கால்நடை நோய்களின் இயல் பற்றிய விவரங்களை தொகுத்து, அவற்றைப்பற்றி ஆய்வு செய்து கால்நடைகளில் காணக்கூடிய தொற்று நோய்களைப் பற்றிய விவரங்களுக்கு விளக்கங்கள் கொடுப்பதற்கும், 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் இந்நிலையம் மேற்படி விவரங்களைச் சேகரித்துள்ளது. தொற்று நோய்களுக்கு எதிராக தடுப்பூசி போட வேண்டியதை முன்னமே அறிவிக்கும் விளக்கப் படங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

(6) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களின் கட்டுப்பாடு.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்கள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டமொன்று ரூ. 68.57 இலட்சம் செலவில் 1984–85 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காகும் செலவுத் தொகை மாநில, மத்திய அரசுகளினால் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும். இத் திட்டப் பணிகளின் விவரம் பின் வருமாறு :—

1. நாகர்கோவிலில் நோயற்ற மண்டலப்பகுதி ஏற்படுத்துதல்.

(அ) வெக்கை நோய் மற்றும் கோமாரி நோய்த் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளுதல்.

(ஆ) சோதனைச் சாவடிகள் ஏற்படுத்துதல்.

(இ) நோய்க் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் ஏற்படுத்துதல்.

2. கோயம்புத்தூரில் வெறி நோய்த் தடுப்புப் பிரிவு ஏற்படுத்துதல்.

3. கீழ்க்கண்ட பணிகளை மேற் கொள்வதற்காக ஈரோட்டிலுள்ள கோழி நோய்க் கண்டறியும் கூடத்தை வலுப்படுத்துதல்.

(அ) அப்பகுதியிலுள்ள கோழி வளர்ப்புப் பிரிவுகளில் நோய் கண்டறியும் பணியாற்றுதல்.

(ஆ) கோழி நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் அளித்தல் : மற்றும்

(இ) அப்பகுதிகளிலுள்ள கோழிகளுக்குத் தேவையான மருந்துகள் அளித்தல்.

[1985 ஜூலை 5

**(7) வெக்கை நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்புத் திட்டம் :**

மாநிலத்தில் வெக்கை நோய் உள்ள இடங்களை கண்டறிந்து, இந்நோயை மாநிலத்திலிருந்து அகற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1980—81 ஆம் ஆண்டு முதல் இதுவரை நான்கு முறை வெக்கை நோய் எங்கு தோன்றியுள்ளது என்பதைக் கண் டறியும் நேர் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

**(8) இயற்கை அழிவு நிவாரணப் பணிகள் :**

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இழந்து போன கால்நடைகளை ஈடு செய்வதற்காக நிவாரண மானியமாக அரசு ரூ. 4.25 இலட்சத்தை 1984—85 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது.

**(9) சிறப்பு மத்திய உதவித் திட்டம் :**

ஆதி திராவிட மக்கள் நலம் பெறுவதற்கான திட்டமொன்று ரூ. 50.28 இலட்சம் செலவில் 1983—84-ல் மேற் கொள்ளப்பட்டது. சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் ஆட்டின உற்பத்தி, தீவனப் பயிர் உற்பத்தி மற்றும் இறைச்சிக் கோழி உற்பத்தி ஆகியவற்றை மேற்கொண்டு பயன் அடையும் வகையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு திட்டங்களும் கால்நடை பராமரிப்புத் துறையினாலும் இறைச்சிக் கோழி உற்பத்தித் திட்டம் தமிழ்நாடு கோழி அபிவிருத்திக் கழகத்தின் மூலமாகவும் செயற்படுத்தப்படுகின்றன.

1983—84 ஆம் ஆண்டில், ஆடு உற்பத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 31·65 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, 1,500 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 1984—85 ஆம் ஆண்டில் ரூ. 20.94 இலட்சம் மானியம் அளிக்கப்பட்டு 992 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

தீவனப் பயிர் உற்பத்தித் திட்டத்தின்கீழ் ஈச்சங்கோட்டையில் உள்ள அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை மற்றும் படப்பையிலுள்ள தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையம் ஆகியவற்றில் தீவனப் பயிர் உற்பத்தி செய்யப்பட்டு கிலோ ஒன்றுக்குப் 10 பைசா விலையில் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1985—86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.



1985 ஜூலை 5]

**V. கால்நடை பராமரிப்புத் துறையின் நிர்வாக அமைப்பு :**

கால்நடை பராமரிப்புத் துறை மண்டல அடிப்படையில் செயல்படுகிறது. இத்துறையின் அனைத்து நடவடிக்கைகளும் கால்நடை பராமரிப்பு இயக்குநர் அலுவலகத்தால் ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்படுகின்றன. இத்துறையின் தலைவ ரான இயக்குநருக்கு தொழில் முறையான பணிகளில் 2 கூடுதல் இயக்குநர்களும், புள்ளி விவரம் சம்பந்தப்பட்டவைகளில் ஒரு இணை இயக்குநரும், திட்டங்களை வகுப்பதிலும் செயலாற்று வதிலும் ஒரு இணை இயக்குநரும், சிறப்பு மத்தியத் திட்டங் களைக் கவனிப்பதில் ஒரு இணை இயக்குநரும், நிர்வாகத்தை கவனிக்க முதன்மை பணியாளர் அலுவலர் ஒருவரும், கணக்குகள் மற்றும் பட்ஜெட் விவகாரங்களில் முதன்மைக் கணக்கு அலுவல ரும் உதவி புரிகின்றனர். மேலும், இரண்டு துணை இயக்குநர் களும், 5 உதவி இயக்குநர்களும், வெக்கைநோய் அலுவலர் ஒருவரும் தலைமையகத்தில் உள்ளனர்.

மாநில நிர்வாகத்திற்குக் கீழ், இத்துறை 12 மண்டலங்களாகப் பகுக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டல இணை இயக்குநரின்கீழ் செயற்படுகிறது. இவருக்கு உதவியாக வல்லு நர் ஒருவர் இருக்கிறார். இத்துறை 62 கோட்டங்களாகப் பகுக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் ஒருவரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகிறது. அவர், அவருடைய கோட்ட எல்லைக்குட்பட்ட கால்நடை பரா மரிப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கண்காணித்து வருகிறார்.

இராணிப்பேட்டையில் கால்நடை நோய்த் தடுப்பு நிலையம் ஒன்று கூடுதல் இயக்குநர் அந்தஸ்திலுள்ள இயக்குநர் ஒருவரைத் தலைமையாகக் கொண்டு இயங்கி வருகிறது.

மாநிலத்தில் 9 கால்நடை பண்ணைகளும், 2 ஆட்டுப் பண்ணை களும் உள்ளன. இவற்றில் ஈச்சங்கோட்டையிலுள்ள அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணையும், புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையும் கூடுதல் இயக்குநர் ஒரு வரைத் தலைமையாகக் கொண்டுள்ளன, மாதவரத்திலுள்ள அரசு பால் பண்ணை இணை இயக்குநர் ஒருவரின்கீழ் இயங்கு கிறது. பிற பண்ணைகள் அனைத்தும் துணை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன.

கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கேந்திரக் கிராமத் திட்டம் ஆகியவை துணை இயக்குநர்களின்கீழ் செயல் படுகின்றன.

[1985 ஜுலை 5

## 1985–86 ஆம் ஆண்டுக்கானத் திட்டங்கள்.

கீழ்க்கண்ட புதிய திட்டங்களை 1985–86 ஆம் ஆண்டில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | எண்ணிக்கை. | நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). |
| 1 | உறை விந்து முறையை அறிமுகப்படுத்துதல். | 100 கிளை நிலையங்கள். | 13.00 |
| 2 | கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம். | 1 திட்டம் | 18.19 |
| 3 | பால்வற்றிய பசுக்கள், எருமைகள் பராமரிப்பு. | 100 மாடுகள் | 2.45 |
| 4 | கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்துதல். | 10 | 8.50 |
| 5 | கால்நடை மருந்தகங்களைப் பிரதம மருத்துவ மனைகளாக நிலை உயர்த்துதல். | 2 | 5.74 |
| 6 | திரவ நைட்ரஜன் உறை நிலையத்திற்கு நிர்வாகக் கட்டிடம் அமைத்தல். | கட்டிடம் | 1.00 |
| 7 | கொல்லைப்புற கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல். | 2,000 | 2.10 |
| 8 | இறைச்சிக் கோழிக் குஞ்சு நிலையங்கள் ஏற்படுத்துதல். | 500 | 0.25 |
| 9 | கால்நடை பண்ணைகளை வலுப்படுத்துதல். | 2 | 1.15 |
| 10 | பிரச்சாரம் மற்றும் விளம்பர பிரிவு ஏற்படுத்துதல். | மாநில அளவில் 1. | 4.92 |
| 11 | மருந்துக் கிடங்குகள் ஏற்படுத்துதல். | கிடங்குக் கட்டிடம். பணியாளர்கள். — | 2.39 |



1985 ஜுலை 5]

## 1985 86 ஆம் ஆண்டுக்கானத் திட்டங்கள்—தொடர்ச்சி.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | எண்ணிக்கை. | நிதி ஒதுக்கீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 12 | உறை விந்து முறையில் பயிற்சி அளித்தல். | கால்நடை உதவி மருத்துவர்கள் 100, கால்நடை ஆய்வாளர்கள் 250. | 0.10 |
| 13 | மாட்டு மலட்டுத் தன்மையை நீக்குவதில் அலுவலருக்குப் பயிற்சி அளித்தல். | 100 பேர் | 1.20 |
| 14 | திரைப்படக் காட்சி, பிரச்சாரம், மேய்ச்சல், பசுந்தீவன அபிவிருத்தி, கால்நடைகளிலிருந்து மனிதருக்கு தொற்றும் நோய், செம்மறியாடு மற்றும் வெள்ளாடு பராமரிப்பு, வாத்து வளர்ப்பு, கூட்டுறவு மற்றும் கால்நடைப் புள்ளி விவரம் ஆகியவற்றில் கால்நடை மருத்துவ அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல். | 100 பேர். | 1.00 |
| 15 | தணிக்கைப் பிரிவு ஏற்படுத்துதல். | தணிக்கைப் பிரிவு 1. | 0.48 |
| 16 | கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர்கள் அலுவலகத்தை வலுப்படுத்துதல். | உதவியாளர்கள் 20. பதிவுறு எழுத்தர் 20. | 3.20 |
| | மொத்தம் .. | | 65.67 |

மேற்காணும் புதிய திட்டங்களின் சிறப்பு அம்சங்களாவன:

(1) மாநிலத்தில் உறைவிந்து முறையை அறிமுகப்படுத்துதல்:

அதிக உற்பத்திக்கான தரமுயர்த்தப்பட்ட மாடுகளை உருவாக்கும் பொருட்டு, தமிழகத்தில் கூடுதலாக 100 நிலையங்களில், திரவ விந்துக்குப் பதில் உறை விந்து முறையைப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஏற்படுத்துதல்:

தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 50 கிளை நிலையங்கள் அமைக்கப்படும்.

(3) பால் வற்றிய பசுக்கள், எருமைகளைப் பாதுகாக்கும் திட்டம்:

நல்ல தரமுள்ள பசுக்களும், எருமைகளும், பால் வற்றிய காலங்களில் வெட்டப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, முன்னோடி நடவடிக்கையாக மாதவரத்திலுள்ள அரசு பால் பண்ணையில், 100 மாடுகளைப் பராமரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்நடவடிக்கைகள் ஏழாவது திட்டத்தில் விரிவு படுத்தப்படும்.

(4) கால்நடை மருந்தகங்கள் திறத்தல்:

முனைப்புக் கால்நடை உற்பத்திக்கு இன்றியமையாத சிறந்த நோய் நீக்கப் பணிகளுக்கான மருத்துவ வசதிகளை அளிக்கும் பொருட்டு இவ்வருடம் 10 கால்நடை மருந்தகங்களை திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(5) கால்நடை மருத்துவ மனைகளைப் பிரதம மருத்துவ மனைகளாக நிலை உயர்த்துதல் :

கால்நடை உரிமையாளர்களின் நலனுக்காக, கால்நடைகளுக்கு குறிப்பாக கால்நடை பிறப்பு சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சை செய்வதற்கான நவீன வழிகளை ஏற்படுத்தி, சிறந்த இனப் பெருக்கம் மற்றும் மருத்துவ வசதிகளை கால்நடை மருத்துவ மனைகளில் அளிக்கும் பொருட்டு, 2 கால்நடை மருத்துவமனைகளை, பிரதம மருத்துவமனைகளாக நிலை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.





(6) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அபிஷேகப்பட்டியில் திரவ நைட்ரஜன் மற்றும் உறை நிலையத்திற்காகக் கட்டிடம் அமைத்தல்:

அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் திரவ நைட்ரஜன் மற்றும் உறை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந் நிலையத்திற்கான நிர்வாகக் கட்டிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(7) கொல்லைப்புற கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல் :

கிராமப்புறங்களில் கூடுதல் வருவாயும், சிறந்த சத்துணவுப் பொருட்களும் கிடைக்கப் பெறும் பொருட்டு, மாநிலமெங்குமுள்ள கோழி விரிவாக்க நிலையங்கள் மற்றும் மருத்துவ நிலையங்களின் சுற்றுப்புறங்களில் 2,000 கொல்லைப் புற கோழி வளர்ப்புப் பிரிவுகளை இவ்வாண்டில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(8) இறைச்சியின கோழிக் குஞ்சுகள் வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல் :

நல்ல தரமான கோழி இறைச்சி உற்பத்தி செய்தல், மற்றும் வணிக இறைச்சிக் கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தி விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதில் அவர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளுக்காக 10 கோழி விரிவாக்க நிலையங்களை சுற்றியுள்ள பகுதிகளில் 500 இறைச்சியின் கோழிக் குஞ்சுகள் வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(9) கொருக்கை கால்நடை பண்ணையையும், மாதவரம் அரசு பால் பண்ணையையும் வலுப்படுத்துதல்:

கால்நடை பண்ணைகளைத் திறம்பட நிர்வகிப்பதற்காக பண்ணைகளில் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அந்தஸ்திலுள்ள இரண்டு கண்காணிப்பாளர் பதவிகளை துணை இயக்குநர்களாக நிலை உயர்த்தும்படி உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(10) விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பிரிவு ஏற்படுத்துதல்.

கால்நடை இனப் பெருக்கம், தீவனமிடுதல், நோய்த் தடுப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவை பற்றிய விஞ்ஞான முறை தகவல்களை விவசாயிகளிடையே பரப்பும் பொருட்டு, மாநில அளவில் பிரச்சாரப் பிரிவு ஒன்று ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நாளடைவில் இது மண்டல அளவில் விரிவு படுத்தப்படும். பெருமளவில் மக்கள் தொடர்பு கொள்வதில் இது ஒரு முன்னோடித் திட்டமாகும்.

(11) மருந்து கிடங்குகள் ஏற்படுத்துதல்.

நல்ல தரமான மருந்து தொடர்ந்து கிடைக்கச் செய்யும் பொருட்டு, மாநில அளவில் ஒரு மருந்துக் கிடங்கும். மண்டல அளவில் நான்கு மருந்துக் கிடங்குகளும் நிறுவப்படும்.

(12) உறைவிந்து முறையில் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

கால்நடை செயற்கை முறை இனவிருத்திப் பணியில் நவீன முறையைக் கையாளுவதற்கு கால்நடை உதவி மருத்துவர்கள், மற்றும் கால்நடை ஆய்வாளர்கள் ஆகியோருக்கு உறைவிந்து முறையில் பயிற்சி அளிக்கப்படும். இவ்வாண்டு 350 பேருக்குப் பயிற்சியளிக்கப்படும்.

(13) மாடுகளின் மலடு நீக்கப்பணியில் அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல்.

பசுக்கள், பெண் எருமைகளிடையே உள்ள மலட்டுப் பிரச்சினைகள் மற்றும் அவற்றை நீக்குவதற்கான சிகிச்சை முறைகள் ஆகியவற்றில் மருத்துவர்கள் அறிவு பெறும்படி, 100 கால்நடை உதவி மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(14) அலுவலர்களுக்கு சிறந்த பயிற்சி அளித்தல்.

திரைப்படப் பிரச்சாரம் மற்றும் விளம்பரம், மேய்ச்சல் மற்றும் கால்நடைத் தீவன அபிவிருத்தி கால்நடையிலிருந்து மனிதருக்குப் பரவும் நோய்கள், செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு, வாத்து வளர்ப்பு, கூட்டுறவு மற்றும் கால்நடை புள்ளியியல் போன்றவற்றில் 100 கால்நடை மருத்துவ அலுவலர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(15) கால்நடை பராமரிப்பு இயக்குநகரத்தில் கூடுதல் தணிக்கை பிரிவு ஏற்படுத்தல்.

துறை அலுவலர்களின் கணக்கு விவரங்களை திறம்பட ஆய்வு செய்யும் பொருட்டு, சென்னையிலுள்ள கால்நடைப் பராமரிப்பு இயக்குநரகத்தில் கூடுதலாக தணிக்கை பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.

(16) கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாகத்தை வலுப்படுத்துதல்.

கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர்கள், கூடுதல் நேரத்தை களப் பணிகளில் செலவிட்டு, சிறந்த பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு உதவி இயக்குநர் அலுவலகம் வலுப்படுத்தப்படும்.



## இணைப்பு II

(63-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### பால் பண்ணை வளர்ச்சித் துறை மற்றும் பால் வழங்கும் திட்டங்கள்.

கோரிக்கை எண் 10.

கொள்கை விளக்கம் 1985-86.

### பால் பண்ணை வளர்ச்சித் துறை.

பால் உற்பத்தி தமிழகத்திலுள்ள விவசாயப் பெரு மக்களுக்கு மரபு வழியாகவே ஒரு துணை வாழ்க்கைத் தொழிலாக இருந்து வந்துள்ளது. இம்மாநிலத்தில் பால் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்க 1958-ம் ஆண்டு பால் பண்ணை வளர்ச்சித் துறை நிறுவப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலில் நவீன பால்பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் துவக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப்பட்டது. பால் பண்ணைகளை நிறுவுதல் குளிரூட்டு மையங்கள் அமைத்தல், பாலை ஏற்றிச் செல்லுதலில் செம்மையான முறைகளைக் கடைப்பிடித்தல், அதிக அளவில் பால் விநியோகம் செய்யும் நிலையங்களை அமைத்தல், கால் நடைகளின் நலனைக் காத்தல், செயற்கை முறை இனவிருத்தித் திட்டம், கால் நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்த அம்மை குத்துதல் போன்றவை சில முக்கிய நவீன நடவடிக்கைகளாகும்.

கிராமங்களில் கிடைக்கும் அதிகமான பாலை சென்னை மற்றும் மதுரை பால் பண்ணைகளுக்கு அனுப்புவதற்கு முன்பு பக்குவம் செய்யும் பொருட்டு அநேக குளிரூட்டும் நிலையங்கள் அவ்வப்பொழுது நிறுவப்பட்டன. பால் பண்ணை வளர்ச்சித் துறையின் வணிக சம்பந்தமான பால் கொள்முதல், பக்குவப்படுத்தல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடம் 1972 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு இந்நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் என்ற ஒரு கூட்டுறவு அமைப்பாக மாற்றியமைக்கப்பட்டது. பால்பண்ணை வளர்ச்சித் துறை இம்மாநிலத்தில் கிராம அளவிலும் மாவட்ட அளவிலும் கூட்டுறவு சங்கங்களை அமைத்து நிர்வகித்து வருவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது.

[1985 ஜூலை 5

பால் கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான இத்துறையின் முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பால் பண்ணை வளர்ச்சித்துறை கூட்டுறவு சங்கங்களை அமைத்து, பதிவு செய்து, அவைகளை மேற்பார்வை செய்து வருகிறது. பால்பெருக்கு திட்டத்தில் சேராத தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் இத்துறை செயல்பட்டு வருகிறது. பால் பெருக்குத் திட்டத்தில் சேர்ந்த செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் பால் விரிவாக்கப்பணிகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் கவனித்து வருகிறது.

தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகம்.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் 'ஆனந்த் முறையில்' அமைக்கப்படுகின்றன. இம்முறையின்கீழ் கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் சங்கமும், மாவட்ட அளவில் ஒருங்கிணைந்த பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும், மாநில அளவில் அவ்வொன்றியங்களின் உறுப்பினர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட இணையமும் ஆகிய மூன்று அடுக்குமுறை மலர்ந்துள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதில் வளர்ச்சி.

(அ) தமிழ்நாட்டில் 5,356 ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டு செயலாற்றி வருகின்றன. இவற்றில் 1984–85 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட 584 சங்கங்களும் இதில் அடங்கும். 1985–86-ம் ஆண்டில் புதிதாக 400 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1984–85 ஆம் ஆண்டில், 53 செயல்திறமுடைய மரபுவழியமைந்த பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றியமைக்கப் பட்டுள்ளன. 1985–86 ஆம் ஆண்டில் 50 செயல்திறமுடைய கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றியமைக்க திட்டமிடப் பட்டுள்ளது.

(இ) 1984–85 ஆம் ஆண்டில், 148 செயல்படாத பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றியமைக்கப் பட்டுள்ளன. 1985–86-ம் ஆண்டில் 150 செயல்படாத பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றியமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1985 ஜூலை 5]

பால் கூட்டுறவு சங்கங்களின் சிறப்பு அம்சங்களும் புள்ளி விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

(அ) ஆரம்ப சங்கங்கள்

| | |
|---|---|
| (1) தமிழகத்திலுள்ள செயல்படும் ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | 5,502 |
| ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் .. .. .. .. | 5,356 |
| ஆரம்ப பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் | 106 |
| கூட்டுறவு பால் பண்ணைகள் .. .. | 2 |
| பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் .. | 38 |
| மொத்தம் .. | 5,502 |

| | (இலட்சத்தில்) |
|---|---|
| (2) பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை .. | 14.65 |
| (3) சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் .. .. .. .. .. | ரூ. 244.15 லட்சம் |

(ஆ) கூட்டுறவு பால் ஒன்றியங்கள்

| | |
|---|---|
| (1) மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை .. .. | 15 |
| (2) பால் வழங்கும் ஒன்றியங்களின் எண்ணிக்கை | 10 |
| (3) பால் வழங்கும் ஒன்றியங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை .. .. | 25,388 |
| (4) ஒன்றியங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் .. .. .. .. | ரூ. 215.49 லட்சம் |

(இ) பால் உற்பத்தியும் விற்பனையும்

| | (லிட்டர் இலட்சத்தில்) |
|---|---|
| (1) நாள் ஒன்றுக்கு சராசரி பால் உற்பத்தி .. | 10.06 |
| (2) உள்ளூர் சராசரி பால் விற்பனை .. | 2.73 |
| (3) தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு/ஒன்றியங்கட்கு நாள்தோறும் வழங்கும் சராசரி பால் அளவு .. | 7.33 |

[1985 ஜூலை 5

பால் பண்ணை வளர்ச்சித் துறையால் செயல் படுத்தப்படும் திட்ட வேலைகள்.

(1) பால் சேகரிப்புக் குழு :—''பால் பெருக்குத் திட்டத்தில்'' சேராத தஞ்சை, திருச்சிராப்பள்ளி புதுக் கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியா குமரி ஆகிய மாவட்டங்களில் பால் உற்பத்தியினைப் பெருக்கு வதற்கு, 'பால் சேகரிப்புக் குழுக்கள்' அமைக்கப்பட்டு செயல் பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள ஒன்பது மாவட்டங்களில், பால் பெருக்கு திட்டம் II-ன் கீழ் உள்ள நிதியினைப் பயன் படுத்தி பால் பெருக்கு நடவடிக்கைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. பால் பெருக்குத் திட்டத்தில் சேராத ஆறு மாவட்டங்களில் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகியவை 1–4–85 முதல் பால் பெருக்குத் திட்டம் II-ன் கீழ் கொண்டு வரப்பட் டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில், பால் பெருக்குத் திட்ட மாவட்டங்களுக்கு 11 பால் சேகரிப்புக் குழுக்கள் அமைப்பதற்கு இசைவளிக்கப்பட்டுள்ளது. இக்குழுக் கள் இதுவரை 656 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங் களை 'ஆனந்த் முறையில்' அமைத்துள்ளன. மேலும் 144 சங் கங்களை 1984–85 ஆம் ஆண்டு இறுதிக்குள் அமைக்க திட்ட மிடப்பட்டுள்ளது.

(2) நடமாடும் கால் நடை மருந்தகங்கள்.—பால் உற்பத்தி யாளர்கள் சங்க உறுப்பினர்களிடமிருந்து பால் கொள் முதல் செய்வதில், உறுப்பினர்களின் கால் நடைகளின் நலன் மற்றும் இனப்பெருக்கம் முதலியன பேணப்படவேண்டும். இதை குறிக்கோளாகக் கொண்டு நடமாடும் கால் நடை மருந்த கங்கள் விவசாய உறுப்பினர்களின் குடியிருப்பிற்கே சென்று மருத்துவ உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதனை முன்னிட்டு கால்நடை மருத்துவர் திட்டமிட்ட அட்டவணைப்படி சுற்றுப் பயணம் மேற்கொண்டு மருத்துவ உதவி அளிப்பதுடன் அல்லாது விவசாய உறுப்பினர்களுக்கு, கால் நடை தீவனம் வழங்குதல், கால்நடைகளை பேணுதல், கருவுறச் செய்தல் போன்றவற்றில் அறிவுரைகள் வழங்கி வருகிறார். இதுவரை திட்ட வகைப்பாட்டில் 13 நடமாடும் கால் நடை மருந்தகங் களும், திட்டத்தில் சேராத வகைப்பாட்டில் 4 நடமாடும் கால் நடை மருந்தகங்களும் அரசால் இசைவளிக்கப்பட்டு பால் பெருக்குத் திட்டத்தில் சேராத மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

(3) பால் பண்ணை நிலையங்கள் நிறுவுதல்—திருநெல்வேலி யில் பால் பண்ணை.—புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உற்பத்தியாகும் பாலைப் பதப் படுத்தும் வசதிகள் ஏதும் இல்லை என்பதை அறிந்து, அதனை நிறைவேற்றும் நோக்கத்துடன் அரசால் திருநெல்வேலியில் ரூ. 86 இலட்சம் செலவில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர்



1985 ஜூலை 5]

பாலை கையாளும் திறனுடைய ஒரு பால்பதப்படுத்தும் தொழிற் சாலை அமைக்க இசைவளிக்கப்பட்டுள்ளது. மூலப்பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வினைக் கருத்திற் கொண்டும், தாம்பரபரணி நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வர வசதிகள் மேற்கொள்ளப் பட்டதாலும், இச்செலவினம் முந்தைய மதிப்பீட்டில் சேர்க்கப்படாத காரணத்தினாலும் ரூ. 86 இலட்சத்திலிருந்து ரூ. 160 இலட்சமாக மாற்றியமைக்கப் பட்டது. அரசும் இத்திருத்திய மதிப்பீட்டினை ஏற்று, 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 81 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கட்டிடம் கட்டுதல் மற்றும் இயந்திரங்களை நிறுவுதல் போன்ற பணிகள் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி யாளர்கள் இணையத்திடம் (Turnkey) முறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்பணியில் 70 சதவிகிதம் முழுமை பெற்றுள்ளது. போதிய இயந்திரங்களும், தளவாடங்களும் கொள்முதல் செய்யப்பட்டு கட்டுமானப் பணியிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேற்கண்ட இயந்திரங்களை நிர்மாணம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு 1985 ஜூன் திங்களுக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(4) குளிரூட்டும் நிலையங்களை நிறுவுதல் :—குளிரூட்டும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள விவரங்கள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன

| இடம். | கையாளும் திறன். (லிட்டரில்) | செலவு (ரூபாய் லட்சத்தில்) | தற்போதைய நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| புதுக்கோட்டை | 10,000 | 18.26 | வேலைப்பாடுகள் நடை பெற்று வருவதுடன் ஜூன் 85-க்குள் முடிவடையும். |
| பட்டுக் கோட்டை. | 10,000 | 19.00 | வேலைப்பாடுகள் நடை பெற்று வருவதுடன் அக்டோபர் 85க்குள் முடிவடையும். |
| வள்ளியூர் | 20,000 | 28.00 | நிலம் தேர்ந்தெடுக்கப் பட்டு கட்டுமானப் பணிகளுக்கான ஒப் பந்தப் புள்ளிகளும் கோரப்பட்டு முடி வுறும் நிலையில் இருக்கிறது. |

(5) கூட்டுறவு சங்கங்களுக்கு மானியம்

(அ) கூட்டுறவு சங்கங்களுக்கான பால் பரிசோதிக்கும் கருவிகள், இரசாயனப் பொருட்கள், பதிவேடுகள் முதலியவைகளை சங்கங்களுக்கு இலவசமாக வழங்க, ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 1,500 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1983-84-ம் ஆண்டில் இதற்காக ரூ. 5.25 இலட்சம் 350 சங்கங்களுக்கு வழங்க அரசு அனுமதியளித்துள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் இந்த பணியினை முன்னிட்டு 200 சங்கங்களுக்கு ரூ. 3 இலட்சம் வழங்க அரசு அனுமதியளித்துள்ளது. செயற்படாத கூட்டுறவு சங்கங்களை புதுப்பித்து உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களாக மாற்றியமைக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டி 1983–84 ஆம் ஆண்டில் 16 முதுநிலை ஆய்வாளர் பதவிக்கும், ஒரு கூட்டுறவு சார் பதிவாளர் பதவிக்கும் அரசு அனுமதியளித்துள்ளது. அதற்காக இதுவரை ரூ. 4.85 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இச்செலவினம் நிர்வாகம் மற்றும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு சம்பளத்தை மானியமாக வழங்கும் தொகை உள்ளடங்கும்.

1985–86 ஆம் ஆண்டில் 50 பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களாக மாற்றியமைக்கவும், 150 செயல்படாத கூட்டுறவு சங்கங்களை புதுப்பித்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களாக 'ஆனந்த் முறையில்" மாற்றியமைக்கவும் 1985–86 ஆம் வருடத்திய இரண்டாவது திட்டத்தின் கீழ் ரூ. 4.24 இலட்சம் நிதி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மாட்டுத் தீவன வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்களுக்கு தீவன வித்துக்கள் வாங்க சங்கம் ஒன்றுக்கு ரூ. 500 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. புல் வளர்க்க சங்க அங்கத்தினர்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 200 வீதம் மானியம் வழங்கபபடுகிறது. 1984–85-ம் ஆண்டில் 51 பால் கூட்டுறவு சங்கங்களிலுள்ள 239 அங்கத்தினர்கள் பயனடைய வேண்டி புல் வளர்ப்பு மானியமாக ரூ. 23,715 அனுமதியளிக்கப்பட்டு இருக்கிறது.

1985–86 ஆம் ஆண்டில் மாட்டுத் தீவன வளர்ப்புத் திட்டத்திற்காக ரூ. 6,000 அனுமதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.





(6) கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் உதவி

1983–84 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் குவளைகள், பால், கருவிகள், குளிர்பதனங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் வாங்கவும், ஆய்வுக்கூடம் மற்றும் கிடங்குகள் கட்டவும் ரூ. 4.80 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது 1984–85 ஆம் ஆண்டில் இதே போன்று கடனுதவியளிக்க ரூ. 5 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

1985–86 ஆம் ஆண்டிற்கு இது போன்று கடனுதவி அளிக்க ரூ. 10 இலட்சம் அனுமதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரிலும் மற்றும் மாவட்டங்களிலும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

(அ) பங்கு மூலதன உதவி

சென்னை நகரிலும் மற்றும் மாவட்டங்களிலும் பால் நுகர்வோர்கட்கு பால் விநியோகம் செய்ய பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. அத்தகைய சங்கங்கட்கு ஆரம்ப நிலையில் பங்கு மூலதன உதவியாக நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் சென்னை நகரில் 31 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களும் புறநகர் பகுதிகளில் 7 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. 1984–85 ஆம் ஆண்டில் ''பங்கு மூலதன உதவியாக'' ரூ. 20,000 வழங்கப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டில் பங்கு மூலதன உதவிக்காக ரூ. 25,000 வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிர்வாகப் பணியாளர் உதவி :— ஆரம்ப கட்டத்தில் அச்சங்கங்கள் பணிபுரிய துவங்கிய நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு சங்கம் ஒன்றிற்கு மாதம் ரூ. 500 வீதம் நிர்வாகப் பணியாளர் அமர்த்த உதவியாக அளிக்கப்படுகிறது. 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 65,000 வாங்கி மேற் கூறிய பணிக்காக வழங்கப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டில் நிர்வாகப் பணியாளர் உதவிக்காக ரூ. 50,000 வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால் பண்ணை அபிவிருத்தித் துறையினால் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள்

(1) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.—மலைப் பகுதிகளில் பால்பண்ணை தொழில் வளம் பெருக அரசு கடன் உதவி மற்றும் பங்கு மூலதன உதவி முதலியன வழங்கி வருகிறது. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் கொள்ளளவு கொண்ட ஒரு நவீன பாலாடைக்கட்டி தொழிற்சாலை (Cheese-cum-Dairy Complex) உதகமண்டலத்தில்

ரூ. 300 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. இதற்கான கட்டுமானப் பணிகளில் 80 சதவிகிதம் முடிவடைந்துள்ளது. இயந்திரத் தளவாடங்கள் நிறுவுவதற்கான பணிகள் முன்னேறி வருகிறது.

1984–85 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவற்றிற்கு ரூ. 20.75 இலட்சம் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்கான பணிகள் முன்னேறி வருகின்றன.

| | | |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | பால் பண்ணை இணைப்பு கட்டிடம் கட்ட கட்டுமானப் பணிகள் மேற் கொள்வதில் விலை ஏற்றத்திற்கு ஒதுக்கீடு .. .. | 5.00 |
| 2. | பால் கூட்டுறவு சங்கங்கள் கட்டிடம் கட்டுவதற்கான உதவி (ரூ. 30,000 வீதம் 25 சங்கங்களுக்கு) .. .. .. | 7.50 |
| 3. | வாழைத் தோட்டம் என்னும் இடத்தில் புல் வளர்ப்பு பண்ணையினை விரிவு படுத்துதல் .. .. .. .. .. | 0.75 |
| 4. | உதகமண்டலத்திலுள்ள பால் பண்ணைக்கு துணைக் கருவிகள் கொள்முதல் செய்வது குறித்து .. .. .. .. .. | 7.50 |
| | மொத்தம் .. | 20.75 |

இத்திட்டத்தின் கீழ் கடன் உதவியாகவும் பங்கு மூலதன உதவியாகவும் 50 சதவிகிதம் வழங்கப்படுகிறது.

(2) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் :—இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காரைக்குடியில் ரூ. 150 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய பால்பண்ணை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. கட்டிடம் கட்டும் பணி, இயந்திரங்களை நிறுவும் பணிகள் அனைத்தும் தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கட்டுமானப் பணியினைப் பொறுத்த மட்டில் கூரை அளவில் கட்டிடம் முடிவடையும் நிலையிலுள்ளது. பெரும்பகுதியான கட்டுமானப் பொருட்களும் இயந்திரத் தளவாடங்களும் வரவழைக்கப்





பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள விருதுநகரில் திரவ நைட்ரஜன் ஆலை ஒன்று நிறுவுவதற்கு அரசு ரூ. 48.40 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இதன் கட்டுமானப் பணிகளும் தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் பண்ணை மற்றும் புல் வளர்ப்பு ஆகியவற்றை செயல்படுத்துவதற்காக 1984–85 ஆம் ஆண்டில் அரசு ரூ. 15.71 இலட்சம் அனுமதியளித்துள்ளது. மேலும் இதே ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் பால் பண்ணை வளர்ச்சி திட்டங்களுக்காக ரூ. 1.80 இலட்சம் அரசு அனுமதியளித்துள்ளது.

(3) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :—தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையம் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தினரால் நிறுவுவதற்கு அரசு இசைவளித்துள்ளது. மேலும் இப்பணியின்பொருட்டு 50 சதவிகித மானியமாக ரூ. 9.5 இலட்சம் வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக 1.58 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் தொடங்குவதிலும் இயந்திரங்கள், தளவாடங்கள் வாங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(4) தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் மத்திய அரசின் உதவி :—

ஆதி திராவிடர் நலத் திட்டத்தின்கீழ் பால் கூட்டுறவுகளில் ஆதி திராவிட அங்கத்தினர்கள் கறவை மாடுகள் வாங்க ஆதி திராவிடர் நல வரவு-செலவு திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு மானியமாக வழங்க ஆதி திராவிடர் நல வரவு-செலவு திட்டத்தின்கீழ் ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் 1984-85 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 3,600 ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு கறவை மாடுகளின் விலையில் 33⅓ சதவிகிதம் மானியமாக வழங்க ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 16 2/3 சதவிகிதத் தொகையான ரூ. 15 இலட்சம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழக நிதியிலிருந்து அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதுபோல கிறித்தவர்களாக மாறிய ஆதி திராவிடர் அங்கத்தினர் 120 பேருக்கு கறவை மாடுகள் வாங்கி

பயனடைய ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மானியத் தொகை முழுவதும் 1984-85-ல் பயன் படுத்தப்பட்டது.

1985-86 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு 4,000 கறவை மாடுகள் வாங்குவதற்கு, ஆதி திராவிடர் நல நிதி ஒதுக்கீட்டில் ரூ. 33.32 இலட்சமும், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தால் ரூ. 16.68 இலட்சமும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் கிறித்தவர்களாக மாறிய 120 ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு ரூ. 1 இலட்சம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு பகுதி திட்டம் மற்றும் சிறப்பு மத்திய உதவியின்கீழ், 1984-85 ஆம் ஆண்டில் 6,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அங்கத்தினர்கள் கறவை மாடுகள் வாங்கிப் பயனடைய ரூ. 75 இலட்சம் மானியமாக வழங்க அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டில், இந்து ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு 6,500 கறவை மாடுகள் வாங்க ரூ. 81.25 இலட்சம் மானியமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(5) பால்பண்ணை வளர்ச்சித்துறைப் பணியாளர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி அளிக்கும் திட்டம் :—

1984-85 ஆம் ஆண்டில் இரண்டாவது பகுதி திட்டத்தின்கீழ் (Part II Scheme) பால்பண்ணை வளர்ச்சித் துறையில் பணியாற்றும் நிர்வாகப் பணியாளர்களுக்கு பால் கூட்டுறவுகளின் மேலாண்மை நடப்புப்பற்றிய பயிற்சி அளிப்பதற்கு ரூ. 1 இலட்சம் நிதி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள பதினைந்து வருவாய் மாவட்டங்களில் பன்னிரண்டு துணைப்பதிவாளர்கள் (பால்பதம்) மட்டுமே செயல்பட்டு வருகிறார்கள். புதுக்கோட்டை மாவட்டம் துணைப்பதிவாளர் (பால்பதம்), திருச்சி அவர்கள் பொறுப்பில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், துணைப்பதிவாளர் (பால்பதம்), திருநெல்வேலி அவர்கள் பொறுப்பிலும், நீலகிரி மாவட்டம் துணைப்பதிவாளர் (பால்பதம்), கோயம்புத்தூர் அவர்கள் பொறுப்பிலும் செயல்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் ஊட்டி போன்ற மூன்று வருவாய் துறை மாவட்டங்களில் பால் வழங்கும் சங்கங்களின் பல்வேறு வகையான தேவைகளை முன்னிட்டு 3 புதிய துணைப்பதிவாளர்கள் (பால்பதம்) அலுவலகம் தோற்றுவிக்கப்படவிருக்கிறது.



இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்ததின் காரணமாக, புதிய துணைப்பதிவாளர் (பால்பதம்) அலுவலகம் ஒன்றை, மானாமதுரையை தலைமையிடமாகக் கொண்டு இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களின் பால் பெருக்குப் பணியைக் கவனிக்கத் தோற்றுவிக்கப்படவிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள பதினைந்து மாவட்டங்களில் ஒன்பது மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை போன்ற மூன்று மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம் விரிவு படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய பால்பெருக்கு வாரியம். பால்பெருக்குத் திட்டம் II-னை திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் முறையே ரூ. 620 இலட்சம், ரூ. 684 இலட்சம் ரூ. 105 இலட்சம் செலவில் விரிவுபடுத்த இசைவளித்துள்ளனர். இத் திட்டம் 1-4-1985 முதல் செயல்படுத்தப்படுகிறது.

இணைப்பு II.

கோரிக்கை எண் 10

திட்ட ஒதுக்கீடு.

1983–84 ஆம் ஆண்டின் செலவுக் கணக்குகள், 1984–85 மற்றும் 1985–86 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை விபரம்.

| வரிசை எண்ணும், இனமும். | 1983–84 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1984–85 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1984–85 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1985–86 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| 1. பால் பெருக்குத் திட்டம்—அமுல் படுத்தப்படாத மாவட்டங்களில் பால் சேகரிப்புக் குழு நிறுவுதல் .. .. | 774 | 1966 | 1171 | .. |
| 2. நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைத்தல் .. .. .. | 337 | 743 | 638 | .. |
| 3. பால் கூட்டுறவுகளுக்கு மானியம் வழங்குதல்— | | | | |
| (அ) நிர்வாகம் மற்றும் தொழில் நுட்ப பணியாளர்கள் .. .. .. | 485 | 465 | 941 | .. |
| (ஆ) தீவனப் பண்ணை பராமரிப்பு .. | 37 | 35 | 24 | .. |
| 4. துறையின் நிர்வாகத் திறனை பலப்படுத்தும் திட்டம் .. .. .. | 405 | 574 | 559 | .. |
| 5. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்ட பால் வழங்கு தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி .. .. .. .. | .. | 750 | 1 | .. |
| 6. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கால்நடை தீவன மேம்பாட்டுக்கு நிதி உதவி .. , .. .. .. | .. | 75 | 1 | .. |
| மொத்தம் .. .. | 2038 | 4608 | 3335 | .. |

திட்ட ஒதுக்கீடு—கோரிக்கை எண் 58— பல்வகை மூலதன செலவு.

| வரிசை எண்ணும் இனமும். | 1983–84-ம் ஆண்டின் கணக்குகள். | 1984–85-ம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1984–85-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு | 1985–86-ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 1. பால் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவி முதலீடு .. | 67 | .. | .. | .. |
| 2. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு பங்கு மூலதன நிதி உதவி—நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் .. .. | 895 | 1000 | 1000 | .. |
| 3. பட்டுக்கோட்டை/புதுக்கோட்டை/வள்ளியூரில் பால்பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல் .. | 6646 | 800 | 9900 | 2000 |
| 4 மாதவரம் பால்பண்ணையில் உள்ள அணுகு சாலையை மாற்றி வடிவமைக்க .. | 755 | 500 | 500 | .. |
| மொத்தம் .. | 8363 | 2300 | 11400 | 2000 |



திட்ட ஒதுக்கீடு—கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

| வரிசை எண்ணும், இனமும். | 1983–84-ம் ஆண்டிற்கான கணக்குகள். | 1984–85-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டம். | 1984–85-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1985-86-ம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 1. பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் குவளைகள் குளிரூட்டும் சாதனங்கள் வாகனங்கள் வாங்குதல், ஆய்வுக் கூடம் மற்றும் கிடங்கு முதலியன கட்டுதல் போன்றவற்றிற்கு கடனுதவி .. .. | 500 | 500 | 500 | 1 |
| 2. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குதல்—நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் .. .. .. .. | 895 | .. | .. | .. |
| 3. கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்கு கருவிகள் வாங்க நிதி ஒதுக்கீடு .. .. .. .. | 150 | .. | .. | .. |
| மொத்தம் .. .. | 1545 | 500 | 500 | 1 |

ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திய சாதனைகள்.

(செயல் முறையாக.)

| வரிசை எண்ணும், விபரமும். | 1980–81 | 1981–82 | 1982–83 | 1983–84 | 1984–85 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை .. ... .. | 3,658 | 3,827 | 4,281 | 4,811 | 5,141 |
| 2. அங்கத்தினர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. | 7.78 | 10.07 | 10.25 | 11.13 | 12.18 |
| 3. பால் உற்பத்தி (நாள் ஒன்றுக்கு இலட்சம் லிட்டர் வீதம்) .. | 5.70 | 6.45 | 7.66 | 8.54 | 9.72 (1985 ஜனவரி மாதத்தில்) |
| 4. சென்னை நகரின் பால் விற்பனை (இலட்சம் லிட்டரில்) | 1,046.37 | 1,115.50 | 1,383.27 | 1,312.37 | 1,501.40 (1984 டிசம்பர் மாதத்தில்) |
| முன்னேற்பாடான வசதிகள் : | | | | | |
| 1. பால் பண்ணையின் எண்ணிக்கை | 12 | 12 | 12 | 14 | 14 |
| 2. பால் பண்ணையின் கொள் திறம் (நாள் ஒன்றுக்கு இலட்சம் லிட்டரில்) .. .. | 7.28 | 8.28 | 8.28 | 10.28 | 10.28 |
| 3. குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை .. .. | 28 | 31 | 32 | 32 | 32 |
| 4. குளிரூட்டும் நிலையங்களின் கொள் திறம் (நாள் ஒன்றுக்கு இலட்சம் லிட்டரில்) .. | 3.75 | 4.28 | 5.02 | 5.36 | 5.80 |
| 5. பால் சேகரிப்பு குழுவின் எண்ணிக்கை .. .. | 23 | 23 | 26 | 29 | 30 |
| 6. நடமாடும் கால்நடை மருந்தகங்களின் எண்ணிக்கை .. | 52 | 52 | 56 | 64 | 66 |
| 7. நெருக்கடி பிரிவுகளின் எண்ணிக்கை .. .. .. | 24 | 22 | 22 | 23 | 29 |

## பால் பெருக்குத் துறை—ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் 1980–81 முதல் 1984–85 வரை.

### நிதி நிலை பற்றிய சாதனை.

| திட்டங்களின் பெயர். | 1980–81 | 1981-82 | 1982-83 | 1983-84 | 1984-85 ஆண்டின் வரவு செலவு திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு நிதி உதவி (அலுவலக கட்டிடம் கட்ட) .. .. | 15.00 | .. | 7.00 | .. | .. | 22.00 |
| 2. பால் சேகரிப்புக் குழுக்கள் அமைத்தல் .. .. | 3.82 | 4.97 | 7.10 | 7.73 | 19.66 | 43.28 |
| 3. நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைத்தல் .. | 3.00 | 1.17 | 5.40 | 3.34 | 7.43 | 20.34 |
| 4. பால் பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையம் அமைத்தல் | .. | .. | 33.18 | 66.46 | 99.00 | 198.64 |
| 5. கொடைக்கானலில் பால் சேகரிப்புக் குழு மற்றும் நடமாடும் கால் நடை மருத்துவ நிலையம் அமைத்தல் .. | .. | .. | .. | .. | .. | .. |
| 6. கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திற்கு கூடுதல் கருவிகள் வாங்க நிதி ஒதுக்கீடு | .. | — | .. | 1.50 | .. | 1.50 |
| 7. ஊரக பால் பண்ணை விஸ்தரிப்பு திட்டம் .. .. | 4.76 | 23.65 | 9.74 | 11.25 | 11.00 | 60.40 |
| 8. பால் பெருக்குத் திட்ட ஒப்பிய பொறுப்பு .. .. | — | .. | — | — | — | — |
| 9. பால் பெருக்குத் துறையின் நிர்வாக திறனை பலப்படுத்தும் திட்டம் .. .. .. | .. | 0.79 | 1.50 | 3.70 | 5.74 | 11.73 |
| 10. மாதவரம் பால் பண்ணையில் உள்ள அணுகு சாலையை மாற்றி வடிவமைத்தல் .. | .. | .. | .. | 7.55 | 5.00 | 12.55 |
| | 26.58 | 30.58 | 63.92 | 101.53 | 147.83 | 370.44 அல்லது 370.00 |

குறிப்பு —வரிசை எண். 9 மற்றும் 10-ல் குறிப்பிடப்பட்ட திட்டங்கள் ஆறாவது ஐந்தாண்டு திட்ட முதலீட்டில் சேர்க்கப்படவில்லை.

[1985 ஜூலை 5

## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.

1981 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியிலிருந்து தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பால் பண்ணை வளர்ச்சித் துறையின் வணிக சம்பந்தமான பால் கொள் முதல், பக்குவப்படுத்துதல், மற்றும் விநியோகம் செய்தல் போன்ற அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழக அரசின் கொள்கை முடிவின்படி தமிழ்நாட்டின் பால் வளத்தை அபிவிருத்தி செய்ய மூன்று அடுக்கு இணைப்பு அமைப்பாக கிராம அளவில் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கமாகவும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களாகவும், மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் இணையமாகவும் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் உள்ள ஒன்பது மாவட்டங்களில் உள்ள மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் 1981 ஆம் ஆண்டிலும், தருமபுரியில் 1982 ஆம் ஆண்டிலும், சென்னை, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, மதுரையில் 1983 ஆம் ஆண்டிலும், வட ஆற்காட்டில் 1984 ஆம் ஆண்டிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் பால் கொள்முதல் செய்யப்பட்ட அளவு, பயனடைந்த விவசாய உறுப்பினர்களின் எண்ணிக்கை, மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

| | 1983 | 1984 | 1985 (மதிபபீடு) |
|---|---|---|---|
| சென்னை பால் பண்ணைகளுக்கு கொண்டு வரப்படும் பாலின் அளவு (இலட்சம் லிட்டரில்) . . | 891.84 | 900.34 | 1,050 |
| சராசரி தினசரி பாலுற்பத்தி (இலட்சம் லிட்டரில்) . . . . | 2.44 | 2.47 | 2.88 |
| விவசாய உறுப்பினர்களின் எண்ணிக்கை . . | 5,04,560 | 5,44,100 | 5,85,000 |
| விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை (இலட்சம் ரூபாயில்) . . | 2,181·38 | 2,280.62 | 3,108.00 |



1985 ஜூலை 5]

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்துடன் இணைக்கப்பட்ட மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செய்யப்பட்ட பால் கொள்முதல் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பெயர். | 1983 | 1984 | 1985 (மதிப்பீடு) |
|---|---|---|---|
| | (இலட்சம் லிட்டரில்) | | |
| 1. சென்னை-செங்கற்பட்டு | 103.44 | 103.63 | 119.17 |
| 2. தென் ஆற்காடு . . | 117.50 | 135.91 | 156.30 |
| 3. வட ஆற்காடு . . | 323.25 | 303.25 | 348.74 |
| 4. தர்மபுரி . . . . | 158.30 | 202.96 | 233.40 |
| 5. சேலம் . . . . | 309.58 | 361.24 | 415.43 |
| 6. பெரியார் . . . . | 269.45 | 308.88 | 355.21 |
| 7. கோயம்புத்தூர் . . | 156.73 | 184.52 | 212.20 |
| 8. நீலகிரி . . . . | 76.38 | 84.52 | 97.20 |
| 9. மதுரை . . . . | 182.65 | 202.37 | 232.73 |
| மொத்தம் . . | 1,697.28 | 1,887.28 | 2,171.38 |
| சராசரி தினசரி கொள்முதல் | 4.65 | 5.17 | 5.95 |

4.5 விழுக்காடு கொழுப்புச் சத்தும், 8.5 விழுக்காடு இதர இன்மைச் சத்தும் கூடிய தரப்படுத்தப்பட்ட பால் சென்னை பால் பண்ணைகளில் விற்பனை செய்த விவரங்கள் :

| விவரங்கள். | 1983 | 1984 | 1985 (மதிப்பீடு) |
|---|---|---|---|
| பால் (இலட்சம் லிட்டரில்) | 1,325.77 | 1,511.36 | 1,733.75 |
| நாளொன்றுக்கு சராசரியான அளவு (இலட்சம் லிட்டரில்) | 3.63 | 4.11 | 4.75 |
| வெண்ணெய் (கிலோ கிராமில் இலட்சத்தில்). | 8.40 | 8.75 | 12.00 |
| நெய் (கிலோ கிராமில் இலட்சத்தில்). | 0.85 | 0.84 | 0.960 |
| பால் பொடி (கிலோ கிராமில் இலட்சத்தில்). | 4.89 | 5.68 | 6.90 |

[1985 ஜூலை 5

1983 ஆம் ஆண்டில் இவ்விணையத்தின் மொத்த வியாபாரத் தொகை ரூ. 49.52 கோடியாகும். 1984 ஆம் ஆண்டின் மொத்த வியாபாரத் தொகை ரூ. 56.61 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தயாரிக்கும் பால் உற்பத்தி பொருட்களை தமிழ் நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் விற்பனை செய்வதற்கு இவ்விணையம் உதவி புரிகிறது.

கர்ல்நடை தீவன ஆலைகள்:

மாதவரம் பால்பண்ணை மற்றும் ஆம்பூரிலுள்ள கால்நடை தீவன ஆலைகள் ஒவ்வொன்றும் தற்போது மாதமொன்றுக்கு சராசரி 1,490 டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்கின்றன. ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள கால்நடை தீவன உற்பத்தி ஆலை குத்தகையாக எடுக்கப்பட்டு தொடர்ந்து இவ்வாண்டும் செயல்படுகிறது. மேற்படி ஆலைகளில் உற்பத்தியாகும் கால்நடை தீவனம், கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்கள், கால்நடை பராமரிப்பு துறையிலுள்ள கால்நடை பண்ணைகள் மற்றும் சென்னை மாநகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட்ட கால்நடை தீவன அளவின் விவரங்கள் பின்வருமாறு:—

| | 1983 | 1984 | 1985 |
|---|---|---|---|
| கால்நடை தீவனம் (மெட்ரிக் டன்னில்). | 20,578 | 17,875 | (மதிப்பீடு) 24,000 |

ரூபாய் பத்து இலட்சம் செலவில் குளிகை வடிவில் தீவனம் தயாரிக்கும் ஆலை ( Pelletiser Plant) ஒன்று மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

ஈரோட்டில் ஒரு கால்நடைத் தீவன ஆலை, பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் கீழ் இயங்கி வருகிறது. இந்த ஆலையில் தயாராகும் தீவனம் சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. இதைத் தவிர தென் மாவட்டங்களின் தேவைக்கேற்ப ஒரு புதிய கால்நடை தீவன ஆலை ஒரு நாளைக்கு 100 டன் தீவன உற்பத்தி செய்கின்ற வகையில் மதுரையில் துவங்கப்படும்.

பர்ல் பெருக்குத் திட்டம்.

பால் பெருக்குத் திட்டம் I, 1981 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியோடு முடிவு பெற்றது. இத்திட்டம் சுமார் ரூ. 15.48 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டிருகிறது. 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆரம்பித்த பால் பெருக்குத்



1985 ஜூலை 5]

திட்டம் I-ன் கீழ் அம்பத்தூரில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஒரு பால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. ஈரோட்டில் உற்பத்தியை சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder Balancing Dairy) ஒன்றும், சங்கராண்டன் பாளையத்திலும் மற்றும் சத்தியமங்கலத்திலும் 2 குளிர் பதன நிலையங்களும், 1 கால்நடை தீவன நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூரிலும், தென்னாற்காடு மாவட்டததில் விழுப்புரம் மற்றும் சின்னசேலத்திலும் குளிர்பதன நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மதுரை பால் பண்ணையில் நாளொன்றுக்கு 10 டன் உற்பத்தி திறனுள்ள பால் பொடி உற்பத்தி செய்யும் ஆலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளைக் கொண்டு தரமான வந்துககளை வழங்க ஒரு நியுக்ளியஸ் ஜெர்ஸி பண்ணை நிறுவப்பட்டுள்ளது.

பால்பெருக்குத் திட்டம் I-ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம் II, சுமார் 42.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் செயல்பட்டு வருகிறது. ஒன்பது மாவட்டங்களில் செயல்படும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

(அ) இத்திட்டக் காலத்தின் முடிவில் 4,550 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் கிராமப் புறங்களில் அமைக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளின்கீழ் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 3,841 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(ஆ) 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய பால் கொள்முதலுக்காக 6,35,000 கறவை மாடுகள் கொண்டுவரப்பட்டன. பால் பெருக்குத் திட்டத்தின்கீழ், மொத்தம் 13 இலட்சம் கறவை மாடுகள் கொண்டு வரப்பட்டு அதில் 50 விழுக்காடு செயற்கை முறை கருத்தரித்தல் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

1984 ஆம் ஆண்டில் பால் கொள்முதல் நாளொன்றுக்கு 5.16 இலட்சம் லிட்டராகும். இத்திட்ட முடிவில், நாளொன்றுக்கு பால் உற்பத்தி 10.90 இலட்சம் லிட்டராக அதிகரிக்கப்படும்.

(இ) மாநிலத்தில் உள்ள எல்லா முதல்தர நகரங்களிலும் மேலும் இத்திட்டம் செயல்படுகின்ற இரண்டாம்தர நகரங்களிலும் பால் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஈ) மாநிலத்தில், இத்திட்டம் செயல்படுகின்ற முக்கிய நகர்ப்புற பகுதிகளில் நாளொன்றுக்கு 12 இலட்சம் லிட்டர் பாலை விற்பனை செய்வதற்காக, தற்போது உள்ள 9.70 இலட்சம் லிட்டர்கள் பாலை பதப்படுத்தக்கூடிய திறன் சுமார் 14.40 இலட்சம் லிட்டர்களுக்கு உயர்த்தப்படும்.

(உ) திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் முறையே ரூ. 620 இலட்சம், ரூ. 684 இலட்சம் ரூ. 105 இலட்சம் செலவில் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏப்ரல் 1, 1985 லிருந்து செயல்படுத்தப்படுகிறது.

(ஊ) பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் ஒதுக்கப் பட்டுள்ள ரூ. 42.87 கோடி ரூபாய் உதவித் தொகையில் 11.76 கோடி ரூபாய்க்கு நிதி உதவி வரப்பெற்றுள்ளது. இதில் ரூ. 11.01 கோடி 31–12–1984 முடிய பயன்படுத்தப்பட்டுள்ளது. 1985-ல் சுமார் 5 கோடி ரூபாயை பயன்படுத்த முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது.

முன்னேற்றமடைந்துவரும் திட்டங்கள் / முடிவடையும் தருவாயில் உள்ள திட்டங்கள்.

(1) கோயம்புத்தூரில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தக்கூடிய திறன் கொண்ட பால் பண்ணை ரூ. 352 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. 1985-ல் இது செயல்படும்.

(2) சேலத்தில் மணிக்கு 45 லிட்டர் உற்பத்தி செய்யக் கூடிய ஒரு திரவ நைட்ரஜன் ஆலை ரூ. 56.8 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு 1985 ஜனவரியில் செயல்படுத்தப்பட்டது.

(3) நாளொன்றுக்கு 50,000 லிட்டர்கள் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட ஒரு புதிய குளிர்பதன நிலையம் திருவள்ளூரில் ரூ. 621 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இது 1985, ஜூன் மாதத்தில் செயல்படுத்தப்படும்.

(4) நாளொன்றுக்கு 30,000 லிட்டர்கள் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட ஒரு புதிய குளிர்பதன நிலையம் அறக்காவூரில் ரூ. 35.61 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இது 1985 ஜூன் மாதத்தில் செயல்படுத்தப்படும்.

(5) அம்பத்தூரில் உள்ள பால் பண்ணையின் கொள்திறன் 2 இலட்சம் லிட்டரில் இருந்து 3 இலட்சம் லிட்டராக 1985 ஜூன் மாதத்திற்குள் விரிவுபடுத்தப்படும்.

(6) அம்பத்தூரில் ரூபாய் 30 இலட்சம் செலவில் 300 மெட்ரிக் டன் வெண்ணெய் மற்றும் 1,000 மெட்ரிக் டன் ஆடை நீக்கப்பட்ட பால் பொடி ஆகியவற்றை சேமித்து வைக்கும் குளிர் பதனம் செய்யப்பட்ட கிடங்கு ஒன்றை கட்டும் பணி நடந்து வருகிறது. இது 1985 ஜூன் மாதத்திற்குள் முடிவடையும்.



(7) திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ. 160 இலட்சம் செலவில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர்கள் பாலை பதப்படுத்தக் கூடிய திறன் கொண்ட புதிய பால் பண்ணை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1985, ஜூலை மாதத்தில் இது செயல்படுத்தப்படும்.

(8) வேலூரில் உள்ள பால் பண்ணையில் கொள்திறன் ரூ. 110 இலட்சம் செலவில் விரிவாக்கப்பட்டு வருகிறது. இது 1985, ஜூலை மாதத்தில் செயல்படுத்தப்படும்.

புதிய திட்டங்கள்.

(1) ரூ. 510 இலட்சம் மதிப்பீட்டில் மூன்றாவது புதிய பால் பண்ணை ஒன்று மாமல்லபுரம் சாலையில் சோளிங்கநல்லூர் அருகில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய பால் பொருளை தயாரிக்கும் பண்ணை ஒன்றை மாதவரத்தில் அமைக்க உத்தே சிக்கப்பட்டுள்ளது.

(3) நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட கால்நடை தீவன ஆலை ஒன்று புதிதாக மதுரை யில் அமைக்கப்படும்.

(4) பால் பெருக்கத் திட்டம் 2–ன் கீழ் திருச்சிராப்பள்ளியில் ரூ. 230 இலட்சம் செலவிலும், தஞ்சாவூரில் ரூ. 230 இலட்சம் செலவிலும் புதிய பால் பண்ணைகள் கட்டப்படும்.

(5) ரூ. 13.54 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட் டத்தில் பரமக்குடியில் உள்ள குளிர்பதன நிலையத்தின் கொள் திறன் நாளொன்றுக்கு 6,000 லிட்டரில் இருந்து 10,000 லிட்ட ராக அதிகரிக்கப்படவிருக்கிறது.

(6) ரூ. 103.26 இலட்சம் செலவில் தஞ்சாவூர் மாவட்டத் திலுள்ள பட்டுக்கோட்டை மற்றும் மயிலாடுதுறையிலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வள்ளியூரிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கமுதியிலும், மற்றும் புதுக்கோட்டை யிலும் புதிய பால் பதப்படுத்தும் திறன் கொண்ட குளிர்பதன நிலையங்கள் கட்டப்படும்.

(7) ரூ. 6.6 இலட்சம் செலவில் திருச்சி பால் பண்ணையிலும் மற்றும் சங்கரன்கோவில் குளிர்பதன நிலையத்திலும் குளிர்விப்பு வசதிகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன.

பால் கூட்டுறவுகளுக்கான தணிக்கை வாரியம்.

பால் கூட்டுறவுகளுக்கான தணிக்கை வாரியத்தால் ஆரம்ப பால் கூட்டுறவுகள் மற்றும் ஒன்றியங்களின் தணிக்கை 1–10–83 முதல் மேற்கொள்ளப்பட்டது. சங்கங்களின் 1983–84ம் ஆண்டிற்கான தணிக்கை 1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள். முடிவடையும். ஒன்றியங்களின் தணிக்கையும் துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது.

பாலின் விலை.

1–8–84 முதல் பாலின் கொள்முதல் விலை ஒரு கிலோ கொழுப்புச் சத்திற்கு ரூ. 42 ஆகவும் 1–4–85 முதல் கொள் முதல் விலை ரூ. 44 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. பால் உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களின் விலையும் கொள்முதல் விலையும் அதிகரித்ததால் பாலின் விற்பனை விலை 1–4–85 முதல் ஒரு லிட்டருக்கு ரூ. 3.15-லிருந்து ரூ. 3.80 ஆக சென்னை நகரில் உயர்த்தப்பட்டுள்ளது.

பால் விற்பனை.

சென்னை நகரில் 1984-ல் வாடிக்கையாளர்களுக்கு நாளொன்றுக்கு சராசரியாக 4.25 இலட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப் பட்டது. இதனை 1985-ல் நாளொன்றுக்கு 4.75 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 491 பால் சாவடிகள், 27 தானியங்கி விற்பனை இயந்திரங்கள் மற்றும் 15 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் மூலமாக சென்னை மாநகரில் நுகர்வோர்கள் பால் பெறுகின்றனர். தானியங்கி விற்பனை இயந்திரங்களின் எண்ணிக்கை 3 ஆண்டுகளில் 100 ஆக அதிகரிக் கப்படும். இதில் 23 விரைவில் நிறுவப்படும். நுகர்வோரினை பால் விற்பனையில் ஈடுபடுத்தும் பொருட்டும், பால் விநி யோகிக்கும் முறையினை செயல்படுத்தும் பொருட்டும் 31 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு III

(63-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 6.

பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

பத்திரப் பதிவுத்துறை, 1834 ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இத்துறை, 1864 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஒரு தனித்துறையாக உருவாக்கப் பட்டது. ஆனால், பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் என்ற



பெயருடன் கூடிய அலுவலகம் 1871 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது. 114 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் இத்துறை, முக்கியமாக 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 16/1908) செயல்படுத்தி வருகிறது. பொது மக்களின் சொத்துக்கள் தொடர்பான உடைமை உரிமைப் பத் திரங்களைப் பாதுகாக்கிறது. பத்திரப் பதிவுத்துறை வழங்கும் வில்லங்கச் சான்றிதழின் அடிப்படையிலேயே, உழவர்கள் உட்பட பொதுமக்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது.

2. நிருவாக அமைப்பு முறை.—(i) இந்திய ஆட்சிப் பணித் தரத்தில் உள்ள ஒருவர், பத்திரப் பதிவுத்துறைத் தலைவராவார். பிறப்பு-இறப்பு, திருமணங்கள் ஆகியவை குறித்துப் பதிவு செய் யும் தலைமைப் பதிவாளராகவும் ( Registrar General ) தமிழ்நாடு சீட்டு, நிதிகள் சட்டத்தின்கீழ் சீட்டு நிதிகள் இயக்கு நராகவும், மத்தியச் சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 40/1982) சீட்டு நிதிகள் பதிவாளராகவும், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் கீழ் வருவாய்க் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாகவும் இவர் இருக்கிறார். அவருக்கு உதவியாகப் பின்வரும் அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர் :—

பத்திரப் பதிவுத்துறைக் கூடுதல் தலைவர் ஒருவர் ;

சட்ட அதிகாரி ஒருவர் ;

சீட்டு நிதிகள் கூடுதல் பதிவாளர் ஒருவர் ;

நேர்முக உதவியாளர் (பொது) ஒருவர் :

நேர்முக உதவியாளர் (கணக்குகள்) ஒருவர் ;

நேர்முக உதவியாளர் (சீட்டு நிதிகள்) ஒருவர் ;

கட்டிடங்களின் அங்காடி மதிப்பை நிர்ணயிப்பதற்காக பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்ட உதவி நிருவாகப் பொறியாளர் ஒருவர் ;

காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஒழுக்கக் கண்காணிப்புச் சிறப்புப் பிரிவு ஒன்று.

(ii) 1–8–1982 ஆம் நாள் முதல், பத்திரப் பதிவுத் துறை வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்ட நான்கு மண்ட லங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மண்டலங்கள் ஒவ் வொன்றும் பதிவுத் துறைத் துணைத் தலைவர் ஒருவரின் கட்டுப் பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர் அலுவலகம் ஒவ்வொன்றுடனும் பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் அலுவலகங்கள் இரண்டு இணைக்கப்பட் டுள்ளன. ஆய்வுப் பணிகள், விசாரணைகள், மாவட்டப் பதி

வாளர்களிடமிருந்தும், பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் களிடமிருந்தும் வரும் முன்னேற்ற அறிவிக்கைகளை பரிசீலித்தல் ஆகிய பணிகள், பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்களின் அதிகார வரம்பிற்குள் உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர்கள், மாவட்டப் பதிவாளர்கள், சார் பதிவாளர்கள் ஆகியோர் மீது மேலாண்மை ஆதிக்கம் செலுத்தவும், பணிகளை மேற் பார்வையிடவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர். சுருங்கக்கூறின், அவர்கள் இத்துறையின் மண்டல நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கின்றனர். துறை அளவிலான தணிக்கை மறுப்புகள், மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் தணிக்கை மறுப்புகள் ஆகியவற்றைக் கவனித்து பதிலளிக்க பத்திரப் பதிவுத் துறை கூடுதல் தலைவரின்கீழ், தணிக்கைப் பிரிவு ஒன்று, பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

(iii) மதுரை, திருநெல்வேலி, கடலூர், தஞ்சாவூர், சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவர் வீதம் மொத்தம் எட்டு பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர்கள் உள்ளனர். சார்பதிவாளர் அலுவலகங்களுக்குத் திடீரென சென்று ஆய்வு செய்தல், முறைகேடு பற்றிய புகார்கள் குறித்து விசாரணை செய்தல், சொத்துக்களின் மதிப்பைக் குறைவாகத் தெரிவித்து எழுதப்பட்டுள்ள பத்திரங்களைக் கண்டறிதல் முதலியவை இந்த ஆய்வாளர்களின் முக்கியப் பணிகளாகும். இந்த ஆய்வாளர்கள், சங்கங்கள், சீட்டுகள் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்கின்றனர் என்பதோடு, பொதுவாக, அவர்கள் அந்தந்த மண்டலங்களில் பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவருக்கு உதவி புரிகின்றனர்.

(iv) மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் :—மாநிலம் 46 பத்திரப் பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ் வொரு பத்திரப் பதிவு மாவட்டமும், ஒரு மாவட்டப் பதிவாள ரின் நிருவாகத்தின்கீழ் இயங்கி வருகிறது. இவரே, நிறுவனங்கள், சங்கச்கள், மற்றும் திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பதிவாளராகவும், 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982) கீழ், சீட்டு நிதிகளைப் பதிவு செய் யும் இணைப் பதிவாளராகவும் உள்ளார். சார்பதிவாளர் அலு வலகங்களை ஆய்வு செய்தல், பத்திரஙகளைப் பதிவு செய் வதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுவது தொடர்பாக வரும் மேல் முறையீடுகள், மனுக்கள் முதலியவை குறித்து விசாரித்தல், சார் பதிவாளர்கள் ஐயம் எழுப்பிய பத்திரஙகளின் தன்மையைத் தீர்மானித்தல், புகார்கள் குறித்து விசாரணை செய்தல், சொத்துக்களின் மதிப்பைக் குறைவாகத் தெரிவித்து எழுதப் பட்டுள்ள பத்திரங்களைக் கண்டுபிடித்தல் ஆகியவை இவருடைய முக்கிய பணிகளாகும். மொத்தத்தில், இவர்கள், பொது நிரு வாகத்திற்கும் அந்தந்தப் பத்திரப் பதிவு மாவட்டங்களில், சட் டங்களை நிறைவேற்றுவதற்கும், நிருவகிப்பதற்கும் பொறுப்பு



வகிக்கின்றனர் . மேலும், வருவாய் இழப்பைத் தடுக்கும் நோக்கில் பத்திரப் பதிவு அலுவலகங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய இத்துறையில் 24 உள் தணிக்கைப் பிரிவுகளும் உள்ளன. இத் துறையின் கணக்குகளை மாநிலக் கணக்குத் துறைத் தலைவரும் தணிக்கை செய்கிறார்.

(v) சார்பதிவாளர் அலுவலகங்கள்.—மாவட்டப் பதி வாளர்கள் அலுவலகங்களில் உள்ள 46 பத்திரப் பதிவுக் கிளை அலுவலகங்கள் தவிர, 514 சார்பதிவாளர் அலுவலகங்கள் தற் போது செயல்பட்டு வருகின்றன. இச்சார்பதிவாளர் அலுவலகங் கள் ஒவ்வொன்றும் ஒரு சார்பதிவாளரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. பத்திரங்களைப் பதிவு செய்தல், வில்லங்கச் சான்றிதழ்கள் வழங்குதல், நகல்களுக்குச் சான்றளித்தல் ஆகி யவை இவருடைய முக்கிய பணிகளாகும்.

இவர், தமிழ்நாடு சீட்டு நிதி சட்டத்தின் கீழ் சீட்டு நிறுவனங் கள், திருமணங்கள் ஆகியவற்றை பதிவு செய்யும் பதிவாளர் ஆவார். பதிவு செய்யும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய் யும் பொருட்டு ஒவ்வோராண்டும் சார்பதிவு அலுவலகங்கள் சில தொடங்கப்படுகின்றன. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகரங்களில் உள்ள சார்பதிவாளர் பதவிகள் மாவட்ட பதிவாளர் பதவிகளாக நிலை உயர்த்தப் பட்டுள்ளன. இவ்வாறு நிலை உயர்த்தப்பட்ட மாவட்டப் பதி வாளர்கள் , சார்பதிவாளர்கள் ஆற்றும் அலுவல்களையே ஆற்றி வருகின்றனர். குறிப்பிட்ட சில சிறப்புக் கடமைகளை நிறை வேற்றும் பொருட்டு, சீட்டு நிதி நிறுவனங்களை ஆய்வு செய்யும் அதிகாரிகள் பதவிப் பெயருடன் கொண்ட சார்பதிவாளர்களும், சார்பதிவாளர் (சங்கங்கள்) பதவிப் பெயருடன் கொண்ட ஒரு சில சார்பதிவாளர்களும் செயல்பட்டு வருகின்றனர். 1985-86 ஆம் ஆண்டில் சார்பதிவாளர் அலுவலகம் ஒன்றைப் புதிதாகத் தொடங்க கருதப்பட்டுள்ளது.

3. பல்வேறு சட்டங்களை நிருவகித்தல்.—(a) 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தை செயல்படுத்துவதுடன் பின் வரும் சட்டங்களின் நிருவாகமும் இத்துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவையாவன :—

(a) 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம்.

(b) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்

(c) 1886 ஆம் ஆண்டு பிறப்பு-இறப்பு, திருமணங்கள் சட் டம் (மத்தியச் சட்டம் VI/1886.)

(d) (i) 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம், விவாகரத்துச் சட்டம்.

(ii) 1872 ஆம் ஆண்டு இந்தியக் கிருத்துவத் திருமணங்கள் சட்டம்.

(iii) 1969 ஆம் ஆண்டு பிறப்பு-இறப்புச் சட்டம்.

(iv) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்.

(v) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்.

(e) 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம்.

(f) தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சிட்டு நிதிகள் சட்டம்.

(g) 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுவனங்கள் சட்டம் (1–7–1981 முதல்).

(h) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் (1–12–1980 முதல்).

(I) 1982 ஆம் ஆண்டு சிட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982).

(b) சிட்டு நிதிகள் நிருவாகம்: (i) ஏற்கனவே உள்ள பழைய தொகுதிகளுக்கு அனுமதி வழங்குதல், அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்துதல் ஆகியவற்றை பொறுத்த வகையில் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டு நிதிகள் சட்டம் தற்போது செயலில் உள்ளது. இச்சட்டத்திற்குப் பதிலாக 1982 ஆம் ஆண்டு சிட்டு நிதிகள் சட்டம் (மத்தியச் சட்டம் 40/1982) கொண்டு வரப்பட்டது. இப்புதியச் சட்டம் 1984-ல் தமிழ் புத் தாண்டு அன்று அதாவது 13–4–1984 ஆம் நாள் அன்று கொண்டு வரப்பட்டது. பத்திரப் பதிவுத் துறைத் தலைவர், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் சிட்டு நிதி நிறுவன இயக்குநராகவும், மத்திய சிட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் சிட்டுநிதி நிறுவனப் பதிவாளராகவும் அலுவல் முறையில் செயல்படுகிறார். சிட்டுநிதிகள் இணைப் பதிவாளர் ஆகிய மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) இவருக்கு உதவுகிறார்.

(ii) 1983-84 ஆம் ஆண்டு இறுதியில் செயல்பட்ட சிட்டு நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை 21,684 ஆகும். அதற்கு முந் தைய ஆண்டு இறுதியில் (அதாவது 1982-83 இறுதியில்) 19,001 சிட்டு நிதி நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன. 1983-84 ஆம் ஆண்டு இறுதியில் சிட்டு நிதி நிறுவனப் பதிவாளர்களிடம் 25.95 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பிணைய வைப்புத் தொகை இருக்க, அதற்கு முந்தைய ஆண்டு இறுதியில் 21.74 கோடி ரூபாய் மதிப்புள்ள பிணைய வைப்புத் தொகை இருந்தது. இது தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டு நிதிகள் சட்டம் தொடர் பானது.



(iii) அரசு அனுமதியின்றி 175 சிட்டு நிதி நிறுவனங்கள் 1983-84-ல் செயல்பட்டு வந்தனவாக கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் 69 நிறுவனங்களுக்கு தண்டனையும், அபராதமும் விதிக் கப்பட்டது. ஏனைய 536 குற்றங்களில் 474 பேருக்கு அப ராதம் விதிக்கப்பட்டது. மொத்தம் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ. 25,050 ஆகும். மத்திய சிட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்தவர்கட்கு மிகக் கடுமையான தண்டனை கள் விதிக்கப்பட்டுள்ளன.

(iv) சிட்டு நிதியில் சேருபவர்களின் நலனை பாதுகாக்கும் பொருட்டு, சட்டப்படிக்கான விதித்துறைகளுடன் கூடிய மத்திய சிட்டு நிதிகள் சட்டம் (40/1982) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு, சிட்டு நிதிகள் சட்டத்திற்குப் பதிலாக 13–4–1984 ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்டது. 13–4–1984 ஆம் நாளிலிருந்து 31—1—1985 ஆம் நாள் வரையில் மத்திய சிட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்டுள்ள பிணைய வைப்புத் தொகை மதிப்பு ரூ. 2,00,02,300.

4. ஆவணங்கள் எழுதுவோர் உரிம விதிகள்:—இவ்விதிகள் 14–4–1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்துள்ளன. 31–12–1984 ஆம் நாள் வரையில் இவ்விதிகளின்கீழ் வழங்கப் பட்டுள்ள உரிமங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | | |
|---|---|---|
| மாநில உரிமங்களின் எண்ணிக்கை | .. | 1,381 |
| மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை | .. | 6,149 |
| துணை மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை | | 3,323 |
| மொத்தம் | ... | 10,853 |

உரிமக் கட்டணம் என்ற வகையில் ரூ. 9,03,525 வசூலிக்கப் பட்டுள்ளது.

5. தமிழ்நாடு சிட்டு நிதி நிறுவனம் :—11—1—1984 ஆம் நாளன்று 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த நிறுவனம், தமிழ்நாடு சிட்டு நிதிகள் சட்டத்தின் கீழும், மத்திய சிட்டு நிதிகள் சட்டத்தின் கீழும் வருகின்ற சிட்டுநிதி நிறுவனங்களை செயல்படுத்துகின்றது. இவ்வாறு தொடங்கப்பட்ட சிட்டு நிதி நிறுவனங்களில் பொது மக்களும், அரசுப் பணியாளர்களும் ஓரளவு அரசு தன்மை வாய்ந்த அரசு நிறுவனப் பணியாளர்களும் சேரலாம்.

6. வருவாய்க் கூறு (i) வருவாய் வாயில்கள்:

முத்திரைத் தாள் தீர்வை, ஆவணங்களை பதிவு செய்வதற்காகவும் ஏனைய பணிகளுக்காகவும் வசூலிக்கப்படும் கட்டணம் ஆகியவை முக்கிய நிதி வாயில்களாகும். இவற்றுடன் சீட்டு நிதி நிறுவனங்கள், சங்கங்கள், நிறுவனங்கள், திருமணங்கள் முதலியவற்றை பதிவு செய்வதிலிருந்தும் சிறிது வருவாய் கிடைக்கிறது.

(ii) இத்துறையின் வரவு-செலவு விவரம் :—1977-78ஆம் ஆண்டிலிருந்து பத்திரப் பதிவுக் கட்டணங்கள், ஆவணங்களைத் தேடுவதற்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள், நகல் எடுப்பதற்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள் முதலிய வகைகளில் வசூலிக்கப்படும் வருவாய் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| ஆண்டு. (1) | வருவாய். (2) | செலவு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1977–78 .. .. | 359.26 | 213.85 |
| 1978–79 .. .. | 587.84 | 234.40 |
| 1979–80 .. .. | 668.27 | 265.00 |
| 1980–81 .. .. | 669.61 | 299.88 |
| 1981–82 .. .. | 912.54 | 334.92 |
| 1982–83 .. .. | 985.06 | 429.63 |
| 1983–84 .. .. | 1067.71 | 487.61 |
| 1984–85 .. .. | 1,363.89 | 543.00 |

ஆவணக்காப்பக ... சென்னை-600 008.
136415

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATION.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirune Madras-8.
Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Mad
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District)
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-1?.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi
rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaii Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
5 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.